217

27-5

உ

கடவுள்துணை.

# சோடசப் பிரபந்தம்.

இஃது

மதுரைஜில்லா - இராமநாதபுரம்

ஸமஸ்தானவித்துவான்

துவாத்ரிம்சதவதானி

சரவணப்பெருமாட் கவிராயரவர்கள்

மாணாக்கரும்,

முதுகுளத்தூர் வித்வான்

ஆதி - பூலாநுஸாமிபிள்ளையவர்கள் குமாரருமான

## பூ. ஆறுமுகம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை சமஸ்தானம் கமுதைத்தாலூகா

பெருநாழி மிராசுக்கணக்கு

பாலசுப்பிரமணிய பிள்ளையவர்கள் குமாரர்

ம-ா-ா-ஸ்ரீ

**உமையொருபாகம்பிள்ளை**

அவர்கள் திரவியசகாயத்தால்,

சென்னை:

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1899.

இதன்விலை. ரூ - உ.

உ

கடவுள் துணை.

# சோடசப்பிரபந்தம் வரலாறு.

க. விநாயகர்திரிபுவெண்பாவந்தாதி.
* உ. மதுரையமகவந்தாதி.
ங. திருவுத்தர கோசமங்கைப்பதிகம்.
ச. பஞ்சாசத் திருப்புகழ்.
ரு. கொடுமளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.
சு. குழந்தாபுரிப் பதிற்றுப்பத்துப் பதிகம்.
எ. குழந்தாபுரிக் குமரேசர்மாலை.
அ. மருதூர் இரட்டைமணிமாலை.
கூ. சித்திவிநாயகர் மும்மணிமாலை.
க0. சித்திவிநாயகர் பதிகம்.
கக. தில்லை நடராஜர் பதிகம்.
கஉ. காரைக்குடிக் கொப்புடையம்மன்பதிகம்.
கங. முகவைத் திரிபுரசுந்தரியம்மை பதிகம்.
கச. திருத்தொண்டர் வந்தனைக்கோவை.
கரு. தாயுமானசுவாமிகள் புராணம்.
கசு. அரிச்சந்திர வண்ணம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 3627

இவைகள் விநாயகக்கடவுள், சிவபெருமான், உமாதேவியார், முருகக்கடவுள், அடியார்கள் மான்மியங்களை விளக்கி அன்பு முதிர்ச்சியும் பத்திரசமுந் தோன்ற திரிபு, யமகம், பலசந்தம் தேவார திருவாசகப்பண் முதலியன தழுவி என் புல்லறிவுக்கமைந்த வள வியற்றி வெளியிடலானேன்.

ஆகையால் "குற்றங்கணீக்கிக் குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்".

* முதுகுளத்தூருக்கடுத்த இளங்குளத்தூர் நிகமாகம சமரசானுப வித்துவான் சுவாமிநாதபிள்ளை யவர்களாகிய ஐயாத்துரைபிள்ளை யவர்களால் மதுரை யமகவந்தாதிக்குப் பதவுரை செய்யப்பட்டது.

இங்ஙனம்

பூ. ஆறுமுகம்பிள்ளை.

உ

கடவுள்துணை.

# சிறப்புப்பாயிரம்.

இராமநாதபுரம் ஸமஸ்தானம் முதுகுளத்தூருக்கடுத்த இளங்குளத்தூர்
நிகமாகம சமரசாநுப வித்துவானும், இந்நூலில் மதுரை
யமகவந்தாதிக்குப் பதவுரை செய்தவருமான
சாமிநாதபிள்ளையவர்களாகிய

## ஐயாத்துரைபிள்ளையவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாவேறு மதிநலம்வே றெனுமாற்ற மாற்றிவளா மாதோர் பாகன், ஆவேறு பரஞ்சுடரே பதியெனக்கண் டவருளாயா கமத்தை யாய்ந்து, தூவேறு மரசேறுய்த் திசையேறு புகழேறித் தொங்கல் போலிப், பூவேறு திண்டோளான் மன்னர்கடம் முடியுரிஞ்சு பொற்புத் தாளான். (க)

பஞ்சமுறு தருவோஙம் போலீயு மெனவுணகும் பதுமக்கையான், நஞ்சமுறு களனீற்றைக் கண்மணியை யணிதலையே நாடுமெய்யான், றஞ்சமுறு மெவரோனு மனைபோல வருட்டன்மை சார்ந்த கண்ணன், அஞ்ச முறு சாமமறைத் தேவார மரற்கினிதா யாக்கும் பண்ணன். (உ)

தூசாரு முந்நீர்சூழ் புவிமுழுதுந் தாங்கிறையைச் சுமக்குமெற்குக், காசாருங் கதிரிழுக்கு மெழுமாவோ வீணையென்னக் கனைக்கு மாவான், மாசாரும் படைஞர்படை யடிநகத்தாற் றேய்ப்பவென்ருள் வருங்கொ லென்னத், தேசாரும் வெண்மருப்புத் திசைக்களிற்றைப் போனிலையிற் சேர்க ளிற்ருன். (ஙு)

விண்பொருந்தும் புலவரரி யவ்வெளியிற் செல்லுதலில் விளைவே யன்றி, மண்பொருந்தா வவைநாண வெவ்வுலகும் போய்க்கணத்தில் வரும்பொற் றேரான், பண்பொருந்து மொழியரம்பைத் தோ

ணசையாற் செறுனர்சினப் படையாற் ருக்கும், புண்பொருந்தா நாளவநா ளெனப்புகலுங் காலாளேப் பொருந்துங் கோமான். (ச)

மாதுபதி பாகீசர் தேவையிரா மீசரடி மறைச்சி லம்பார், போதுபதி யுஞ்சிரத்தான் பூமணிபா பொற்ருர்கள் புனேயு ரத்தான், நீதுபதி யாதிருந்து பிறர்குற்றங் கடிதலேயுஞ் செலுத்துங் கோலான், பாதுபதி கதிர்வேலான் பாற்கரசா மிச்சேது பதிவாழ் நாட்டில். ()

கனமேந்து முயர்சோலே கலேயேந்துங் கவிஞர்குழூஉக் கமல வாவி, யனமேந்தும் பணேவரம்பு மணியேந்துங் கழையறவோ ராதி தங்கண், மனமேந்தும் விடயமெதோ வதையேந்தி யவ்வவனை வணங்கி யீயுந், தினமேந்து குடியாதிச் சீரோந்தும் பெருநாழிச் செவ்வி வைப்பான். (சு)

கங்கைகுலன் காவிரியன் வாலசுப்பி ரமணியனற் காத லானேன், கொங்கைமட மின்னுர்கள் குறிக்கொண்டு மடலெழுதுங் கோல ரூபன், சங்கைசரோ ருகநிதியைத் தேனுவைச்சிந் தாமணியைத் தருவை மானச், செங்கையுமை யொருபாக னேற்பவர்தம் முளத்துளதைத் தீர்க்கும் வள்ளல். (எ)

மூலவிநா யகன்பேரிற் றிரிபுவெண்பா வந்தாதிமுக்க ணைந்தை, யாலவா யமகவந்தா திமங்கைப்ப திகங்குமர னடியைப் போற்று, மோலதிருப் புகழ்கொடுமூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி யுலகோர் வாழ்த்துஞ், சீலகுழந் தாபுரியான் பதிற்றுப்பத் துப்பதிகந் திகழுமாலே. (அ)

வேலேயுல கேத்துமரு தூரிரட்டை மணிமாலே விநாய கர்க்கு, மாலேயென வமைந்திடும் மணிமாலே பதிகமிகு வளஞ்சேர் தில்லே, யாலயன்ப திகங்காளைக் கொப்புடையம் மன்பதிக மருள்கொடுக்கும், கோலமுக வைத்திரிபு ரசுந்தரியம் மன்பதிகங் குறையில்லாதே. (கூ)

தக்கதிருத் தொண்டர்கள்வந் தனேக்கோவை தாயுமா னவர்புராண, மிக்கவரிச் சந்திரவண் ணப்பாக்க ணவரசங்கண் மேவியோங்கத், துக்கமெனும் பத்தொழியச் சுருங்கச்சொல் லாதிபத்துச் சொக்கு வாய்ப்ப, வொக்கசோ டசப்ரபந்த மொன்றமைத்திவ் வுலகுய்ய வுரைப்பா யென்ன. (கo)

நெற்பால னங்கரும்பு நீண்டகழைக் கேயரம்பை நீர்வா ழைக்குப், பற்பாகு பைங்கமுகு பருங்கூந்தற் குயர்தென்னே பணைதெங்கிற்கு, நற்பாலே னையசோலை சூழ்ந்துயர விண்ணேர்க ளுளுந்தாழ்ந்து, பொற்பாவார் குகனடியைப் போற்று தற்கா யமைத்த சோ பானம் போலாம். (கக)

பண்டலைமுன் னீர்ச்சயனன் குறளுருவாய் மாவலிபாற் பாணி யேற்று, விண்டலைதோய் வடிவோங்கி வரநதியின் முடிபுகுத விழுநீர் போலக், கொண்டலைவெங் கதிர்மதியின் மண்டலத்தைக் கிழாக்கிக் கொம்பி னுலே, தண்டலைசேர் மரநதியைப் பெயச்செய் தாற் சோலைவளஞ் சாற்றற் பாற்றே. (கஉ)

அந்தணர்கண் மறையோசை சைவரா கமநூலை யறையு மோதை, கந்தனடி போற்றமலை கவிராயர் முத்தமிழ்கற் பிக்குங் கவ்வை, சந்தமிகு விழவரவ முழவார்ப்போ டாவணத்திற் றழங்கும் பூசல், பந்தமறு சிவஞானம் பகரொலிசேர் முதுகுளத்தூர்ப் பதியமர்ந்தோன். (கந)

சூலாரு சாமிபணி குருசாமி யாறுதலந் துலங்குஞ் சாமி
வேலாரு சாமிதிரு வடிமறவாச் சாமிசைவம் விளங்குஞ் சாமி
நூலாரு சாமியிலக் கியசாமி யிலக்கணத்தை நுவலுஞ் சாமி
பூலாரு சாமிநாற் கவியென்னு மமுதமழை பொழியுஞ் சாமி. (கச)

பெற்றமதி மிகுபாலன் பெரியோர்கண் மதிசீலன் பிறசீ வர்க்கே, யுற்றவரு ளுடையாளன் கல்வியறி வொழுக்கமுள னுலகோர் மெச்சுங், கற்றவர்சி ரோமணிய னிலக்கணமு மிலக்கியமுங் கனையற் றுய்ந்தோ, னற்றவருக் கீகரனென் னுறுமுக நாவலவ னறைந்தான் மாதோ. (கரு)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

# சாற்றுக்கவிகள்.

தேவகோட்டை மகாவித்துவான்
மேலவீட்டுச்
## சிந்நயசெட்டியாரவர்க ளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சித்திவிநா யகன்மீதும் பரன்மீதுங் குகன்மீதுந் தேவி மீதும், பத்தியுறு மடியார்கண் மீதுமன்பு பழுத்தொழுகப் பயன்றாக் காகப், புத்தமுத மெனவுளைப்பச் சோடசப்பி ரபந்தமதைப் புகன் றுன் மேலா, முத்தமிழ்தேர் முதுகுளத்தூர் வித்வசிரோன் மணி யாறுமுகவல் லோனே. (க)

சிவகங்கை வித்துவான்
## இராமலிங்கம் பிள்ளையவர்கள்
இயற்றிய
நேரிசை வெண்பா.

ஆறுமுகப் பிள்ளை யருடருமப் பேறுபதி
னாறுஞ் சரதமிக நாடுமெனக்—கூறுதல்போ
லாறுமுகப் பிள்ளைசொலு மத்தொகையாற் பேர்பெறுநூ
ரேறு நிறைந்த சுவை. (உ)

திருநெல்வேலிஜில்லா
சேற்றூர் சமஸ்தான வித்துவான்
## இராமசாமிக் கவிராயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆதவன்றன் பரியிழைப்பை யெயிற்றுவச மசைந்துசிறி தாற்றி ராம, நாதபுரஞ் சமஸ்தானம் பாற்கரசே துபதிமஹா ராஜபோசன், சீதமலர் வாய்திறந்திச் சிலேடையுளா யெனினுடனே செப்ப வல் லோன், பூதலமீ தெக்கவியுந் தக்கவியப் புடனெவரும் புகழச் சொல்வோன். (ங)

## சாற்றுக்கவிகள்.

மதியகடு தடவுபொழின் முதுகுளத்து ராறுமுக வல்லோ னன்பா, யதிமதுரச் சொற்சுவையும் பொருட்சுவையு மணிச்சு வையு மமைய மேலோர், புதுமையிஃ தெனவுளைப்பச் சோடசப்பி ரபந்தமதைப் புகலக் கேட்டப், பொதியமுனி வனுங்குகனு மலே வாயு மலேவாயும் பொருந்தி ஞரோ. (ச)

---

முதுகுளத்தூர் வித்துவான்

### சுப்பையாபிள்ளையவர்க ளியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சச்சிதா னந்தமதைத் தெரிய வொட்டாத் தனிமாயை வசத் தாகித் தவிப்புற் ருேர்கட், கச்சிதா காசநிலை தோன்றற் கென்றே யாறுமுக நாவலவ னகத்திற் சேடம், வச்சிதாச் சொலுஞ்சோட சப்ரபந்த மாகவமுத் தியதையதி மதிவல் லோர்க, ணச்சிதா கார நிறை வாகிச் சென்ம நனிதகலத் தந்நிலையை நண்ணு வாரோ. (ரு)

---

ஷை யூர் வித்துவான்

### சு. சிதம்பரஞ்செட்டியாரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாழாய நரர்துதியே பண்ணியிது காறடைந்த பயனில் பூதி
வீழாது கதியடைய வியந்துளைத்தான் றேவதைமேல் விளங்குஞ் சீர்த்தி
கேழாய வறுமுகவேள் சோடசமாம் பிரபந்தங் கிளர்தே னுண்டா
ராழாழி யெனுமதிஞ ரலவர்வெறும் புலவரொன வறைவர் மாதோ. (சு)

---

சிவகங்கை சமஸ்தானம்

காரைக்குடி வித்வான்

சதாவதானம்

### பாலசுப்பிரமணிய ஐயரவர்களியற்றிய

ஷை விருத்தம்.

ஈரெட்டுக் கலைகளுமோர் மதியிடத்தே யிருந்தனபோன் றென்ம திப்பா
லீரெட்டுப் பிரபந்த மிருந்தனயா ஹும்புலவர்க் கீகு வேனென்
றீரெட்டு வயதானே நிகராறு முகக்கவிஞ னீய்ந்தான் பின்னு
மீரெட்டு மெட்டுமெட்டுங் கொண்டவரு டத்திலச்சு மிட்டான் மன்னே. (எ)

---

ஷெ யார் கனிட்டர்

## சாமிநாதையரவர்க ளியற்றிய

ஷெ விருத்தம்.

கலையுடுத்த தன்றியொரு கலையுமிலாப் பெருமையருங் கலைஞோர் மெச்சுங்
கலையுடைய பெருமையரு மதிசயிக்கப் ரபந்தமதிக் கலையிற் செய்தான்
கலைவளைத்துப் புரமெரித்த பரமனடி பதித்தமனக் கனிவி னுன்மே
கலைவளைக்கு மருங்கினர்தம் மயலொழித்த வாறுமுகக் கவிவல் லோனே. (அ)

---

கொட்டாம்பட்டி

## எம். கருப்பையாப்பாவலர் அவர்களியற்றிய.

நேரிசை வெண்பா.

தோத்திரமா நானுன்கு துங்கப்ர பந்தமெங்க
ணேத்திரமா னுன்குமர னேசமுற்ற—சாத்திரவா
றுறுமுக வண்ண லருளினு னஃதேதே
றுறுமுக வண்ணமுற வால். (௯)

கட்டளைக்கலித்துறை.

சித்திக்கும் புக்களிற் ரேன்சே யடியர் சிவனுமைமேற்
றித்திக்கும் பக்க நிறைமதி யின்கலை சேர்ந்த தமிழ்ப்
பத்திக்கும் பக்கஞ் சிரமுளங் கொள்ளப் பகர்ந்தனனீன்
முத்திக்கும் பக்கக் குழந்தையெம் மாறு முகக்கவியே. (௧0)

---

கோடைக்கானல் இங்கிலீஷ் கிளப்

ஹெட் ரைட்டர்

முதுகுளத்தூர்

## சித்திரகவி - எம். தெய்வநாயகம்பிள்ளை

அவர்கள் இயற்றியது.

---

இரண்டடியிலே நான்கடியாய நேரிசைவெண்பா.

(இரண்டாம் அடி யீறுதொட்டு முதலாம்அடி ஆதிவரை மாலை மாற்றாக வாசிக்க மூன்று, நான்காமடிகள் பிறக்கும்.)

---

மேகமுறு மானவன மீவாழ்வா ராயமன
மாக மகிழ்மா வதனமா - பாகிளைத்தான்

---

மேலேச்சூத்திரித்தவண்ணம் மாலே மாற்ருக வாசிக்க
மற்றை இரண்டு அடிகளும் வருமாறு.

மானதவ மாழ்கிமக மானமய ராவாழ்வா
மீனவன மாறுமுக மே. (௧௧)

சித்திரகவியானதால் உரை யுரைப்பாம்.

| | |
|---|---|
| மீனவன் | - மீன் + அவன் = மச்சத்தினது தன்மையுள்ளவன். மீன் தன்மை:—முட்டையிட்டபின் அம்முட்டைகள் தன் போல மீன்களாம் வரையும் அவற்றின்மீதுள்ள திருஷ்டிநீங்காதிருக்கும். அங்ஙனமே தன்னிடத்தேவந்த மாணுக்கர்கள் தன்னைப்போல வித்வத் பெறுங்காறும் அவர்மீதுள்ள கருணைபிறழாத கடாக்ஷமுள்ளவன். |
| நம் ஆறுமுகம் | - நூலாசிரியர் திருநாமம்: வெளிப்படை. |
| ஏ | - ஈற்றசை. |
| மேகமுறுமான | - மேகம் + உறும் + மான=மேகத்தை யளாவுந் தன்மையுடைத்தான, |
| வனம் | - (மரங்களுள்ள) காடுகளிலே (வனங்களிலே), |
| மீ | - உயர்ச்சி பெற்று, (கீர்த்தி பெற்று) |
| வாழ்வார் | - வீற்றிருக்கின்ற புருஷோத்தமர், |
| ஆய | - ஆய்ந்து. (ஒளிவர இருள் போயிற்று, ஈண்டு 'வர' என்பது வந்து எனப் பொருள்தந்த வகையான், 'ஆய', ஆய்ந்து எனலாயிற்று. |
| மனமாகமகிழ் | - மனம்+ஆகம்+மகிழ்=இருதயமும் தேகமும் ஆநந்திக்க, (தேகம் ஆநந்தித்தல்=சிரக்கம்பம், கரக்கம்பம் செய்தல்). |
| மாவதனமா | - மா + வதனம்+ஆ = அழகிய திருமுகமாக. ("அகத்தினழகு முகத்திற்றெரியும்", அங்ஙனமே பொருளமைந்த பிரபந்தத்தை வதனமென்றும். |
| பாகிளைத்தான் | - பா+கிளைத்தான்=பலவகையான செய்யுட்களை நிறைத்துப் பிரபந்தம் இயற்றினன். |

(இப்பிரபந்தத்தை வாசிப்பவர், கேட்பவர், சிந்திப்பவர், அனைவரும்)

| | |
|---|---|
| மானதவம் | - மானத+அம் = மானதம் + அம். (மானசம்=மானதம்) மனத்தின் பெருமை |
| மாழ்கி | - கெட்டு |
| மகமானம் | - மகம்+மானம்=யாகத்தாலுண்டாகக் கூடியமகிமை |
| அயரா | - (சற்றும்) தளராமல் |
| வாழ்வாம் | - (நிலைபெற்ற) செல்வத்தை அநுபவித்து வாழ்வார்கள். |

## விளம்பரம்.

என்னுற் செய்யப்பட்டிருக்கிற அரிச்சந்திர வெண்பாவை இந்தச் சோடசப் பிரபந்தத்துடன் சேர்ப்பதாய் நோட்டீசு மூலம் பிரசுரஞ் செய்திருந்ததில், வித்துவான்கள் அதைப் பிரத்தியேகமாகப் பிரிண்டு செய்வது நலமாயிருக்குமென அபிப்பிராயப்பட்டதால் அதை இத்துடன் சேர்க்கவில்லையாதலாற் கூடிய சீக்கிரம் அச்சிட்டுக் கையொப்பக் காரர்களுக்கு ஒவ்வொரு புத்தகம் இனுமாக அனுப்பப்படுமென்று தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் மணியார்டர்மூலம் பணத்தை எனக்கனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்சார்ஜ் நாலணுச் சேர்த்தனுப்பவேண்டும். வி. பி. போஸ்டி லனுப்பவேண்டுமெனத் தெரிவித்துக்கொண்டாலும் அனுப்பப்படும்.

இங்ஙனம்

பூ. ஆறுமுகம்பிள்ளை.

கடவுள் துணை.

# கையொப்பக்காரர்கள்.

| ஊரும் பெயரும். | புத்தகம். |
|---|---|
| **இராமநாதபுரம்.** | |
| ம-௱-௱-ஸ்ரீ, பாண்டித்துரைஸாமித்தேவரவர்கள் ... ... | க |
| ,, மங்களஸாமிதேவரவர்கள் ... | க |
| ,, எஸ். பொன்னுஸாமித்தேவரவர்கள் ... ... ... | க |
| ,, எஸ். வன்னித்துரைஸாமித்தேவரவர்கள் ... ... ... | க |
| ,, எஸ். முத்துத்துரைஸாமித்தேவரவர்கள் .. ... ... | க |
| ,, எம். நாகலிங்கம்பிள்ளையவர்கள் | க |
| ,, முனியாண்டிசேர்வைகாரர் ... | க |
| ,, வீரபத்திரன்சேர்வைகாரர் ... | க |
| **சித்தூர்.** | |
| ,, ஜெ. வ. விசையஸாமித்தேவரவர்கள் .. ... ... | க |
| **பாண்டிக்கண்மாய்.** | |
| ,, சின்னஸாமித்தேவரவர்கள் ... | க |
| **புதுமடம்.** | |
| ,, பெரியஸாமித்தேவரவர்கள் ... | க |
| **சி. இதம்பாடல்.** | |
| ,, ஜெ. வ. செல்லஸாமித்தேவரவர்கள் .. ... ... | க |
| **முதுகுளத்தூர்.** | |
| ,, எம். இராமலிங்கபிள்ளை அவர்கள் | க |
| ,, செ. லெ. பெருமாள்பிள்ளை ,, | க |
| ,, முத்துராக்குபிள்ளை அவர்கள் ... | க |
| ,, கோபாலுராஜு அவர்கள் .. | க |
| ,, நாகுவய்யர் அவர்கள் ... ... | க |
| **இளஞ்செம்பூர்.** | |
| ,, செல்லமுத்துசேர்வைகாரர் .. | க |
| ,, கந்தஸாமிசேர்வைகாரர் ... ... | க |
| **க. நெடுங்குளம்.** | |
| ,, தர்மபுத்திரத்தேவர் ... ... | க |
| **திருச்சுழி.** | |
| ,, க. இராமஸாமிபிள்ளை ... ... | க |
| ,, ஷண்முகசுந்தரக்குருக்கள் ... | க |
| ,, வக்கீல். துரைஸாமிபிள்ளை .. | க |
| **அருப்புக்கோட்டை.** | |
| ,, மாணிக்கவாசகம்பிள்ளை .. ... | க |
| ,, எம். திருநாகலிங்கம்பிள்ளை ... | க |
| ,, சி. வ. வன்னியநாடார் ... ... | க |
| ,, முனிசீபு. இராமஸாமிபிள்ளை ... | க |
| **சொக்கலிங்கபுரம்.** | |
| ,, உ. ஆ. திரவியம்பிள்ளை ... ... | க |
| ,, வீர. சங்கரக்குமாருபிள்ளை ... | க |
| **பெருநாழி.** | |
| ,, குடிக்கணக்கு. காளியப்பபிள்ளை | க |
| ,, உபாத்தியாயர். வைரவலிங்கம்பிள்ளை ... ... ... | க |
| **குமாரபுரம்.** | |
| ,, சு. இராமஸாமிநாயக்கர் ... .. | க |
| **தேவகோட்டை.** | |
| ,, மு. க. மு. சாமிநாதன்செட்டியார் ... ... ... | க |
| **பாலையம்பட்டி.** | |
| ,, வீ. சொக்கன்செட்டியார் ... | உ |
| **அபிராமம்.** | |
| ,, சி. தனுகோடிபிள்ளை ... .. | க |
| ,, சுப்பையாமுதலியார் ... ... | க |
| ,, உ. முத்தையபிள்ளை ... ... | க |

| ஊரும் பெயரும். | புத்தகம். |
|---|---|
| ,, மாலை. வீரபத்திரமுதலியார் ... | க |
| ,, அங்கமுத்துமுதலியார்.. ... | க |
| **மேலக்கொடுமலூர்.** | |
| ,, முத்துக்குமாருஸாமிக் குருக்கள் | க |
| ,, காயாம்புபிள்ளை ... ... ... | க |
| ,, முத்துவடுகநாதபிள்ளை ... | க |
| ,, அ. அய்யாஸாமிபிள்ளை ... ... | க |
| ,, கு. வெள்ளைஸாமிபிள்ளை ... | உ |
| ,, உமையணன்சேர்வை... ... | க |
| ,, பீ. பீறுராவுத்தர் ... ... ... | க |
| ,, பு. மீராகன்னிராவுத்தர்... ... | க |
| ,, பொ. மிசாபீறுஅம்பலம் ... | க |
| ,, பெ. மிசாபீறுராவுத்தர்... ... | க |
| **கிருஷ்ணுபுரம்.** | |
| ,, நாகஸாமிநாயக்கர் ... ... | க |
| **பரம்பக்குடி.** | |
| ,, என். சைவத்துறைபிள்ளை ... | க |
| ,, கோதண்டராம முத்துராமலிங்கம்பிள்ளை... ... ... | க |
| **பெருங்கருணை.** | |
| ,, தங்கமையங்கார் ... ... ... | க |
| **ஆண்டுகோண்டான்.** | |
| ,, செல்லம்பிள்ளை... ... ... | க |
| **சே. தாக்குடி.** | |
| ,, உமையவேலாயுதம்பிள்ளை ... | க |
| **ஆலங்குளம்.** | |
| ,, சேதுமாதவபிள்ளை ... ... | க |
| **மானமதுரை.** | |
| ,, ஹேட்கா. பிச்சபிள்ளை... ... | க |
| **சிக்கல்.** | |
| ,, ஹேட்கா. கர்ப்பூரசுந்தரம்பிள்ளை ... ... .. | க |
| **அலங்கானூர்.** | |
| ,, ஹேட்கா. கண்ணுஸாமிபிள்ளை | க |
| **மதுரை.** | |
| ,, ஹேட்கா. கோபாலுபிள்ளை ... | க |
| ,, ந. வீர. மலையாளத்தான்செட்டியார் ... ... .. | க |
| ,, முது. ச. கருப்பையாபிள்ளை ... | க |
| ,, முது. வ. கலியாணசுந்தரம்பிள்ளை ... ... ... | க |

| ஊரும் பெயரும். | புத்தகம். |
|---|---|
| **காடலகுடி.** | |
| ,, சம்பிரிதி. சங்கரலிங்கம்பிள்ளை | க |
| ,, முனிசீபு. சொக்கலிங்கம்பிள்ளை | க |
| **கமுதை.** | |
| ,, உபாத்தியாயர். எஸ். அய்யாஸாமிபிள்ளை .. ... ... | க |
| **மோருமான்.** | |
| ,, வெ. அரு. முத்துகருப்பன்செட்டியார் ... ... ... | உ |
| **பலவாங்குடி.** (ஒய்யக்கொண்டான் சிறுவயல் போஸ்டு) | |
| ,, பள. ராம. சிதம்பரஞ்செட்டியார் ... ... ... ... | க |
| **கானுடுகாத்தான்.** போஸ்டுலெட்சுமிபுரம். | |
| ,, மு. சி. சிவராமன்செட்டியார்... | க |
| **அரும்பழம்.** | |
| ,, ஆ. சா. இராமலிங்கவேளார் | க |
| **நாட்டரசன்கோட்டை.** | |
| ,, மருதுநாயகம்பிள்ளை ... ... | க |
| **கண்டவலீயம்பட்டி.** | |
| ,, பள. கரு. சின்னையாசெட்டியார் | க |
| **ஒய்யக்கோண்டான்சிறுவயல்.** | |
| ,, சி. அ. ராம. கு. ப. அழகப்பசெட்டியார் ... ... ... | க |
| **கோவில்ப்பட்டி.** | |
| ,, கோ. வி. அண்ணுமலைசெட்டியார் ... ... ... | க |
| **இரங்கோன் டங்கோ.** | |
| ,, அ. மு. சோ. செல்லப்பசெட்டியார்... ... ... ... | க |
| **இரங்கோன் உவாக்கமா.** | |
| ,, பள. முரு. செண்பகக்குமாருபிள்ளை ... ... ... | க |
| **இரங்கோன்.** | |
| 24-நெ. கல்லி பிள்ளையார்கோவில் | |
| ,, பூசை. நாராயணபிள்ளை ... ... | க |
| ,, ஷி சு. மு. ஷண்முகம்பிள்ளை | உ |
| ,, ரா. ம. அரு. லெ. முத்தையாசெட்டியார் ... ... ... | க |

| ஊரும் பெயரும். | புத்தகம். |
|---|---|
| ,, மெ. லெ. மெ. முத்தையாசெட்டியார் | க |
| ,, ப. சு. சித. நாகப்பசெட்டியார் | க |
| ,, சித. லெ. ஆத. நாராயணன்செட்டியார் | க |
| ,, 28-நெ. கல்வி 5-நெ. வீட்டில் வைத்தியம் பு. ரு. பொன்னம்பலமுதலியார் | க |
| ,, ராம. மெ. அ. சோலையப்பசெட்டியார் | க |
| ,, ராம. நா. ராம. தெய்வராயன்செட்டியார் | க |
| ,, வெ. அரு. சுப்பிரமணியன்செட்டியார் | உ |
| ,, ப. வ. பெரி. சோலையப்பசெட்டியார்வகை முத்தையாசெட்டியார் | க |
| ,, லெ. அரு. ராம. செல்லப்பசெட்டியார் | க |
| ,, வெ. தெ. அ. லெ. வீரப்பசெட்டியார் | க |
| ,, ராம. சொ. ராம. சொக்கலிங்கஞ்செட்டியார் | க |
| ,, அரு. லெ. நா. சுப்பிரமணியன்செட்டியார் | க |
| ,, சி. கரு. பழ. பழனியப்பசெட்டியார் | க |
| ,, செ. ராம. நா. லெ. நா. சொக்கலிங்கஞ்செட்டியார் | க |
| ,, நெ. நெ. முருகப்பசெட்டியார் | க |
| ,, வெ. சித. ஆ. சுப்பிரமணியன்செட்டியார் | க |
| ,, தெ. ராம. லெட்சுமணன்செட்டியார் | க |
| ,, சா.ராம.மு.அழகப்பசெட்டியார் | க |
| ,, சா. த. சு. கருப்பன்செட்டியார் | க |
| ,, முத்த. வெ. வீரப்பசெட்டியார் | க |
| ,, அரு. லெ. அரு. சொக்கலிங்கஞ்செட்டியார் | க |
| ,, டள. மு. ராம. அழகப்பசெட்டியார் | க |
| ,, சொ. மு. முத்தையா செட்டியார் | க |
| ,, பெ. ச. அ. சித. நாராயணன்செட்டியார் | க |
| ,, நா. அ. ஷண்முகஞ்செட்டியார் | க |
| ,, வீ. மு. சாத்தப்பசெட்டியார் | க |
| ,, அள. சு. அரு. சுப்பிரமணியன் செட்டியார் | க |
| ,, அள. ப. மெய்யப்பசெட்டியார் | க |
| ,, மு. அள. ஆரியப்பசெட்டியார் | க |
| ,, தி. அரு. அ. ராம. லெட்சுமணன்செட்டியார் | க |
| ,, சி. பள. ராம. அழகப்பசெட்டியார் | உ |
| ,, ப. சா. அ. சா. சாத்தப்பசெட்டியார் | உ |
| ,, வீ. முரு. இராமன்செட்டியார் | க |
| ,, ராம. வீர. வள்ளியப்பசெட்டியார் | க |
| ,, உ. அ. பெ. ராம. கருப்பன்செட்டியார் | க |
| ,, வெ. தெ. அ. லெ. வீரப்பசெட்டியார்கடையில், க. வா. கூ. மு. முத்தையாசெட்டியார் | க |
| ,, சா. அ. பெரிச்சியப்ப செட்டியார் | க |
| ,, வெ. வீர. இராமன்செட்டியார் | க |
| ,, மெ. அரு. அரு. முருகப்பசெட்டியார் | க |
| ,, கு. அ. ஆறுமுகஞ்செட்டியார் | க |
| ,, ப. வீர. ப. வீரப்பசெட்டியார் | க |
| ,, ராம. மு. சு. சுப்பிரமணியன் செட்டியார் | க |
| ,, பி. கு. பி. சிதம்பரஞ்செட்டியார் | க |
| ,, அ. கி. ராம. லெட்சுமணன்செட்டியார் | க |
| ,, சி. கரு. சி. வேலாயுதஞ்செட்டியார் | க |
| ,, கூ. கனக. வயி. கருப்பன்செட்டியார் | க |

| ஊரும் பெயரும். | புத்தகம். |
|---|---|
| ,, வீர. நா. ராம. பில்லப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, சி. பழ. வீர. இராமன்செட்டியார் ... ... ... | க |
| ,, நா. பெ. ராம. வெ. அரு. பழனியப்பசெட்டியார் .. ... | க |
| ,, உ. அரு. சொக்கலிங்கஞ்செட்டியார் ... ... ... | க |
| ,, மு. நா. சி. அ. ராம. நாச்சியப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, மு. ந. லெ. லெட்சுமணன்செட்டியார் ... ... ... | க |
| ,, வெ. கண. வெ. கண்ணப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, சு. ப. நா. சுப. ஆறுமுகஞ்செட்டியார் ... ... ... | க |
| ,, உ. உ. சபாபதிசெட்டியார் ... | க |
| ,, ராம. வெ. சொ. சோமசுந்தரஞ்செட்டியார் ... ... ... | க |
| ,, பெரி. யெ. மெய்யப்பசெட்டியார் | க |
| ,, ஆ. மு. ரு. க. பெரியகருப்பன்செட்டியார் ... .. .. | க |
| ,, சி. த. மா. முனிச்சாமிபிள்ளை (முதல்ரோட்டு) .. ... | க |
| ,, ராம. அரு. அரு. முருகப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, கு. மு. வெ. அருணசலஞ்செட்டியார் ... ... ... | க |
| ,, சு. தெ. ப. சி. ராம. பழனியப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, வீர. உ. வீரப்பசெட்டியார் ... | க |
| ,, கு. ப. ராம. அருணசலம்செட்டியார் ... ... ... | க |
| ,, வெ. பெரி. வெ. பழனியப்பசெட்டியார் ... ... ... ... | க |
| ,, செ. மு. கண்ணப்பசெட்டியார் | க |
| ,, சி. கரு. ஆ. கண்ணப்பசெட்டியார் | க |
| ,, பி. நா. பி. நாராயணன்செட்டியார் ... ... ... | க |
| ,, கூ. அரு. க. சொக்கலிங்கஞ்செட்டியார் ... ... ... | க |
| ,, கூ. க. அரு. க. அ. முத்தையாசெட்டியார் .. ... ... | க |
| ,, கண. மெ. சொக்கலிங்கஞ்செட்டியார் ... ... ... | க |
| ,, பி. நா. ராம. லெட்சுமணன்செட்டியார் ... ... ... | க |
| ,, அ. நா. அ. சுப்பிரமணியன்செட்டியார் ... ... ... | க |
| ,, முத்து. க. அ. பழனியப்பசெட்டியார் ... ... .. | க |
| ,, நா. க. அ. அருணசலஞ்செட்டியார் ... ... ... | உ |
| ,, சு. ப. ரா. ம. சொக்கலிங்கம்செட்டியார் ... ... ... | க |
| ,, கு. ப. அ. நா. கண்ணப்பசெட்டியார் ... .. .. | க |
| ,, தி. மு. பெ. உலகப்பபிள்ளை ... | க |
| ,, பெ. அ. ராம. இராமன்செட்டியார் ... ... ... | க |
| ,, சு. ப. க. அ. கூ. க. சொ. சிதம்பரஞ்செட்டியார் ... ... | க |
| ,, மு. சா. மு. மு. சாத்தப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, அ. க. அ. மெ. குழந்தைவேலன்செட்டியார் ... .. ... | க |
| ,, க. ப. சொக்கலிங்கஞ்செட்டியார் ... ... .. | க |
| ,, அ. ள. சொ. மெய்யப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, அ. கரு. பள. சுப்பிரமணியன்செட்டியார் ... ... ... | க |
| ,, கா. பள. கு. பழனியப்பசெட்டியார் ... ... ... | க |
| ,, ப. ராம. ப. சின்னையாசெட்டியார் ... ... ... ... | க |
| ,, சா. த. மு. இராமன்செட்டியார் ... ... ... | க |
| ,, அ. செ. சு. யெ. சுப்பிரமணியன்செட்டியார் ... ... ... | க |
| ,, அ. சு. செ. அருணசலஞ்செட்டியார் ... ... ... | க |

| ஊரும் பெயரும். | புத்தகம். | ஊரும் பெயரும். | புத்தகம். |
| --- | --- | --- | --- |
| ,, பெரி. யெ. மெய்யப்பசெட்டியார்வகை, க. சு. அ. சுப்பிரமணியன்செட்டியார்... ... | க | ,, சு. ப. கண. லெட்சுமணன்செட்டியார் ... ... ... | க |
| ,, பள. பெ. பெத்தபெருமாள்செட்டியார் ... ... ... | க | ,, வெ. அ. ரு. கடைகணக்கு சின்னையாபிள்ளை ... ... .. | க |
| ,, சித. ப. மு. அடைக்கலவன்செட்டியார் ... ... .. | க | ,, 26 - கெ. கல்வி வி. மருதப்பத்தர், (சூரத்துபஜார்) | அ |
| | | ,, சி. வ. அ. ரு. லெட்சுமணன்செட்டியார்... ... ... ... | க |

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௬ | ௪0 | ௪ | பாகாமற் | பாக்கியெனைக் |
| ௧0 | ௭௨ | ௨ | வென் | வெங் |
| ௧௩ | ௯௬ | ௩ | பொன்கழலைப் | பொற்கழலைப் |
| ௨௩ | ௨0 | ௬ | பாஞ்சசைனி | பாஞ்சசன்னி |
| ௩௧ | ௪௧ | ௧௩ | அடுமை | அடிமை |
| ௪௧ | ௬௬ | ௧௨ | சூர்ப்பனகி | சூர்ப்பநகி |
| ௭௧ | ௧௩ | ௭ | மடமாதர் | மடமானுர் |
| ௯௮ | ௪௬ | ௧௪ | நீளததவம் | நீளத்தவம் |
| ௧0௭ | ௧௬ | ௫ | யுலவுஞ் | யுலவு |
| ௧௧௭ | ௭௬ | ௨ | ரங்நா | ரன்னு |
| ௧௨0 | ௧00 | ௧ | மைய்ளாவு | மையளாவு |
| ௧௨௫ | ௧௯ | ௧ | லன்ஞே | லன்றே |
| ௧௨௭ | ௨௭ | ௭ | வாய்குறத்தி | வாய்க்குறத்தி |
| ,, | ௨௯ | ௨ | சொல்லிசொல்லி | சொல்லிச்சொல்லி |
| ௧௩0 | ௪௬ | ௩ | போதும்வர | போதும்வரச் |
| ௧௩௭ | ௮௧ | ௧ | சிமிளு | சிமிழு |
| ௧௬௨ | ௭ | ௪ | கலங்காமற் | கலங்குவஞே |
| ௧௬௯ | ௧ | ௪ | துளவே | துறவே |
| ௧௭௧ | ௯ | ௭ | பாடிய | பாடிவ |
| ௧௭௨ | ,, | ௨௨ | செயவாம் | செய்வாம் |
| ௧௭௯ | ௧௧ | ௧ | பொத்தப்பி | போத்தப்பி |
| ௧௮௨ | ௧௬ | ௫ | கருணடன் | கருணடன் |
| ௨௧௩ | ௬௪ | ௧ | மூழுநீறு | முழுநீறு |
| ௨௩௩ | ௩௭ | ௮ | சோரூபமதாய்க் | சொரூபமதாய்க் |
| ௨௩௭ | ௫௩ | ௬ | நிடடைக்குப் | நிட்டைக்குப் |
| ௨௫0 | ,, | ௧ | அரிச்சத்திர | அரிச்சந்திர |



உ

கடவுள் துணை.

முதலாவது.

# விநாயகர் திரிபுவெண்பாவந்தாதி.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

நண்பாவந் தாதியரு ளூட்டும் விநாயகன்மேல்
வெண்பாவந் தாதி விளம்புவதற்—கண்பாவம்
வீட்டுமவன் பாதகமென் மேலடரா தென்முடியிற்
சூட்டுமவன் பாதந் துணை.

## நூல்.

சீரிலங்குந் தந்திமுகத் தேவே முதற்பொருளே
நேரிலங்குந் தந்திகழ்கை நித்தனய—னாரணன்பூங்
கற்பகனீங் காதரவாய்க் காணவரு நின்கழலே
யற்பகனீங் காதென் னகம். (க)

அகரமுத லாய்நிறைந்த வைங்கரனே யன்பர்
பகரமுதப் பாக்கொள் பரனே—நுகரமுதத்
தோதமலற் குன்பின் னுரைத்ததெவ னுன்னையல்லாற்
சீதமலர் வாய்திறந்து செப்பு. (உ)

செப்புத் தனமடவார் தீயரென வென்றுணர்ந்து
தப்புத் தனமடமை தான்றவிர்வே—னிப்புவனத்
தாதரித்தா யௌவைமுத லாம்புலவ ரைத்திருமால்
சோதரித்தாய் முன்புதல்வா சொல். (௩)

சொல்லப்பா கந்தன் றுணைவாநின் மேற்றமிழ்ப்பா
வெல்லப்பா கந்தனைநேர் விள்ளாநாள்—செல்லப்பாழ்
மோகவலை மின்னூர் முயக்கிற் றவித்தனனென்
றேகவலை தீர்ப்பா யிசை. (௪)

இசையார்க்கப் பாலாக வேய்ந்தமொழி பாலா
வசையார்க்கப் பாலாகும் வள்ளான்—மிசையாருந்
தேவரையாட் கொள்வதுபோற் றீவினையேற் காபுகழென்
னாவரையா தோவைங்க ரா. (௫)

ஐங்கரா வைத்தடிந்தோ ரானையைக்காத் தோன்மருகா
பொங்கரா வைப்புனைந்தோன் புத்திரா—கொங்கவிர்பூம்
பங்கயமு கத்தாக்கும் பாட்டளிக வீட்டமிகு
மங்கயமு கத்தா யருள். (௬)

அருளத் தனையுணர்த்த வன்பர்முன்னூர் நீயென்
மருளத் தனைவிலக்க வாராய்—தெருண்மருப்பாய்
கத்திக்கு வித்தேயான் கையேற்கா நாளுளவோ
முத்திக்கு வித்தே மொழி. (௭)

மொழிக்கும் பலுக்கு முயன்றுமட மாதர்
பழிக்கும் பலுக்காளாய்ப் பாழே—விழிக்குந்
தரத்தானே னீதாவோர் சார்புளதோ சீரைங்
கரத்தானே நீதான் கதி. (௮)

கதியும்பன் மாதவத்தோர் காண்பாரல் லார்க்கென்
மதியும்பன் மாமுகத்தாய் மாயோன்—விதியும்பர்
நாடரும்பா தாவுனையே நம்பினே னுயேற்கோர்
கேடரும்பா தாள்கடனிற் கே. (௯)

நிற்கடுமை யார்க்குதவி நீயாகு மேரம்பா
சொற்கடுமை யார்க்கார் துணையாவா—ரெற்கெவைதான்
கைவந் தனமோக்கங் காண்பேனோ யான்புரிதல்
பொய்வந் தனமோ புகல். (௧0)

புகலப்பா கத்தன்முதற் புத்திரனே யன்பர்
சகலப்பா கத்தமிழைச் சாற்றி—யிகலும்
பிறவித் தளையறுத்தார் பேதமையேன் மட்டு
மறவித் தளையாத வாறு. (௧௧)

ஆறுபுனை யார்பணியா ரஞ்சடையார் தஞ்சுதனே
நீறுபுனை யார்பணியை நிந்திப்பாய்—வீறுபுனை
மும்மதத்தாந் தந்தி முகத்தாயென் புன்கவிக்குஞ்
சம்மதத்தாய் நீயே சரண். (௧௨)

சரணங் கழித்தெதிர்க்குந் தன்மையான் மாரன்
முரணங் கழித்தார்க்கு முன்னு—ளரணங்கா
மங்குசபா சத்தா யடியேற்குன் றாளளிப்பா
னிங்குசபா சென்னவர வே. (௧௩)

வரத்தா பதரனையாய் வாழ்த்தப்பெற் றுரைங்
கரத்தா பதரனையார் காணார்—திரத்தான
வுள்ளத்தே னல்லேற் குணர்வுறவே யானந்த
வெள்ளத்தே னல்காய் விரைந்து, (௧௪)

விரையலங்கன் மார்பார் விநாயகநின் றாளை
வரையலங்கன் மான மனத்தே—புரைமலங்காய்ந்
துள்ளத் திருக்கை யுணர்ந்தாரைப் போற்றிலமெங்
கள்ளத் திருக்கைவிலக் காய். (௧௫)

காயத்தேய் சத்திற் கலவாமற் காலிரண்டுந்
தேயத்தே சத்திற் றிரிந்தலைந்தேன்—மாயத்தே
யாகாமற் போத மளிப்பா யடியேன்முன்
வாகாமற் போர்புரியா மல். (௧௬)

மல்கும் பனைக்கையாய் வண்கரக நீர்கவிழ்த்துச்
சொல்கும் பனைக்கையாச் சோதித்து—நல்குந்
திருவாரி சத்தாளிற் சேர்த்தாள்வா யென்னைக்
கருவாரி சத்தாகாக் கா. (௧௭)

காவருமா கண்டலனுங் கந்தருவ ருந்தவருந்
தேவருமா கண்டலங்க டீர்க்கவல்லார்—மூவர்கடம்
போதங்க ளேயும் புனித விநாயகவுன்
பாதங்க ளேதுணையப் பா. (கஅ)

அப்பா வரசேயென் றன்பொடுனைப் போற்றாதார்
தப்பா வரசே தனமாவா—ரிப்பாரிற்
பூவேரம் பால்வருந்திப் போதமிழப் பாரெனக்கு
மாவேரம் பாவருள்செய் வாய். (கசூ)

வாயவசத் தாற்குழற வந்தாலுந் தும்பிமுகத்
தூயவசத் தாதி தொலைந்தாலு—மாயவசம்
பூணவந்த காலன் பொருதாலு நின்பொனடி
காணவந்தார்க் கேதுகலக் கம். (உ0)

கலக்கா தலைவாய்ந்த காமுகர்தி நட்பை
விலக்கா தலைவாரை வேண்டாய்—மலைக்கா
தினிக்கோட்டத் தால்வருந்தா தென்முடியில் வைப்பாய்
தனிக்கோட்டத் தாவுனது தாள். (உக)

தாட்கமலப் போதைமுகத் தையலர்சொல் லின்மொழியைக்
கேட்கமலப் போதை கெடுமெனவீ—ணாட்கழித்தே
னங்கசனத் தானே யரிமுகத்தா னேதடுத்தாள்
பொங்கசனத் தாய்நீ புகல். (உஉ)

புகலாரென் றுள்ளியுனைப் போற்றுவரை யாரு
மிகலாரென் றுள்ளவரை யென்று—யகலாசை
மீளா தலைவாரை மேவுவனோ வல்லபைக்கோ
ராளா தலைவா வறை. (உங)

அறைவா ரிதியோடி யள்ளுவர்பொன் கோடி
பறைவா ரிதிகாசம் பண்பாய்—முறையாக
வேதாந்தம் பாரார் வினவார் விநாயகசும்
மாதாந்தங் கன்மம்விடா மல். (உச)

மல்லிகைத்தார் சூடி மருட்டினர் மாமதுரச்
சொல்லிகைத்தார் வெஞ்சமனிற் றோன்றினர்—வல்லிகுத்தா
ரங்கனையா ரென்புரிவே ணுனைமுகா வென்மனத்திற்
றங்கனையாய் நற்கதியைத் தா. (உரு)

தாமோ தரனே தரும்பாத வெற்கடித
லாமோ தரனே வறிவிலனன்—பாமோத
கந்தே னுணத்தருவான் காதலுடன் றந்திமுகா
வந்தே னுணத்தியடை வாய். (உசு)

வாய்ப்பிரசங் கத்தார் வணங்குங் கணேசவுன்ற
னேய்ப்பிரசங் கத்தா விசைப்பேமோ—தாய்ப்பிரசூ
தத்தால் வருந்துவமோ தாபரிப்பாய் நாயேங்கட்
கெத்தால் வருந்துவமோ தின். (உஎ)

இன்னலத்தா வீட்டுவைவென் றேத்துகின்றேன் றும்பிமுகச்
சொன்னலத்தா வீட்டுவையென் சோகமெலாம்—பன்னவயற்
சென்றாலும் பாடா திராவிடத்தி லுன்புகழை
யென்றாலும் பாடா திரா. (உஅ)

இராமலிங்க நாதரவா வேரம்பா வென்முன்
வராமலிங்க நாதரவா வைத்துப்—பராமுகமா
யுற்றாய்மற் றார்கொ லுயிர்த்துணையா வாரிதனைச்
சற்றாய்மற் றார்கொள்புயத் தா. (உகூ)

தாண்டவரா யன்புதல்வா சற்சனருன் றாளார்வம்
பூண்டவரா யன்புதவாப் போதமுற்றா—ரோண்டவருப்
பித்தனையர் தாதரருள் பேணார்க்கோர் வாயுமுண்டோ
சித்தனையா தாதரவு செய். (௩0)

செய்யவளை யாதரிக்குந் தேவறியா யிம்மாது
துய்யவளை யாதரிக்குந் தொங்கல்பெற—மையல்கொண்டே
யங்கசப்பா விக்கயர்ந்தா ளன்புவைத்தே யாள்வையமு
தங்கசப்பா விக்கணடுத் தாள். (௩க)

தாளத் தனம்பாக சாதனன்வாழ் வென்றுணர்ந்தேன்
வேளத் தனம்பாக மேவரற்கந்—நாளுற்ற
வில்லங்கந் தீர்த்த விநாயகனே தென்றிசைவாழ்
கல்லங்கன் சூர்தவிரா கா. (௩உ)

காவரம்பை யாடரவங் கண்டானும் பூமனுமொப்
பாவரம்பை யாடரவப் பாயானு—மாவரஞ்செய்
யுன்பத் தரைநிகரோ வும்பன்முகா வெற்கிவர்வா
ழின்பத் தரையருள்வை யே. (௩௩)

ஏறுக்கு மாறுபணி யேநமன்வந் தாலவன்றன்
வீறுக்கு மாறுபணி மேலவனே—நூறு
தரந்துதித்தே னல்லவர்சொ றந்திமுகா மாயை
கரந்துதித்தே னல்லவெனைக் கா. (௩௪)

காதிக் கனைத்துலைத்தோன் காதலவே மன்சபத
மோதிக் கனைத்துறுமே லுன்னையல்லான்—மோதியடிப்
பாரைக்கா ணேன்வல்ல பைக்கருகா பார்மீதி
லாரைக்கா ணேத்துவன்சொல் லாய். (௩௫)

ஆயவரம் பாலிக்கு மைங்கரனென் றுன்கழலைத்
தூயவரம் பாலிக்குச் சொற்கொண்டே—யேயப்
படித்தார் புனைந்துருகப் பாவியொரு போதுங்
கடித்தார் புனைந்திலனே காண். (௩௬)

காணப்பா வந்தொலையுங் கத்தாவுன் பொன்னடியை
மாணப்பா வந்தொலையில் வாழ்விப்பாய்—சேணுற்றூர்
கண்ணுன மோனக் கடலே கணபதியே
யண்ணு னமோவுனக்கே யாம். (௩௭)

ஆம்பருவ மாகுமெனி லன்பரெலா முன்னருளை
யோம்பருவ மானமிலா வும்பன்முகா—தேம்பதுமத்
தாட்டலைவா மோனுநீ தாமதித்தா னுயடியேன்
பாட்டலைவா மோனுப் பகர். (௩௮)

பகவானுள் ளோரும் பரனீயென் றூர்வந்
தகவானுள் ளோருனையே சார்ந்தார்—சகமாயை
மாசங் கடவாதால் வாடுகின்றே னைங்கரவிவ்
வேசங் கடவாதா விள். (௩௯)

விள்ளச்செவ் வாயிலையோ வேழமுகா நின்கருத்தை
யுள்ளச்செவ் வாயிலையோ வூழ்வலியே—கள்ளத்
திருக்குவைத்துப் பார்த்ததெனத் தேர்ந்தேனென் றூலுங்
கருக்குவைத்துப் பாகாமற் கா. (௪௦)

காத்திரமோ கம்பனுக்கக் காணு ரடியவர்தம்
பாத்திரமோ கம்பனுக்கப் பாலானூர்—சூத்திரனு
னெப்பா வனையா லிடர்தவிர்ப்பே னத்திமுகத்
தப்பா வனையா வறை. (௪௧)

அறைவா னகத்தா ரயன்மாலுந் தேட
மறைவான கத்தார் மதலாய்—மறையாக
மங்கல்லே னிற்குரியார் வண்கழல்போற் றேன்கலெநெஞ்
சங்கல்லே னிற்குநிலெ சாற்று. (சஉ)

சாற்றருமஞ் சானகரத் தந்தையே வாய்மைபெற
மேற்றருமஞ் சார வெகுளியறத்—தேற்றமுறப்
பத்திமுகத் தாரவுன்றன் பாதத்தை யேபாட
வத்திமுகத் தானே யருள். (சங)

அருவருப்பாக் கைக்கே யலைந்துலக மோடி
வருவருப்பாக் கைத்தன் மதியார்—பொருதவரும்
வெஞ்சமனே யாயார் விநாயகனே நீறணியார்
நஞ்சமனே யார்பிரிவை நல்கு. (சச)

நல்குரவு மாலையென நாடோறு மாட்டியதே
மல்குரவு மாலையணி வண்புயத்தா—யல்குதலுஞ்
சம்மதமா யானைவர் தம்மையாட் கொள்ளுவனே
மும்மதமா யானை முகா. (சரு)

முகத்தா மரைக்காசை மூழ்குவேன் மூழ்கி
யிகத்தா மரைக்காசை யேற்பேன்—சகத்தேயிச்
சங்கடவா தாகிலெற்குத் தந்திமுகா வென்றென்றைக்
குங்கடவா முத்திகிடைக் கும். (சசா)

கும்பாவந் தீருமது கொள்கையினு லிந்தியவா
தம்பாவந் தீருமது சத்தியமே—நம்புமெனப்
பத்தருக்கா தாரம் பகர்ந்தாய் கணேசவென்போற்
பித்தருக்கா தாள்வாரார் பேசு. (சஎ)

பேசப் படித்தேன் பிழைபடித்தேன் பொய்படித்தேன்
மாசப் படித்தேன்போல் வஞ்சமுற்றேன்—பாசமறத்
தானம் படியேன் றவப்படியேன் குஞ்சரமு
கானம் படியேனைக் கா. (சஅ)

காலடங்காப் பற்றுளன்போற் கண்ணி விநாயகவென்
மேலடங்காப் பற்றுளனின் மேவுவனேன்—மாலடங்க
வையாப் புசபலமா வாய்பேசிப் போக்கவருள்
செய்யாப் புசபலமா செப்பு. (சகூ)

செப்பியத்தா லென்னின் றிருச்செவிகொள் ளாதிருந்தாய்
தப்பியத்தா லென்னிடத்திற் சார்ந்துளதே—லொப்பியத்தாற்
செய்தண் டனையாதே சித்திபுத்தி நாயகயான்
வைதண் டனையாதே வா. (ருo)

வாலாதித் தன்மை மறைவுற்று ணேக்குவதற்
கேலாதித் தன்மையைப்போ லெம்மாயை—மூலவுனைப்
பாரா தெனைவிலக்கிப் பார்த்தனவே யைங்கரவீ
தாரா தெனைவிலங்கை யா. (ருக)

ஐயா னனத்தா னமரர்பெரு மானுழிக்
கையா னனத்தான் கருதுமுனைப்—பொய்யான
வாசகத்தா னுங்காண வல்லேனோ தந்திமுகத்
தீசகத்தா னுங்கா திசை. (ருஉ)

இசைக்கும் பழஞ்சுருதி யின்னுரையோ ராமல்
வசைக்கும் பழிக்குமுடல் வாய்ந்தே—நசைக்குறவாய்ச்
சித்தங் கலங்தேன் சிவன்புதல்வா மாதர்கள்பா
சத்தங் கலங்தேனைச் சார். (ருங)

சாரத் துவம்பாலித் தற்குருவாய்ச் சார்ந்ததல்லா
னேரத் துவம்பார்த்து நின்றேனோ—தீரத்துக்
கோரா தரவான வும்பன்முகா நீண்டகைத்து
வாரா தரவா வரம். (ருச)

வரம்பணியா ரங்தோசை வாகமஞ்சே ரார
தரம்பணியா ரங்தோசை தந்தைங்—கரம்பரவி
யுண்ணப்பா வென்றூலு முண்பாய்கொ ணுயடியேன்
வண்ணப்பா மாலையணி வாய். (ருரு)

வாயாற் றுதியேன் மனதாற் கருதேனை
நீயாற் றுதியே னினைத்திலையென்—ரேயாது
வந்திவத னத்தப்பான் மானமின்றி வாழ்த்துவதென்
றந்திவத னத்தப்பா சாற்று. (ருசா)

சாற்றவரும் போதையொவ்வாத் தள்ளிவைத்தா லுந்துதித்து
மேற்றவரும் போதை விடாதடுத்தா—ரேற்றவருஞ்
சிந்தித்தார் முக்கணுடைத் தேவேயெற் காப்பையுனை
நிந்தித்தார் பெற்றார் நிலை. (ருஎ)

நிலையாமைக் கண்ணி நெறிதவறு வேனே
சொலையாமைக் கண்ணிமைந்தா தூவா—லிலையானைத்
தத்தத்தைத் தாவெனவே தானடிக்க வைத்தவநற்
சித்தத்தைத் தாகதியிற் சேர். (ருஅ)

சேரிலம்பா டேய்ந்திடவுந் தீவினைக ளோய்ந்திடவு
மோரிலம்பா டேனு முருதறவுஞ்—சீரிலங்குன்
பாதத்தே வாழ்ந்திடவும் பாரத் தனிக்கோட்டு
நீதத்தே வாவருள்வாய் நீ. (ருகூ)

நீதுரியா தீதத்த னென்று நினைந்தடைந்தேன்
சாதுரியா தீதத் தமமாக்கி—யாதரியா
பத்துச்சித் தானந்தம் பாலடைவா யென்றுரிய
சத்துச்சித் தானந்தந் தா. (சூ0)

தாவரமோ சங்கமமோ சார்ந்தாலுஞ் சத்தியமென்
னுவரமோ சங்கலைய நண்படையத்—தீவரமே
யுள்ளப்பா வந்தேய வும்பன்முகா வோருறுதி
விள்ளப்பா வந்தே விரைந்து. (சூக)

விரையளகங் கன்னிகவான் விற்புருவங் கொங்கை
வரையளகங் கன்னியுன்கை மாலைக்—கிரவாகி
மாரனம்பால் வாடினள்கா மாதங் கவதனத்து
வீரனம்பா ராதரிப்பார் மேல். (சூஉ)

மேலவரை யிற்கோட்ட மேவா தருளுமையாள்
பாலவரை யிற்கோட்டாற் பாரதத்தைச்—சாலவரை
யத்தத்தா யானிருக்கு மார்வார்க் குரியவவுன்
சித்தத்தா யானிருக்குஞ் சீர். (சூஙூ)

சீர்பாதந் தாவளத்திற் செப்புமுலை வல்லபைதோய்
மார்பாதந் தாவளத்தின் வண்முகத்தாய்—கூர்பாவ
மென்வரனல் லோரைவரு மென்சொலுற நீயென்றென்
முன்வரனல் லோரைவரு மோ. (சூச)

வருமோசம் பாத்தியநம் மாட்டெனவோர் மாதர்
பெருமோசம் பாத்தியமாய்ப் பேணித்—திருமோக
னஞ்சம்பா லாக மயர்வேனே முன்னவவென்
னெஞ்சம்பா லாகவரு ணீ. (சூரு)

நீரோ ருகத்தாளா நீள்புவியை மன்னரெலா
மோரோ ருகத்தாளா வுய்ந்தனரோ—சீரோருந்
தாழ்வறியா ராயினரே தந்திமுகா மாற்கடலில்
வீழ்வறியா ராயினதே வீடு. (௬௬)

வீடாதிக் கத்தன் விநாயகனென் றுன்கழலை
நாடாதிக் கத்தனம்பா ணேங்கேனே—வாடாநம்
பாதத்தா ரென்று பகராயோ வீங்கிதற்கும்
வாதத்தா ரெங்குளர்சொல் வாய். (௬எ)

வாயொடுங்கத் தாபரிக்க வல்லபையா மெற்பயந்த
தாயொடுங்கத் தாவென்முன் சாரின்மனப்—பேயொடுங்க
மோனத்தார் சூடினன்கா முத்திகொள்வேன் றத்துவந்தேர்
கானத்தார் சூழைங் கரா. (௬அ)

கரக்குமுளத் தார்வைப்பாங் காட்சியைக்காண் பான்செய்
வரக்குமுளத் தார்வைத்தும் வாரார்—சிரக்கம்பஞ்
செய்யாரை யாதந் திவதனத்தாய் நற்கதியில்
வையாரை யாதரஞ்சொல் வாய். (௬௯)

வாய்க்காரன் போடுதலில் வஞ்சனென்று லன்னையல்லாற்
சேய்க்காரன் போடுதவி செய்யவல்லார்—நோய்க்கான
பாரமருந் துன்பூதி பாசாங் குசவஃதென்
னேரமருந் துன்பகற்றுய் நீ. (எ0)

நீவலமை யாயுரைத்தென் னேர்வரினன் றுமிலையேற்
கேவலமை யாவுன்றுள் கிட்டுவனே—சேவலமை
யங்கரத்தான் முன்னுதித்த வங்குசபா சாதவஞ்செய்
துங்கரத்தா நீயே துணை. (எக)

துணைப்பா தகமலங்க டோய்வே னெனிலைங்
கணைப்பா தகனையும்வென் காண்பேன்—பணைப்பான
தாலக் கராசலத்திற் சார்குமிழி நேர்வாழ்வா
மேலக் கராசலத்தை வீட்டு. (எ௨)

வீட்டலரும் பாவகருள் வேண்டாதென் பாட்டையெலாங்
கேட்டலரும் பாவமெனக் கேலிசெய்தாற்—போட்டியுடன்
வாதத்த னம்புகல வாயுமுண்டோ வைங்கரநன்
னீதத் தனம்புகல நீ. (எ௩)

நீசந்தே கிக்காதென் னேர்வரிலோர் கேள்வியுண்டு
பாசந்தே கிக்கா பரத்துக்கா—கோசங்கட்
கப்பாலா தந்திமுகத் தப்பா புகல்வெளியா
கப்பாலா தந்திடத்தே கா. (எச)

காயத் திரியாற் கதியடைவ தன்றியென்கா
றேயத் திரியாமற் செய்யுனது—தூய
திருவடிவா னந்தனையச் சேர்க்குங் கணேசா
குருவடிவா னந்தம்விளைக் கும். (எரு)

விளைக்கும்பா வாணருள மேவுமுனைத் தேடிக்
களைக்கும்பா வாதரித்த கண்ண—னிளைக்குமெனிற்
பொய்ப்பாக்கா யப்பாப் புகன்றேன் கணேசவது
மெய்ப்பாக்கா யப்பா விரைந்து. (எசு)

விரையில்லாம் வித்தே விநாயகனே வெள்ளி
வரையில்லான் றந்த மதலாய்—திரையில்லா
மாதரங்கம் போன்று மனக்கவலை யாற்றுவனே
சூதரங்கம் போக்காதென் சொல். (எஎ)

சொல்லும் பரைக்கோர் சுதனே விநாயகனே
நல்லும் பரைக்கோர நண்ணுமற்—றொல்லை
வரமளித்தா யானந்த வாரியமு தத்தைக்
கரமளித்தா யானந்தன் காண். (எஅ)

காண்பரியார் யாவரன்பாய்க் கைதொழுதுன் றூண்முடியிற்
பூண்பரியார் யானைமுகப் புத்தேளே—மாண்பரவும்
பொன்னனையார்க் குந்தொனியிற் புக்குநமன் பாசத்தா
லென்னனையார்க் குண்டோ விடர். (எகூ)

இடங்கரைத்துண் டாக்கு மிறையோன் மருகா
விடங்கரைத்துண் டான்புதல்வா வினே—சடங்கடிக்குந்
தீவினையா தோவறியேன் சித்தி விநாயகனே
பாவினையா தோர்சொற் பகர். (அ0)

பகரத்தே வாரமுண்டு பாரவினை யெல்லாந்
தகரத்தே வாவுனது தாளுண்—டிகபரத்தே
யார்க்கப்பஞ் சாக்கரமுண் டைங்கரநின் னன்பர்களைப்
பார்க்கப்பஞ் சாக்கரக்கும் பாடு. (அக)

பாடப் பரவசமாய்ப் பத்திவர வைத்தருள்வாய்
நாடப் பரவசமாய் நன்குணர்ந்து—வீடுபெறச்
செய்தா ரகமகிழுஞ் சித்தி விநாயகனே
உய்தா ரகமருள்வா யோர்ந்து. (அஉ)

ஓரத் துவித முணரேன்சை வாகமத்தின்
சாரத் துவிதமின தாமெனவோர்—நேரத்துங்
கல்லேன்கொல் லாமை கரவே னெவர்க்கேனும்
நல்லேன்கொ லானேவத னு. (அங)

வதனமதி வாணுதற்செவ் வாயுமையாள் பெற்ற
சுதனமதி வாமணிபோற் றெண்டர்—மதுரகவிப்
பந்தமிழைத் தாரேரம் பாவவர்முன் னுயேன்சொல்
செந்தமிழைத் தாபரித்தாட் செய். (அச)

செய்தவம்பா லிக்கெனவோர் சிற்றறிவு ளேனெனினுங்
கைதவம்பா லிக்காமற் காத்தருள்வாய்—வைதவஞ்சேர்
கன்மனத்தார்க் குண்டோ கதியைங் கரவினியுஞ்
சென்மனத்தா ழ்வினையைத் தீர். (அரு)

தீரா தரோகமெலாந் தீர்த்தருளென் றேத்துமென்பாற்
சாரா தரோசிகமாத் தள்ளுவையேற்—சீரான
பொன்மேனி யாகப் புதுக்குவரா ரைங்கரனே
யென்மேனி யாயவழு வென். (அசு)

எங்கிதியே யெம்முயிரே யெம்முறவே யென்றுனது
சந்நிதியே நின்றுதொழுந் தாபதர்போற்—பின்னுதியா
வானந்த வாரி யழுந்தவுற்றேன் யானைமுகா
ஞானந் தவாதருளிந் நாள். (அஎ)

நாட்கழியா நின்றுணைத்தா ளடுதற்கும் பூங்கணைகொள்
வேட்கழியா நின்றுறுதி மேவுதற்கும்—வாட்கமலச்
செல்விக் கினமருகா சிந்தித்தே னுயடியேன்
வல்விக் கினமகற்ற வா. (அஅ)

வாலிபத்தான் பின்னேட வாட்டிக் கொடிநாட்டு
மோலிபத்தா னுவி முடித்தோனைப்—பாலியற்று
மஞ்சுதலை யான்றுதிக்கை யாரவைத்தாய் நாயடியேன்
கெஞ்சுதலை நோக்கியருள் கேள். (அகூ)

கேளாயென் னேவறியேன் கிம்புரிக்கோட் டாய்மறையார்
தாளாயென் னேவகற்றித் தாபரித்தே—யாளாயேற்
பின்னூர்வந் தாத்திரமாய்ப் பேணுவார் நான்முகத்தோன்
மின்னூர்வந் தாழாய் விதி. (சுo)

விதியானை யானனத்தான் வெள்விடையான் விண்ணோர்
துதியானை யானனத்தாய் தொல்லை—மதியானைந்
திம்பனையா வாவாவென் றேத்தியும்வா ராததென்னே
வும்பனையாட் கொண்டா யுரை. (சுக)

உரைப்பார்தங் கத்தி னுயர்வறிவார் போலத்
திரைப்பார்தங் கன்பர்தரந் தேர்வாய்—நரைப்பாகிப்
பற்றேயத் தாழ்ந்தேன் பதத்தில்வைப்பா யத்திமுகா
சற்றேயத் தாகருணை தந்து. (சுஉ)

தந்தையனை யாசான் றனிப்பரனீ யென்னுது
முந்தையனை யாசான்ற மூடனு—யுந்திடமூ
வேடணைப்பா சத்தா லிடைந்தேனுன் செய்யகழன்
மாடணைப்பாய் தந்திமுக வா. (சுங)

முகவாசம் போதாத மூடனு னீசன்
மகவாசம் போதா வரமென்—றகவாசை [யோ
கொண்டுவகை யோடடுத்தாற் கொள்ளுவையோ தள்ளுவை
விண்டுவகை யோதுநல மே. (சுச)

நலப்பா வலர்த்தேடு நாரியர்போ லிந்த
நிலப்பா வலர்துருவு நின்னைக்—கலப்பாகத்
தேவடியார் போனுனுஞ் சிந்தித்தேன் றந்திமுகத்
தூவடியாய் தந்தாள் சுகம். (சுரு)

சுகத்தாரு மங்கசவே வேகணை யான்முச்
சகத்தாரு மங்கலுற்றுர் தந்தி—முகத்தாய்கே
ணற்றவரும் போகமுற்றுர் நாயேற்குன் பொன்கழலைப்
பற்றவரும் போதமளிப் பாய். (சுசு)

பாயசந்தித் திக்கும் பழமோத கம்பொரிநால்
வாயசந்தித் திக்குமுண வைத்தவர்த—நோயசந்து
நன்றுத் திரிந்தாரந் நற்றவர்தாட் பற்றவரு
ளென்றுத் திரியமிஃ தென். (சுஎ)

என்னெஞ் சியல்பா யிரும்புபோ லானதென்றூன்
முன்னெஞ் சியவினைதான் மூண்டதோ—பின்னு
முருகாதா வுன்னுவர்ச்சே ரும்பன்முகா மாயோன்
மருகாதா வுன்னடியின் வாழ்வு. (௯௮)

வாழவைக்கும் போத மலரவைக்குந் தொண்டரெலாஞ்
சூழவைக்கும் போடு சுகங்கொடுக்கும்—கேழவைய
லுன்பாதப் போதாமென் றுள்ளுணர்ந்தேன் யானைமுகத்
தின்பாதப் போதா திரங்கு. (௯௯)

இரங்கலையே னுன்னெஞ்ச மென்று யடியேன்
வரங்கலையே னுன்னன் மறவேன்—றிரங்குலையார்
பாவேதந் தானெனவோர் பாசாங் குசவமலத்
தேவேதந் தாண்முத்திச் சீர். (௧௦௦)

விநாயகர் திரிபுவெண்பாவந்தாதி

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

## இ ர ண் டா வ து.

# மதுரை யமகவந்தாதி யுரை.

---

### க ட வு ள் வா ழ் த் து.

கட்டளைக்கலித்துறை.

மாதங்கத் தாமரை வாவிகள் சூழு மதுரைநகர்
மாதங்கத் தான்புக ழந்தாதி கூற வருந்துணையாய்
மாதங்கத் தார்ந்த பயோதர வல்லபை வாமமுற்ற
மாதங்கத் தானனச் சித்திவி நாயகன் வண்கழலே.

(இதன்பொருள்.) மா தங்கு அ தாமரை வாவிகள் சூழும் - இலக்குமி தேவி வாசஞ்செய்கின்ற செந்தாமரைகள் நிறையப்பெற்ற தடாகங்கள் சூழ்ந்திருக்கின்ற, மதுரை நகர் மாது அங்கத்தான் புகழ் அந்தாதி கூற - மதுரைமாநகரத்தி லெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியாரை இடப்பாகத்திலே வைத்தருளிய சோமசுந்தரப்பெருமான் கீர்த்தியை அந்தாதியாகச் சொல்வதற்கு, மா தங்கத்து ஆர்ந்த பயோதரம் - மேன்மையுள்ள பொன்னைப்பொருந்தி விளங்குகின்ற ஸ்தனபாரங்களையுடைய, வல்லபை வாமம் உற்ற மாதங்கத்து ஆனன சித்திவிநாயகன் வண் கழல் துணையாய் வரும் - வல்லபையென்னுந் திருத்தேவியார் தன்பக்கத்தே சேர்ந்திருக்கப்பெற்ற யானைமுகமுள்ள சித்திவிநாயகக்கடவுளுடைய சிறப்புப்பொருந்திய திருவடிகளே சகாயமாக வரும். (எ-று.)

ஏ - அசை.

---

### நூ ல்.

திருக்கையி லாயத் திருந்தெழிற் கூடலிற் சென்றுமையார்
திருக்கையி லாளை மணந்தா னருட்புணை சேர்ந்துதத்தந்
திருக்கையி லாமற் றுலையாரைக் கூற்றுவன் செக்கிலிட்டுத்
திருக்கையி லார்வந்து மீட்பா ரவன்கழல் சேர்மின்களே.

(இ - ள்.) திரு கைலாயத்து இருந்து எழில் கூடலில் சென்று - தெய்வத்தன்மையுடைய கைலாசமலையினின்று அழகுபொருந்திய மதுரையையடைந்து, அயில் மை ஆர் திருக்காளை - வேல்போன்ற மையணிந்த கண்களையுடைய தடா

தகைப்பிராட்டியாரை, மணந்தான் அருள் புணை சேர்ந்து - திருமணமுடித்த சிவபெருமானுடைய வருட்கலத்தை யடைந்து, தத்தம் திருக்கை இல்லாமல் தொலையாரை - தங்கள் தங்களுடைய குற்றங்களைப் பற்றறப் போக்கடியார்களை, கூற்று வன் செக்கில் இட்டு திருக்கையில் - இயமனுனவன் வலிமையாகிய செக்கிற்புகுத்தி யாட்டும்போது, ஆர் வந்து மீட்பார் - யாவர்வந்து விலக்குதல் செய்பவர்? இல்லையாகலின், அவன் கழல் சேர்மின்கள் - (உலகீர் நீங்கள்) அந்தச்சிவபெருமானுடைய திவ்விய சரணாரவிந்தத்தைச் சேர்ந்துய்யுங்கள். (எ-று.)

களங்கனந் தாவளை கஞ்சனை யேய்க்குங் கௌரிபங்கன்
களங்கனந் தாது புனைந்தானென் னுள்ளங் கவர்ந்திடும
களங்கனந் தாவர வென்ருன் மதுரையிற் கண்ணுதனங்
களங்கனந் தாமரைத் தாளே நமக்குக் கதியிடமே.

(இ - ள்.) மனமே! களம் கன்னம் தா வளை கஞ்சனை ஏய்க்கும் கௌரி பங்கன் - கண்டமும் கபோலமும் வலிமையுள்ள சங்குக்கும் கண்ணுடிக்கும் பொருந்துகின்ற உமாதேவியாரை வாமபாகத்திலே வைத்தவரும், களங்கன் நந்தாது புனைந்தான் - சந்திரனைத் துன்பத்தினின்று நீக்கி யெடுத்துத் தன்சடாமுடியில் வைத்தவரும், என் உள்ளம் கவர்ந்திடும் அகளங்கன் - அடியேனுடைய ஹிருதயத்தைக் கவர்ந்துகொண்ட குற்றமில்லாதவரும், நந்தா வர என்ருன் - (திருநாளைப்போவாரை நோக்கி) நந்தா வருவாயாக வென்றழைத்தவரும், மதுரை இல் கண்ணுதல் நங்கள் அங்கன் அம் தாமரை தாளே நமக்கு கதி இடம் - மதுரையிலெழுந்தருளிய நெற்றிக்கண்ணையுடையவரும் நம்முடைய சரீரமானவருமாகிய சிவபெருமானுடைய அழகியதாமரைமலர்போன்ற திருவடிகளே நமக்கு மோக்ஷஸ்தானமாகும். (எ-று.) (உ)

கதம்பந்தந் தாவர மாக்கொளும் வானைக் கடக்குமெழிற்
கதம்பந்தந் தாவளக் கானத்தை யூரெனக் கண்டுயர்பா
கதம்பந்தந் தாமம் பெறவைத்த கூடற் கயற்கணிபா
கதம்பந்தந் தாண்மறை தேடுமுன் பாதத்தைக் கண்டிடவே.

(இ - ள்.) வானை கடக்கும் கதம்பம் தம் தாவரம் ஆ கொள்ளும் - ஆகாயத்தை யூடுருவுங் கடப்பமரங்கள் தமதுஇடமாகக் கொண்டதும், எழில் கதம்பம் தந்தாவளம் கானத்தை - அழகிய மேகங்கள்போன்ற யானைக்கூட்டங்களிறைந்ததுமான வனத்தை, ஊர் என கண்டு உயர் பாகதம் பந்தம் தாமம் பெற வைத்த கூடல் கயல் கண்ணி பாக - நகரமாகவுண்டாக்கி மகிமையுள்ள எல்லாநாட்டு மேலோர்மொழிகளையும் முறைமைகளையும் அழகுபெறவமைத்த மதுரைமாநகரில் எழுந்தருளிய மீன்போலுங் கண்களையுடைய உமாதேவியாருக்கு நாயகரே!, மறை தேடும் உன் பாதத்தை கண்டு இட தம்பம் தந்து ஆள் - சுருதிகள் தேடுகின்ற உம்முடைய சரணாரவிந்தத்தைத் தரிசித்தென்னை யொப்புக்கொடுக்கப் பற்றுக்கோடுதந்து இரக்ஷிப்பீராக, (எ-று.) ஏ-அசைநிலை. (ங)

கண்டனந் தந்தங் கயனாக முத்தங் கருங்குழற்கற்
கண்டனந் தந்த மொழிநடை நூண்ணிடைக் கன்னிகறைக்
கண்டனந் தந்தனை வானெயிற் கூடற் கடிநகரிற்
கண்டனந் தந்தரம் போற்றியென் றுன்பங் கடந்தனனே.

(இ-ள்.) கண் தனம் தந்தம் கயல் நாகம் முத்தம் - திருக்கண்களும் ஸ்தன பாரங்களும் பற்களும், (முறையே) மச்சத்துக்கும் மலைக்கும் முத்துக்கும் உவமையாக வுள்ளவளும், கரும் குழல் - கரியகூந்தலை யுடையவளும், கற்கண்டு அன்னம் தந்து அம் மொழி நடை நுண் இடை - கற்கண்டுக்கும் அன்னத்துக்கும் நூலுக்கும் உவமைகாட்டுகின்ற அழகியசொற்களையும் நடையையும், நுண்மையான மருங்குலையு முடையவளுமாகிய, கன்னி (அந்தம்தனை) - மீனும்பிகையின் தேஜஸையும், கறை கண்டன் அந்தம் தனை - விஷந்தங்கிய திருக்கண்டத்தையுடைய சிவபெருமான் அழகையும், வான் எயில் கூடல் கடி நகர் இல் கண்டு - விண்ணளாவிய மதிள்சூழ்ந்த மதுரையென்னுங் காவல்நிறைந்த நகரத்திற் றெரிசித்து, அனந்தம் தரம் போற்றி என் துன்பம் கடந்தனன் - அனேகந்தரம் வணங்கி அடியேன் துன்பத்தினின்றும் நீங்கினேன். (எ-று.) (ச)

தனக்கடங் காட்டித் தனமீட்டி வஞ்சந் தழுவியக்க
தனக்கடங் காதுவர் சொற்கேட்டு வாழ்த றவிர்த்தயனார்
தனக்கடங் காவளர் சோதியைச் சார்மினைந் தாருநிகர்த்
தனக்கடங் காநிறை கூடற் றலத்தினிற் றுனடைந்தே.

(இ - ள்.) கடம் தனம் காட்டி தனம் ஈட்டி - குடம்போலு முலைகளைத் தெரியும்படி காண்பிவித்துப் பொருளைச் சம்பாதித்து, வஞ்சம் அ கதனம் தழுவி கடம் காதுவர் - வஞ்சகத்தையும் அந்தக்கொலையையும் ஆதரித்து நீதியைக்கொல்லுகின்ற மாதர்களுடைய, சொல் கேட்டு வாழ்தல் தவிர்த்து - வார்த்தையைக் கேட்டு வாழும்வாழ்க்கையைத் தொலைத்து, ஐ தாரு நிகர்த்தன கடம் கா நிறை கூடல் தலத்தினில் அடைந்து - அழகிய கற்பகதருவுக்கொப்பான ஆகாயத்தையளாவிய சோலைகணெருங்கிய மதுரையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தைச் சேர்ந்து, அயனார் தனக்கு அடங்கா வளர் சோதியை சார்மின் - பிரமாவுக்கு அடங்காமல் அக்கினிப்பிழம்பாகி நின்ற சிவபெருமானை யடைக்கலம் புகுதுங்கள். (எ-று.)

உலகீர், தோன்றுஎழுவாய். தான், அசை. (ரு)

தானந் தவம்பல செய்துமென்னு மறை சாற்றியநி
தானந் தவறின்றிக் கூடற் றலத்திலென் றுயுடனே
தானந் தவம்பலத் தாடிய சோதியைச் சார்ந்துமன
தானந் தவல்வினை தீர்ப்பவ ரோமுத்தி தங்குவரே.

(இ - ள்.) கூடல் தலத்தில் என் தாயுடன் தான் அந்த அம்பலத்து ஆடிய சோதியை - மதுரையென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எனது மாதாவாகிய

உமாதேவியாருடன் தானும் அழகுள்ள வெள்ளியம்பலத்திற் றிருநடனஞ் செய்தருளிய சிவபெருமானை, மறை சாற்றிய நிதானம் தவறு இன்றி சார்ந்து - சுருதிகளிற் சொல்லியபடி (நிக்ஷயமாய்) குற்றங்கணீங்கி யடைந்து, வல் வினை மனதால் நந்த தீர்ப்பவர் முத்தி தங்குவர் - வலிமையாகிய வினைகளை மனதாரக் கெடும்படி தீர்ப்பவர்கள் மோக்ஷஸாதன மடைவர், (இவ்வாறின்றி) தானம் தவம் பல செய்தும் என் ஆம் - (பிறர்மதிக்கும்படி) தருமங்களையும் தவங்களையும் பலவாருகச் செய்வதினல் யாது பிரயோஜனம். (எ-று.) ஏ-அசை. (சு)

தங்கத் தனத்தங் கயற்கண்ணி பாகனந் தாமரைமேற்
றங்கத் தன்த்த னறியான் மதுரைத் தலத்தினுளார்
தங்கத் தனத்தந் தலையா னுருவந் தவளத்துமா
தங்கத் தனத்தந் தவிர்த்தான் பதங்கதி தந்திடுமே.

(இ-ள்.) தங்கம் தனத்து அம் கயல் கண்ணி பாகன்-தேமற்படர்ந்த ஸ்தன பாரங்களையும் அழகிய மீன்போன்ற விழிகளையுமுடைய உமாதேவியாரை வாம பாகத்திலே வைத்தவரும், அம் தாமரை மேல் தங்கு அத்தன் நத்தன் அறியான்-அழகிய தாமரைப்புஷ்பத்தின்மேல் வீற்றிருக்கின்ற பிரமாவும் விஷ்ணுவும் காணக்கூடாதவரும், மதுரை தலத்தின் உள்ளார் தம் கத்தன் - மதுரைஸ்தலத்தில் வசிப்பவர்களுக்குக் கர்த்தாவும், அத்தம் தலையான் - கையிலே பிரம கபாலத்தை வைத்திருப்பவரும், தவளம் உருவம் மாதங்கத்து அனத்தம் தவிர்த்தான் - வெள்ளைநிறமுள்ள யானையினுடைய சாபத்தைத் தீர்த்தவருமாகிய சிவ பெருமானது, பதம் கதி தந்து இடும் - திவ்வியசரணாரவிந்தம் மோக்ஷத்தைக் கொடுத்தருளும். (ஆதலின் மனமே, அத்திருவடியை விரும்புவாயாக.) (எறு.) ()

தந்தனத் தானத்த மால்காட்டுந் தையலர் சற்சிதமி
தந்தனத் தானத்த ஞதிய ரின்பிற் றயங்கமயல்
தந்தனத் தானத்த நின்னடிப் போதிணை தாதனத்த
தந்தனத் தானத்த வென்றாடுங் கூடலிற் சங்கரனே.

(இ-ள்.) தம் தனத்தால் நத்த மால் காட்டும் தையலர் சற்சிதம் மிதந்து-தங்கள்முலைகளால் (யாவரும்) இச்சிக்கும்படி மயக்குகின்ற மாதர்களது விருப்பம் நிறைந்து, அன்னத்தான் நத்தன் ஆதியர் இன்பில் தயங்க மயல் தந்தன் அத்தான் அத்த - பிரமா விஷ்ணுமுதலிய தேவர்கள் காமத்திலழுந்தும்படி மயக்கத்தைக்கொடுத்த மன்மதனுடைய மைத்துனராகிய முருகக்கடவுளுக்குப் பிதாவே, தனத்த தந்தன தானத்த என்று கூடலில் ஆடும் சங்கரனே - தனத்த தந்தனத் தானத்த வென்னுந் தாளத்துடன் மதுரையில் நிர்த்தனஞ் செய்தருளிய சிவபிரானே, நின் இணை அடி போது தா - உம்முடைய உபய பாதாரவிந்தங்களையும் அடியேனுக்குக் கொடுத்தருளவேண்டும். (எ - று.)

எதுகைநோக்கி ஆகாரம் குறுகியது. (அ)

சங்கந் தரங்கத் தமுதங் கடைந்திடச் சார்ந்தெழுநஞ்
சங்கந் தரங்கத் தகூடற் றலத்திற் றருக்கடைந்த
சங்கந் தரங்கத் தவஞ்சலென் றூண்டரு டற்பரனே
சங்கந் தரங்கத் தனுக்குவ நின்னடி தந்தருளே.

(இ - ள்.) சங்கம் தரங்கத்து சார்ந்து அமுதம் கடைந்து இட எழும் நஞ்சம் கந்தரம் கத்த - சங்குகள் நிறைந்த திருப்பாற்கடலை யடைந்து (தேவர்களுக்காக) அமுதங் கடைந்திடும்பொழுது எழுந்துவந்த விஷத்தைத் திருக்கண்டத்தி லடக்கியருளிய கர்த்தரே, கூடல் தலத்தில் தருக்கு அடைந்த சங்கம் தரம் கத்த அஞ்சல் என்று ஆண்டு அருள் தற்பர - மதுரையிற் (கல்வியால்) மமதையடைந்த சங்கத்தார்களை யடக்கி அவர்கள் அச்சமுற்றுப் பிரார்த்திக்க அபயாஸ்தங் கொடுத்துக் காப்பாற்றிய ஆன்மாக்களிடத்திற் பிரியமுள்ள கடவுளே, நேசம் கந்தர் அங்கு அத்தன் ஆக்குவ - அன்புள்ள குமாரராகிய முருகக்கடவுளை கைலாயத்திலே (பிரணவத்தைச் சொல்வாயாகவென்று) குருஸ்தானத்தில் வைத்துக்கேட்டவரே, நின் அடி தந்து அருள் - உம்முடைய பாதாரவிந்த தெரிசனை அடியேனுக்குக் கொடுத்தருள்வீராக. (எ - று) (கூ)

தந்திக் குவளை யிடைவிழி யார்புடை சாரமயல்
தந்திக் குவளை யனங்கனை மாய்த்தவன் றாண்மலரைத்
தந்திக் குவளை யிடங்கற்செற் றான்முடி தன்னில்வனி
தந்திக் குவளை யணிந்தே மதுரையிற் சாத்தினனே.

(இ - ள்.) தந்து இ குவளை இடை விழியார் புடை சார மயல் தந்து இக்குவளை அனங்கனை மாய்த்தவன் தாள் மலரை - நூலுக்கும் இந்த நீலோற்பலத்துக்கு நிகர்த்த மருங்குலும் கண்களுமுடைய மாதர்களது சேனைகள் பக்கத்திலே நெருங்க மயக்கத்தைக் கொடுத்துக் கருப்புவில்லையும் வளைத்துத்(தன்பேரிற் கணைதொடுத்த) அங்கசனை நெற்றிக் கண்ணால் மாய்த்தவராகிய சிவபெருமானது பாதாரவிந்தங்களை, தந்திக்கு வளை இடங்கர் செற்றான் - யானையைக் கொல்லவாரம்பித்த முதலையைச் சங்கரித்த மஹாவிஷ்ணுவானவர், வல் நிதம் திக்கு வளை முடி தன்னில் அணிந்து மதுரையில் சாத்தினன் - விரைவுடன் நாடோறும் (தனக்கு) ஆதரவாகிய கங்கணமென்று சென்னியின்மேல் அலங்கரிப்பாய் மதுரையிற் சூட்டிக்கொண்டார். (எ - று.) (க0)

தினந்தா வரத்தை நிலையென நம்பித் திரிந்தலைந்தேந்
தினந்தா வரத்தை தவிர்த்திலங் கூடற் றிருநகரத்
தினந்தா வரத்தை யெடுத்தயின் றான்பணி தேவனைவாழ்த்
தினந்தா வரத்தை யடைந்திடர்க் கேவிடை செப்புவையே.

(இ - ள்.) தினம் தாவரத்தை நிலை என நம்பி திரிந்து அலைந்து ஏந்தினம்- மனமே! நாடோறும் (அநித்தியமான) சரீரத்தை நித்தியமென்று நிச்சயித்து மாறுபட்டு அலைவாகிச் சுமந்தோம், தா அரந்தை தவிர்த்து இலம் - வலிமை

யாகிய துன்பத்தை நீக்கினோமில்லை, (ஆதலின்) அம் தாவரத்தை எடுத்து அயின் றான் பணி கூடல் திரு நகரத்தின் தேவனை வாழ்த்தி - அழகிய பூமியை எடுத் தருந்திய மஹாவிஷ்ணு பூசிக்கப்பெற்ற மதுரைமாநகரத்தின்கண் ணெழுந்தரு ளிய சிவபிரானை ஸ்தௌத்தியஞ்செய்து, நந்தா வரத்தை அடைந்து இடர்க்கு விடை செப்புவை - கெடாத வரங்களைப் பெற்று துன்பம்தானாகவே விலகிக் கொள்ளும்படி அதற்கு மறுமொழி சொல்வாயாக. (எ - று.)

அரந்தை, எதுகைநோக்கி வலித்தன. மனம், தோன்றா எழுவாய். (கக)

வையம் பரவந் திருக்கல்குற் பாவையர் மாட்டுமயல்
வையம் பரவந் திருத்திகொள் வோமிந்த வாரிதிசூழ்
வையம் பரவந் திருவால வாயில் வளர்ந்திடுதே
வையம் பரவந் திருவெந்நெஞ் சத்தென வாழ்த்திடவே.

(இ - ள்.) வாரிதி சூழ் இந்த வையம் - சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகமெல் லாம், பரவு அம் திரு ஆலவாயில் வளர்ந்திடு தேவை - துதிக்கின்ற அழகிய தெய் வீகம் பொருந்திய மதுரையிலெழுந்தருளிய சிவபிரானை, அம் பர எம் நெஞ் சத்து வந்து இரு என வாழ்த்திட - அழகியபரமசிவனே, அடியேங்கள் மனால யத்தில் வந்திருக்கவேண்டுமென வணங்கப் பெறுவோமானால் - வை அம்பு அர வம் திருக்கு அல்குல் பாவையர் மாட்டு மயல் வையம் பரவு திருத்தி கொள் வோம், கூர்மைபொருந்திய அம்புக்கும் அரவபடத்துக்கும் நிகர்த்த விழிகளையும் நிதம்பத்தையும் உடைய மாதர்களிடத்து இச்சைகொள்ளோம், விரியக்கூடி.. மனரம்மியத்தையு மடைவோம். (எ-று.) அம் - சாரியை. (கஉ)

திடவா ரணத்தங்க மேலா னமணர் சினத்துவிட்ட
திடவா ரணத்தங்கஞ் செற்றான் மதுரையிற் றேவனச்சோ
திடவா ரணத்தங்கந் தாவுந் தனத்துமை செல்வன்றுதித்
திடவா ரணத்தங் கரியறி யானென்றன் சிந்தையனே.

(இ - ள்.) திடம் ஆரணத்து அம் கம் மேலான் - உண்மையான வேதங் களின் அழகிய முடியின் மேலுள்ளவரும், அமணர் சினத்து விட்ட திட வார ணத்து அங்கம் செற்றான் - சமணர்களாற் கோபித்துவிடப்பட்ட வலிமைபொ ருந்திய யானையினுடலைக் கிழித்து மாய்த்தவரும், மதுரை இல் தேவன் - மது ரையிலெழுந்தருளிய தேவரும், அ சோதிடம் வார் அண்ண தங்கம் தாவும் தன த்து உமை செல்வன் - நன்னிமித்தமாகக் கச்சுப் பொருந்துகின்றதும் தேமற் பரவுகின்றதுமான முலைகளையுடைய உமாதேவியாருக்கு நாயகரும், வாரணம் தங்கு அரி துதித்திட அறியான் - திருக்கரத்திற் சங்குஇருக்கப்பெற்ற விஷ்ணு வணங்குதற்கு அரியவரும்ஆகிய சிவபெருமான், என்றன் சிந்தையன் - அடியே னுள்ளத்தில் வீற்றிருப்பவர். (எ-று.) (கங)

அயனந்தி யேழ்பரி யாதவன் சந்திர னண்டர்பிரான்
அயனந்தி யங்குங் கரன்போற்றுங் கூட லமர்ந்தவெந்தம்

அயனந்தி யானநின் பாதத்திற் சேர வருளியின்னும்
அயனந்தி ரும்ப வராதருள் வாயுன் னடைக்கலமே.

(இ-ள்.) நந்தி ஏழ்பரி ஆதவன் சந்திரன் அண்டர்பிரான் அயன் நந்து இயங்கும் கரன் அயல் போற்றும் கூடல் அமர்ந்த எந்தம் ஐய - நந்திகேஸ்வரரும் சப்தபுரவிகளையுடைய சூரியனும் சந்திரனும் தேவர்களுக்கரசனுகிய இந்திரனும் பிரமாவும் சங்குபிரகாசிக்கின்ற திருக்கரங்களையுடைய விஷ்ணுவும் பக்கத்திலே நின்று வணங்கப்படுகின்ற மதுரையி லெழுந்தருளிய எங்களுடைய பிதாவாகிய சிவபெருமானே, நம் தியானம் நின் பாதத்தில் சேர அருளி - எங்களுடை தியானம் உம்முடைய திருவடிகளிற் சேரும்படி கருணைசெய்து, அயனம் இன்னும் திரும்ப வராது அருள்வாய் உன் அடைக்கலம் - பிறவித்துன்பம் இனிமேலும் மாறிமாறி வராமல் அருள் செய்யவேண்டும் (நாங்கள்) உம்முடைய அடைக்கலம். (எ-று.) (கச)

கலக்கந் தரத்தன வார்குழற் பாவையர் காதல்விட்ட
கலக்கந் தரத்தமர் மைவிடத் தாய்செய் கனிவுடன்பு
கலக்கந் தரத்தந் திரமறிந் தாயெனைக் காத்தருள்வாய்
கலக்கந் தரத்தண்டன் சாருமுன் கூடற் கனிபங்கனே.

(இ - ள்.) கந்தரத்து அமர் மை விடத்தாய் - திருக்கண்டத்திலே யமரும்படி கறுப்புவிஷத்தை வைத்தவரே, கந்தர் அ தந்திரம் கனிவுடன் புகல அறிந்தாய் - முருகக்கடவுள் அந்தப் பிரணவப்பொருளை யன்புடன் சொல்லக்கேட்டவரே, கூடல் கனி பங்கனே - மதுரையிலெழுந்தருளிய உமாதேவியார் வாழப்பெற்ற வாம பாகத்தையுடையவரே, கல் அ கந்தரம் தனம் வார் குழல் பாவையர் காதல் விட்டு அகல செய் - மலைக்கும் அம்மேகத்துக்கும் நிகர்த்த ஸ்தனங்களையும் நீண்டகூந்தலையுமுடைய மாதர்களிடத்துள்ள மயக்கம் என்னைவிட்டு நீங்கும்படி செய்வீராக, கலக்கம் தர தண்டன் சாரும் முன் என்னை காத்து அருள்வாய் - அச்சத்தைக் கொடுக்கக் கூற்றுவன் வருமுன்னரே அடியேனைக் காப்பாற்றி யருள்செய்வீராக. (எ-று.) (கரு)

பங்க வளைக்குட் கயறூங்குங் கூடற் பசுபதித
பங்க வளைக்கும் புவிக்குமங் காந்தவன் பற்றும்வலப்
பங்க வளைக்குல மாதர்க்கு முன்னம் பரிசளித்தாய்
பங்க வளைக்குந் துயர்தடுத் தாளும் பரமுனக்கே.

(இ - ள்.) பங்கம் வளைக்குள் கயல் தூங்கும் கூடல் பசுபதி - சேற்றினிடமாய்ச் சங்குகளுக்குள் மச்சங்கள் நித்திரை செய்கின்ற மதுரையிலெழுந்தருளிய சிவபெருமானே, தபம் கவ்வு அளைக்கும் புவிக்கும் அங்காந்தவன் பற்றும் வலம் பங்க - வெப்பத்தைக் கவர்கின்ற வெண்ணெய்க்கும் பூமிக்கும் வாய் திறந்த விஷ்ணு கைக்கொண்ட வலப்பாகத்தை யுடையவரே, குல மாதருக்கு முன்னம் வளை பரிசு அளித்தாய் - (மதுரை மாநகரத்தின்கண்) குலஸ்திரீகளுக்கு

முன்னமே வளையல்களை ஈகையாகக் கொடுத்தவரோ, பங்கம் வளைக்கும் துயர் தடுத்து ஆளும் பரம் உனக்கே - பாவஞ் சூழும்படியான துன்பத்தை நீக்கி என்னை யாட்கொள்ளும் பாரம் உமக்கே. (எ-று.) ஏகாரம் - தேற்றம். (கசு)

பரவை யருந்ததி நேர்வாட்குத் தூது பகர்ந்தவமுன்
பரவை யருந்து மவற்கருள் கூடற் பதியினிற்ரு
பரவை யருந்துதி வேற்கைய னைய பணிபுரியும்
பரவை யருந்தொழுந் தாளடைந் தேனவை பார்த்திருந்தே.

(இ - ள்.) அருந்ததி நேர்வாள் பரவைக்கு தூது பகர்ந்தவ - அருந்ததிக் கொப்பான (கற்பு) நிலையுள்ள பரவைநாச்சியாரிடம் (சுந்தரமூர்த்தி நாயனர் பொருட்டு) தூது சென்று சொன்னவரோ, முன் பரவை அருந்தும் அவற்கு அருள் கூடல் பதியினில் தாபர - முன்னொருக்கால் சமுத்திரத்தைப் பானம் பண்ணிய அகஸ்தியமஹாமுனிவருக்கு அருள்செய்த மதுராஸ்தலத்தில் நிலையுள்ளவரோ, வை அரும் துதி வேல் கையர் ஐய - கூர்மைபொருந்தியதும் அரிதானதும் வணங்கப்பெற்றதுமான வேலாயுதத்தைத் திருக்கரத்திலேந்திய முருகக்கடவுளுக்குப் பிதாவே, பணி புரி உம்பர் அவையரும் தொழும் தாள் அடைந்தேன் அவை பார்த்து இருந்து - தொண்டியற்றப்பெறும் தேவசபையார் வணங்குகின்ற உம்முடைய திருவடிகளை யடைந்தேன், அச்சபையார் செய்வதைப் பார்த்திருந்து. (எ - று.) (கஎ)

இரும்பா மனத்தை யடைந்தாலு மென்று மிறைஞ்சியந்த
யிரும்பாலு முண்டவன் போற்றிடுங் கூட லெழிற்றலத்தே
இரும்பாவந் தீருமற் றெத்தலத் தேனு மிருக்கிலவை
இரும்பாலை யாய்விடுங் கண்டீர் புவியி லிருப்பவரோ.

(இ - ள்.) புவியில் இருப்பவரோ - பூமியி லிருப்பவர்களே, இரும்பு ஆம் மனத்தை அடைந்தாலும் - (நீங்கள் கடவுளை வணங்காத) இரும்பு போலும் கன்னெஞ்சத்தை யுடையராயிருந்தாலும், அம் தயிரும் பாலும் உண்டவன் என்றும் இறைஞ்சி போற்றிடும் கூடல் எழில் தலத்தே இரும் - அழகிய தயிரும் பாலுமருந்திய விஷ்ணுவானவர் எப்போதும் தாழ்ந்து வணங்கப்பட்ட மதுரையென்னுஞ் சிறப்புள்ள நகரில் வசித்துக் கொண்டிருங்கள், மற்று எ தலத்து ஏனும் இருக்கில் அவை இரும் பாலையாய் விடும் கண்டீர் - (இஃதன்றி) மற்றெந்த ஸ்தலத்திலாவ திருந்தாலும் அது பெரிய பாலை நிலத்ததாய்விடும். அறிமின்கள். (எ-று.) (கஅ)

வளையாகங் கைதத வளையன் றடர்த்தருள் வைத்தவெள்ளி
வளையாகங் கைத்திரு மாமுடி யாய்முகம் வாரணத்த
வளையாகங் கையமர் தென்கூட லாய்நின் வடிவையுள்ளம்
வளையாகங் கைக்குந் துருவறி யாய்மிக வந்தனமே.

(இ - ள்.) வரைவு ஆகம் கைதவனை அன்று அடர்த்து அருள் வைத்த வெள்ளி வரையா-மாறுபாடுள்ள தேகத்தோடுங்கூடிய பாதகனுகிய (இராவணனை) முன்னம் பெருவிரனகத்தாலடர்த்துப் பின்பு கடாக்ஷித்தருளிய கைலாசமலையிலிருப்பவரோ, கங்கை திரு மா முடியாய் - கங்கையை அழகிய பெரிய சடாமகுடத்தில் வைத்தவரோ, வாரணம் முகத்தவர் ஐயா - யானைமுகமுள்ள விநாயகக் கடவுளுக்குப் பிதாவே, கம் கை அமர் தென் கூடலாய் - பிரம கபாலத்தைக் கையிலே வைத்திருக்கின்ற சிறப்புள்ள மதுரையி லிருப்பவரோ, நின் வடிவை உள்ளம் வரையா கங்கு ஐக்கும் துருவ அறியாய் - உம்முடைய உருவத்தைத் தன்மனதிற் குறிப்பிட்டு எழுதக் கருடனுக்கு அரசனுகிய விஷ்ணுவுக்கும் அறியப்படாதவரோ, மிக வந்தனம் - உமக்கு அநேக நமஸ்காரம். (எ - று.)

வரைவு, துருவ என்பது கடைக்குறை. (கக)

வந்தனந் தந்தர வைகுந்தன் பேர்கொண்டு மாதரையு
வந்தனந் தந்தர வைப்பினைச் சேற்கண் மணிபங்கனை
வந்தனந் தந்தர வைப்புனை வாழ்வை மதுரையினி
வந்தனந் தந்தர வைகலும் போற்றிசெய் வாய்மனமே.

(இ - ள்.) மனமே! தரம் அம் நந்து வைகுந்தன் பேர் கொண்டு வந்த மாதரை உவந்தனம் - நெஞ்சமே! வலிமையுள்ள அழகிய பாஞ்சசைனியத்தையும் வைகுண்டத்தையுமுடைய விஷ்ணுவின் நாமமாகிய (மால்) என்னு மயக்கத்தைக்கொண்டு (நமக்குநேராக) வந்த ஸ்திரீகளை விரும்பினேம், தம் தர வைப்பினை - தனக்குத்தானே சமானமான சேமநிதியை, சேல் கண் மணி பங்கனை - மீன்போலும் விழிகளையுடைய உமாதேவியாரது பங்கிலிருப்பவரை, அரவை புனை வாழ்வை - பாம்பையணிந்த முத்திச்செல்வரை, மதுரை இல் நிவந்து அனந்தம் தரம் வந்தனம் தந்து வைகலும் போற்றி செய்வாய் - மதுரையினுயர்ச்சியையடைந்து அநேகந்தரம் அஷ்டாங்கமாகப்பணிந்து நாடோறுந் துதி செய்வாயாக. (எ - று.) (உ0)

வாய்மைக்க ணும்பன் முரசதிர் மாட மதுரையிற்செவ்
வாய்மைக்க ணும்பன் மறிமயிற் சாயன் மலைமகட்சேர்
வாய்மைக்க ணும்பன் முடிதரித் தாயென்றும் வாழ்கவருள்
வாய்மைக்க ணும்பன் னகமணிந் தாயென் மனந்தரித்தே.

(இ - ள்.) வாய் மை கண் ஆம் பல் முரசு அதிர் மாடம் மதுரை இல் - வாயிலினிடத்தே மேகத்தின் பெருமைபோலாகும் பல முரசவாத்தியங்களொலிக்கின்ற மாடங்கள் நிறைந்த மதுரையில், செவ்வாய் மைக்கண் ஆம்பல் மறி - சிவந்தவாயும் மைதீட்டியவிழியும் (முறையே) குமுதத்துக்கும் மானுக்கும் ஒப்பாயுள்ளவளும், மயில் சாயல் - மயில்போன்ற சாயலையுடையவளும், மலைமகள் சேர்வாய் - இமயபருவதராஜன் புதல்வியுமான பார்வதித்தேவியாரைச் சேர்ந்தவரோ, மை ஆம்பல் முடி கண் தரித்தாய் - ஜெலத்தையும் சந்திரனை

யும் முடியினிடத்திலணிந்தவரோ, வாய்மை கண் ஆம் பன்னகம் அணிந்தாய் - சத்தியத்தினிடத்தே கட்டுப்படும் அரவத்தைப்புனைந்தவரோ, என்றும் என் மனம் தரித்து வாழ்க அருள் - எப்பொழுதும் அடியேனுடைய மனாலயத்தி லெழுந்தருளியிருந்து வாழ்வைப்பெறக் கருணைபாலிக்க வேண்டும். (எ-று.) ()

தரித்தா ரணிவரி நாகமெய் யானந்தந் தந்தெமையா
தரித்தா ரணிவகுத் தைந்திரண் டானனன் ருக்கமுன்மா
தரித்தா ரணியுண் டவன்வாழ்த்த வெற்றியைத் தந்தவன்மா
தரித்தா ரணிய முலைவாமன் கூடற் றலத்தவனே.

(இ - ள்.) அணி வரி நாகம் மெய் தரித்தார் - அழகுபொருந்திய வரிகளை யுடைய பாம்பைத் தேகத்திற்புனைந்தவரும், ஆனந்தம் தந்து எம்மை ஆதரித்தார் - பேரின்பத்தைக்கொடுத்து எங்களைக் காப்பாற்றியவரும், முன் ஐந்து இரண்டு ஆனனன் அணி வகுத்து தாக்க மாதர் இ தாரணி உண்டவன் வாழ்த்த வெற்றியை தந்தவன் - முன் பத்து முகமுள்ள இராவணன் படைவகுத்துப் போர்செய்யும்போது அழகிய இந்தப்பூமியையருந்திய விஷ்ணுவாகிய இராமன் (தன்னை) வணங்க அவருக்கு ஜெயத்தைக்கொடுத்தவரும், மதர் ஈ தார் அணிய முலை வாமன் - மிகுதியாகவண்டுகள்மொய்க்கும் பூமாலைகளையலங்கரிக்கப்பட்ட முலைகளையுடைய உமாதேவியின் பாகத்தையுடையவரும், கூடல் தலத்து அவனே - மதுரையிலெழுந்தருளி யிருக்கும் நம்முடைய சிவபெருமானே. (எ - று.)

ஈகாரம் - குறுகல்விகாரம். (உஉ)

வனையா மதியர வம்முடி யாய்மயில் வாகனத்த
வனையா மதியர வந்தீர்த் தவமிகு வாசத்துள
வனையா மதியர விந்தன் றுதிக்கு மதுரையிற்றே
வனையா மதியரந் தைக்குவை யாதருள் வல்லையிலே.

(இ - ள்.) வனையா மதி அரவம் முடியாய் - அணியக்கூடிய சந்திரனையும் பாம்பையும் முடியிலேதரித்தவரோ, மயில் வாகனத்தவன் ஐயா - மயில்வாகனத்தையுடைய முருகக்கடவுளுக்குப் பிதாவே, மதியர் அவம் தீர்த்தவ - நல்லறிவுடையோர் பாவங்களைத்தஹித்தவரோ, மிகுவாசம் துளவன் ஐ ஆம் அரவிந்தன் துதிக்கும் மதுரை இல் தேவ - அதிக வாசனையுள்ள துளசிமாலையணிந்த விஷ்ணுவும் அழகுபொருந்திய தாமரைமலரிலுள்ள பிரமாவும் வணங்கும்படி மதுரையிலெழுந்தருளிய தேவனே!, நையா மதி அரந்தைக்கு வையாது வல்லை இல் அருள் - வருந்துகின்ற புத்தியைத் துன்பத்துக்கிலக்காக்காது சீக்கிரம் மோக்ஷவீடு கொடுத்தருளவெண்டும். (எ-று.) (உங)

வலையா தரத்தைப் பொருந்தனத் தார்செயும் வஞ்சகக்கண்
வலையா தரத்தைத் தவிரா துழன்றனன் வந்தருள்செய்
வலையா தரத்தைத் தருமீனை வேலை வளைத்தெடுத்த
வலையா தரத்தைப் பெறுங்கூடன் மாநகர் மைக்கண்டனே.

(இ - ள்.) தரத்தை தரும் மீனே வேலே வளைத்து எடுத்த வலையா - இயாவருக்கும் பயத்தைக்கொடுக்கு மச்சத்தைக் காலம்பார்த்து வளைத்துஎடுத்த வலையையுடையவரோ, தரத்தை பெறும் கூடல் மா நகர் மை கண்டனே - அடியார் கூட்டத்தைப்பெற்ற மதுரைமாநகரில் எழுந்தருளிய விஷத்தையடக்கிய திருக்கண்டத்தை யுடையவரோ, வல்லேயா தரத்தை பொரும் தனத்தார் செய்யும் வஞ்சகம் கண் வலே ஆதரத்தை தவிராது உழன்றனன் - சூதாடுகருவியைமட்டுமோ! மலையையும் பொருதக்கூடிய முலைகளையுடைய மாதர்கள்செய்கின்ற வஞ்சகமாகிய கண்வலையான அத்திபாரத்தைநீக்காது வருந்தினேன் - ஐயா வல் வந்து அருள்செய் - பிதாவே நீர் சீக்கிரம் எழுந்தருளிவந்து கருணைசெய்து அத்துன்பத்தை நீக்குவீராக, (எ-று.) (உச)

கண்டிக் குவலையங் காட்டு மருங்குல் கனதனஞ்சொற்
கண்டிக் குவலையங் காதலித் தீர்வெங் கனற்பகட்டின்
கண்டிக் குவலையங் கார்மேனி யான்வரிற் காப்பர்கொலோ
கண்டிக் குவலையங் காமது ரேசனைக் கைதொழவே.

(இ - ள்.) ஐயம் வல் இக்கு கண்டு காட்டும் மருங்குல் கனதனம் சொல் கண்டு இ குவலயம் காதலித்தீர் - சந்தேகத்தையும் சூதாடுகருவியையும் கரும்பு கற்கண்டையும் காட்டுகின்ற மாதர்களது இடையையும் பருத்தமுலைகளையும் மொழியையும் அதிகவிருப்புடன்பார்த்து இவ்வுலகவாழ்க்கையை விரும்புகின்றவர்களே, வெம் கனல் பகட்டின் கண் திக்கு வல்லே அம் கார் மேனியான் வரில் காப்பர் கொல் - வெவ்விதாகிய அக்கினிபோலுங் கண்களையுடைய எருமைக் கடாவின்மேல் தென்றிசையிலிருந்து வலிமையுடனே நீர்கொண்ட மேகத்துக் கொப்பான சரீரத்தையுடைய இயமன்வருங்காலையில் (இவர்) காப்பாற்றுவரோ, வல்லே அம் கா மதுரேசனை கை தொழ கண்டிக்கும் (ஆகையால் நீங்கள்) காலவிரைவுடன் அழகிய சோலைகள்சூழ்ந்த மதுரையில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கைகூப்பிவணங்கினல் (அந்தயமனை) தண்டிப்பார், எ-று. (உரு)

[பாங்கி தலைவியின் நிலைமையுரைத்தல்.]

கைக்குஞ் சரமருப் பேந்திய கொங்கைக் கருங்குழற்றோ
கைக்குஞ் சரத்தை மறுத்தாற் பொருதக் கனியனமுங்
கைக்குஞ் சரத மிதுமது ராநகர்க் காவலவாள்
கைக்குஞ் சரணை யளித்தற்குஞ் சித்தங் கனிந்தருளே.

(இ - ள்.) மதுரா நகர் காவல - மதுரைமாநகரை யாதரிக்கும் சிவபெருமானே, கை குஞ்சரம் மருப்பு ஏந்திய கொங்கை கரும் குழல் தோகைக்கு உம் சரத்தை மறுத்தால் - துதிக்கையுடைய யானையினதுகொம்புபோலும் ஏந்திய முலைகளையும் கரியகூந்தலையுமுடைய விப்பெண்ணுக்கு உமது மாலையைகொடுக்கத் தடைசொல்வீராயில் - பொருது அ கனி அனமும் கைக்கும் இது சரதம், காமவேதனை சகிக்கமாட்டாதவளாய் அந்தக்கனியையும் அன்னத்தையும் வெறுப்

பள். இது உண்மையாகும், ஆள்கைக்கும் சரணை அளித்தற்கும் சித்தம் கனிந்து அருள் (ஆகையாலவளைக்) காப்பாற்றுவதற்கும் உம்முடையபாததரிசனை கொடுப்பதற்குந் திருவுளங்கசிந்து கிருபைசெய்யவேண்டும், (எ-று.) (உசு)

[நற்றாய் தலைமகளியல்புரைத்தல்.]

கனிக்கு வளைக்கரங் கன்றெறிந் தானங் கமலையினங்
கனிக்கு வளையுண் ணரிவாழ்த்துங் கூடலிற் காவலவென்
கனிக்கு வளையுகக் காதற் பெருகக் கருதியம்மோ
கனிக்கு வளைக்குமுன் மாலைதந் தாளுங் கடனுனக்கே.

(இ-ள்.) கனிக்கு வளை கரம் கன்று எறிந்தான் - விளங்கனிக்காகச் சக்கரமமைந்தகையினால் கன்றைக்கொண்டெறிந்தவரும், அம் கமலையின் அங்கன் - அழகியஇலக்குமியை மார்பிலேவைத்தவரும், இ கு அளை உண் அரி வாழ்த்தும் கூடல் இல் காவல - இந்தப்பூமியையும் வெண்ணெயையு மெடுத்தருந்தியவருமான விஷ்ணுதுதிக்கின்ற மதுரைக்கிக் காவலாயுள்ளவரே, என் கன்னிக்கு வளை உக காதல் பெருக கருதி அ மோகன் இக்கு வளைக்கும் முன் மாலை தந்து ஆளும் கடன் உனக்கு - என்மங்கைக்கு வளையல்சிதறவும் மையல்பெருகவும், நினைத்து அம்மயக்கத்தையேற்றிய மன்மதன் கருப்புவில்லைவளைக்கு முன்னரே மாலையைத்தந்து காப்பாற்றும் பொறுப்பு உம்முடையதே, (எ-று.) (உஎ)

கடனு கமலையச் சாடுங் கராவுயிர் காதியவேங்
கடனு கமலை யனையான் புகழ்பவர் கண்ணடைதல்
கடனு கமலை யளித்தா னுயிர்வவ்வுங் காலவல்லே
கடலை கமலையங் கூடற்பி ரானிடுங் கால்விலங்கே.

(இ-ள்.) கடம் நாகம் அலைய சாடும் கரா உயிர் காதிய வேங்கடன் - மதத்தையுடைய யானையை வருத்திக்கொல்ல வாரம்பித்த முதலையின் உயிரைக் கொன்ற விஷ்ணுவும், ஆகம் அல்லை அனையான் - தேகம் பச்சைநிறமுள்ள தேவேந்திரனும், புகழ்பவர் கண் அடைதல் கடனு - புகழும் அடியாரிடத்து நீ சேருவது முறைமையா, கமலை அளித்தான் உயிர் வவ்வும் கால வல்லே கட - இலக்குமிபுதல்வனாகிய பிரமாவுயிரையுங் கொள்ளுகின்ற இயமனே நீ என்பாலுறாது சீக்கிரம் ஒடிப்போ, நாகம் அலை அம் கூடல் பிரான் கால் விலங்கு இடும் - (அப்படிக்கன்றி நிற்பையானால்) அரவம் அலைகின்ற (புயமுள்ள) அழகிய மதுரையிலெழுந்தருளிய சிவபெருமான், உனக்குக்கால்விலங்கு போடுவார். (எ-று.) (உஅ)

விலங்கங் கணம்படத் தீர்ப்பான் றெழுரையவ் வெஞ்சமன்கை
விலங்கங் கணமடைந் தாவியைக் கொண்டுடன் மீளுமத
விலங்கங் கணவதைத் தார்மது ரேசனை விட்டொன்றுந
விலங்கங் கணங்கட்டிக் கொண்டோ மினிவல் வினையிலையே.

(இ - ள்.) வில்லங்கம் கணம் பட தீர்ப்பான் தொழானா - நல்வழியைச் சேராதகற்றும், தடையை சீக்கிரங்கெடுத்துச் சுகத்தைக் கொடுக்குஞ் சிவபெருமானை வணங்காதவனை, வெம் சமன் கை விலங்கு கணம் அடைந்து ஆவியை உடன் கொண்டு மீளும் - வெவ்விதான எமனுடைய கைவிலங்கு சகிதம் அவனுடைய பிசாசக் கூட்டஞ் சேர்ந்து உயிரை உடனே கொண்டுபோகும், மதம் விலங்கு அங்கு அண்ண வதைத்தார் - (சமணர்களா லேவப்பட்ட) மதம்பொருந்தியயானை அவ்விடத்தேவர அதை மாய்த்தவராகிய, மதுரேசனை விட்டு ஒன்றும் நவிலம் கங்கணம் கட்டி கொண்டோம் - மதுரை சோமசுந்தரப் பெருமானையன்றி ஒரு தெய்வத்தையுந் தொழோம் (இதற்காக) கங்கணங் கட்டிக்கொண்டோம், இனி வல் வினை இல்லை - (ஆதலின்) இனிமேல் நமக்கு வலியதுன்பங்கள் இடையாவாம். (எ - று.) அம் - சாரியை. (உகூ)

இலங்கையி லானைக் கரியா னனத்தனை யீன்றபிரான்
இலங்கையி லாயத் திறைவான் முகில்சென் றிவரும்புரி
இலங்கையி லாண்ட வனையடர்த் தானம் மெழின்மதுரை
இலங்கையி லாங்கனி போலன்ப ருள்ளத் திருப்பவனே.

(இ - ள்.) இலங்கு அயிலானை கரி ஆனனத்தனை ஈன்ற பிரான் - பிரகாசிக்கின்ற வேலாயுதக்கடவுளையும் யானைமுகக் கடவுளையுந் தந்த எப்பொருட்குமிறைவரும், இலம் கயிலாயத்து இறை - இருப்பிடம் கைலாயமலையாகவுள்ள பெருமையுடையவரும், வான் முகில் சென்று இவரும் புரி இலங்கையில் ஆண்டவனை அடர்த்தான் - மகத்துவம் பொருந்திய மேகங்கள்போய் ஏறுகின்ற கோட்டைசூழ்ந்த இலங்கையை (யடைந்து அதை) ஆண்ட இராவணனைக் காற்பெருவிரனகத்தால் அமிழ்த்தினவரும், (எவரென்னில்) நம் எழில் மதுரையில் அம் கை ஆம் கனி போல் அன்பர் உள்ளத்து இருப்பவன் - நம்முடைய சிறப்புள்ள மதுரையில் அழகிய உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அடியார்களது உள்ளும்புறம்பும் களங்கமற வீற்றிருக்குஞ் சிவபெருமானே, (என்று அறிவாயாகமனமே. (எ - று.) (௩0)

பவனம் பணியத் திருவால வாய்நற் பதியிலிருப்
பவனம் பணியலுஞ் சொற்றிரு மாமன் பரவுகழற்
பவனம் பணியவி லோசன வம்பிகை பாதியிற்சேர்
பவனம் பணியணிந் தான்றனைப் போற்றப் பதந்தருமே.

(இ - ள்.) பவனம் பணி அ திரு ஆலவாய் நல் பதியில் இருப்பவன் - மூன்றுலகமும் வணங்குகின்ற அந்தச் சிறப்புள்ள மதுரையாகிய நல்ல க்ஷேத்திரத்திலிருப்பவரும், அம் பண் இயலும் சொல் திரு மா மன் பரவு கழல் பவன் - அழகிய கீதம்போலும் மொழியையுடைய இலக்குமியின் மேன்மையுள்ள நாயகனாகிய விஷ்ணு வணங்கப்பட்ட திருவடியுடையவரும், அம்பு அணிய விலோசனம் அம்பிகை பாதியில் சேர்பவன் - அம்புசேர்ந்த விழிகளையுடைய மீனம்பிகையை வாமபாகத்திலே வைத்தவரும், அம் பணி அணிந்தான் தன்னை போ

ற்ற பதம் தரும் - கங்கையையும் பாம்பையு மணிந்தவருமாகிய சிவபெருமானை வணங்கப் பெறுவோமானாற் கதியைக்கொடுப்பார். (எ - று.)

மனம், தோன்றா எழுவாய். (௬௧)

தருமிக் குவலைய னுஞ்சக் கரத்தனுஞ் சாலவிபு
தருமிக் குவலைய முள்ளோரு மென்றுந் தரமன்றுநேர்
தருமிக் குவலயஞ் சொல்விழி யாள்மன் றனிமதுரைத்
தருமிக் குவலயம் பொற்கிழி யீய்ந்தவற் சார்ந்தவர்க்கே.

(இ - ள்.) இக்கு வலையம் நேர் தரும் சொல் விழியாள் மன் - கரும்புக்கும் கடலுக்கும் ஒப்பான மொழியையும் கண்களையுமுடைய உமாதேவியின் நாயகரும், தனி மதுரை தருமிக்கு வல்லே அம் பொன் கிழி ஈந்தவன் - ஒப்பில்லாத மதுரையில் தருமி என்றவனுக்கு சீக்கிரமாக அழகிய பொன்முடிப்பைக் கொடுத்தவருமாகிய சிவபெருமானை, சார்ந்தவருக்கு - சரணாகதியடைந்த அடியார்களுக்கு, தரு மிக்கு வல் ஐயனும் சக்கரத்தனும் சால விபுதரும் இ குவலயம் உள்ளோரும் என்றும் தரம் அன்று - கற்பகதருவில் மிகுந்த வலிமையுடனிருக்கும் தேவேந்திரனும் விஷ்ணுவும் மிகுதியாகிய தேவர்களும் இப்பூமியிலுள்ளவர்களும் காலத்திரயத்திலும் ஒப்பாகார். (எ-று.) (௬௨)

[தலைமகள் பாங்கியோடுரைத்தல்.]

வரியம் பகத்தனி வார்குழ லாய்சுக வாகனத்த
வரியம் பகத்தன மாய்விடுத் தெய்வதை மாற்றுவையு
வரியம் பகத்த னயனேத்த வாழு மதுரையிற்றே
வரியம் பகத்தன் விரைமலர் மாலிகை வாங்கிவந்தே.

(இ - ள்.) வரி அம்பகம் தனி வார் குழலாய் - செவ்வரிபரந்த விழிகளையும் ஒப்பில்லாத நீண்ட கூந்தலையுமுடைய பாங்கியே, உவரி அம்பு அகத்தன் அயன் ஏத்த தேவர் இயம்பு மதுரை இல் வாழும் அ கத்தன் - கடலின்ஜெலமே இடமாகக்கொண்ட விஷ்ணுவும் பிரமாவும் துதிக்கவும் தேவர்கள் வாழ்த்தவும் மதுரையிலெழுந்தருளிய அந்தச் சிவபெருமானுடைய, விரை மலர் மாலிகை வாங்கி வந்து - வாசம்பொருந்திய பூமாலையைவாங்கி வந்து, சுகம் வாகனத்தவர் இ அம்பு அகத்தனமாய் விடுத்து எய்வதை மாற்றுவை - கிளியை வாகனமாகவுடைய மன்மதன் இந்த அம்பை வம்பாக என்பேரில்விட்டுப் பிரயோகஞ்செய்வதை நீக்குவாயாக. (எ - று.) (௬௩)

[பாங்கி தலைவனைசிந்தித்தல்.]

வந்திக் குமரிக்கன் றாழிதந் தானம் மதுரைநகர்
வந்திக் குமரிசி யாறடைத் தான்றன் வரையினிலு
வந்திக் குமரி மணந்தான்வைத் தேகின வஞ்சனைபா
வந்திக் குமரி திவன்போ லறிதற்கு வன்கண்மையே.

(இ - ள்.) வந்திக்கும் அரிக்கு அன்று ஆழி தந்தான் - தன்னைத்துதிக்கின்ற விஷ்ணுவுக்கு முன்சக்கரத்தைக் கொடுத்தவரும், நம் மதுரை நகர் வந்

திக்கு மரிசி ஆறு அடைத்தான் தன் வரையினில் - நம்முடைய மதுரைநகரிலே வந்தியென்பவளுக்காக புதுவரம்பு வழியாகப் பிறப்பட்ட வைகையாற்றை யடைத்தவருமாகிய சிவபெருமான் மலையின்கண்ணே, இ குமரி உவந்து மணந்தான் - இந்தப்பருவமுடையமாதைச் சந்தோஷமாய் மணம்புரிந்த நாயகன், வைத்து ஏகின இவன் போல் வஞ்சனை பாவம் வன்கண்மை திக்கு அறிதற்கு அரிது - தனிமையாக வைத்துப்போன இவனைப்போல் வஞ்சனையும் பாவமும் வைராக்கியமு முள்ளவனை திசைகடோறு மறிவது மிகவும் அரிது. (எ - று.)

மையங் கருவிழி மின்னார் நடஞ்செய் மதுரையிலு
மையங் கருதி யொளிமேனி யார்தினம் வாழ்த்திடவெம்
மையங் கருங்கழல் சேர்ப்பார்கிஞ் சிற்றினி வல்வினைக்க
மையங் கருத லவனடி யாரடி வைகலுமே.

(இ - ள்.) மை அம் கரு விழி மின்னார் நடம் செய் மதுரையில் உமை அங்கர் - அஞ்சனந்தீட்டிய அழகிய நீலோற்பலத்துக் கொப்பான கண்களையுடைய மாதர்கள் நடனஞ்செய்கின்ற மதுரையில் உமாதேவியாரை வாமபாகத்திலே சேர்த்தவரும், உதி ஒளி மேனியார் - காலைச் சூரியன்போலும் சிவந்த நிறத்தையுடையவருமான சிவபெருமான், தினம் வாழ்த்திட எம்மை அங்கு அரும் கழல் சேர்ப்பார் - அநுதினமும் வணங்கும்படி எங்களை அவ்விடத்தே அரிதான திருவடியிற் சேர்த்துக்கொள்வார், இனி கிஞ்சிற்று வல் வினைக்கு அமையம் வைகலும் கருதல் அவன் அடியார் அடி (ஆதலின்) - இனி அற்பமாவது வலிய துன்பத்துக் கிடங்கொடோம் நாடோறும் நினைப்பது அந்தச்சிவபெருமானுடைய அடியார்களின் திருவடியே. (எ - று.) (௬௫)

கலையங் குறுமுனி கட்கன் றருளுங் கடம்பவனன்
கலையங் குழவி மதியணிந் தானைக் கருதிலர்நீக்
கலையங் குவிகரங் கொண்டஞ் சலிக்கக் கணத்துநெஞ்சங்
கலையங் குறட்கன்னந் தந்தா னடியைக் கனவிலுமே.

(இ-ள்.) கலை அங்கு உறும் முனிகளுக்கு அன்று அருளும் கடம்பவனன் - வடமொழி தென்மொழிகளை (முறையே) தம்மையடைந்த பாணினி முனிவருக்கும் அகஸ்தியமுனிவருக்கும் முன்னம் அனுக்கிரகித்த மதுரைஸ்தலத்திலுள்ளவரும், கலை அம் குழவி மதி அணிந்தானை - கிரணங்களையுடைய அழகிய மூன்றாம்பிறையை சடாமகுடத்திற் புனைந்தவருமாகிய சிவபெருமானை, கருதிலர் நீக்கல் ஐயம் - நினையாதவர்கள் (பிறவித்துன்பத்தை) நீக்குவது சந்தேகம், குறளுக்கு அன்னம் தந்தான் அடியை குவி கரம் கொண்டு கனவிலும் அஞ்சலிக்க கணத்தும் நெஞ்சம் கலையம் (ஆதலால்) சிறியபூதமாகிய குண்டோதரனுக்கு அன்னங்கொடுத்த அந்தச் சிவபிரான் திருவடியைக் குவிந்த கைகளைக் கொண்டு கனவிலும் (நனவிலும்) துதிக்க நிமிடமாவது மனங்கலையோம். (எ-று.) எண்ணும்மை, தொக்கு. (௬௬)

[பாங்கி தலைவியினிலைமை இறைவனுக்குரைத்தல்.]

கனகன கம்படச் செற்றான் றவத்துதி கான்முளைமோ
கனகன சம்பட வில்லாற் றளவங் கனங்கயல்கோ
கனகன கம்படர் மின்வருந் தாமற் கனநந்திவா
கனகன கம்படந் தென்கூட லாயளி கைச்சரமே.

(இ - ள்.) கனகன் நகம் பட செற்றான் தவத்து உதி கான்முளை மோகன் அகம் நகு அம்பு அடு அ வில்லால் - இரணியனுடைய (மார்பை) நகத்தினாற்பதித்து சங்கரித்த விஷ்ணுவின் தவத்தாற் பிறந்த புத்திரனான மன்மதன் மனமானது சிரிக்க அம்புபொருந்திய அந்தக் கருப்பு வில்லினால், தளவம் கனம் கயல் கோகனகம் நகம் படர் மின் வருந்தாமல் - முத்தும் மேகமும் மீனும் தாமரையும் மலையும் படர்ந்த இந்தப் பெண் துன்பப்படாமல், கனம் நந்தி வாகன கனகம் படும் அம் தென் கூடலாய் கை சரம் அளி - மேன்மைபொருந்திய நந்திவாகனத்தை யுடையவரே திரவியம் உண்டாகின்ற சிறப்பும் அழகும் பொருந்திய மதுரைஸ்தலத்தையுடையவரே உம்முடைய கைமாலையைக்கொடுத்தருளும். (எ - று.) (௩௭)

சரிதங்கங் கையம் பிகையொரு பாகனைச் சார்ந்திடநே
சரிதங்கங் கையம் புயற்கெளி தோமற் றவர்க்கரிதாஞ்
சரிதங்கங் கையம் மதிச்சென்னி யாயெனச் சாற்றத்தின
சரிதங்கங் கையம் மதுரையல் லாலவன் றாண்மலரே.

(இ - ள்.) சரி தங்கு அம் கை அம்பிகை ஒரு பாகனை சார்ந்திட - வளையலணிந்த அழகிய கரங்களையுடைய உமாதேவியை ஒப்பற்ற வாமபாகத்திலே வைத்த சிவபெருமானை யடைக்கலம்புகுத, நேசர் இதம் கங்கு ஐ அம்புயனுக்கும் எளிதோ - அன்பர்களுக்கினிமையுள்ள கருடவரசனாகிய விஷ்ணுவுக்கும் பிரமாவுக்கும் முடியத்தக்கதோ, அவர்க்கு அரிது ஆம் சரிதம் - அவ்விருவருக்கும் அரிதான சிவசரித்திரத்தை, கங்கை அம் மதி சென்னியாய் என சாற்ற - கங்கையையும் அந்தச் சந்திரனையுஞ் சடாமகுடத்திற் புனைந்த சிவபெருமானே யென்று புகழ்ந்து துதிக்க, தினசரி மதுரை அல்லால் தங்கம் - அநுதினமும் மதுரையன்றி வேறூரிற் குடியிருக்கோம், அவன் தாள் மலர் கையம் - அவருடைய சரணாரவிந்தத்தை வெறுக்கோம். (எ-று.) மற்று, அசை. (௩௮)

மலைக்க மலைக்க வருங்கூற் றுவனை வதைத்தணுகா
மலைக்க மலைக்கலந் தானறி யாவடி வைத்தருள்செம்
மலைக்க மலைக்க வருமாடக் கூடலை வாழ்த்திடப்பொம்
மலைக்க மலைக்கனச் செய்பிறப் பற்றிடும் வல்லையிலே.

(இ - ள்.) மலைக்க மலைக்க வரும் கூற்றுவனை அணுகாமல் வதைத்து ஐ கமலை கலந்தான் அறியா அடி வைத்து அருள் செம்மலை - (மார்க்கண்டேயர்) வருந்தும்படி வருந்தும்படி பொருதவந்த இயமனை சமீபியாதபடி கொன்று

அழகிய இலக்குமியின் நாயகனாகிய விஷ்ணுவும் கண்டறியாத பாதத்தில் சேர்த்து கருணைதந்த பெருமையிற்சிறந்த பரமசிவத்தை, மாடம் கம் அல்லை கவரும் கூடலை வாழ்த்திட - மாடங்களின் வெண்மையானது இருளை நீக்கும் பிரகாசமுள்ள மதுரையை நோக்கித்துதிக்க, கம் ஐ அலைக்கு அன்ன செய் பொம்மல் பிறப்பு வல்லையில் அற்றிடும் - நான்முகக்கடவுளாற் சமுத்திர வலைபோற் செய்யும் மிகுதியான (நம்முடைய) பிறப்பு விரைவில் நீக்கிவிடும். (எ - று.) ()

வலையங் கரிதந்தந் தோர்த்திடு கொங்கையர் மையலின்க
வலையங் கரிதந்தந் தோவிட லென்ன மயங்கெனைக்கு
வலையங் கரிதந்தந் தோமெனக் கூடலின் மாறலிடும்
வலையங் கரிதந்தந் தோமென்று சேர்த்தனர் மாபதத்தே.

(இ - ள்.) வல்லை அம் கரி தந்தம் தோர்த்திடு கொங்கையர் மையலின் கவலை அங்கு விடல் அந்தந்தோ அரிது என்ன - சூதாடுகருவியையும் அழகிய யானைக்கொம்பையும் புறங்காட்டச்செய்யும் ஸ்தனங்களையுடைய மாதர்களின் மயக்கமாகிய துன்பத்தை அங்ஙனம்விடுவது ஐயையோ அரிதாகுமேயென்று, மயங்கு எனை - மயங்குகின்ற என்னை, குவலயம் கரி தந்தந்தோம் என கூடலின் மாறல் இடும் வலை அங்கர் இதம் தந்தோம் என்று மா பதத்தே சேர்த்தனர் - பூமியினிடத்தில் (பாண்டியன்பொருட்டு) சாட்சியாகத் தந்தந்தோமென்று மதுரை வெள்ளியம்பலத்தில் திருநடனஞ்செய்தவரும் வலையைத் தோளிற்பூண்டவருமாகிய சிவபெருமான், உரிமைதந்தோமென்று பெருமையுள்ள தமதுதிருவடியிலே சேர்த்தனர். (எ-று.) (சo)

தத்தைக் குயின்மொழி வைவேல் விழிமயிற் சாயலம்மா
தத்தைக் குழையிடை மின்பிறை வாணுதற் றையலர்வா
தத்தைக் குறைத்தெமை யாட்கொண்ட கூடற் றலத்தரன்பா
தத்தைக் குவித்திரு கையால் வணங்குந் தரையினரே.

(இ - ள்.) தரையினரே - பூமியிலுள்ளவர்களே, தத்தை குயில் மொழி - கிளிக்குங் குயிலுக்குமொத்த சொல்லையும், வை வேல் விழி - கூர்மைபொருந்திய வேலாயுதத்துக்கு நிகரானகண்களையும், மயில்சாயல் - மயில்போன்ற நிறத்தையும், அம் மா தம் தை குழை - அழகோடு பெருமைபொருந்திய மகரக்குழையையும், மின் இடை - மின்னலுக்கிணையான இடையையும், பிறை வாள் நுதல் - மூன்றும்பிறைபோன்ற பிரகாசமுள்ள நெற்றியையுமுடைய, தையலர் வாதத்தை குறைத்து - மாதர்களின் சம்பாஷணையைத் தவிர்த்து, எம்மை ஆட்கொண்ட கூடல் தலத்து அரன் பாதத்தை இருகையால் குவித்து வணங்கும் - எங்களைஅடிமைகொண்டு மதுரையிலெழுந்தருளிய சிவபெருமான் திருவடிகளை இரண்டுகைகளாலுங் கும்பிட்டு வணங்குவீர். (எ-று.) (சக)

தரையம் பரங்கன லங்கோதை யாய்நிறைந் தார்முப்புரத்
தரையம் பரங்கரித் தார்நம் மதுரைத் தலத்தர்வசந்

தரையம் பரங்கழித் தாரருட் டொண்டரைச் சார்ந்திடின்மா
தரையம் பரங்கழிந் தெஞ்ஞான்று முத்தியிற் றங்குவரோ.

(இ-ள்.) தரை அம்பரம் கனல் அம் கோதை ஆய் நிறைந்தார் - பூமி ஆகாயம் அக்கினி ஜெலம் வாயுவாகி நிறைந்தவரும், முப்புரத்தரை அம் பரம் கரித்தார் - திரிபுரத்தாருடைய அழகிய சரீரங் கெடும்படி தீய்த்தவரும், நம் மதுரை தலத்தார் - நம்முடைய மதுரையிலெழுந்தருளி யிருப்பவரும், வசந்தர் ஐ அம்பு அரங்கு அழித்தார் - மன்மதன் பஞ்சபாணங்களாற்செய்யும் போர்க்களத்தைத் தஹித்தவருமாகிய சிவபெருமான், அருள் தொண்டரை சார்ந்து இடில்-கருணையுள்ள அடியார்களை யடைந்து (தம்மைஒப்புக்) கொடுக்கில், மாதர் ஐயம் பரம் கழிந்து எஞ்ஞான்றும் முத்தி இல் தங்குவர் - மாதர்களுடைய (மயக்கத்தாலுண்டாகும்) சந்தேகமிகுதிகள் நீங்கி எந்நாளும் மோக்ஷவீட்டிலிருந்து வாழ்வார்கள். (எ-று.) (௬௨)

[நற்றாய் தலைவனைவேண்டல்.]

வரையரை யாகத் தனுகூல ரென்மகண் மாரனற்ற
வரையரை யாகமில் லாதெய வாடினண் மாபழனி
வரையரை யாகமழ் நின்புயத் தாரை வழங்குவைது
வரையரை யாகடன் சேர்த்தாய் கடம்ப வனத்தரசே.

(இ - ள்.) மா பழனி வரையர் ஐயா - பெருமைபொருந்திய பழனிமலையையுடைய முருகக்கடவுளுக்குப் பிதாவானவரும், துவரையரை ஆ கடன் சேர்த்தாய் - துவாரகாபுரியிலுள்ள விஷ்ணுவை இரக்கமாகவும் முறைமையாகவும் வலப்பாகத்தில் வைத்தவரும், வரு ஐயர் ஐ யாகத்துக்கு அனுகூலர் - தவத்தாலதித்த முனிவர்கள்செய்யும் பஞ்சயாகங்களுக்குச் சகாயமுள்ளவரும், கடம்ப வனத்து அரசே - மதுரையில் அரசாக்ஷிசெய்தவருமாகிய சோமசுந்தரப்பெருமானே, மாரன் நல் தவரை எய என் மகள் அரை ஆகம் இல்லா வாடினள் - மன்மதன் அழகியகருப்புவில்லால் (நீலத்தைவைத்துப்) பொருதளன்மங்கையானவள் அரைமேனியில்லாமல் இளைத்தனள், கமழ் நின் புயம் தாரை வழங்குவை - பரிமளிக்காநின்ற உம்முடையபுயத்திலே யணிந்திருக்கின்ற மாலிகையைக்கொடுத்தருள்வீராக. (எ-று.) (௬௩)

[பாங்கி வெறிவிலக்கல்.]

வனசங் கரிக்கும் பதத்தாட்குக் காமன் மலரம்புபாய்
வனசங் கரிக்குயங் தோய்ந்தா னரனம் மணிகடரு
வனசங் கரிக்கும் பணைசூழ் கடம்ப வனத்திலென்செய்
வனசங் கரிக்குவந் தான்மதப் பேய்வெளி வாங்கிடுமே.

(இ - ள்.) சங்கரி குயம் தோய்ந்தான் அரன் அம் மணிகள் தருவன சங்கு அரிக்கும் பணை சூழ் கடம்ப வனத்தில் - உமாதேவியின் ஸ்தனபாரங்களைத் தழுவிய சிவபெருமானுடைய அழகிய இரத்தினங்களைக் கொடுக்குஞ் சங்கங்கள்

எடுக்கின்ற வயல்கள் சூழ்ந்த மதுரையில், வனசம் கரிக்கும் பதத்தாட்கு காமன் மலர் அம்பு பாய்வன என் செய்வன் - தாமரையைக் கறுப்பாக்கும் பதங்களையுடைய (இந்த) மங்கைக்கு மன்மதனுடைய மலர்க்கணை பாய்கின்றது என் செய்வேன், கரி மதம் பேய்க்கு அசம் வந்தால் வெளி வாங்கிடும் - நஞ்சுபோன்றமன்மதப்பேய்க்கு ஆவேருமாயின் (அந்தமதப்பேய்) விட்டுவிலகும். (எ - று.)

வாங்கு வளைக்கர மின்னார்கள் பாச வலையடையா
வாங்கு வளைக்கன்று வாய்திறந் தான்றொழ வாழ்ந்திடுதே
வாங்கு வளைக்கண்ணி வாமன் மதுரையன் மாரனுயிர்
வாங்கு வளைக்கரிக் கண்டனைச் சிந்தையில் வைத்தவர்க்கே.

(இ - ள்.) கு அளைக்கு அன்று வாய் திறந்தான் தொழ வாழ்ந்திடு தேவு ஆம் - பூமிக்கும் வெண்ணெய்க்கும் முன் வாயங்காத்த விஷ்ணு வணங்கும்படி செல்வத்தோடிருப்பவரும், குவளை கண்ணி வாமன் - நீலோற்பலம்போன்ற கண்களையுடைய உமாதேவியாரை இடப்பாகத்திலேவைத்தவரும், மதுரையன்- மதுரையிலிருப்பவரும், மாரன் உயிர் வாங்கு வளை கரி கண்டன் ஐ - மன்மதனுடைய ஆவியைவாங்கும் களங்கமுள்ள விஷத்தைக் கண்டத்திலே வைத்தவருமாகிய சிவபெருமானை, சிந்தையில் வைத்தவர்க்கு - உள்ளத்தில் உண்மையாக நினைத்தவர்களுக்கு, வாங்கு வளை கரம் மின்னார்கள் பாசம் வலை அடையா ஆம் - வளைந்த கங்கணம்பூண்ட கைகளையுடைய மாதர்களது பாசமாகியவலையடையாவாம். (எ - று.) (சரு)

தவரிக் கனத்தைமன் கீரனைக் கஞ்சத் தடத்தினில்வீழ்த்
தவரிக் கயற்கண்ணி நாதசம் போநிற் றழுவியமர்ந்
தவரிக் ககன்மது ராபுரி யாயெனத் தாழ்ந்தசங்கத்
தவரிக் கடைமொழிக் கேய்ந்தெடுத் தானென் றலையினனே.

(இ - ள்.) தவர் இக்கன் அத்தை மன் - கரும்பை வில்லாகவுடைய மன்மதன் அத்தைக்கு நாயகரும், கீரனை கஞ்சம் தடத்தினில் வீழ்த்த - (கல்வியால் மமதையடைந்த) நக்கீரனைப் பொற்றாமரை வாவியிற்றள்ள, வரி கயல் கண்ணி நாத சம்போ நின் தழுவி அமர்ந்த அரிக்கு அகல் மதுராபுரியாய் - செவ்வரி பரந்த மீன்போலுங் கண்களையுடைய உமாதேவியின் மணாளனான சிவபெருமானே! உம்மை ஆதரவாகவடைந்த விஷ்ணுவுக்குப் புலப்படாத மதுராஸ்தலத்தி லிருப்பவரோ!, என தாழ்ந்த சங்கத்தவர் இக்கு அடை மொழிக்கு ஏய்ந்து எடுத்தான் - என்று வணங்கிய சங்கத்தாருடைய ஆபத்து அடுத்த வார்த்தைக் கிரங்கிக் கரையேற்றினவரும், (எவரோ அவர்) என் தலையினன் - என்னுடைய தலையினெழுத்தாயிருப்பவர். (எ - று.) (சசு)

தலைவா னகந்தொடு பூம்பொழிற் கூடற் றலத்தவமு
தலைவா னகந்தை கெடவழித் தான்பகைத் தானவர்மு

தலைவா னகந்தனைக் கொண்டடர்த் தாய்நின் சரணருள்வாய்
தலைவா னகந்தரு கன்னிபங் காமழுச் சங்கரனே.

(இ - ள்.) பூ பொழில் தலை வானகம் தொடும் கூடல் தலத்தவ - மலர்களை யுடைய சோலைகளின் முடியானது தேவலோகத்தைத் தொடுகின்ற மதுரை ஸ்தலத்தை யுடையவரே, முதலை வான் அகர்தை கெட அழித்தான் பகை தானவர் முதலை வால் நகம் தனை கொண்டு அடர்த்தாய் - முதலையின் பெரிய அக்கிரமங் கெடும்படி யழித்த விஷ்ணுவின் பகையான அரக்கருக் கரசனான இராவணனை வெண்மையுள்ள பெருவிரல் நகத்தா லமிழ்த்தியவரே, தலைவா - எப்பொருட்கு மிறைவரே, நகம் தரும் கன்னி பங்கா - மலையரசன் பெற்ற உமாதேவியை வாமபாகத்திலே வைத்தவரே, மழு சங்கரனே - மழுவை யுடைய கரத்துடன் அடியார்கட் குச்சாசுத்தை யநுக்கிரகிக்கும் வரத்தையுடையவரே, நின் சரண் அருள்வாய் - உம்முடைய திருவடிகளை அடியேனுக்குக் கொடுத்தருளவேண்டும். (எ-று.) (௪௭)

கரனஞ் சுவணங் கரித்தா னயனயிற் கந்தனெழிற்
கரனஞ் சுவணங் கரியார்க் கரிதெனக் காணுவர்சங்
கரனஞ் சுவணங் கரியார் மதுரையிற் கத்தனஞ்சக்
கரனஞ் சுவணங் கரியெனச் செய்யெயிற் கண்டவரே.

(இ - ள்.) சங்கரன் - சுகத்தைக் கொடுக்கிறவரும், நஞ்சு வணங்கு அரியார் - விஷம்படியும்படியான அருபியானவரும், மதுரை இல் கத்தன் - மதுரையிலிருக்குங் கடவுளும், அஞ்சு அக்கரன் - பஞ்சாட்சரத்தை யுடையவருமான சிவபெருமானுடைய, சுவணம் கரி என செய் எயில் கண்டவர் - பொன்னைக் கறுப்பாக்கும் நிறத்தையுடைய புரிசையைக் கண்டவர்கள், கரன் அஞ்சும் வண்ணம் கரித்தான் அயன் அயில் கந்தன் எழில் அஞ்சு கரன் கரி வண்ணனுக்கு அரிது என காணுவர் - கரதூஷணன் பயப்படும்படி சங்கரித்த விஷ்ணுவுக்கும் பிரமாவுக்கும் வேலாயுதக்கடவுளுக்கும் அழகிய ஐங்கரக் கடவுளுக்கும் கறுப்பு நிறமுள்ள இந்திரனுக்கும் (அந்தக் கோட்டையைக்) காணமுடியாதென்று பார்ப்பார்கள். (எ-று.) (௪௮)

வருந்த வருந்த மலர்களைத் தூவு மதன்சுகத்தில்
வருந்த வருந்தக மாற்றியெற் காத்தருள் வாய்விணிற்றே
வருந்த வருந்தளி வாழ்த்திடுங் கூடலில் வாசவென்ற
வருந்த வருந்தகை யீவாய் வணங்கிலர் வன்னஞ்சமே.

(இ - ள்.) விண்ணில் தேவரும் தவரும் தளி வாழ்த்திடும் கூடலில் வாச - ஆகாயத்திலுள்ள தேவர்களும் தபோதனரும் ஆலயத்தினின்று துதிக்கும் மதுரையிலிருப்பவரே!, வென்றவர் உந்து அ அரும் தகை ஈவாய் - (ஐம்புலனை) வென்றவர்கட்கு உயர்ச்சியாகிய அந்த அரிதான குணத்தைக் கொடுப்பவரே, வணங்கிலர் வல் நஞ்சமே - வணங்காதவருக்கு வலிய விஷம்போல்பவரே!, வருந்த

வருந்த சுகத்தில் வரும் மதன் தவர் உந்து மலர்களை தூவு அகம் மாற்றி என் காத்து அருள்வாய் - அடியேன் வருந்தவருந்த கிளிவாகனத்தில் வரும் மன் மதனுனவன் வில்லில் வைத்துச் செலுத்தும் மலர்க் கணைகளை என்மேரிற் பிர யோகிக்கும் உபத்திரவத்தை நீக்கி என்னைக் காப்பாற்றி யருள்செய்யவேண் டும். (எ - று.) (சு௯)

நஞ்சங் கரக்கு மிடற்றுன் புயற்குழு நாணுகவா
னஞ்சங் கரற்றும் பணைமது ரேச னகச்சிலையா
னஞ்சங் கரன்கழற் ெறாண்டரைச் சேர்ந்திடி னுடுநம
னஞ்சங் கரகர வென்றோதி வாழ்த்துவ னம்பரத்தே.

(இ - ள்.) நஞ்சம் கரக்கும் மிடற்றுன் - விஷத்தையடக்கிய கண்டத்தை யுடையவரும், புயல் குழு நாணுக வானம் சங்கு அரற்றும் பணை மதுரேசன் - மேகத்திரள் நாணமடையப் பெருமையாகிய சங்கங்களொலிக்கின்ற வயல் கள் சூழ்ந்த மதுரையி லெழுந்தருளியிருக்கும் ஈஸ்வரனும், நகம் சிலையான் - மகாமேருவை வில்லாகவுடையவரும், நம் சங்கரன் - நமக்குச் சுகத்தைக்கொ டுப்பவருமாகிய சிவபெருமானுடைய, கழல் தொண்டரை சேர்ந்திடில் - திரு வடியையடைந்த அடியார்களை நாம் சேருவோமானுல், நாடும் நமன் நஞ்சு அங்கு அரஹர என்று நம்பரம் ஓதி வாழ்த்துவன் - நம்மை நினைத்துவருகின்ற இயமனும் வருந்தி அவ்விடத்தே அரஹரவென்று நம்முடைய சிவபெருமானைத் துதித்து வணங்குவான். (எ-று.) அத்தும், ஏயும், அசைகள். (௫0)

பரவங் கமலை யிருந்தாய்நின் செய்ய பதத்தையன்றிப்
பரவங் கமலை யுரமிருந் தானைப் பதுமனையிம்
பரவங் கமலை யனையான் றுயரைப் பறக்கடித்தாள்
பரவங் கமலையங் கூடலில் வாழும் பசுபதியே.

(இ - ள்.) பரம் வங்க மலை இருந்தாய் - பழமையாகிய வெள்ளியங்கிரியி லிருப்பவரோ, பர - கடவுளே, வங்கம் அலை அம் கூடலில் வாழும் பசுபதியே - மரக்கலம் அலைகின்ற நீர்வாவிசூழ்ந்த மதுரையிலெழுந்தருளிய சிவபெருமா னே, நின் செய்ய பதத்தை அன்றி - உம்முடைய செவ்விதான திருவடிகளைத் தவிர, கமலை உரம் இருந்தானை பதுமனை பரவம் - இலக்குமியைப் புயத்திலே வைத்த விஷ்ணுவையாவது பிரமனையாவது வணங்கோம், இம்பர் அ அங் கம் அல்லை அனையான் துயரை பறக்க அடித்து ஆள் - (ஆனதால்) இவ்விடத் தில் அந்தத் தேகமானது இருள்நிறமுள்ள மன்மதன் செய்யும் காமாதுரமான துன்பத்தைத் தூரவிலக்கி என்னை யாட்கொண்டருள்வீராக. (எ-று.) (௫௧)

பதிகம் பலபல வோதிப்பு கழ்க்குப் படித்துமென்கோ
பதிகம் பலைதொலைத் தாட்கொண்ட கூடற் பராபரைதன்
பதிகம் பயந்தரித் தானைமெய் யாகப் பணிந்திடிற்பூப்
பதிகம் பலைநமை யொன்ரு தகன்றிடும் பாவங்களே.

(இ - ள்.) பல பல பதிகம் ஓதி புகழ்க்கு படித்தும் என் - அனேகபிரபந்தங்களைப் பாடிக் கீர்த்தியுண்டாவதற்குப் படித்தாலும் என்னபிரயோஜனத்தைக்கொடுக்கும், கோபதி கம்பலை தொலைத்து ஆள் கொண்ட கூடல் பராபனை தன் பதி - தேவேந்திரனுடைய துன்பத்தைநீக்கி யடிமைகொண்ட மதுரையிலெழுந்தருளிய உமாதேவியின் நாயகரும், பயம் கம் தரித்தான் ஐ - கங்கையை முடியிலேவைத்தவருமாகிய கடவுளை, மெய்யாக பணிந்திடில் - உண்மையாக (மனோவாக்குக் காயத்துடன் நாம்) வணங்கப்பெறுவோமானால், பூ பதி கம்பலை நம்மை ஒன்றாது - பூமியிலழுந்தச்செய்யுஞ் சஞ்சலம் நம்மையடையாது, பாவங்கள் அகன்றிடும் - பாவங்களெல்லா நீங்கிவிடும். (எ-று.) (௫௨)

களைக்கும் பவன முலைவிற் புருவங் கனங்குழலார்
களைக்கும் பலையடுத் தோடியெய்த் தின்பங் கருதிமனங்
களைக்கும் படியுளீர் கூடற் றலத்தனைக் காணிலுந்து
களைக்கும் பநீக்குந் துயர்திரு தற்கிது கைம்மருந்தே.

(இ - ள்.) களை கும்பம் வனம் முலை - ஒளிபொருந்திய கும்பம்போலும் அழகிய முலைகளும், வில் புருவம் - விற்போன்ற புருவமும், கனம் குழலார்கள் கும்பலை அடுத்து ஓடி எய்த்து இன்பம் கருதி - மேகம்போன்ற கூந்தலையுமுடைய மாதர்களின் கூட்டத்தைச் சேர்ந்து எவ்விடத்தும் ஓடியிளைத்துச் சிற்றின்பத்தை நினைத்து, மனம் களைக்கும் படியுளீர் - நெஞ்சம்புண்ணுகின்ற பூமியிலுள்ளவர்களே, கூடல் தலத்தனை காணில் உம் கும்பம் துகளை நீக்கும் - மதுரைச்சிவபெருமானை நீங்கள் தெரிசித்தால் உங்களுடைய செறிந்த குற்றங்களை விலக்குவார், துயர் திருதற்கு இது கை மருந்து - நீங்கள் துன்பத்தினின்று நீங்கிச் சுகமடைவதற்கு இதுதான் கைகண்ட ஔஷதம். (எ-று.) (௫௩)

மருந்தானத் தன்விதி யுய்யச்செய் தான்கவின் வால்வரைய
மருந்தானத் தன்மது ரைப்பதி யான்புர மாய்த்திடுஞ்ச
மருந்தானத் தன்மதன் வாகைசெற் றோனடி வாழ்த்திடத்த
மருந்தானத் தன்முத லீறுமில் லானென் மனத்தவனே.

(இ - ள்.) மருந்தால் நத்தன் விதி உய்ய செய்தான் - தேவாமிர்தத்தினால் விண்டு பிரமாதிதேவர்களைப் பிழைக்கும்படி செய்தவரும், கவின் வால் வரை அமரும் தானத்தன் - அழகிய வெள்ளியங்கிரியிலமர்ந்து அடியார்கள் காட்சிக்கெளிதானவரும், புரம் சமர் உந்து மாய்த்திடும் ஆன் அத்தன் - திரிபுராதிகண்மேற் போரைச்செலுத்தித் தகித்த ரிஷபவாகனத்தையுடையவரும், முதல் ஈறு இல்லான் - ஆதியந்தமில்லாதவரும், தம் அடி வாழ்த்திட அரும் தானத்தன் - தமது திருவடியைத் துதிப்பவருக்கு அரிதாகிய மோக்ஷவீட்டைப் பாலிப்பவரும், மதுரை பதியான் என் மனத்தவன் - மதுரைப்பதியி லெழுந்தருளியிருப்பவருமாகிய சிவபெருமான் அடியேன் மனத்திலு மிருப்பவர். (எ-று.) (௫௪)

அவனிக்குண் மானிட ராகப் பிறந்து மறிவொடுமா
யவனிக் குரவன் முதலவன் கூட லமர்ந்தவன்றூ
யவனிக்குத் தங்க முடியன் றளித்த வயனெவனே
வவனிக்குப் போதடி வாழ்த்தார்க்குக் காணி யருநரகே.

(இ-ள்.) அவனிக்குள் மானிடர் ஆக பிறந்தும் - பூமியின்கண்ணே மானிடராகச் செனித்தும், மாயவன் இ குரவன் முதலவன் - விஷ்ணுவுக்கும் இந்தப் பிரமனுக்கும் நாயகரும், கூடல் அமர்ந்தவன் - மதுரையி லெழுந்தருளியவரும், தூய வன்னிக்கு தங்க முடி அன்று அளித்த ஐயன் - பரிசுத்தமுள்ள அக்கினிக்கு இருப்பிடமாகத் தம்முடைய மேலானமுடியை அன்றுகொடுத்த ஐயனும், எவனே அவன் இக்கு போது அடி அறிவொடு வாழ்த்தார்க்கு அரு நரகம் காணி - யாரோ! அவருடைய இனிமையுள்ள புஷ்பத்துக்கொத்த பாதங்களை நல்லறிவுடன் வணங்காதவர்கட்கு அரிதாகிய நரகபூமியே காணியாட்சியாகும். (எ-று.)

நரைவந் திரட்டத் தருமனைப் போல்வலி நாட்டிடுமன்
னரைவந் தியாளர் புகழ்ந்தேத்த வேண்டு நடையிருந்து
நரைவந் திறந்தனர் நெஞ்சே மதுரை நயத்தலத்தி
னரைவந்தித் தாலிற வாக்கதி நாட்டுவர் நம்பிக்கையே.

(இ-ள்.) நெஞ்சே - மூடமனமே! நரை வந்து இரட்ட தருமனைப் போல் வலி நாட்டிடும் மன்னர் ஐ வந்தியாளர் புகழ்ந்து ஏத்த வேண்டும் நடை இருந்தும் நரை வந்து இறந்தனர் - சாமரையாகிய தென்றல் அசைக்கத் தேவேந்திரனைப்போல் வலிமைசெலுத்துகின்ற சக்கிரவர்த்திகளும் அழகிய பணிசெய்வோர் துதித்து வணங்கவும் அளவற்ற செல்வங்களிருந்தும் நரையுண்டாகி மாண்டுபோயினர், நயம் மதுரை தலத்தினரை - மேன்மைதங்கிய மதுரையி லெழுந்தருளிய சிவபெருமானை, வந்தித்தால் இறவா கதி நாட்டுவர் நம்பிக்கை- (நாம்) வணங்கப்பெறுவோமானல் (நம்மை) நித்தியசுகத்திலே வைப்பார்; இது நிச்சயம். (எ - று.) (௫௬)

[தலைவன் வரவு தாழ்ப்பப் பாங்கி தலைவிக் கிரங்கல்.]

நம்பிக்கை யோட்டித் தடுத்தாண்ட கூட னணுகுபரன்
நம்பிக்கை யோது மொழியாளை யாள்வனிந் நாளென்றதால்
நம்பிக்கை யோடிருந் தாள்வரக் காண்கில ளுடுமத
நம்பிக்கை யோவென் புகல்வா ளுடல நலிந்தனளே.

(இ - ள்.) நம் பிக்கு ஐ ஓட்டி தடுத்து ஆண்ட கூடல் நணுகு பரன் - நம்முடைய துன்பத்தை நீக்கித் தடுத்தாட் கொண்ட மதுரையிலெழுந்தருளிய சிவபெருமான், நம்பு இக்கை ஓது மொழியாளை இந்நாள் ஆள்வன் என்றதால் நம்பிக்கையோடு இருந்தாள் - விருப்பமுள்ள கரும்புபோலும் வசனத்தையுடைய இந்தப்பெண்ணை இப்பொழுதே ஆதரிப்போமென்று சொன்னதால் விசுவாசத்தோடிருந்தாள், (இருந்தும்) வர காண்கிலள் - அந்தப்படி வரக்காண்

இலாள், உடலம் நலிந்தனள் - தேகமெல்லாம் வாடினள், ஐயோ! நாடும் மத நம்பிக்கு என் புகல்வாள் - அந்தோ! தன்னைத் தொடருகின்ற மன்மதனுகிய புருடரிற் சிறந்தோனுக்கு என்ன உத்தரம் சொல்லுவாள். (எ - று.) (௫எ)

தனையலங் காரம் புரிமாதர் மையலைச் சார்ந்திடுமென்
றனையலங் காய்ந்தடி யாட்கொள்ளு வானந் தகையொடுமைந்
தனையலங் கார்ந்த கதியளித் தாமெனத் தந்தனன்முத்
தனையலங் கால்வழி நந்தூருங் கூடற் றலத்தந்தையே.

(இ - ள்.) ஐ அலம் கால் வழி நந்து ஊரும் கூடல் தலம் தந்தை - அழகிய கலப்பையினடிவழியாசச் சங்கங்களேறிச் செல்கின்ற மதுரைஸ்தலத்திலமர்ந்த உயிர்கட்குப் பிதாவும், முத்தன் - பாசங்களைநீக்கி யிருப்பவருமாகிய கடவுள், தன்னை அலங்காரம் புரி மாதர் மையலை சார்ந்திடும் என்றனை அலம் காய்ந்து அடி ஆட்கொள்ளுவான் - தங்களை யலங்காரஞ்செய்கின்ற மாதர்கள் மயக்கம்பொருந்திய என்னைத் துன்பத்தினின்றும் விலக்கித் திருவடிக்காளாகும் பொருட்டு, அம் தகை ஒடு மைந்த நையல் அங்கு ஆர்ந்த கதி அளித்தாம் என தந்தனன் - மிகுந்த அன்புடனே குழந்தாய் வருந்தாதே அவ்விடத்துப் பொருந்திய மோக்ஷத்தை (உனக்குக்) கொடுத்தோமென்று தந்தனர். (எ-று.)

தந்தங் கருமைத் தனத்தார்பின் னோடித் தயங்கியந்தோ
தந்தங் கருத்தைக் கெடுத்தலை வீரொற்குத் தாழ்வில்வரந்
தந்தங் கருங்கதி சேர்த்தார் மதுரைத் தலத்தரன்பா
தந்தங் கருய்யு நெறியடை யாரிது சத்தியமே.

(இ - ள்.) அந்தோ! கருமை தந்தம் தனத்தார் பின் ஓடி தயங்கி தம் தம் கருத்தை கெடுத்து அலைவீர் - ஐயோ! பெருமையுள்ள யானைக்கொம்புக்கிணைத்த முலைகளையுடைய மாதர்களின் பிறகேயோடி வருந்தித் தங்கள் தங்களுடைய விவேகத்தைக் கெடுத்து அலைகின்றவர்களே, எற்கு தாழ்வு இல் வரம் தந்து அங்கு அரும் கதி சேர்த்து மதுரை தலத்து ஆர் அரன் பாதம் தங்கார் உய்யும் நெறி அடையார் இது சத்தியம் - எனக்குக் குறைவில்லாதவரங்களைக் கொடுத்தி அவ்விடத்து அரிதாகிய மோக்ஷத்திற் சேர்த்து மதுரையென்னும் க்ஷேத்திரத்திலெழுந்தருளிய சிவபெருமானுடைய திருவடிநீழலில் அடையாதவர்கள் பிழைக்கும் வழியைச் சேரார் இது உண்மையாகும். (எ - று.)

நான்காமடியில் எதுகைநோக்கி ஆகாரம் குறிகியது. (௫௯)

சத்தியங் காப்பர்க் கிறவாக் கதியளி சங்கரவா
சத்தியங் காரனைத் தாயொலி கூடற் றலத்தவவெஞ்
சத்தியங் காதல வெம்பக ரேருஞ் சமன்விடும்பா
சத்தியங் காதெனைக் காப்பாய்முக் கண்ணின் றனிக்கரும்பே.

(இ - ள்.) முக்கண் தனி கரும்பே - மூன்றுகண்களையுடைய ஒப்பில்லாத கரும்புக்கு நேரானவரும், சத்தியம் காப்பர்க்கு இறவா கதி அளி சங்கரா -

உண்மையை ஆதரிப்பவர்களுக்கு அழியாத முத்தியைக் கொடுக்கும் சங்கரரும், கார் வாசம் அனைத்தாய் இயம் ஒலி கூடல் தலத்தவ - மேகத்தின் வேகமாகிய ஒலிபோல வாத்தியங்கள் முழங்குகின்ற மதுராஸ்தலத்தி லிருப்பவரும், எம் சத்தி அம் காதல - எங்களுடைய உமாதேவியின் அழகிய நாயகருமான சிவபெருமானே, வெம் பகடு ஊரும் சமன் விடும் பாசம் இயங்காது என்னை காப்பாய் - வெவ்விதான எருமைக்கடாவி லேறுகின்ற எமன் வீசுகின்ற பாசத்தினுல் இளைக்காதபடி அடியேனை இரக்ஷித்தருள்வீராக. (எ - று.)

அத்து- நிறையசை. இன் - சாரியை. (௬௦)

கருந்தா தனைய மனக்கூற் றுவன்விடுங் காலவஞ்ச
கருந்தா தனைக்கொடு போமுனெற் காநின் கதியெனப்ப
கருந்தா தனைப்புரந் தான்பரந் தொண்டனங் கண்மணிநி
கருந்தா தனையற் சமைத்தானங் கூடன்மின் காதலனே.

(இ - ள்.) கருந்தாது அனைய மனம் கூற்றுவன் விடும் கால வஞ்சகர் தன்னை உந்தா கொடு போமுன் எற்கா நின் கதி என பகரும் தாதனை புரந்தான் - இரும்புபோலு மனத்தையுடைய எமனல் ஏவப்பட்ட காலராகியவஞ்சகர் தன்னைத் தள்ளிக்கொண்டு போகுமுன்னரோ அடியேனைக் காக்கவேணும் உம்முடைய அடைக்கலம் என்று துதித்த மார்க்கண்டேயரைக் காப்பாற்றியவரும், பரம் - மோக்ஷத்தைக் கொடுப்பவரும், தொண்டன் அம் கண் மணி நிகரும் தா தநயன் சமைத்தான் - சிறுத்தொண்டருடைய அழகிய கண்மணி போலும் வலியுள்ள புத்திரனை கறியாகச் சமைக்கும்படி செய்தவரும், (யாரெனின்) நம் கூடல் மின் காதலனே - நம்முடைய மதுரையில் விருப்பத்தோடு எழுந்தருளிய மீனம்பிகையின் நாயகராகிய சோமசுந்தரக்கடவுளே. (எ-று.) ()

காதங் கரிக்கும் பதுமற்குந் தேவர்க்குங் காளமணு
காதங் கரிக்கும் பயந்தீர்த் தவவெனைக் காதெமனைக்
காதங் கரிக்கும் பரமுனக் கேயெம்ம கத்தவரு
காதங் கரிக்கும் பசுபதி கூடன்முக் கட்சிவமே.

(இ - ள்.) அரிக்கும் பதுமற்கும் கா தக்கு அரிக்கும் தேவர்க்கும் காளம் அணுகாது அங்கு பயம் தீர்த்தவ - விஷ்ணுவுக்கும் பிரமாவுக்கும் கற்பகத்திருக்கும் இந்திரனுக்கும் தேவர்களுக்கும் விஷம் சமீபியாது அவ்விடத்தில் அச்சத்தை நீக்கினவரும், எம் அகத்த - என்னுடைய மனத்தின்கணிருப்பவரும், அருகா - அடியார் பக்கத்திலுள்ளவரும், தங்கரிக்கும் பசுபதி - (ஆன்மாக்களை) ஆதரிக்கும் கடவுளும், கூடல் முக்கண் சிவமே - மதுரையி லெழுந்தருளிய மூன்றுகண்களையுடையவருமான சிவபெருமானே, எனை காதும் எமனை காதம் கரிக்கும் பரம் உனக்கே - அடியேனைக் கொல்லவரும் இயமனை ஒருகாதவழி தூரத்துக்கப்பாலே (தீச் சுவாலிக்கச்செய்து) நிறுத்தும் பாரம் உமக்கே. (எ - று.) (௬௨)

சிவனக ரத்தினை மானும்தென் கூடலைச் சேர்ந்துளங்க
சிவனக ரத்தை விடாதறை வேனென் றினந்தினம்பே
சிவனக ரத்தைக் குவித்தறி யாய்நமன் றிண்வலைவீ
சிவனக ரத்திட மெங்காமெக் கான்முத்தி சேருவதே.

(இ-ள்.) மனமே! சிவனகரத்தினை மானும் தென் கூடல் ஐ சேர்ந்து உளம் கசிவன் அகரத்தை விடாது அறைவேன் என்று - கைலையங்கிரிக்கு நிகரான இசைபெற்ற மதுராஸ்தலத்தில் சிவனடியார்களைச்சார்ந்து உள்ளம் நெக்கு நெக்காகவுருகுவேன் அகராக்ஷரத்தை விடாமற் செபிப்பேனென்று, இனம் தினம் பேசி வன கரத்தை குவித்து அறியாய் - இன்னும் நாடோறுஞ் சொல்லிக்கொண்டே அழகியகைகளைக் கூப்பிவணங்கி யறியாய், நமன் திண் வலை வீசி வல் நகர - எமனுனவன் வலியபாசத்தை வீசிக்கொண்டு சீக்கிரமாக வருங் காலம், திடம் எங்கு ஆம் - (ஆதரவான) தைரியம் எவ்விடத்துண்டாகும் (உண்டாகா தெனில்), எக்கால் முத்தி சேருவது - (நாம்) எந்தக்காலத்தில் மோக்ஷமடைவது. (எ-று.) மனம், தோன்றா எழுவாய். (சுங)

தேகந் தரத்தைப் பொருமந் தகாவெற் செறியிலடர்ந்
தேகந் தரத்தைக் குழலுமை பாகன் றிருமதுரைத்
தேகந் தரத்தை மகன்றலை வாங்கியைச் சேர்ந்தனன்சந்
தேகந் தரத்தை யுறேன்மழு வேயுனைச் சேதிக்குமே.

(இ - ள்.) தேகம் தரத்தை பொரும் அந்தகா என்அடர்ந்தே செறியில் - சரீரமானது மலைக்கு நிகராகும் இயமனே நீ என்னைப்பொருத நெருங்கிவந்து கலந்தால், கந்தரத்து ஐ குழல் உமை ஒருபாகன் - மேகத்துக்குச்சமானமான அழகிய கூந்தலையுடைய உமாதேவியாரை ஒப்பற்ற இடப்பாகத்திலே வைத்தவரும், திரு மதுரை தே - சிறப்புள்ளமதுரையிலிருக்கும் கடவுளும், கந்தர் அத்தை மகன் தலை வாங்கியை சேர்ந்தனன் - சுப்பிரமணியக்கடவுள் அத்தைமகனுகிய பிரமதேவன் றலையைவாங்கினவருமாகிய சிவபெருமானை யடைக்கலமடைந்தேன், மழுவே உனை சேதிக்கும் சந்தேகம் தரத்தை உறேல் - ஆதலின் மழுவாயுதமே யுன்னைச்சங்கரிக்கும்நீ சந்தேகங்கொள்ளாதே. (எ-று.) (சுச)

சேதனந் தங்குறிப் பாயுண்மை சிந்தனை செய்கிலர்நஞ்
சேதனந் தங்குர வற்குணர்த் தாயெனச் செப்பிலுண்டோ
சேதனந் தங்குறை வில்லாது வாழ்குவந் தேர்ந்தடைநெஞ்
சேதனந் தங்கு நிகேதனக் கூடற் றிருநகரே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே! சேதனம் தம் குறிப்பாய் உண்மை சிந்தனை செய்கிலர் நஞ்சே தன் அந்தம் குரவற்கு உணர்த்தாய் என - அறிவையே தமது குறியாகவைத்து மெய்யான உபாசனைசெய்யாத மூடர்களுக்கு விஷம்போல்பவரோ! தன்முடிவைப் பிரமாவுக்குத் தெரிவிக்காதவரோயென்று, செப்பில் சேதம் உண்டோ - ஸ்தோத்திரம் செய்தால் நமக்கு அழிவுண்டாகுமோ, நந்தம்

கெடோம், குறைவு இல்லாது வாழ்குவம் - தாழ்வின்றி வாழக்கடவோம், தனம் தங்கு நிகேதனம் கூடல் திரு நகர் தேர்ந்து அடை - ஆதலின், அளவில்லாநிதிய மிருக்கப்பெற்ற ஆலயமுள்ள மதுரையென்னும் அழகியஸ்தலத்தை நிக்ஷயித்து அடைவாயாக. (எ-று.) (௬௫)

நகராக் கதிக்கு வலயத்தென் மேனம னுடிடுமுன்
னகராக் கதிக்குந் திருவால வாயுறை நாதசிவ
னகராக் கதிக்குப் படைத்தவ சேர்த்தரு ளுகமுத
னகராக் கதிக்குய மீர்த்தான்முன் றேடரு நற்பதத்தே.

(இ - ள்.) சிவனகர் ஆக்க - சிவலோகத்தில் செல்வமா யெழுந்தருளியிருப்பவரும், திக்கு படைத்தவ - பத்துத்திசை முதலியவைகளைப் படைத்தவரும், நகரா கதிக்கும் திரு ஆலவாய் உறை நாத - நகராவாத்தியமுழங்கும் அழகிய மதுரைஸ்தலத்திற் றங்குகின்றவருமாகிய கடவுளே, குவலயத்து என் மேல் நமன் நகரா கத்தி நாடிடும் முன் - பூமியினிடத்தே என்பேரில் எமனுனவன் ஊர்ந்து சப்த மிட்டுத் தேடியடையுமுன்னரே, நாகம் முதல் நக ராக்கதி குயம் ஈர்த்தான் முன் தேட அரும் நல் பதத்து சேர்த்து அருள் - தேவலோகமுதலாக நகைக்கும்படி சூர்ப்பனகி முலையை யறுத்த இலக்குவனுக்குத் தமயனுகிய ஸ்ரீராமன் தேடுதற்கரிதான நன்மைதரும் உமது திருவடிகளில் (அடியேனை) சேர்த்தருளவேண்டும். (எ-று.) (௬௬)

[பாங்கி தலைவனுக்குரைத்தல்.]

தேவரம் பைக்கு முயர்வாளுன் கூடலைத் தேடியலைந்
தேவரம் பைக்கட வாதயர்ந் தாட்குத் திருவுளஞ்செய்
தேவரம் பையுடைத் தேனின் றிரங்குந் தெரியலளித்
தேவரம் பையர வம்புனைந் தாயருள் சிந்தைவைத்தே.

(இ - ள்.) பை அரவம் புனைந்தாய் - படத்தையுடைய பாம்பை (ஆபரணமாக) வணிந்தவரே, தேவ ரம்பைக்கும் உயர்வாள் உன் கூடலை தேடி அலைந்து வரம்பு கடவாது அயர்ந்தாட்கு - தேவஸ்திரீக்கு மேலான இந்தப்பெண்ணுனவள் உம்முடைய கூடல் நகரைத் தேடி யலைந்து (கற்பு)ஒழுங்கு கெடாது வாடினுள் இவளுக்கு, திருவுளம் செய்து வரம்பை உடை தேன் நின்று இரங்கும் தெரியல் அளித்து - தேவரீர்கருணைவைத்து வரம்புகளையுடைக்கும் தேன்றுளிக்காநின்ற உம்முடைய கொன்றைமாலையைக் கொடுத்து, சிந்தை வைத்து வரம் அருள் - மனம்பொருந்தி நல்லவரங்களையுங் கொடுத்தருளவேண்டும். (எ - று.) இறுதி ஏகாரமீற்றசை. ஏனையமூன்று நிரையசை. (௬௭)

[அமரிடைப்புக்க தலைவற்கிரங்கும் தலைவியின் பருவரலுணர்ந்த
பாங்கி வண்டின்பாற் கழறல்.]

வைகையம் பால்வளஞ் சேர்மது ரேசன் வரையிலைந்து
வைகையம் பான்மத னெய்யப் பொருதுளம் வாடியிப்பா

வைகையம் பாலமர்க் கேகிய கேழ்வன் வரவின்மனம்
வைகையம் பாலிக்க நைந்ததென் றோதுக வண்டினமே.

(இ - ள்.) வண்டு இனமே - வண்டின் கூட்டமே, வைகை அம்பால் வளம் சேர் மதுரேசன் வரையில் - வைகையாற்றின் ஜெலத்தால் வளம்பொருந்திய மதுரை சிவபெருமான் மலையினிடத்தே, இ பாவை மதன் கை வை ஐந்து அம்பால் எய்ய பொறுது உளம் வாடி கயம் பால் அமர்க்கு ஏகிய கேழ்வன் வரவில் மனம் வைகு ஐயம் பாலிக்க நைந்தது என்று ஓதுக - இந்தப் பெண் மன்மதனுனவன் கைகளால் கூர்மைபொருந்திய ஐந்து மலர்க்கணைகளைத் தொடுத்துப் பிரயோகிக்க வாற்ருது உள்ளம் வருந்தி யானையின்யுத்தத்துக்குச் சென்ற தன் நாயகன் வரவில் எண்ணமுற்று வருவானே? வாரானே? வென்று சந்தேகமுண்டாகத் துன்பப்படுகிருளென்று சொல்லுவீர். (எ-று.) (சுஅ)

[பாங்கி தலைமக ணிலைமை தலைவற் குரைத்தல்.]

வண்டனந் தங்க மடையப் படர்ந்து மருங்குலுந்து
வண்டனந் தங்கவ னத்துவை யாதிவண் மாரனம்பால்
வண்டனந் தங்கழன் றெய்த்தா ணின்மாலை வழங்குவைகா
வண்டனந் தங்க மரைத்தடங் கூடல் வளர்முதலே.

(இ - ள்.) வண்டு கா அன்னம் தங்கு அம் மரை தடம் கூடல் வளர் முதலே - வண்டுகள் (தங்கும்) பூந்தோட்டங்களும் அன்னங்கள் தங்குகின்ற அழகிய தாமரைத் தடாகங்களும் சூழ்ந்த மதுரையிலெழுந்தருளிய சிவபெருமானே, மாரன் அம்பால் இவள் வண் தனம் தங்கம் அடைய படர்ந்து மருங்குலும் துவண்டு அனம் தம் கவனத்து வையாது வண்டு அனந்தம் கழன்று எய்த்தாள் - மன்மதனுடைய கணைகளா லிந்தப் பெண்ணுனவள் வன்மையாகிய முலைகள் தேமற்படர்ந்து இடையொசிந்து தன்னெண்ணத்தி லாகாரத்தையு மறந்து வளையல்க ளநேகஞ்சிதறி வருத்தமுற்றனள், நின் மாலை வழங்குவை - (ஆதலின்) உம்முடைய கொன்றை மாலையைக் கொடுத்தருளும். (எ-று.) (சுகூ)

[தலைவியின் பருவரல் பாங்கி இறைவனுக் குரைத்தல்]

வளையானம் பாலிக்கும் வார்மது ரேச மதிச்சடில
வளையானம் பாக்குவ நின்பால் வழங்கிலை யேல்வருந்து
வளையானம் பாரிதைத் தீர்ப்பா ரளிக்கின் மதனுமிக்கு
வளையானம் பான்மொழி யும்பிழைப் பாளன்பு வைத்தருளே.

(இ - ள்.) வளை யானம் பாலிக்கும் வார் மதுரேச - சங்குகள் அறைவீடுகள் செய்கின்ற நீர் சூழ்ந்த மதுரைச் சிவபெருமானே, மதி சடில - இளம்பிறையைச் சடாமகுடத்திற் புனைந்தவரோ, வளையான் அம்பு ஆக்குவ - சக்கரத்தையுடைய விஷ்ணுவை அஸ்திரமா யாக்கினவரோ, நின் பால் வழங்கிலையேல் - உம்முடைய பாகத்தை (இம்மாதுக்குக்) கொடாதிருப்பீரானுல், ஐயா

வருந்துவள் நம்பு இதை ஆர் தீர்ப்பார் - ஐயனே துன்பமடைவள் நம்பும் இத் துன்பத்தை யாவர்நீக்குவர், அளிக்கில் மதனும் இக்கு வளையான் அம் பால் மொழியும் பிழைப்பாள் அன்பு வைத்து அருள் - (உம்முடைய) பக்கத்தைக் கொடுத்தால் மன்மதனும் கருப்புவில்லை வளையான், அழகிய பால்போன்ற சொல்லையுடையாளும் உய்வள் (ஆதலின்) அன்புவைத்துக் கொடுத்தருளும். (எ - று.) (எ0)

வைக்கும்பிட் டத்தனை யும்புசித் தானை வணங்குவர
வைக்கும்பிட் டத்தனை மாதுல னுகிக்கொண் மாசில்பொற்கு
வைக்கும்பிட் டத்தனை யற்களித் தானை மதுரையிற்றே
வைக்கும்பிட் டத்தனை யாதருள் வாயென வந்திப்பையே.

(இ - ள்.) வைக்கும் பிட்டு அத்தனையும் புசித்தானை - (வந்தியானவளெடுத்து) வைக்கும் பிட்டவ்வளவையும் புசித்தவரும், வணங்குவர் அவை கும்பு இட்டு மாதுலன் ஆகி கொள் மாசு இல் அத்தனை பொன் குவை கும்பு இட்ட தநயனுக்கு அளித்தானை - தம்மைவணங்குகின்ற சபையிற் கூட்டமிட்டு மாமனாகவந்து தாயத்தார்களாலபகரித்து எடுத்துக்கொள்ளப்பட்ட குற்றமில்லாத அவ்வளவு பொன்குவியலையும் (வாங்கி) வருந்திய பிள்ளைக்குக் கொடுத்தவரும், மதுரை இல் தேவை - மதுரையிலெழுந்தருளிய தேவனுமாகிய சிவபெருமானை, கும்பிட்டு அத்த னையாது அருள்வாய் என வந்திப்பை - வந்தனை செய்து பிதாவே (அடியேன்) வருந்தாமல் கிருபை செய்வீரென்று வணங்குவாய். (எ-று.) மனம் - தோன்று எழுவாய். (எக)

வந்தங்கி யந்தரை வானுய் நிறைந்த வரதர்மெய்யார்
வந்தங்கி யன்பரைக் காப்பார் சுடலையில் வாழ்ந்திடுகை
வந்தங் கிளையுட னுடல்கொள் வார்மது ரேசரொன்பா
வந்தங் கிருபையி னுற்போக்கி யாளுவர் மாநிலத்தே.

(இ - ள்.) வந்து அங்கி அம் தரை வான் ஆய் நிறைந்த வரதர் - காற்றுகவும் தீயாகவும் நீராகவும் பூமியாகவும் ஆகாயமாகவும் வியாபித்த உபகாரியும், மெய் ஆர்வம் தங்கி அன்பரை காப்பார் - உண்மையான அன்புபொருந்தி அடியாரை யாதரிப்பவரும், சுடலையில் வாழ்ந்திடு கவந்தம் கிளை உடன் ஆடல் கொள்வார் - மயானத்திற் றங்குகின்ற உடற்குறையுள்ள பேய்களின் கூட்டத்துடன் ஆடுகின்றவரும், மதுரேசர் - மதுரையிலிருக்கு மீசனுமாகிய கடவுள், தம் கிருபையினுல் என் பாவம் போக்கி மா நிலத்தே ஆள்வர் - தம்முடைய கிருபாநோக்கத்தால் அடியேனுடைய பாவத்தை நீக்கி விரிந்த பூமியினிடத்தே அடிமைகொண்டு புரந்தருள்வார். (எ - று.) (எஉ)

மானத்த னந்தரு வாழ்பவ னுன்முகன் வாழ்த்திடுபெம்
மானத்த னந்தப் புரத்தரைக் காய்ந்த வலவன்மழு

மான்த்த னந்தமில் லம்பலத் தாடிய வன்னடன
மானத்த னந்தவென் றுடல்கண் டேனம் மதுரையிலே.

(இ-ள்.) மா நத்தன் அம் தரு வாழ்பவன் நான்முகன் வாழ்த்திடு பெம்மான் அத்தன் - ஒளிபொருந்திய சங்கையுடையவிஷ்ணுவும் அழகிய கற்பக தருவிலிருக்கும் இந்திரனும் பிரமாவும் துதிக்கும் பெருமையுற்ற கடவுளும், புரத்தனை நந்த காய்ந்த வலவன் - முப்புரத்தனைக் கெடும்படி சினத்த வல்லமையுள்ளவரும், மழு மான் அத்தன் - மழுவையு மானையுங் கைகளிற்றரித்தவருமாகிய சிவபெருமான், அந்தம் இல் அம்பலத்து ஆடிய வல் நடனம் மான - முடிவில்லாத பொன்னம்பலத்தில் நடித்த வலிமையான திருநடனத்துக் கொப்பாக, நம் மதுரையில் தனந்த என்று ஆடல் கண்டேன் - நம்முடைய மதுரை வெள்ளியம்பலத்தில் தனந்த வென்னும் தாளத்துடன் ஆடிய ஆடலைக்கண்டேன், (எ-று.) (எங)

[தலைவனேக்குணர்ந்த பாங்கி மதனைச்சினவுதல்.]

மதியா தவரைக் கதிபுகுத் தான்மது ரேசனழன்
மதியா தவரைக்கண் மூன்றுன் றெரியல் வருமுனிற்புன்
மதியா தவரைக் கனமுலை யாளை வருத்துதல்சம்
மதியா தவரைக் கருதா தகன்மத வாதின்றியே.

(இ-ள்.) மதியாதவரை கதி புகுத்தான் - தன்னைக் கருதாதவர்களை மோக்ஷவீட்டி லடைவிக்காதவரும், மதுரேசன் - மதுரையி லெழுந்தருளியிருப்பவரும், அழல் மதி ஆதவர் ஐ கண் மூன்றுன் - அக்கினி சந்திர சூரியர்களை அழகிய கண்கள் மூன்றுக வுடையவரும் ஆகிய சிவபெருமான், தெரியல் வரும் முன் - மாலைவருவதற்குமுன்னரோ, மத அ வரை கனம் முலையாளை வருத்துதல் சம்மதியா - மன்மதனே அந்த மலைபோலும் மேன்மையுள்ள முலைகளையுடைய இம்மாதைத் துன்பப்படுத்துதல் (உனக்கு) சம்மதமா, நின் புன் மதி யாது தவரை கருதாது வாது இன்றி அகல் - உன்னுடைய அற்பப்புத்திக்கு காரணமென்னை? உன் கருப்புவில்லை நினையாமலும் வீண்வாதமில்லாமலும் அகல்வாயாக. (எ-று.) மதனே மாலைவருமுன் அகலெனக்கூட்டுக. (எச)

வாதிக்கு மானமன் வந்தாலு மந்த மடப்பிரதி
வாதிக்கு மானமன் றுடப்பின் வாங்கு மதுரைமுதல்
வாதிக்கு மானமன் னுவயில் வாளும் வரிவிழிக்கொவ்
வாதிக்கு மானமன் சொல்லிபங் காவென வந்திக்கவே.

(இ-ள்.) மதுரை முதல்வா - மதுரையிலெழுந்தருளிய எப்பொருட்குமிறைவனே, திக்கும் ஆன மன்னு - எல்லாத்திசைகளுந் தானுனமுதல்வனே, அயில் வாள் வரி விழிக்கு ஒவ்வாத இக்கு மான மன் சொல்லி பங்கா - வேலும் வாளும்

செவ்வரிபொருந்திய விழிக்கொவ்வாதவளும் கரும்புக்கு நிகராக (இனிமை) நெருங்கிய சொற்களையுடையவளுமாகிய உமாதேவியின் கூறுடையவரோ, என வந்திக்க - என்றுஸ்தோத்திரஞ் செய்யுங்கால், நமன் வாதிக்குமா - எமன் வந்து வாதஞ்செய்வானு!, வந்தாலும் அந்த மடம் பிரதிவாதிக்கு மானம் மன்றுட பின்வாங்கும் - மீறி அவன்வந்தாலும் அந்த அறிவில்லாத பிரதிவாதிக்கு வெட்க மானது இரந்துகேட்கப் பின்காட்டி ஓடுவான். (எ-று.) (எரு)

கவனத் தரிக்கும் பதியான்றொண் டர்க்கருள் காட்டிடுபுங்
கவனத் தரிக்கும் பணைமது ரேசன் கணங்கள்வணங்
கவனத் தரிக்கும் பரவுரை யம்பிகை காதல்கொண்மிக்
கவனத் தரிக்கும் பனையளித் தானடி காண்மின்களே.

(இ - ள்.) அரிக்கும் கவனத்து பதியான் - மஹாவிஷ்ணுவுக்கும் நினைவுக் கமையாதவரும், தொண்டர்க்கு அருள்காட்டிடு புங்கவன் - அடியார்களுக்குக் கருணைசெய்கின்ற கடவுளும், நத்து அரிக்கும் பணை மதுரேசன் - சங்குகளைடுக் கின்றவயல்கள் சூழ்ந்த மதுரையி லெழுந்தருளியவரும், கணங்கள் வணங்கு அ வனத்தர் - பூதகணங்கள் துதிக்கின்ற அந்தச்சுடலையையுடையவரும், இக்கும் பரவு உரை அம்பிகை காதல் கொள் மிக்க வனத்தர் - கரும்புந்தாழ்கின்ற மது ரமுள்ள சொற்களையுடைய மீனம்பிகை ஆசைகொள்ளும் மிகுந்த அழகையுடை யவரும், இ கும்பனை அளித்தான் - இந்த அகஸ்தியமுனிவரை உண்டாக்கியவ ருமாகிய சிவபெருமான், அடி காண்மின்கள் - திருவடியைக் கண்டு வணங்குங் கள். (எ-று.) உலகீர் - தோன்று எழுவாய். (எசு)

களவாதிக் கந்தமின் னுரோ வழியெனக் கண்டுனடி
களவாதிக் கந்தமில் லாயடைந் தேனைக் கடுவமர்த்துங்
களவாதிக் கந்தனைத் தந்தாய் புரந்தருள் கண்ணுதனிட்
களவாதிக் கந்தழை யும்மது ராநகர்க் காவலனே.

(இ - ள்.) திக்கு அந்தம் இல்லாய் - தமக்கு ஒருஆதரவும் முடிவுமில்லாத வரும், கடு அமர்த்தும் களம் ஆதி - விஷத்தையடக்கிய திருக்கண்டத்தை யுடையமுதல்வரும், கந்தனை தந்தாய் - சுப்பிரமணியக்கடவுளைப் பெற்றவரும், கண்ணுதல் - நெற்றிக்கண்ணையுடையவரும், நிட்கள - அருபியானவரும், ஆதிக் கம் தழையும் மதுரா நகர் காவல - செல்வம்பெருகும் மதுரைநகருக்குக் காவ லாகவுடையவருமான சிவபெருமானே, களவு ஆதிக்கு அந்தம் மின்னுரோ வழி என கண்டு உன் அடிகள் அவா அடைந்தேனை புரந்து அருள் - களவு (கட்காமங் கொலை) முதலியபாபத்தொழிலுக்கு அழகிய மாதர்களே காரணமென்று தெரிந் து உம்முடைய திருவடிகளின்மே லிச்சையுண்டாகி யடைந்த வடியேனைக் காப்பாற்றி யருள்செய்யவேண்டும். (எ-று.) (எஎ)

காவைக் குமதியி னுல்வந்த துன்பைக் கடத்தியவே
காவைக் குமர னயில்போலுங் கண்ணியர்க் கண்டுமயங்

காவைக் குமனதை யின்றே திருப்பிக் கதியடிக்கீழ்க்
காவைக் குமன்றவத் தோருடன் கூடற் கலப்பவனே.

(இ - ள்.) கா ஐக்கு மதியினுல் வந்த துன்பை கடத்திய ஏகா - கற்பகதரு விலிருக்கும் இந்திரனுக்கு அவன் புத்தியாலடைந்த துன்பத்தை நீக்கிய ஒப்பில்லாதவரும், ஐ கு மன் தவத்தோர் உடன் கூடல் கலப்பவனே - அழகிய பூமியினிடத்தே நிலைபெற்ற முனிவர்களுடன் மதுரைப்பதியிலிருப்பவருமான சிவபெருமானே! - குமரன் வை அயில் போலும் கண்ணியர் கண்டு மயங்கா வைக்கும் மனதை இன்றே திருப்பி கதி அடி கீழ் கா - முருகக்கடவுளுடைய கூர்மை பொருந்திய வேலாயுதத்தை யொத்த கண்களையுடைய மாதர்களைக்கண்டு மயங்கச்செய்கின்ற புன்மனத்தை இப்பொழுதே தடுத்து முத்தியளிக்குந் திருவடியின்கீழ் அடியேனைக் காக்கவேண்டும். (எ - று.) (எஅ)

கலகத் தரிக்கு மொழியாய்த் துதிக்கினுங் காண்டிடவ
கலகத் தரிக்கு முனமுளைத் தார்மது ரைக்கட்சங்கக்
கலகத் தரிக்கும் படியமைத்தாரைக் கரைந்துடன்பு
கலகத் தரிக்குட் டுயில்வாரின் மேற்பதங் கைவருமே.

(இ - ள்) கல் அகத்தர் இக்கு மொழியாய் துதிக்கினும் காண்டிட அகல் கத்தர் - கன்னெஞ்சர் கரும்புபோலும் சொற்களால் வாழ்த்தினுலுந் தெரிசனைக்குத் தடையா யப்புறப்படுகின்ற கடவுளும், இ கு முனம் முளைத்தார் - இப்பூமிக்கு முதலிற்றோன்றியவரும், மதுரைக்கண் சங்கம் கலகம் தரிக்கும்படி அமைத்தாரை உடன் கரைந்து புகல-மதுரையிற் சங்கத்தார் செய்த கலகத்தையடக்கித் தங்கும்படி வைத்தவருமாகிய சிவபெருமானை விரைவில் மனங்கசிந்து போற்றினுல், கத்து அரிக்குள் துயில்வாரின் மேல் பதம் கை வரும் - ஒலிக்காநின்ற பாற்கடலிற்றுயில்கின்ற விஷ்ணுவின் நிலைமைக்கு மேலானபதவி கைகூடும். (எ - று.) அ - தடை. (எகூ)

மேவனங் கஞ்ச மலர்வாவி சூழ்ந்து விளங்குமென்னம்
மேவனங் கற்கெழி றந்தா யகம்படி வீணர்நஞ்ச
மேவனங் கத்தவென் றோர்கான் மதுரையில் விள்ளவரு
மேவனங் கட்கதி ஞானமு முத்தியு மேன்மையுமே.

(இ-ள்.) அகம் படி வீணர் நஞ்சமே - பாவத்திலே திருந்துகின்ற பயனற்றவர்களுக்கு விஷம்போல்பவரும், வனம் கத்த - சுடலையில் வாசம்பண்ணும் கடவுளும், என் அம்மே - அடியேனுடைய மாதாவானவரும், அனங்கற்கு எழில் தந்தாய் - (தன்னைவணங்கிய) மன்மதனுக்கு அதி ரூபத்தைக்கொடுத்தவருமாகிய சிவபெருமானே, என்று - என்று, (மனோவாக்குக் காயத்துடன்) அன்னம் மேவும் கஞ்சம் வாவி சூழ்ந்து விளங்கும் மதுரையில் ஓர்கால் விள்ள நங்கட்கு வல் அதி ஞானமும் முத்தியும் மேன்மையும் வரும் - அன்னப்பக்ஷிகள் சஞ்சரிக்கும் தாமரைகணிறைந்த தடாகங்கள்சூழ்ந்து பிரகாசிக்கும் மதுரையிலிருந்து

ஒருதரம் சொல்வோமானால் நமக்குச் சீக்கிரம் அதிகமான ஞானமும் மோக்ஷமும் உயர்வுங்கிடைக்கும். (எ - று.) ஏ. இரண்டும் அசை. (அ0)

மைக்கவ ருங்கட் பசுங்கதிர் மேனி வயங்கெழிலு
மைக்கவ ருங்கதி சொற்றது மன்பர் மனத்ததுநம்
மைக்கவ ருங்கமு கும்பொலி கூடல் வளர்வதின்ற
மைக்கவ ருங்கதி விட்டுய்ய வல்லே மனமகிழ்ந்தே.

(இ - ள்.) மை கவரும் கண் பசும் கதிர் மேனி வயங்கு எழில் உமைக்கு அ அரும் கதி சொற்றதும் - அஞ்சனத்தைக் கவர்கின்ற விழிகளும் பசுமையுள்ள ஒளிபொருந்திய தேகமும் பிரகாசிக்கின்ற அழகுள்ள உமாதேவியாருக்கு அந்த அரிதாகிய(மோக்ஷத்திற்குரிய)பிரணவத்தைப் புகன்றதும், அன்பர் மனத்ததும் - அடியார்கள் ஹிருதயத்திற் குடிகொண்டிருப்பதும், நம்மை கதி விட்டு உய்ய மனம் மகிழ்ந்து அமைக்க இன்று வல்லே வரும் - நம்மைப் பிறப்பைநீக்கித் திருவடியில் மனமகிழ்ந்து சேர்க்க இப்பொழுதே சீக்கிரமாக எழுந்தருளி வருகின்றதுமான (பொருள் யாதெனில்,) கவரும் கமுகும் பொலி கூடல் வளர்வது - வாழையும் கமுகு மிகுதியாய் வளரப்பெற்ற மதுரையிலுள்ள பரமசிவமே. (எ-று.) மனம், தோன்று எழுவாய். (அக)

மகவா னவமுடி வீழ்த்திடக் கூடலே வாள்வளேதன்
மகவா னவுக்கிர மாறனுக் கன்று வழங்கியநே
மகவா னரம்பையை யேய்க்குமென் றுயுண் மகிழ்ந்திடுவா
மகவா னகந்தை யழித்தாயுன் றுணிழல் வாழ்விப்பையே.

(இ-ள்.) மகவான் நவம் முடி வீழ்த்திட தன் மகவு ஆன உக்கிரமாறனுக்கு அன்று வாள் வளே வழங்கிய நேம - இந்திரனுடைய புதுமையாகியகிரீடம் வீழ்ந்திடும்படி தன்குமாரனுன உக்கிரபாண்டியனுக்கு முன்னம் ஒளிபொருந்திய சக்கரத்தைக் கொடுத்த மேலானவரும், அரம்பையை ஏய்க்கும் கவான் என்தாய் உள் மகிழ்ந்திடு வாம - வாழையையொத்த தொடையுள்ள அடியேன் மாதாவாகிய உமாதேவியின் உள்ளமகிழும்படியாக இடப்பாகத்தைக் கொடுத்தவரும், கவ்வு ஆன் அகந்தை அழித்தான் - (புற்களை வாயினுற்) கௌவுகின்ற மாயைப்பசுவின் செருக்கைக் கெடுத்துக் கொன்றவரும், கூடல் ஐ - மதுரைப் பதியிற் றங்கியவருமான சிவபெருமானே!, உன் தாள் நிழல் வாழ்விப்பை - உம்முடைய பாதாரவிந்த நீழலிலே யடியேனை வாழ்விக்க வேண்டும். (எ-று.)

பையர வம்புனே தாதகி கூவிளம் பான்மதிதும்
பையர வம்புனே சானவி வேணியர் பார்ப்பதிகண்
பையர வம்புனே கொங்கைதென் கூடற் பரனமக்க
பையர வம்புனே செய்கையை நீக்குவர் பார்மனமே.

(இ - ள்.) பை அரவம் புனே தாதகி கூவிளம் பால் மதி தும்பை அரவம் சானவி புனே வேணியர் - படமுள்ள பாம்பு புன்னைமலர் ஆத்தி வில்வம்

வெள்ளியசந்திரன் தும்பைமலர் ஆரபாரத்தையுடைய கங்கை இவ்வனைத்தை யுந் தரிக்கப்பட்ட சடாமகுடத்தை யுடையவரும், அ வம்பு நை கொங்கை பார்ப்பதி கண் பையர் - அந்தக்கச்சுகளை வருத்துகின்ற முலைகளையுடைய உமா தேவியார் கண்ணுக்குத் தேசுடையவரும், தென் கூடல் பரன் - அழகியமது ரைப்பதிக் கிறைவரும், நமக்கு அபயர் - நமக்குக் கிருபையைப் பாலிப்பவரு மாகிய சிவபெருமான், புனை அவம் செய்கையை நீக்குவர்-பொலிவாயுள்ள வீண் செயலை நீத்து இரக்ஷிப்பார், பார் மனமே - பார்ப்பாயாக நெஞ்சமே. (எ-று.)

[தலைவன் பாங்கனோடு தலைவியைப் புகழ்தல்.]

பாரம் பரம னிலந்தழ னீர்மதி பானுவுடு
பாரம் பரம னுருவான்றென் கூடற் பதியளக
பாரம் பரம விருளிணை கும்பம் பயோதரங்கண்
பாரம் பரமதி யாமுக மென்னுயிர் பந்தவட்கே.

(இ-ள்.) பார் அம்பரம் அனிலம் தழல் நீர் மதி பானு உடு பாரம்பரம் மன் உருவான் தென் கூடல் பதி - பூமி ஆகாயம் காற்று அக்கினி ஜலம் சந்திரன் சூரியன் நக்ஷத்திரங்கள் (இவைகளை முறைமையாக) நிலைபெற்ற தமது வடிவா கக்கொண்ட சிவபெருமானுடைய அழகிய மதுரைப்பதியின்கண்ணே, என் உயிர் அவட்கு - என்னுயிர்போன்ற அம்மாதுக்கு, பரம இருள் அளகபாரம் - மேன்மையாகிய இருளே கூந்தலின் பந்தியாகும், இணை கும்பம் பயோதரம் - இரண்டு கும்பங்களே முலைகளாகும், அம்பரம் கண் - கடலே விழிகளாகும், மதி முகம் ஆம் - சந்திரனே வதனமாகும் - பந்து - சினேகிதா, பார் - நோக் குவாயாக. (எ - று.) (அச)

[தலைவி தலைவனுக்கிரங்கினமைகண்ட பாங்கியுண்மகிழ்தல்.]

பந்தந் தவளத் தனத்தங் கயற்கட் பதிநிதிமா
பந்தந் தவளத் தடுத்தாட்கொள் கூடற் பரன்வரையின்
பந்தந் தவள விடையர வல்குற் பணைமுலைகோ
பந்தந் தவள வளவா யமுதம் படைத்தனளே.

(இ-ள்.) பந்து அந்தம் வளம் தனத்து அம் கயல் கண் பதி - பந்தினுடைய முடிவாகிய வளம்போலும் ஸ்தனங்களையும் அழகியமீன்போலும் விழிகளையு முடைய உமாதேவியின் நாயகரும், நிதி - நம்முடைய பொக்கிஷமானவரும், தவளம் மா பந்தம் தடுத்து ஆட்கொள் கூடல் பரன் வரை - சங்கபாஷாணம் போன்ற பெரியவில்லங்கைத் தடுத்தாட்கொண்ட மதுரையிலிருப்பவருமாகிய சிவபெருமான் மலையினிடத்தே, இன்பம் தந்து அவளவு இடை அரவு அல்குல் பணை முலை - இன்பமுள்ள நூலளவான மருங்குலும் பாம்பின் படம்போலு நிதம்பமும் இறுமாந்த முலைகளும் வாய்ந்த இந்தமாதானவள், கோபம் தந்த வள் அ வள்ள வாய் அமுதம் படைத்தனள் - தன் நாயகன்பேரில் மனஸ்தாப மாயிருந்தவள் (ஊடனீங்கி) அந்த வள்ளம்போன்ற திருவாயமுதத்தைக் கொ டுத்தனள். (எ-று.) (அரு)

அனத்தனத் தாவென் றனமாகித் தேட வகன்றசென்னி
யனத்தனத் தான்மக னைப்பொடித் தான்மது ரைக்கரசாம்
அனத்தனத் தார்குழல் கண்டத் துமைக்கிறை யாய்ந்தவருக்
கனத்தனத் தாதகற் றுஞ்சுந்த ரேசனடைக்கலமே.

(இ-ள்.) அனத்தன் அனமாகி அத்தா என்று தேட அகன்ற சென்னியன் - பிரமாவானவன் அன்னருபமாகி பிதாவேயென்று பறந்து தேடியும் எட்டாது நீண்ட முடியையுடையவரும், அத்தன் - அரனும், நத்தான் மகனை பொடித்தான் - விஷ்ணுவின் புத்திரனான மன்மதனை எரித்தவரும், அல் நத்து அன்ன தார் குழல் கண்டம் உமைக்கு இறை - இருளுக்கும் சங்குக்கும்நிகர்த்த மாலை சூடியகூந்தலையுங் கண்டத்தையு முடைய உமாதேவியின் நாயகரும், ஆய்ந்தவருக்கு அனத்தம் நத்தாது அகற்றும் மதுரைக்கு அரசு ஆம் சுந்தரேசன் அடைக்கலம் - அறிவுடையோருக்கு நாசமுறாது நீக்கியருள்பவருமான மதுரைக்கரசாகிய சோமசுந்தரக்கடவுளே நமக்குப்புகலிடம். (எ-று.) (அசு)

கலங்கலங் காரத் தளிமேவுங் கூடற் கறைமிடற்றோன்
கலங்கலங் காதர னைப்பதித் தாண்ட கடவுளிசை
கலங்கலங் காதற் பிணிக்குடைந் தேங்கதி காட்டுமருட்
கலங்கலங் காதிவர்ந் துய்வாயை வாயிற் கவலுநெஞ்சே.

(இ - ள்.) கல் அங்கு அலங்காரம் தளி மேவும் கூடல் கறை மிடற்றோன் - இரத்தினங்களால் அவ்விடத்தே அலங்கரிக்கப்பட்ட ஆலயம் விளங்குகின்ற மதுரையிலெழுந்தருளிய காளகண்டரும், கல் அங்க லங்காதரனை பதித்து ஆண்ட கடவுள் - மலைபோலுஞ் சரீரமுள்ள இராவணனைப் பெருவிரலாலமிழ்த்தி யப்பா லாதரித்தவருமாகிய சிவபெருமானுடைய, இசை கலம் கலம் காதல் பிணிக்கு உடைந்தேம்-வாக்கியமாகிய (சுருதியை) கற்றேமில்லை கற்றேமில்லை ! விரகமாகிய நோய்க்குத் தளர்ந்தோம், ஐ வாயில் கவலும் நெஞ்சே கலங்காது கதி காட்டும் அருள் கலம் இவர்ந்து உய்வாய் - ஐம்பொறிவழியாக வருந்துகின்ற நெஞ்சமே!, (நீ) அஞ்சாமல் மோக்ஷவீடு காட்டுஞ் (சிவபெருமான் கொடுக்கும்) கருணையாகிய கப்பலிலேறிப் பிழைப்பாயாக. (எ-று.) இசை - புகழெனினு மொக்கும். (அஎ)

கவரா மலகங் கமுகார் மதுரையிற் கத்தநிற்பார்க்
கவரா மலகங் கழியாதென் றோர்ந்து கமலன்விண்ணோர்
கவரா மலகங் கரியவன் போற்றுவ கன்மனநீ
கவரா மலகங் கவின்பெறு மோவெனைக் காத்தருளே.

(இ - ள்.) கவர் ஆமலகம் கமுகு ஆர் மதுரையில் கத்த - வாழை நெல்லி கமுகு முதலியவிருக்ஷங்கள்பொருந்துகின்ற மதுரையிலெழுந்தருளி யிருக்கும் பரமசிவமே, நின் பார்க்க வராமல் அகம் கழியாது என்று ஓர்ந்து - உம்மைத் தெரிசிக்கவராமல் பாவநீங்காதென்று நினைத்து, விண்ணோர் கமலன் கவ்வு அரா

மல் அகம் சரியவன் போற்றுவ - தேவர்களும் பிரமாவும் கௌவுகின்ற பாம்பின்மீது நடனமும் அறிதுயிலுஞ்செய்த விஷ்ணுவும் வணங்குகின்றவரோ, கல் மனம் நீ கவராமல் அகம் கவின் பெறுமோ என்னை காத்து அருள்-(என்னுடைய) கன்னெஞ்சை நீர் கொள்ளையிடாதிருப்பீராஜல் (அம்மனம்) தக்கபண்படையுமோ?(ஆதலின்) அடியேனைக் காப்பாற்றி யருள்செய்யவேண்டும்.(எ-று.) (அஅ)

காத்திர வேயம் பரித்தானஞ் சுந்தரர் கண்ணுமெண்ணங்
காத்திர வேயம் பரவையைக் கூட்டுங் கடம்பவனன்
காத்திர வேயம் பரன்றுளை யன்றிக் கயவர்தமைக்
காத்திர வேயம் படியிலிச் சாதனங் கைவந்ததே.

(இ - ள்.) காத்திரவேயம் பரித்தான் - பாம்பை (ஆபரணமாகச்) சுமந்தவரும், நம் சுந்தரர் கண்ணும் எண்ணம் காத்து இரவே அம் பரவையை கூட்டும் கடம்பவனன் - நம்முடைய சுந்தரமூர்த்திநாயனர் கருதிய குறிப்பை எதிர்பார்த்து இராத்திரியே அழகிய பரவையைச் சேர்த்து வைத்த மதுரைப் பெருமானுமாகிய, காத்திரம் வேய் அம்பரன் தாளை அன்றி - பலமுள்ள மூங்கிலினிடத்தமைந்த அழகிய சிவபெருமான் திருவடிகளையல்லாது, கயவர் தம்மை காத்து இரவு ஏயம் - அற்பர்களை (யடைந்து பணிவிடைசெய்து) காத்திருந்து யாசிக்கோம், படியில் இ சாதனம் கை வந்தது - பூமியினிடத்தே இந்தப்பழக்கம் நிச்சயமாகக் கைகூடிவந்தன. (எ-று.) (அகூ)

[நற்றுயிரங்கல்.]

ததிக்கா வடியுண் டவன்றேடுங் கூடற் றலத்தவகத்
ததிக்கா வடிமுடி யில்லாயென் மாது தயங்குமிந்தத்
ததிக்கா வடிசி லருந்தாணின் மாலைதந் தாளவருந்
ததிக்கா வடிரு வனையாள் குலத்தின் றரமுகந்தே.

(இ - ள்.) ததிக்கா அடி உண்டவன் தேடும் கூடல் தலத்தவ - தயிருக்காக (அசோதைகையா) லடிபட்ட விஷ்ணு திருவுகின்ற மதுராஸ்தலத்தையுடையவரோ, கத்த - கடவுளே, திக்கா - எல்லாத்திசையு மானவரோ, அடி முடி இல்லாய் - ஆதியந்தமற்றவரோ, என் மாது அ அருந்ததிக்கு ஆவள் திரு அனையாள்- என்புதல்வி அந்த அருந்ததிக்கொப்பான கற்பும் இலக்குமிக்கொப்பான அழகையு முடையாள், தயங்கும் - (விரகதாபத்தால்) மயங்குகிறுள், அடிசில் அருந்தாள் - உணவும்புசியாள், குலத்தின் தரம் உகந்து இந்த ததிக்கா நின் மாலை தந்து ஆள் - ஆதலின் அவள் குலத்தின்றன்மைக்குத் திருத்தியடைந்து இந்தப் பருவத்துக்காவது உம்முடைய மாலையைக் கொடுத்தருள்வீராக. (எ-று.) (கூo)

கந்தரத் தானங்கந் தீய்த்தான் வரதன் கடுவேமருங்
கந்தரத் தானங்கம் பூண்டா னடியிணை காண்டிடம
கந்தரத் தானங்கள் செய்வோர்க் கருகன் கயற்கணிபா
கந்தரத் தானங்கங் கூடலூற் றானங் கருத்துளனே.

(இ - ள்.) கந்தர் அத்தான் அங்கம் தீய்த்தான் - முருகப்பெருமான் மைத்துனனான மன்மதன் சரீரத்தை எரித்தவரும், வரதன் - வரமருளத்தக்கவரும், கடு அமரும் கந்தரத்தான் - விஷந்தங்கிய கண்டத்தை யுடையவரும், அங்கம் பூண்டான் - எலும்புகளை ஆபரணமாக அணிந்தவரும், இணை அடி காண்டிட மகம் தரம் தானங்கள் செய்வோர்க்கு அருகன் - உபய பாதாரவிந்தங்களைத் தெரிசிக்க யாகங்களும் மேன்மையுள்ள தருமங்களும் புரிகின்ற மகத்துக்கள் பக்கத்திலுள்ளவரும், கயல் கண்ணி பாகம் தர - மீன்போன்ற விழிகளையுடைய உமாதேவி பாகத்தைக் கொடுக்க, தான் அங்கு அம் கூடல் உற்றான் நம் கருத்து உளன் - தானாகவே அவ்விடத்தே அழகிய மதுரையிலிருப்பவருமாகிய சிவபெருமான், (யாரோ அவர்) நம்முடைய சிந்தையிலிருப்பவர். (எ-று.) (கக)

கருத்தரிக் காதெனை யானந்த ஞானக் கதிபுகுத்துங்
கருத்தரிக் காமொழி வேல்விழி மீனவன் கன்னிதன்பா
கருத்தரிக் காதெடுத் தாள்வார் மதுரையிற் கண்ணுதறன்
கருத்தரிக் காயினு மெட்டாரை யென்றுங் கருதுமினே.

(இ - ள்.) எனை கரு தரிக்காது ஆனந்த ஞானம் கதி புகுத்தும் கருத்தர் - அடியேனை (ஒருதாயின்வயிற்றின்) கருப்பத்திலுண்டாகாவண்ணம் பேரின்பமாகிய ஞான ஐசுவரியத்தி லடையச்செய்யுங் கருத்தாவும், இக்கு ஆம் மொழி வேல் விழி மீனவன் கன்னி தன் பாகர் - கரும்பு போலுஞ் சொல்லையும் வேல்போலுங் கண்களையுமுடைய மலையத்துவச பாண்டியன் புதல்வியின் பாகத்திலுள்ளவரும், உத்தரிக்காது எடுத்து ஆள்வார் - (வருத்தமின்றி என்னை) தருக்கிக்காது எடுத்தாட்கொள்வாரும், மதுரையில் கண்ணுதல் - மதுரையிலிருக்கும் நெற்றிக்கண்ணை யுடையவரும், தன் கருத்து அரிக்கு ஆயினும் எட்டாரை என்றும் கருதுமின் - தம்முடையநோக்கம் விஷ்ணுவுக்கும் புலப்படாதவருமாகிய சிவபெருமானை எப்பொழுதும் நினையுங்கள். (எ - று.)

உலகீர், தோன்றாவெழுவாய். (கஉ)

கரிக்கண்டத் துன்பைத் தவிர்த்தா னமுதங் கடையவந்த
கரிக்கண்ட ரஞ்சுமக் காலத்தி லேயுண்டு காத்ததற்குக்
கரிக்கண்ட ரேழு கடலழைத் தாரங் கடம்பவனே
கரிக்கண்டங் கெந்தை யடிசேரு வார்க்கில்லை கன்மங்களே.

(இ - ள்.) கரிக்கு அண்டு அ துன்பை தவிர்த்தான் - வெள்ளையானைக்கு நேர்ந்த அந்தத் துன்பத்தை நீக்கினவரும், அமுதம் கடைய வந்த கரிக்கு அண்டர் அஞ்சும் அக்காலத்தில் உண்டு காத்து அதற்கு கரி கண்டர் - அமுதங்கடையும்போதுண்டான விஷத்துக்குத் தேவர்கள் பயங்கொண்ட அந்தக் காலத்தில் அஃதைப்புசித்துக் காப்பாற்றி அதற்கு (இக்காலத்திற் சாட்சியாகக் காட்டும்) நீலகண்டத்தையுடையவரும், ஏழு கடல் அழைத்தார் - (காஞ்சனமாலையென்னு மாமிக்காக) ஏழுகடலையுமழைத்தவரும், அம் கடம்பவன ஏகர் - அழ

கிய மதுரையிலுள்ள கடவுளும், இ கண் தங்கு எந்தை - இப்படிப்பட்ட பெருமையையுடைய என் பிதாவானவருமான சிவபெருமானுடைய, அடி சேருவார்க்கு கன்மங்கள் இல்லை - திருவடிகளையடைவாருக்கு இருவினைத் துன்பங்கள் கிடையாது. (எ - று.) (கூஙு)

மங்காத வாழ்வடி யார்க்களித் தாயென வாழ்த்தவுன்வா
மங்காத வாவுடன் கொள்ளாதென் கூற்றுவன் வைத்திடுவர்
மங்காத வாவிக்க லென்களத் தேய வருமுனென்சே
மங்காத வாத வெழின்மது ராபுரி வாழையனே.

(இ - ள்.) தவாத எழில் மதுராபுரி வாழ் ஐயனே - கெடாத அழகு பொருந்திய மதுரையிலெழுந்தருளிய சிவபெருமானே, அடியார்க்கு மங்காத வாழ்வு அளித்தாய் என - சிவனடியார்களுக்குக் குறையாத மோக்ஷவாழ்வைக் கொடுத்தவரோயென்று, வாழ்த்த உன் வாமம் காது அவா உடன் கொள்ளாது என் - (அடியேன்) வாழ்த்துதல் உம்முடைய (தோட்டின்) ஒளிபொருந்திய திருச்செவியில் ஆசையுடனேற்காததென்னை?, விக்கல் என் களத்து ஏய வரும் முன் கூற்றுவன் வைத்திடும் வர்மம் காத வா என் சேமம் கா - விக்கலானது என்கண்டத்திற் பொருந்த வருமுன்னரே இயமனுனவன் - (என்பேரிற்) கொண்டிருக்கும் தீமையைத் தவிர்க்கப் பிரசன்னராகி அடியேனை இன்பத்தில் வைத்துக் காப்பாற்ற வேண்டுகிறேன். எ - று. (கூச)

ஐயம் புகமனங் கொண்டார் கயற்கணி யன்பர்முன்னாள்
ஐயம் புகமத னைப்பொடித் தார்மது ரைத்தலம்வாழ்
ஐயம் புகவின் கொளத்தரித் தார்க்கன்பி லாதவர்கள்
ஐயம் புகரைத் தவிர்க்குமெய்ஞ் ஞான மடைந்திடலே.

(இ - ள்.) ஐயம் புக மனம் கொண்டார் - பலி ஏற்க மனங்கொண்டவரும், கயல் கண்ணி அன்பர் - மீனாட்சி தேவியார் நாயகரும், மதனை முன்னாள் ஐ அம்பு உக பொடித்தார் - மன்மதனை முன்காலத்தில் ஐந்து பாணங்களும் கெடும்படி யெரித்தவரும், மதுரை தலம் வாழ் ஐ - மதுரைஸ்தலத்தில் வாழ்கின்ற கடவுளும், அம்பு கவின் கொள தரித்தார்க்கு - கங்கை மேன்மை யடையும்படி முடியிலே வைத்தவருமாகிய சிவபெருமானுக்கு, அன்பு இல்லாதவர்கள் புகரை தவிர்க்கும் மெய் ஞானம் அடைந்திடல் ஐயம் - நேசமில்லாதவர்கள் குற்றங்களை நீக்குகின்ற உண்மை ஞானத்தைப் பெறுதல் சந்தேகம். (எ-று.)

இடம்புரி யத்தனம் பாகப்பு ரம்பொடி யீசனுமை
இடம்புரி யத்தனம் பாகந்தந் தானடி யேத்துதிம
யிடம்புரி யத்தனம் பாலிக்குப் பாயு மெழின்மதுரை
இடம்புரி யத்தனம் பான்மன் றிரசிதத் திற்புகுந்தே.

(இ - ள்.) மயிடம் தனம் பால் புரி அ இக்கு பாயும் எழில் மதுரை இடம் புரியம் தனம் பால் இரசித மன்றில் புகுந்து - எருமைகளின் மடியிலுள்ள பாலானது ஆறுபோல் (வியப்புறப்பெருகி) அந்த கரும்புக்குப்பாய்கின்ற அழகுபொருந்திய மதுரையினிடத்தே திருநடனஞ் செய்கின்ற இரத்தினமழுத்திய (இயல்பையுற்ற) உரிமையுள்ள வெள்ளியம்பலத்தை யடைந்து, இடம்புரி அத்தன் அம்பாக புரம் பொடி ஈசன் - சங்கைக்கையிலேயமைத்த விஷ்ணுவை அஸ்திரமாகக்கொண்டு முப்புரத்தைத் தீய்த்த ஈஸ்வரரும், உமை இடம் புரிய அம் தன் பாகம் தந்தான் - உமாதேவியார் வாமபாகத்தை விரும்ப அழகிய தன் பாகத்தைக் கொடுத்தவருமாகிய சிவபெருமானுடைய, அடி ஏத்துதி - திருவடிகளை வணங்குவாயாக. (எ-று.) மனம் - தோன்றா எழுவாய். (கூசு)

குந்தந்தந் தாமிடை வள்ளிபங் கற்குக் கொடுத்தவவை
குந்தந்தந் தாவளங் காத்தாற் களித்தவ கோதறுகோங்
குந்தந்தந் தாங்கு முலையுமைக் கன்பநற் கூடலுள்ளார்க்
குந்தந்தந் தாவந்தந் தீர்ப்பாயென் வந்தனங் கொண்டருளே.

(இ - ள்.) தந்து ஆம் இடை வள்ளி பங்கற்கு குந்தம் கொடுத்தவ - நூல் போலும் இடையுள்ள வள்ளியம்மை நாயகராகிய சுப்பிரமணியக்கடவுளுக்கு வேலாயுதத்தைக் கொடுத்தவரோ, தந்தாவளம் காத்தாற்கு வைகுந்தம் அளித்தவ - யானையைக் காத்த விஷ்ணுவுக்கு வைகுண்டத்தைக் கொடுத்தவரோ, கோது அறு கோங்கு உந்து அந்தம் தாங்கும் முலை உமைக்கு அன்ப - குற்றமற்ற வாசனையேற்றி அழகைத்தாங்கும் ஸ்தனபாரங்களையுடைய உமாதேவியாருக்கு நாயகரோ, கூடல் உள்ளார்க்கும் தம் தம் தாவந்தம் தீர்ப்பாய் - மதுரையில் குடியிருப்பவர்களுக்கும் (இல்லாதவர்களுக்கும்) அவரவர்கள் இக்கட்டுகளை நீக்குகின்றவரோ, என் வந்தனம் கொண்டு அருள் - அடியேன் நமஸ்காரத்தை ஏற்றுக் கிருபைசெய்வீர். (எ-று.) உம்மை, எதிர்மறை. (கூஎ)

அருமாதங் கத்து நடையா ளிடந்தழு வையனைத்து
யருமாதங் கத்துள வம்புனை மாயனு மாரணத்தை
யருமாதங் கத்து கினுந்தோற்றி லானை யணக்கலியு
யருமாதங் கத்துங்கச் சூதாவியங் கூடலா னந்தனே.

(இ - ள்.) அரு மாதங்கத்து நடையாள் இடம் தழுவு ஐயனை - அரிதாகிய பிடியானைபோன்ற நடையையுடைய உமாதேவியாரை இடப்பாகத்தில்வைத்த உயர்ந்தவரும், தூயரும் மா தங்கு அ துளவம் புனை மாயனும் ஆரணத்து ஐயரும் மாதம் கத்துகினும் தோற்றிலானை - பரிசுத்தமுள்ள முனிவர்களும் இலக்குமி வசிக்கும் அந்தத் துளசிமாலையைத்தரித்த மஹாவிஷ்ணுவும் வேதங்களுக்குடையபிரமாவும் மாதங்கடோறுமலறினும் தருவப்படாதவரும், துங்கம் தங்கம் சூது ஆவி அம் கூடல் ஆனந்தன் - மேலான பொற்றாமரைவாவிசூழ்ந்த அழகிய மதுரையில் என்றும் பேரானந்த சொரூபியுமான சோமசுந்தரக்கடவுளை, அண கலி உயருமா - நெருங்கிவாழ்த்த வறுமையென்னும் பிறவியானது மிகுமா?, (மிகாது.) (எ - று.) (கூஅ)

நந்தனந் தங்குறி கண்டாண் டவனை நமனடுங்கி
நந்தனந் தங்குறை தீர்த்தானை நாதனை நாரணன்கை
நந்தனந் தங்குமு றுஞ்செயங் கூடலி னம்பனைத்த
னந்தனந் தங்குதி கொண்டானை நாடுதி நன்மனமே.

(இ - ள்.) நந்தன் அந்தம் குறி கண்டு ஆண்டவனை - திருநாளைப்போவாருடைய முடிவான எண்ணத்தைப் பார்த்து அடிமை கொண்டருளியவரும், நமன் நடுங்கி நந்த நம் தம் குறை தீர்த்தானை - எமன் (தேகம்) நடுங்கி குறைவுபடும்படியாக நம்முடைய குற்றங்களை நீக்கினவரும், நாதனை - எப்பொருட்குமிறைவரும், நாரணன் கை நந்து அனந்தம் குமுறும் செய் அம் கூடலில் நம்பனை - விஷ்ணுவின் கையிலிருக்கும் பாஞ்சசன்னியம்போலும் அனேகஞ் சங்குகள் ஒலிக்கும் வயல்கள் சூழ்ந்த அழகிய மதுரையி லெழுந்தருளிய கடவுளும், தனம் தனம் தம் குதி கொண்டானை - தனந் தனந்தம் என்று (பிராட்டியாரோடு) நிர்த்தனஞ் செய்தருளியவருமான சிவபெருமானை, நன் மனமே நாள் துதி - என்னுடைய நல்லமனமே நாடோறுந் தோத்திரம்பண்ணக் கடவாய். (எ-று.)

நாடுதியெனற்பாலது, விரும்புவாயாக வெனினுமொக்கும்.

அந்தக்குறி எதுகைநோக்கி அந்தங்குறியென மெலிந்தது. (௯௯)

மனத்திருக் காலவ திப்படு வீர்நன் மதியுடன்க
மனத்திருக் காதி முதல்வனைக் கூடலில் வாழ்வனைவா
மனத்திருக் கார்வண்ண னுதனை வாழ்த்தி மகிழ்வுடனே
மனத்திருக் காதவர்ச் சேராரைச் சேரு மலர்த்திருவே.

(இ - ள்.) மனம் திருக்கால் அவதி படுவீர் - மனக்குற்றங்களால் வருந்துகின்ற சீவர்களே, நன் மதி உடன் கமனத்து - நற்புத்தியுடனே கதியை நினைத்து, இருக்கு ஆதி முதல்வனை - இருச்குமுதலிய வேதங்களுக்குத் தலைவரும், கூடலில் வாழ்வனை - மதுரைஸ்தலத்தி லெழுந்தருளியவரும், வாமனம் திரு கார் வண்ணன் நாதனை - மாபலியினிடத்திற் குறுகிய ரூபமெடுத்துவந்த அழகிய புயனிறமுள்ள விஷ்ணுவுக்குக் கடவுளுமான சிவபெருமானை, வாழ்த்தி - அன்புடனே ஸ்தோத்திரஞ்செய்து, மகிழ் உடன் நேமனத்து இருக்காதவர் சேரார மலர் திரு சேரும் - பேரானந்தத்துடனும் நியதியுடனு மிருக்காத பாவிகளுடன் கூடாத புண்ணியர்களைத் தாமரைமலரின் மேலிருக்கும் இலக்குமியடைவாள். (எ - று.) (௧௦௦)

மதுரை யமகவந்தாதி யுரை

முற்றிற்று.

கடவுள்துணை.

## மூன்றுவது.

# திருவுத்தரகோசமங்கை

## மங்களேஸ்வரர் பதிகம்.

---

### கடவுள்வாழ்த்து.

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

கங்கைதும்பை கொன்றைமதி யறுகுபுனை
செஞ்சடிலக் கடவு ளூத
னங்கையுறு மாங்கனியைக் கணப்போதில்
வலமாயங் கவனைச் சூழ்ந்து
செங்கதிர்வேற் குகனணையு முன்னேற்ற
பெருங்கருணைத் தேவை மெய்ம்மைத்
துங்கமுளோர்க் கருள்விளக்குஞ் சுகத்தானை
முகத்தானைத் தொழுது வாழ்வாம்.

---

*எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

பூவள ரயனும் புயனிறத் தரியும்
பொன்னகர்க் கிறைவனும் பொதிகைப்
பாவளர் முனியும் பரிதியு மதியும்
பரிமயின் முருகனும் பரூஉக்கைக்
கோவரி முகனுந் தேவர்தங் குழுவுங்
குவிந்திட வந்தெனைப் புரப்பாய்
மாவளர் பொழில்சூ ழுத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (க)

ஏனமா யனமா யுதித்தவர்க் கரிய
விறைவனே யடியவ ரிதயந்
தானமா யமர்ந்த சயம்புவே யெனக்குன்
றாளிணை கொடுத்தரு டருவாய்
மோனமாய்ப் புவியாய்ப் புனலதாய்க் கனலாய்
மொழிவதற் கரியதாம் வளியாய்
வானமாய் நிறைந்தா யுத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (உ)

கருத்தனே யுனது கழலிணை கருதாக்
கயவரோ யாயினும் பொதுவி
னிருத்தனே யவர்த மூழ்வலி யதனு
னீங்குதற் கரியசீ ரடைய
வொருத்தனு யினுங்கீ ழாகவே பிறந்திவ்
வுலகினுட் டயங்கிடச் செய்து
வருத்துநீர் மையுமென் னுத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (ங)

காசிலா தவருங் கலையிலா தவருங்
கருணையங் கடற்புகா தவருந்
தேசிலா தவர்மற் றியாவரா யினுமுன்
திருவருட் பெறிலவர் செயலைப்
பேசிலார் நிகரப் பெருங்கடன் மூழ்காப்
பீழையேன் பிணக்கறுத் தாள்வாய்
மாசிலா மணியே யுத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (ச)

நுதிவள ரயில்போல் விழியினர் மயலி
னுடங்கியே நுவலுதற் கரிய
நிதிவளர் தனத னயனமா யிரத்தோ
னிகரென வாழ்கினு நேயர்
கதிவள ருனது மலரடி நினையாக்
கடையர்பாற் சேர்த்திடா தெனையாண்
மதிவளர் சடையா யுத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (ரு)

என்னுயிர்க் குயிரோ யென்னுடைத் தவமே
யென்னிரு கண்ணினு ளொளியே
பொன்னுயிர்த் துணைவன் புகலரும் பொருளே
புனிதர்கள் புகழ்ந்திடும் புகழே
மின்னிடைக் கௌரி விரும்புமா ரமுதே
வெவ்வினை தீர்த்தருள் விளைப்பாய்
மன்னுநற் றவர்கு ழுத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (சா)

அங்கையா மலக மெனவுன தடியா
ரவையிடை யடைந்தறி வறியேன்

சங்கையாய் மனது தளர்வுற வுலகிற்
றயங்கினே னையகோ வினியுன்
பங்கையா ளுடையா ளுடனகம் பதியாப்
பாவியேற் கருள்வையோ பதும
மங்கையான் பரவு முத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (எ)

அடுத்துண வவாவி யடையுமோர் மிடிய
னங்கைவாய் வைத்திடு மமுதைத்
தடுத்திடர் புகுத்துங் கொடியர்போ லுனது
தாட்டுணை புகுதுமென் னறிவைக்
கெடுத்தடர் மனத்தை யகற்றியே நின்ருள்
கிடைத்திட வருள்செய்வா யளிதேன்
மடுத்திடு பொதும்ப ருத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (அ)

தருவுடை யரசு மாலுநான் முகனுந்
தருமனும் பொன்றுதல் சரத
மொருவனீ யல தென்ற ருமறை முழங்கு
மொப்பிலா யொப்பிலாள் பாகா
விருவினை கடத்துங் கலனுநின் னருளே
யேதுமற் றேதுதந் தெனையாண்
மருவுநன் முதியோ ருத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (கூ)

எண்ணமே யின்றி யொருகண மேனு
மிமைப்பிலா திருந்துனை நினைக்குந்
திண்ணமே யடையாச் சிற்றறி வுடையேன்
றீவினை யகற்றியுன் றிருத்தா
ணண்ணவே யருள்வா யுலகெலாம் படைத்த
நான்முகன் பூசனை புரிந்த
வண்ணமே திகழு முத்தர கோச
மங்கைவாழ் மங்களேச் சுரனே. (க0)

மங்களேஸ்வரர் பதிகம்

முற்றிற்று.

---

கடவுள் துணை.

# மங்களேஸ்வரி பதிகம்.

## கடவுள்வாழ்த்து.

நேரிசை வெண்பா.

ஓம்பிரண வப்பொருளா மும்பன்முகக் கற்பகத்தை
யோம்பிரண வேன்முருக னுக்குதவி—யாம்படியே
நண்பதிகஞ் சேர்கருணை நாட்டுமெங்க ளேஸ்வரிமேல்
வண்பதிகஞ் சொல்லிமகிழ் வாம்.

---

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருமக ளொருபாற் கலைமக ளொருபாற்
சீதர னயனரி யொருபா
லருமறை யொருபா லரம்பைய ரொருபா
லடியவர் கூட்டம தொருபாற்
குருபர னொருபாற் கரிமுக னொருபாற்
குலவவந் தென்னையாண் டருள்வாய்
மருமலர்ச் சடையா னுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (௧)

பண்டுநான் புரிந்த தவத்ததோ சென்மப்
பழவினைப் பயனதோ பனாநின்
றெண்டனாக் கருதி வாழ்த்தவு முன்னைத்
துதிக்கவும் பெற்றனன் றென்று
ளண்டனாக் காக்க நஞ்சமு தாய்க்கொள்
ளரன்புக ழன்னமே யருள்வாய்
வண்டமர் குழலா யுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (௨)

நிரந்தரம் வயிறு நிரப்புதல் காம
நித்திரா கொலைகள வாதி
தரந்தர மாகப் புரிவதல் லாலுன்
றுளிணை சார்ந்திலே னென்றுய்

புரந்தர னயன்மான் முதற்றெழில் காட்டும்
புண்டரீ கச்சரண் போற்ற
வரந்தரல் வேண்டு முத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (ஈ)

நன்னய மில்லேன் பொறையிலே னுன்று
ணுடிலேன் வீணினுட் கழிப்பா
னென்னையே யொருதாய் வயிற்றினிற் படைத்தா
யீறிலா முதல்வியே யுலகுக்
கன்னையே யரசே யருட்பெருங் கடலே
யாதரித் திடுவதுன் பரமே
வன்னமே கலையா யுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (ச)

கிஞ்சுக வாய்சேல் விழியன நடையாய்
கிளரமு தனையசொ லன்னையே
தஞ்சம்வே றுளதோ சேய்புரி குற்றந்
தாயலா லியாவரோ சகிப்பார்
நஞ்சென வியம னணுகினு முனது
நாமமே நவின்றிட வருள்வாய்
மஞ்சுவா ழெயில்சூ ழுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (ரு)

பாவியேன் சென்ன மெடுத்தது முதலாய்ப்
படுந்துய ரனைத்தையு முரத்திக்
கூவியே திரிந்தே னேனெனக் கேட்பார்
குவலயத் தொருவனைக் காணேன்
ஆவியே யமுதே யருந்தவக் கொழுந்தே
யன்னையே நின்னடி யருள்வாய்
வாவியேய் பணைசூ ழுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (சு)

இந்திரன் முதலோ ரொண்மருந் தவரு
மெண்ணிலாக் கடவுள ரெவரு
முந்தடி பரவு முதல்விநீ யென்ன
முறையிடுஞ் சுருதியிம் முறைமை

மந்தனு னுணரேன் மாயையி னகட்டின்
மறைந்தெழா தமிழ்ந்தினேன் விடைமேல்
வந்தெனை யெடுத்தா ளுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (எ)

நல்வழி யறியேன் றீவினை யறியே
னுனென்ப துணர்ந்திலே னல்லோர்
சொல்வழி யறியேன் றொழுந்தொழில் குறியேன்
சுருதிமெய் யறிகிலே னெஞ்சஞ்
செல்வழி யறியேன் றிருப்பவு மறியேன்
செய்பவை யிவையெனத் தேறேன்
வல்வினை தீர்த்தா ளுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (அ)

தனத்தையுந் துறந்து மனைவியைத் துறந்து
தநயரைத் துறந்தெழி றுறந்து
சனத்தையுந் துறந்து காணியைத் துறந்து
தந்தையைத் துறந்துதாய் துறந்து
வனத்தவ மகற்றி நின்னடி யடைந்தார்
மாணடி தன்னையே துதிக்கு
மனத்தைநீ தருவா யுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (கூ)

நலமெலாந் துலைத்துத் தீமையை விளைத்து
நானெனு மாணவங் கதித்துக்
குலமெலாம் பகைத்து வெறியர்போற் றிரிவார்
கூட்டுற வகற்றிமெய்ஞ் ஞானப்
பலமெலாங் கொடுக்கு நின்றிருப் பாத
பங்கயத் தமைவுறப் பணித்தென்
மலமெலா மொழித்தா ளுத்தர கோச
மங்கைவாழ் மங்களேஸ் வரியே. (கO)

மங்களேஸ்வரிபதிகம் முற்றிற்று.

---

ஆகப்பதிகம் உ-க்கு செய்யுள் - உO.

---

உ

கடவுள்துணை.

நான்காவது.

# பஞ்சாசத் திருப்புகழ்.

## கடவுள்வாழ்த்து.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கஞ்சனைமுன் சிறைப்படுத்த சேவலங்கே தனைக்
 கௌரிதரு மணியையென்னுட் கனிந்தொழுகுங் கனியைக்
குஞ்சரியைப் பாகம்வைத்த குருபரனைக் குறத்தி
 கோமானை விண்ணவர்க்கோர் கொள்கலனைத் துதித்துப்
பஞ்சாசத் திருப்புகழைப் பாடவரந் தருவாய்
 பரமசுக நிட்டையுற்றோர் பக்குவம்பார்த் தவர்தஞ்
சஞ்சலமாம் பிறவிவினை யறுத்துமுத்தி யளிக்குஞ்
 சருவமயந் தானான தந்திமுகப் பொருளே.

## திருப்பரங்கிரி.

க. தானதன தானதந்த தானதன தானதந்த
 தானதன தானதந்த—தனதான.

பாலனென வேபிறந்து சீலமுற வேதவழ்ந்து
 பாலனமெ லாமருந்து வயதோடே
பாசமிக வாய்விளைந்து நாலுதெரு வோடடந்து
 பாஷைபல வேபயின்று வெளியேபோய்
வேலையடை யாதிருந்து நாயெனவு மேயலைந்து
 வீணருட னேதிரிந்து சுழலாதே
மேன்மைபெற வேவிரைந்து நீதமுற வேகசிந்திவ்
 வேலைதனி லேமகிழ்ந்து னருடாராய்
ஞாலமதை யேயயின்று மீளவர வேயுமிழ்ந்து
 நாகவணை யேதுயின்று வருமாயோன்
நாடுபல தேவைகண்டு நீயடைதி யீதையென்று
 நாளுமரு ணீதிதுன்று முருகோனே

கோலமயி லேறிநின்று சூரர்கிளை மாளவென்று
கோவிரத மீதமர்ந்து சுரரானோர்
கூவிமலர் மாரிசிந்து காலையரு ளேபுரிந்து
கூடியுறை வாய்பரங்கி ரியில்வேளே.

---

உ. தந்தான தந்த தந்தான தந்த
தந்தான தந்த—தனதானா.

கண்டாடு மின்சொல் பந்தாடு கொங்கை
கம்பாடு கின்ற மிடமேறே
கன்றூத பெண்க டம்பால டைந்து
கண்டாவி நொந்து மயலாலே
திண்டாடி நின்று நின்றேய லைந்து
செஞ்சாலி துன்று பலநாடே
சென்றேப ணங்க ளுந்தேடி வந்து
சிந்தாகு லங்கொண் மதிதீராய்
வண்டாடு கின்ற கொந்தார லங்கன்
மங்காதி லங்கு மணிமார்பா
மன்றாடெ ழுந்து பண்டாட ரன்றன்
மைந்தாவி ளங்கு மெழின்மாயோன்
கொண்டாடு கின்ற கந்தாந லஞ்செய்
கும்பாத கும்ப முனிவாழ்வார்
குன்றூவ ரங்க ணன்றுய்வ ழங்கு
குன்றூர்ப ரங்கி ரியில்வேளே.

---

௩. தானன தந்ததன தானன தந்ததன
தானன தந்ததன—தனதானா.

தேனடு கொன்றைமதி வானறு செஞ்சடிலர்
சேயாக வந்தவொரு முருகேசா
சேனடு கின்றவிழி பானடு மின்சொலுமை
தேசார்கு ழந்தையென வருநேசா
வேனடு கின்றகர வேளேம னங்குழைய
மேவாவ ரங்கடரு செகதீசா
வீறுமை கொண்டடியர் மீதேவு சண்டனெனும்
வீராதி பன்றலைகொ ளுயிர்நாசா

வானுடர் வந்துதொழ வேதாக மங்கண்முடி
வாழ்வார்க டம்பசர  வணவாசா
வாவாவெ னும்படியெ னுவால்வ ழங்கவருண்
மாவேடர் தங்கள்குல  மணிலோலா

நானுடு கின்றபொரு ளீயேயெ னன்பிலுறு
நாதாவி ளங்குமயில்  வருவோனே
ஞானகு ணங்களடை வேனுந யங்களுறை
நாதாப ரங்கிரியி  னிலைவாழ்வே.

---

ச. தனதன தந்தன தான தானன
தனதன தந்தன தான தானன
தனதன தந்தன தான தானன—தனத்த தந்தன தனதான.

விதிவலி வென்றவர் பாத தாமரை
யநுதின முங்கனி வாகி யேமகிழ்
மிகுதியு டன்பணி வோர்கள் கூடிய
—விருப்பி டந்தனை யடையாமல்

விழிவலை கொண்டெம தாவி யேகவ
ரரிவையர் தங்களை நாளு மேமயல்
வினவியு வந்துள மேன்மை தாழ்வுற
—விருப்பு மிஞ்சிட வுலைவாகி

நிதிகள்க வர்ந்தவர் வீடு போயிர
வினில்விரி பஞ்சணை மீதி லேயக
நெகிழவ ணைந்தறி வேக மானமும்
—விடுத்தொ டுங்கிய நிலையாகி

நியதிக ளைந்திழி வான பேருட
னிதமும லைந்ததி பாவ மேலிட
நிரயம ழுந்திட வேயி வாறுசெ
—யெனைப்பு ரந்திட வருவாயே

மதியர வம்புனை வேணி யார்மழு
மறியையு வந்துகொள் பாணி யாருமை
மகிழவி டந்தரு பாதி யார்நட
—மிடத்து ணிந்திடு பொதுவாளர்

மறையின முந்தெரி யாத தாளினர்
கரியுரி நன்றுடை யான மேனியர்
வளையல்சு மந்தெழி லான தோளினர்
—மிடற்ற ருங்கடு வுடையாளர்

கதியைய டைந்திட வேசெய் பூதிய
ரரகர வென்றுனா யாடு வேதியர்
கனல்கதி ரிந்துகொள் கோவி னீதிய
—ரனத்த யன்றலே கொளுநாதர்

கயிலேயி ருந்தவர் சேய தாய்வரு
குருபர கந்தசு வாமி யாகிய
கடவுளர் வந்தடி மேவு மாவமர்
—திருப்ப ரங்கிரி முருகோனே.

---

## திருச்செந்தில்.

ரு. தந்த தானன தந்தன தானன
தந்த தானன தந்தன தானன
தந்த தானன தந்தன தானன—தந்ததானு.

இந்து தாதகி கொன்றைநல் வாசுகி
கங்கை மாதவி தும்பைக ளார்முடி
யெம்பி ரானருள் சுந்தர மேதிகழ் மைந்தனேயோ

ரின்ப மேதரு மைங்கர சோதர
வென்று மார்வமி குந்தவ ராதர
விந்த மாநில மந்தர மாகிய கந்தவேளே

சந்த மாமறை கண்டறி யாதரி
முண்ட காசன னண்டர்க டேடரு
தண்டை பூணும வந்தணி தாளிணே சிந்தியாதே

தந்து நேரிடை கண்டுறு தேமொழி
மந்த வாணகை கொண்டலே நேர்குழல்
சங்க வால்வளை தங்கிட வேவள ரங்கைமேவா

பந்து நேர்படு மந்தர நேர்படு
கும்ப நேர்படு மிங்கித மாமுலே
பஞ்சி னேரடி மங்கையர் மேன்மயல் கொண்டுநாயேன்

பண்டி லேதவ மும்புரி யாதொரு
சங்க மீதிலி ருந்தறி யாதவர்
பண்பி லாகிய லேந்தன னியரு டந்திடாயோ
சிந்து மாநதி பொங்கிய தாமென
வந்து கூடிய திண்படை யேமிகு
சிங்க மேயென நின்றிடு சூரனை யன்றுநேரோ
சிம்பு ளேயென வெண்டிசை யோர்களு
மன்று பூமழை சிந்திட வேயொரு
செங்கை வேல்கோடு கொன்றரு ளேபுரி செந்தில்வாழ்வே.

---

௬௮. தனத்த தந்தன தந்தான தானன
தனத்த தந்தன தந்தான தானன
தனத்த தந்தன தந்தான தானன—தந்ததானு

சிலேக்க ரங்கொடு நின்றேவை யேமத
னிகழ்ச்சி கொண்டுயிர் துண்டாக வேயுட
றெறித்தெ திர்ந்திட வுஞ்சோரி யேமன நைந்துநேரோ
சிரித்த ருங்குழ லுங்கோதி யேமுலே
பெருக்க விங்குள தென்றேதி யேமயல்
செலுத்து மங்கையர் சங்கோச வாதனே யின்றிமேவா
பலத்த னந்தவி தந்தேறி யேமகிழ்
பெறப்பு ணர்ந்திட நொந்தாவி மீதுயர்
படத்தி ரிந்தலே வுண்டோடி நாணிவ ருந்திடாதே
பதித்த சிந்தனே கொண்டேயு மாதவ
ரடுத்தி தம்பெற வந்தார்வ மேயுறு
பதத்தி லின்புற வின்றேனு நீயரு டந்திடாயோ
மலர்த்த டஞ்செறி வண்டேறு சோலேக
ளலேத்த டங்கலி லங்கேறு வானர
மதித்த விந்தொடு சென்றேறு காமுடி யுந்துபூக
மடற்செ றிந்துற வங்கேயும் வாழைக
ளுயிர்த்தி டுங்கனி யன்பார வேமன
மதித்த தன்றலே யின்பாய வேபிர சங்கள்கூடி

மலைத்த டஞ்சுனை கொண்டோடி யேவய
 னிறைத்த ருந்தட மும்பாயு மேல்வள
 மதிக்க நின்றிடு செந்தூரி லேயுற வந்தவாழ்வே

மணிக்க வண்கொடு நின்றேவி யேகுரு
 சுகற்று மங்கைம ருங்காகி யேயுடன்
 மணத்த டைந்தொரு குன்றேறி யேவளர் கந்தவேளே.

---

எ. தனதன தான தந்தத் தாந்தன தத்தன
 தனதன தான தந்தத் தாந்தன தத்தன
 தனதன தான தந்தத் தாந்தன தத்தன—தனதான.

படவரி நாக முந்தத் தாழ்ந்திடு பொற்றிகழ்
 குறிதனி லாசை கொண்டுப் போந்தரு மைக்குழல்
 பருமுலை மாத ரின்பத் தாழ்ந்தவர் சொற்படி மதியாகி

பலகலை வேத முந்தப் பார்ந்தென விற்றென
 மனதினி லாகி யுந்தச் சோர்ந்தவ ரற்புறு
 பணமெனு மாசை கொண்டுத் தோன்றிய பற்பல நகர்மேவி

கடமையி லாம லங்குப் போந்தது தப்பென
 மறுநக ரேகி யிங்குச் சார்ந்தது மற்றென
 கருதியி வாறு துன்பத் தேங்கிடு பித்தனை யருளோடு

கசடறு ஞான முந்தத் தேர்ந்தரு நற்கதி
 தனிலுற நீதி வந்துப் பாந்தமு மற்புறு
 கதிமகிழ் வோடு வின்றுக் காண்டுற நிற்பத நிதிதாராய்

தடமலை மீது நின்றுப் பாண்டிலி னூற்றிடு
 வெகுகனி வோடு பொங்கிக் கூண்டில் பிதிர்த்திழி
 தருநறை யாறி னுந்தச் சேர்ந்தொரு பொற்புறு நதியோடு

தழிவரு காலை கண்டுப் பாண்குரல் சொற்றிடு
 சிறுமியர் சூழ வந்துத் தாம்புகு நற்குடி
 மனிலடை யாது நந்துக் கூம்புறு நெற்பணை யுறவாக

விடவது மேவி சந்தத் தாங்குறு நற்பயிர்
 விழுமிய தாக வங்குத் தேங்கிய பிற்கழை
 மிகுவ ளுக வங்கட் போந்துள மற்பொழின் வழியாக

விரவுட னேகி யிஞ்சிச் சார்ந்தெழி லற்புத
முறவளர் சீத செந்திற் சேர்ந்தரு நற்கதி
மிகமகிழ் வோடு தந்துப் பாங்குற வைத்திடு முருகோனே.

---

அ. தந்தத் தந்தன தந்தன தானன
தந்தத் தந்தன தந்தன தானன
தந்தத் தந்தன தந்தன தானன—தனதானு.

பந்தைத் தந்திடு கொங்கைக ளேயொரு
தந்தைக் கொண்டற நொந்திடு மேயிடை
பந்தித் தங்குயில் கண்டுறு தேமொழி குணவாரி
பஞ்சிற் பம்பிய செஞ்சர ணுமொழில்
கண்டிட் டண்டையில் வந்துயர் நீதிகள்
பங்கத் தங்குற நின்றொரு நேர்வழி யறியாதே
சிந்தைப் பந்தனை கொண்டுழல் வாகிய
துன்பத் திந்தவி தந்திரி வேனெனை
செந்திற் றங்கிய சுந்தர வாள்தர வருவாயே
செம்பொற் குன்றினி வர்ந்தெழு வாரண
மொன்றத் துன்றுமி லங்கையி லானிலை
சிந்தக் கொன்றுந லந்தரு மாயவன் மருகோனே
தந்தத் தந்தன தந்தன தானன
வென்றக் கம்பொது நின்றுட னுடிய
சம்புக் கின்புற வந்தரு ளாதர மயில்வீரா
சங்கச் செங்கைம லர்ந்திட வேபிடி
முந்தத் தந்திடு குஞ்சரி மாதெதிர்
சந்தித் தின்பொடு கொஞ்சிட வேமகிழ் மிகுலோலா
சந்தத் திண்புய மந்தர மேதிக
ழுந்தச் சுந்தர மந்திர மேவளர்
தண்டைச் செஞ்சர ணந்தரு வேலவ குருநாதா
சங்கப் புங்கவர் சந்திர சூரிய
ரண்டத் தங்குறு மிந்திர ராதியர்
தங்கட் கின்புற நின்றரு ளேபுரி முருகோனே.

---

௲. தந்தந் தந்தந் தந்தன தத்தன
தந்தந் தந்தந் தந்தன தத்தன
தந்தந் தந்தந் தந்தன தத்தன—தந்தத் தந்தந் தனதான.

சங்கம் பொங்குஞ் செங்கர முற்றவர்
வம்பும் பந்துந் துன்றுத னத்தியர்
சந்தந் தந்தங் கொன்றுமி டைச்சியர்
—தங்கட் கின்பந் தருகாது
சந்தும் பொங்தெங் குந்திரி வுற்றிடல்
கண்டஞ் சம்பங் கங்கொண டைக்கனி
தம்பந் தந்தங் கின்பரு ளற்புத
—பைம்பொற் கென்றுந் திகழ்மேனி
கொங்கந் தங்குஞ் சந்தன முற்றிட
வஞ்சம் பன்றன் செங்கைகு வித்திடு
கும்பங் கும்புங் கொங்கைய மற்கிணை
—செங்கட் டுன்றும் பலமாதர்
கும்பெங் குஞ்சென் றண்டிந யத்திடு
செம்பஞ் சென்றும் பம்பிய சிற்றடி
கொண்டிங் கண்டுங் கண்டுறு சொற்குயி,
—லுந்தத் தங்குந் திருவேயுன்
பங்கந் தந்தின் பங்கொள வைத்தரு
ளென்றென் றுங்கொண் டிங்கித முற்றிடு
பண்பென் றுங்கொண் டுய்ந்திட லற்றவெ
—னிந்தத் துன்பந் தவிராயோ
பண்டெங் குஞ்சென் றண்டம தித்திட
நின்றங் கொன்றுந் தந்தவ முற்றிய
பம்பம் பென்றுஞ் சங்கமு ழக்கிய
—வெங்கட் சிங்கம் பொருசூரன்
அங்கந் துண்டங் கண்டுயி ரற்றிட
வென்றங் குந்தங் கொண்டுசெ குத்திட
வஞ்சந் தஞ்சந் தஞ்சமெ னச்சிறை
—முந்தத் தங்கும் புலவோர்சொ
லங்கங் கெங்கும் பொங்கவ வர்க்கரு
ளெந்தஞ் சொந்தந் துன்றுமெய் வித்தக
வம்பொன் றங்குந் திண்புயன் மெய்த்திடு
—செந்திற் றங்குங் குகவேளே.

௧0. தனதான தந்த தான தனதான தந்த தான
தனதான தந்த தான—தனதான.

பொருளாசை கொண்டு வீணில் வெளியே திரிந்து நானும்
புலவோனெ னுந்த வாத மதியோடு
புவியைய லைந்து மாசெல் வரையேய டைந்து வீடு
புகுவேளை கண்டு வாரு மெனவோத

வருகாயி ருந்து பேசி யுளகாரி யஞ்சொ லாமு
னவர்மேல்வி யந்து பாடி முடிவாக
வழகாயி ருந்த தீது கடல்போன்மு ழங்கு நீவி
ரறியாத டைந்திர் போலு முடனேகி

யிருகாதெ ழுந்து போரு மொருகாசெ னுங்கொ டாத
விசையேத விர்ந்து மீளு மினியியி
லிழிவான தெங்கள் பேரில் வசையாயி ருந்து போகு
மெனவோது கின்ற லோபி யனைமேவி

யொருகாலி னுந்தொ ழாம லொருபாவெ னுஞ்சொ லாம
லுனையேப ணிந்து பாட வருடாரா
யுயர்வான டர்ந்த சோலை வளமேநி றைந்தெ நாளு
முலையாத செந்தில் வாழு முருகோனே.

---

௧௧. தந்ததான தனன தந்த தந்ததான தனன தந்த
தந்ததான தனன தந்த—தந்ததான.

பண்டருத வினைநி மிர்ந்து வண்டராத படிவி ளைந்து
பங்கின்மேவி யுறவ ளைந்து கொண்டதாலே
பைம்பொன்மாதர் தமையி ரந்து கெஞ்சியார்வ முடன்வியந்து
பஞ்சினேரு மடிவி ழுந்தே ழுந்துபாவி

கண்டருத மொழிபு கழ்ந்து வண்டருத குழல்வ கிர்ந்து
கந்தமேவு புளகி தங்கொள் கொங்கையானை
கண்டவாவி னெடுபு ணர்ந்து பங்கமான மிகவ டர்ந்து
கன்றினேனு னருள டைந்து தங்குவேனோ

தொண்டருத மகவை யுந்து சண்டனுகம் விழவு தைந்து
சொந்தமாக வருள்பு ரிந்த மங்கைபாகர்

தும்பைசூடு முடியர் தந்த மைந்தனுன குமர கந்த
தொந்தவாரி கனக டந்த வந்தணுளர்
விண்டருத சுருதி பொங்கு கின்றவார்வ முடனெ கிழ்ந்து
விஞ்சுகீத மிகவி ளம்பு மன்றுதானே
விந்துநாத முடிக டந்து நின்றுவாதை யறவு வந்து
வென்றிவேல னெனவ மர்ந்த செந்தில்வாழ்வே.

---

கஉ. தானதான தானதந்த தானதான தானதந்த
தானதான தானதந்த—தனதான.

மாயவாழ்வெ லாமிகழ்ந்து தோயமீதி லேயமிழ்ந்து
வாசிவாசி யாயொடுங்க மனமாதி
மாயவாரி போலெழுந்த வாசைதீர வேதணந்து
வானமாதி பூதமைந்து வசைதீர
தீயின்மீதி லேதுணிந்து மாகலாகி யேயிருந்து
தேகமான தேவருந்தி மிகுமோன
தீனராகி வாயடங்கி யோகமீதி லேவிளைந்து
தீரஞான மேயடைந்து பெரியோர்கள்
தூயராயி ருரிழிந்த பாவியான யானிறைந்த
சோகமீதி லேபடிந்து மடமாதர்
சூதுவாதி லேதவழ்ந்து மோகமாகி யேவிழுந்து
சூகைஞாளி போலலைந்து திரிவேனே
சேயனுன பாலகந்த நாதவேல மாகடம்ப
தேவராஜன் மாதுகந்த மணவாளா
சேலுலாவு நீடடங்கண் மாடகூட கோபுரங்கள்
சேணுலாவ மேவுசெந்தின் முருகோனே.

---

கஈ. தந்தனத்த தந்ததந்த தந்தனத்த தந்ததந்த
தந்தனத்த தந்ததந்த—தனதான.

பந்தனத்தை யுந்தணந்து தஞ்சனத்தை யுந்துறந்து
பஞ்சரத்தி னின்றுவந்த கிளிபோலே
பஞ்சினிற்று லங்குசெஞ்சி லம்பெழிற்ப தம்பெயர்ந்து
பங்கமுற்று மங்கிழந்து வெளியேறித்

தந்தனத்தை யுந்திறந்து குங்குமத்தை யுங்கலந்து
சந்தனத்தை யுந்திமிர்ந்து குழன்மீதே
சண்பகத்தை யும்புனைந்து தெந்தனத்தை யும்புகன்று
தங்கரத்தி லங்குதங்க வளைமேவா
வந்தனத்தை யும்புரிந்த வந்தரத்து வந்தரம்பை
மங்கையர்க்கு யர்ந்தடைந்த மடமாதர்
வஞ்சகத்தை யுந்தெரிந்து கொண்டுறக்க லந்தணைந்து
வம்பிடைப்பு குந்ததுன்ப மகல்வேனே
முந்தனத்தை யுந்திநின்ற கஞ்சனைக்க டிந்தகந்த
முண்டகக்க டம்பணிந்த புயவாகா
முன்றவத்தெ ழுந்துயர்ந்த கண்டகர்ச்சி னந்துகண்ட
முந்துணித்து வந்தசெந்தின் முருகோனே.

---

கச. தந்தன தந்தன தானன தந்தன தந்தன தானன
தந்தன தந்தன தானன—தனதான.

வந்துபி றந்திது நாள்வரை
யுந்திட நின்றறி யாமலே
வஞ்சனை கொண்டய லாரையே மிகவாக
வம்பில டர்ந்திட வேயெனை
நஞ்சர வென்றுல கோரொலாம்
வன்கண னென்றுரை யாடவே வசையாகி
நிந்தைபு ரிந்தவ னுமிநா
ணஞ்சர ணந்துதி யாமலே
நெஞ்சின்ம றந்திடு பாவியா மடியார்க
ணின்றவி டந்துரு வாமலே
மங்கையர் கொங்கைகொள் காமிதா
னிம்பமெ னும்படி பாடுவா னெனவேதான்
செந்தழன் மண்டிய கோபநீ
கொண்டுவி ளம்பிடி னுயினேன்
சிந்தனை யுந்தவிர் வேளைதா னுளதாமோ
செங்கையி லங்கிய வேலனே
கங்கைம கிழ்ந்திடு பாலனே
செந்தமிழ் கொண்டருள் சீலனே மறைவாழ்வே

கந்தக டம்பணி தோளனே
குஞ்சரி கொஞ்சும ணாளனே
கன்றென வன்பனா யாளனே குகநாதா
கண்டறு கின்றசொன் மாவுமா
சங்கரி தந்தருள் சேயனே
கம்பொழி செந்திலின் மேவிவாழ் முருகோனே.

---

கரு. தாந்த தந்தன தந்தன தந்தன
தாந்த தந்தன தந்தன தந்தன
தாந்த தந்தன தந்தன தந்தன
தந்தத்தா தத்தன தந்தன
தந்தத்தா தத்தன தந்தன
தந்தத்தா தத்தன தந்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன—தனனதன தானு.

பூந்த டம்பணை தங்கிய வம்பிடை
நீந்து வண்டொடு டன்றுட னங்கயல்
பூந்த லம்புகு தொண்கவி னங்குறு
புங்கப்பூ கத்தின லங்கொடு
தங்கப்பா ளைக்குணு ழைந்தது
புண்பட்டே மிக்கவ லம்பட
பொக்கமி லத்தியி டைச்சல முற்றதை
யொக்கவ டுத்தக டெற்றிட முற்றிய
பொற்சிலை விட்டுவெ ளிக்குள்வ சித்திடு முகிலகடு மீதே
போந்து நின்றுபொ ழிந்திடு கங்கையி
னேர்ந்தி றங்கிவ ரும்பொழு தங்கனி
பூண்டி லங்கும ரம்பைபொ ருந்திழி
புங்கத்தே றற்குழு வங்கொரு
சிந்துப்பே ருற்றுநெ டுந்திரை
பொங்கிக்கா லுற்றுவ ளந்தரு
புக்குந லத்தவிர் நெற்பயி ரிற்பெரு
கிக்குலை யுற்றிட மிக்கவ ளர்த்திடு
பொற்புறு மிப்புவ னத்தைய ளித்திடு மிறைவர்முத லானோர்

சாந்த ணிந்தும ணந்திரு பந்தொடு
கோங்க ரும்பொடு பந்தொடு விண்டொடு
சார்ந்தி லங்கிடு மிங்கித கொங்கையர்
தங்கட்கே மிக்கவ லைந்தவர்
செங்கட்கா வற்கொடு நின்றவர்
தங்கைக்கே பொற்பணி தந்தவர்
தத்தைநி கர்த்தமொ ழிக்கலை யுற்றவர்
முத்துந கைக்கறி வற்றுற வுற்றவர்
சற்பனை முற்றுநி சத்ததெ னப்பொருள் தரவுமன மானேர்

தாந்து யின்றிடு பஞ்சணை தங்கிட
நேர்ந்த தின்றென விங்கித முங்கொடு
தாங்கி வந்திட வந்திட வென்றவர்
தம்பொற்ரு ளிற்சிர மங்குற
விங்குற்ரு யிற்றென வன்றுனா
தந்திட்டே வெட்கம றந்துடல்
சற்றுநெ ருக்கநெ ருக்கவெ னச்சொலி
குத்துமு லைக்கைய ணைத்துந கக்குறி
தற்சிர முற்றிட வக்கல வித்தொழில் புரியுமவ ரோடே

பாந்த மும்பெற வந்திடு சிந்தனை
போம்பெ ருந்தவ முந்திட முங்கொடு
பாங்க டைந்தருள் கொண்டுயர் வுந்திடு
பண்புற்றே மிக்கந லம்பெரு
குந்தப்பா நிற்கென நன்றுறு
பண்டிற்சேர் மெய்த்தவ மொன்றிய
பத்தியி லுற்றவர் சித்தந யப்புற
வைத்தவர் சொற்றதை யொத்துன தற்புத
பத்மப தத்தினை யுற்றன னெற்கரு டரமயிலின் வாராய்

பாந்த ளென்பொடு கங்கை வளம்பிறை
வாய்ந்த சங்கரர் சங்கரி பங்கினர்
பாழ்ம்பெ ரும்பவ நந்தவ ரந்தரு
பைம்பொற்ரூர் சுற்றிய கொன்றைய
ரன்புற்ரூர் மெய்த்திடு சுந்தரர்
பந்தித்தார் பொய்ப்பணி கொண்டிலர்

## பஞ்சாசத் திருப்புகழ்.

பற்றிலர் பற்றிட முத்திய ளித்தவர்
முப்புர முற்றும ழித்தவ ரொற்கதி
பக்குவ முற்றிட வைத்திடு மற்புதர் புதல்வவடி வேலா
மாந்தர் நெஞ்சம ருண்டிட வெந்திற
லேந்த டுஞ்சபை நின்றொரு மங்கையை
வார்ந்தி டுங்குழல் கொண்டும லைந்திட
வந்துற்றே நற்கலை சிந்திட
வன்புற்றே மிக்கவு ரிங்தொரு
வண்டப்பா விக்கைய யர்ந்திட
வைத்திடு பொற்கலை யெத்தனை யெத்தனை
யத்தனை முற்றும ளித்தவர் சக்கரம்
வைத்தொரு மெய்க்கதிர் சிக்கம றைத்தவர்
—மகிழுமரு கோனே
வான்றொ டுந்தலை கொண்டல்வ ளந்திகழ்
தேன்ற ருங்கமழ் பங்கய மின்றினம்
வாழ்ந்தி டும்புகழ் துன்றிடு செந்திலின்
மன்பொற்றேர் சுற்றியெ ழுந்தருள்
நன்றிக்கே சித்தமு றுங்குற
மங்கைக்கே மெய்த்திடு சுந்தர
மச்சவி ழிக்குயி னத்துமொ ழிக்கன
முற்றகு ழற்றுடி யொத்தவி டைப்பொரு
வச்சிர னுற்றத வத்தின்ம கட்புணர் குமரகுக வேளே.

---

## திருப்பழநிமலை.

கசு. தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்—தனதான.
கதிரைப் பிறையைத் தரையைப் புனலைக்
கனலைக் கதியைக் ககனத் தினையக்
கடலைப் பணியைக் கரியைக் கிரியைச் சதுரான
கலையைக் கணனைத் திருவைத் தவளக்
கமலத் தனைவிற் புருவக் குயிலைக்
கவினத் தருவிற் பதியைக் கனியைப் பலவேறு

பதியைப் பலபொற் ளுடியைச் சுரனாப்
பொறையிற் றவமிக் கசுரத் திரளைப்
பலவற் புதனாப் பலமெய்த் தவனாத் திரமான
பலமெய்த் தலனைக் கவனத் தினினைத்
திடமுற் பலமுற் றிடவைத் திடமெப்
பதிமெய்ப் பரமற் கருமைப் ரணவப் பொருடேற

ததியிற் புகன்முத் தயசற் குணவற்
புதநித் தியதத் துவமுத் தமிழத்
தவனுக் குணர்வித் திடுசெற் குருமெய்த் தனிநாதா
சலனத் திடைபுக் கமிழச் செயுமிச்
சடலத் தையெடுத் தலையப் புரியச்
சனியைத் தொலைவித் தருநற் கதியைத் தருவாயே

பதுமத் தயனைச் சிறையிட் டவபொய்ச்
சமணக் குழுவைக் கழுவைத் தவமுற்
பவமற் றிடநற் றவருக் கருளுய்த் திடுநீதா
பலமுற் றிடுமக் குறவர்க் கொடியைத்
தழுவித் தழுவிப் பவளத் திதழைப்
பருகிப் பருகிப் புணர்நற் பழநிப் பெருமானே.

---

## தி ரு வே ர க ம்.

(சுவாமிமலை.)

கஎ. தனதன தனதன தனத்த தானன
தனதன தனதன தனத்த தானன
தனதன தனதன தனத்த தானன—தனதான.

உடுவின மிடைவன வெனப்பன் மாலைகள்
குழலணி மடவியர் மயக்க வேமிக
வுறவுகொ டவர்புடை யடுத்த போதிள முலைமேலே
வுடையினை நெகிழ்பட வவிழ்த்து வேல்கணை
பிணைவடு நிகர்விழி மருட்டி மால்கொள
வுடலினை மிகமிக வுருக்கு வாரவ ருறவாமோ
மடமட மடவென முழக்கு பேரிகை
திடுதிடு திடுவென நடத்து தேர்நிரை
வடுவற வினைபல தொடுத்த சேனைகள் புடைசூழா

வனநதி வரைபல கடத்தி வானவர்
சிறைபட விளைபுரி யரக்கர் வாழ்வற
மறலிகை புகவுயி ரழித்து லாவிய வடிவேலா
கடுவிட மலைகட லுடைத்த காலையி
லுடல்கிடு கிடுவென மலைத்த தேவர்கள்
கவலைகள் பொடிபட வமைத்து மால்விடை தனிலேயார்
கடவுட னுதலினி லுதித்த பாலக
கலியுக வரதசண் முகத்த நீடுயர்
கடிதினி லகல்வுற மிகுத்த வாழ்வருள் குகநாதா
புடவியி லடவியில் வனத்து மாலுயர்
தடவரை படுகுகை யிடத்து மேயுறு
பொறிவழி மனமதை விடுத்தி டாதொரு நிலையோடே
புரிதவ விரதியர் நினைத்த வாறருள்
குருபர மரகத நிறத்த மாமயில்
பொலிவுற விரைவுட னடத்து மேரக முருகோனே.

---

கஅ. தையத்தா தாந்த தத்தன தையத்தா தாந்த தத்தன
தையத்தா தாந்த தத்தன—தனதான தத்ததன தனதான.

வள்ளைக்கே சார்ந்த நற்செவி
யல்லுக்கே நேர்ந்த நெய்க்குழல்
வல்லுக்கே யார்ந்த பொற்றன
—மடவார்ம யக்கவவர் புடைமேவா
வையத்தே பாந்த முற்பட
நைபத்தே காந்த மற்பெழ
மையிட்டே சேந்த வைக்கணில்
—மயலாக வைக்குமிகு சதியாலே
சள்ளைக்கே தாழ்ந்த விச்சிறு
பிள்ளைக்கே யேய்ந்த வித்துயர்
தள்ளிக்கே டோய்ந்தி டச்செய
—வடியார்கள் பக்கமுற வருவாயே
தையற்கே யோர்ந்த மெய்க்குற
வள்ளிக்கே வாய்ந்த வுத்தம
தையத்தா தாந்த தத்தன
—வெனவாட லுற்றசிவ குருநாதா

வெள்ளத்தே சாம்பு யத்தவ
னுள்ளுக்கே வீம்ப டர்த்திட
வெல்லத்தீ தாம்ப டிக்கவ
—னுடனேவ மற்சிறையி லிடுவோனே
வெல்லப்பா காந்தி ருப்புகழ்
சொல்லத்தீர் வாம்ப வத்துயர்
மெல்லப்போ தாந்த முற்றிடு
—மெனவேயெ மக்குமருள் புரிவேளே
கள்ளத்தே னுங்கு ணத்திரள்
கொள்ளத்தே னூர்ந்தி டத்தரு
கல்லிப்பால் பாய்ந்த வப்பணை
—புகவேயு நெற்கதிர்கள் வளமேலார்
கண்ணற்கே தான்ற வத்தொடு
பெண்ணுக்கே போந்த வுத்தமி
கண்ணுக்கே போன்ற வெற்றிகொ
—டிருவேர கத்திலுறை முருகோனே.

---

கசு. தானத் தனதன தந்த தானன
தானத் தனதன தந்த தானன
தானத் தனதன தந்த தானன—தனதானா.

மானத் தியபுவி யென்ற மாநில
மாரற் கடுபடை துன்று மாதர்கள்
வாழ்வைத் தருபண மென்ற வாசைக ளுறவேதான்
வாதைப் படுவது கண்டு மேயினி
மேலிப் படியலை வுண்டு நோவது
மாகுற் றமிதென விண்டு நானல நெறியோடே
ஞானத் தியல்பையு ணர்ந்த மாதவர்
சீதத் திருவடி யொன்றி யேமன
நாணிப் புறமத கன்றி டாதவ ரருளாலே
ஞாலத் திவனொரு பண்பு ளானென
வேயித் தரையுளா தந்த வாசக
நாடிக் கதியைய டைந்த வாவற வருள்வாயோ

வானத் தெழுமுகில் கண்டு தானட
மாடப் பறவைக ளெங்கு மேதொழ
வாகைக் கிதுவென நின்ற மாமயில்
வாலிக் கொருசர முந்த வேவிடு வருவேலா
நேசத் தடியவர் சிந்தை யேமகிழ்
வாசத் துளவம ணிந்த மாயவன் மருகோனே
கானத் தமர்குற மங்கை யேமய
லாலுற் றனனடி தங்க மேயரு
காவைத் தருளடி யங்க மேதிகழ் மடமானே
காவிக் கிணைவிழி யின்ப மேயென
வாதித் தவளிரு கொங்கை தோய்முரு
காவித் தரணிவ ணங்கு மேரக முருகோனே.

---

உ0. தானத் தந்தன தனந்த தானன
தானத் தந்தன தனந்த தானன
தானத் தந்தன தனந்த தானன—தனதான.

ஆதிக் கந்தனை வரங்க ளேதரு
மாதிக் கந்தனை வணங்கி டாதுபொ
யாதிக் கந்தனை யுவந்து நாமிரு வருமாக
வாசைக் கெங்கணு மலைந்து பாதக
வாசைக் கென்பற நொறுங்கி வாடுமி
வாசைக் கென்புக லுடன்ற வாதமர் மனமேயுன்
சீதப் பங்கய மிலங்கு தாடொழ
சீதப் பங்கயல் விலங்கு வாயென
சீதப் பங்கென வளைந்து லாவுத லறமோவென்
தீரத் தந்தர மடங்கி டாதுபல்
தீரத் தந்தனில் விழுந்து நோய்வலி
தீரத் தந்தரம் விளங்கு வேனென வுனையாட
வேதர்க் கம்பணி யெழுந்து நாளொரு
வேதற் கந்தக னுடன்று பார்பொர
வேதற் கந்தர ரடங்கு வானென மிகவேசி
வேலைக் கண்டனி புகுந்து லாவிய
வேலைக் கண்டரு ளடைந்தி டாதுசெய்
வேலைக் கண்டரு மகிழ்ந்து ளானென விசையோதி

மாதச் சந்த்ரவ தனங்கு லாவிய
மாதச் சந்தனி லமிழ்ந்தி யேபிர
மாதச் சங்கட மழுந்த வேவிட மருள்வேனே
வானத் தன்றலை குலுங்க வேயொரு
*வானத் தின்பெயர் விடுங்கை வேலவ
வானத் தன்பனை யுவந்த வேரக முருகோனே.

---

## குன்றுதோறாடல்.

உக. தான தந்ததன தந்ததன தந்ததன
தான தந்ததன தந்ததன தந்ததன
தான தந்ததன தந்ததன தந்ததன—
தந்தன தானதன தனதான.

கூன லம்பிறையி றங்குபுரு வந்திகழு
மாதர் தங்கவலை கொண்டுமயல் விண்டுசிகை
கோதி யங்கவர்பு கன்றபணி யுஞ்செய்துட
—னைந்துநா ளுளுமிகு வசையாளர்
கூடி யெங்குமலை வுண்டுமெதி துண்டுபட
நாய லைந்தெனவ லைந்துதிரி கின்றநெறி
கோதி தென்றுவிடை தந்துறுதி தந்துவினை
—சிந்தவே நீயருள்வ தொருநாளே
பான லங்கவரு கின்றவிழி துண்டமதி
பான லங்கொண் மொழி கும்பமுலை யன்பர்புகல்
பாந லங்கொளுமை தந்தகுக கந்தவயி
—லுந்தியே சூரனுடல் விழவேயன்
பாக வந்தடிதொ ழும்பணவர் துன்பமகல்
பாக நன்றுனாத ருங்குமர குஞ்சரிகொள்
பாக வன்குறவர் தங்கனிம ணந்துமய
—றந்தகோ லாகலமெய் நிலைவாழ்வே
தேன லங்கலணி கின்றபுய வைந்துகர
யானை யின்பின்வரு தம்பிபுவ னம்பரவு
சேவ லங்கொடிதி கழ்ந்திடுசெ வுந்தரவ
—சந்தனூர் நாணமுறு வடிவோனே

---

* வால் நத்து, வளை; அதின்பெயர், சக்கரம்.

சேக ரம்படவெ ழுந்தபடை கண்டுதுரி
யோத னன்படையி தென்றிரத முந்தவிடு
தீர மொன்றுவிசை யன்றிரமை கண்டுமகிழ்
—செங்கண்மா னேயமுறு மருகோனே

வான லங்கடலு ழுந்தெனவி ழுங்குமுனி
வாழ்க விங்கெனவு வந்துபொதி யந்தனிற
வாத வின்பமரு ளுங்குவல யம்புகழ
—வந்ததே வாவருண கிரிநாதா

வான மங்கிவளி யந்தரைய டங்குமுதல்
வாகொ டுந்துயர கன்றிடவ டைந்தவிறை
வாவ ளங்கள்பல வுஞ்செறிய நின்றவொரு
—குன்றுதோ ருடல்புரி முருகோனே.

---

## பழமுதிர்சோலை.

உஉ. தனதன தான தனதன தான தனதன தான—தனதான.

அருவமு மாகி யுருவமு மாகி யரனரி யாகி யயனாகி
அகிலமு மாகி வெளிவளி யாகி யனல்புனலாகி நிதியாகி
இரவியு மாகி மதியமு மாகி யிமையவ ராகி யுடுவாகி
யெழுகட லாகி வரைகளு மாகி யெழினதி யாகி வனமாகி
மருவென வாகி முகையென வாகி மலரென வாகி மரமாகி
வருமுட லாகி யுயிரென வாகி மனமுத லாகி நிலையான
குருவுரு வாகி யொருபொரு ளான குகவர தாசண் முகநாதா
கொடுவினை தீர வரமருள் சோலை குலவிய சோதி-முருகோனே

---

உங. தந்த தந்த தானதன தந்த தந்த தானதன
தந்த தந்த தானதன—தனதான.

வஞ்சி நின்ற வாடையிலே
நின்று நின்று வாடையிலே
மஞ்சள் கந்த வாடையிலே மதிசேர
வந்து வந்து சாடையிலே
வஞ்ச கஞ்செய் சாடையிலே
வம்ப டர்ந்த மேடையிலே யுயர்வான

கிஞ்சு கஞ்சொல் வாயினிலே
துன்ற னங்க ஞேயினிலே
கெஞ்சி யங்கு பாயினிலே யொயிலோடு
கெண்டை யங்கண் மாயையிலே
திண்டு வந்து சாயையிலே
கெம்பி யம்பு பாயையிலே யுறவாடி
மிஞ்சி யின்ப மேவையிலே
மங்கை கொண்ட தேவையிலே
விண்ட தன்று சாவையிலே யிதுமாய
விஞ்சை யென்று போகையிலே
யங்கு வந்து தாகையிலே
விந்தை யென்ற வாகையிலார் மயதீராய்
குஞ்சி தங்கொள் சேவடியே
ரஞ்சி தங்கொள் பாவடியே
கொண்ட ரும்ப வாவடியே னிடுதீது
கும்ப வின்று வாதுளையே
வம்பி லொன்றும் வாதுளையேல்
கொண்ட றங்கு சோலையில்வாழ் முருகோனே.

---

## திருத்தணிகை.

உச. தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன—தனதான.

இக்குவல யத்தின்மிகு சற்பனையி யற்றியிழி
வெச்சினினை வுற்றமடை யனாநானே
இக்குவளை மிக்கவெழி லற்புதவெ னக்கவியி
யற்றியலை வுற்றுமன நலிவேனே
பக்கமது வைத்தறிவ ளித்துமுதன் மெய்த்தவர்கள்
பற்றுபத நித்தமுற வருள்வாயே
பச்சைமயி லிற்குதிகொ ணித்யபர தத்வசொரு
பத்தினைவி ளக்கிவரு மெழில்வேலா
சக்கரமு யர்த்தகர முற்றதுள வத்தனெரு
சற்குணவெ னத்துதிகொண் மருகோனே
தக்கவர கத்துவகை யுற்றிடவி ருக்குதவு
தற்பரவ யிற்படைகொள் குருநாதா

முக்கனிநி றைத்தமொழி வெற்பெனவி ணைத்தமுலை
முத்தினைநி கர்த்தநகை யுமைபாலா
முப்புரமெ ரித்தபர மற்கரும றைப்பொருள்சொன்
முத்தையதி ருத்தணிகை முருகோனே.

---

## குன்றக்குடி.

உரு. தந்தாத் தனதன தந்தாத் தனதன
தந்தாத் தனதன—தனதானு.

வண்டார்த் திடுமலர் நன்றுப் புனைகுழன்
மங்காச் செழுமதி முகமானூர்
வந்தாற் பரவச முந்தாத் திரமுடன்
மன்றுட் டிசைபல பலவாறே
பண்டாற் கிளைசொலி வந்தேத் திடுமவர்
பங்காத் திரிநெறி யறவேயுன்
பண்பாப் புகல்பவர் பின்பாக் கனிவொடு
பந்தாத் தொடரவு மருள்வாயோ
தண்டார்ப் புயமில குஞ்சூர்க் கெதிரமர்
தந்தாற் றிலமென வருதேவர்
தம்பாற் றயைகொடு நின்றேத் திடுமவர்
சங்கார்த் திடவசு ரனாநாய்பேய்
கொண்டாட் டுறவயி லுந்தாப் புகழ்பெரு
குங்கார்த் திகையெனு மறுமாதர்
கும்பாக் கொடுநினை யன்பாப் பெறவளர்
குன்றக் குடிநகர் முருகோனே.

---

## கதிர்காமம்.

உசு. தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்—
தனனு தத்தன தனதானு.

கதிர்முலைத் துவரிதழ்த் துடியிடைப் பிடிநடைக்
கயல்விழிக் கனிமொழிக் கனகுழற் பிறைநுதற்
கவர்துடைப் பணிநிகர்த் திடுமெழிற் கடிதடக்
—கலைநே ருற்றிடு முகமேவு

கணிகையர்க் குளவதிப் படுமனச் செயலினைக்
கருதிடிற் பயமிகக் குடிகொளத் துடிதுடிக்
கவருமிப் பவமதைப் புறமதிற் றளியிருக்
—கவனே கத்திலு முடியாது

குதிகொளத் தடியர்பற் பலர்வரத் துயில்கெடப்
பசிவரத் துயர்மிகப் பெருகிடக் கதியறக்
குவலயத் தலைவுறச் சனியனுற் றிடநிதிக்
—கிடமே யற்றிட வசையான

கொடியனைத் துடியனைக் கடியனைப் பலவிதத்
தினுமறப் பதகனைச் சிறுவனைத் தவநெறிக்
குணமுறக் கதிபெறக் குமரநற் கருணைவைத்
—தெனையா ளத்தகி யிதுதானே

பதுமனைச் சிறையிலிட் டபொழுதிற் றுகளறப்
பிரணவப் பொருளினைப் புகலெனச் சொலியவப்
பரமனுக் கிதுவெனத் தெரிவுறக் கடிதினிற்
—செவிவாய் சொற்றிடு குருநாதா

பரவையைக் கரமதிற் றிரள்கொடுட் கொளுமியற்
குறுமுனிக் கருமைநற் றமிழுணர்த் தியகடப்
பமலரைப் புயமதிற் பணியெனத் திகழ்வுறத்
—துதிசே ரப்புனை குமரேசா

ததிமடுத் ததியிற் கயிறெடுத் திறுகிடச்
செயுமிடைக் குலமதைப் பரகதிக் கமைவுறச்
சமயநற் கருணைவைத் திடுமரிக் கிளையவுத்
—தமியாள் பெற்றிடு புதல்வோனே

சதிரறச் சமணரைக் கழுவிலிட் டுலகியற்
சிவமயத் திடமதைப் பெருகிடப் புரியுமுத்
தயகுறக் குலமகட் டழுவுமற் புதவளக்
—கதிர்கா மத்துறை முருகோனே.

## கொடுமளூர்.

உஎ. தத்தத் தனதன தனதன தனதன
தத்தத் தனதன தனதன தனதன
தத்தத் தனதன தனதன தனதன—தனதான.

கச்சைத் திமிறிய புளகித விளமுலை
பச்சைக் கிளிகுயில் பழகிய நயமொழி
கச்சிக் கடவுள்கை வருபிணை நிகர்விழி மடமாதர்

கைக்குட் படுபவ ரறநெறி விடுபவர்
மிக்கப் படுரவு ரவநர கெனுநெறி
கைக்கக் குருபர சரவண பவகுக வெனவோது

மிச்சைக் கொருகல னிவனடி யவர்கழன்
மெச்சிப் புகழ்பவ னிவனதி குணமுள
னெப்பத் தியுமுள னிவனொரு வழியுள னிவனுமென்

றெத்திக் குமுளவர் களுநினை நினைசொல
வைத்துக் கமலம லனைநிகர் நினதடி
யெற்குத் தருவது மருளொடு வருவது மொருநாளே

விச்சைக் கிழவர்க ளமரர்கள் பலபல
லெச்சைப் படவர மகளிர்கள் சிறைபட
வெட்கத் தொடுதலை கவிழ்தர விணைபுரி யொருசூரன்

மிக்கத் திறலுட னமர்பொர முனிவொடு
பக்கத் துறுபடை யவளவு முயிர்விட
வெட்டிக் கதிரயில் விடுமர கதமயில் வருதீரா

பிச்சைக் கெனவொரு பகன்முனி வரர்மனை
யிற்புக் கவர்மனை யவர்நிறை நிறைகவர்
பித்தற் கருமறை முழுவது முனைதரு குருநாதா

பெட்புற் றிருண்மல வலிகெட நினைபவ
ரற்புக் குருகிய வுடைமர நிழலமர்
பெற்றிக் கொடுமண கரில்வள ரரஹர முருகோனே.

உஅ. தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன—
தந்த தானன தனதான.

தரணியி லுருவொடு மனைதர மிகவளர்
பருவமு மகல்பட வயதுக ழியும்வரை
சனனவி யல்புமுயிர் படுதுயர் களுமற
—வெந்த நேரமு நினையாது

சரியைகி ரியைமுத லெவையுநி னைவில்வரு
சமயமு மிலையெனு நெறியினி லுறுபவர்
தரமும வர்கள்புரி வினையுமெ னையகல
—வுந்து வேளையு மிலதாகி

அரணியில் கொளுமர சரைவழி படுகட
வுளரென வவரடி பணிபவ மிகுவலி
யவரொடு பழகிய வவதியை யிகல்கொடு
—சிந்த வேமன முணராம

லபலவர் மனையொடு புணர்கெடு தலைவிட
லவசிய மிதுவென வுரைகுரு மொழிதனை
யகமதி னிலைகொள வுருகிமெய் குழைவுறு
—மந்த ஞானமு மடையாமன்

முரணிய மடையனை நரகனை விரகனை
முறியனை வெறியனை யசடனை விகடனை
முகடியை நினைவதும் வருவது மருள்வது
—மிந்த வேளையி லெனவாராய்

முகில்பொழி தரவரை யெனுமொரு குடைகொடு
பசுவின மதுதழை வுறவருள் கருடனின்
முனையொடு வருமர கதநிற மடைபவர்
—சங்கு நாதமு முடையோர்முன்

இரணியன் மகனெடு நெறிதவ றுரைசொல
வடியவர் மகிழ்வுற வவனுடல் கிழிபட
வெதிரரு மறையின முறையிட வருநர
—சிங்க நாரணன் மருகோனே

இமையவர் விபுதர்கண் முறைமுறை பணிவிடை
தருகொடு மணகரி னுடைதனில் வளர்வுறு
மிறையவ சரவண பவகுரு பரகுக
—கந்த சாமியென் முருகோனே.

---

உகூ. தானத் தனதன தானத் தனதன
தானத் தனதன—தனதானா.

தாதிற் பொலிமலர் சூடிப் பலவணி
சாரத் திகழ்முலை மடமாதர்
சார்பிற் றெரிவினி லேயுற் றிடவவர்
சாடைச் சொலுமிரு செவியார
வேதிப் படிமன மாயிற் றெனமனை
யேகிக் கலவியி லுறவாடி
யீனத் தரமிக வேசுற் றிடுமெடி
யேனுக் குனைநினை மதிதாராய்
பாதிப் பிறையணி யீசற் கருமறை
பாலித் திடவரு மயில்வீரா
பாசத் தொடுகுற மாதைத் தனதொரு
பாகத் தமர்கென வருள்வோனே
மேதிக் குலமுறு சீதப் பணைகளின்
மீதிற் கயல்பக டெனாடி
மேகத் திரளினை மோதித் துளிவரு
மேன்மைக் கொடுமெளின் முருகோனே.

---

௩0. தான தானதன தான தானதன
தான தானதன—தனதானா.

சேலு லாவுமிரு நீல மேவுவிழி
சேரு மாதர்வரு தெருவூடே
தேடி யோடிமனம் வாடி வாடிமய
நீர நீசெயனு முனையோடு
காலை மாலையிது வேலை யாகிவரு
காசு நாசமுற வெறியாளர்
காதை போலதிக வாதை யானவிழி
காம வாசைகெட வுடனாடி

நாலு மாமறைக ளோது நாவினர்க
ணூடு சேவடியை நனிதாராய்
நார ணுதியர்க டேவ தேவவென
நாளு மேதுதிசெய் மயில்வீரா
கால காலனருள் பால காமுடிவில்
கார ணுவமரர் பணிபாதா
காவு லாவுமரி மாது தோண்மருவு
காத லாய்கொடுமெண் முருகோனே.

---

ருக. தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனனா தனனா—தனதானா.

முருகா வடிவே லவனே யடியா
ரகமே தனியா யமர்வோய் குழகா
முதல்வா மறைதே டியவா வசுராள் குலநாசா
முறையே குறுமா முனியோ தியவா
சகனே யகனே சகமா னவனே
முடிதே டியநான் முகனா ரறியா விறையோனே
தருவே மருவே யுருவே யருவே
குருவே திருவே கருவே யுயர்வே
தனியே கனியே தவமே சிவமே செகதீசா
ததியே நிதியே மதியே விதியே
கனமே யினமே மனமே யெனையே
சடமீ துளபோ தினிலாள் குவையே யெனவேதா
ஞெருகா லினுமே நினையா தவமே
யிதுநாள் வனாமே வினனா னினிமே
லுனையே தொழுவே நினைவே தருவாய் நிலைவாழ்வே
யொருபா னுவையே கதிரா ழியினுன்
மறைவாய் விடவே செயுமான் மருகா
வுவமா னமிலா தவர்வாழ் பதனே தவநேசா
குருகார் குறமா தொருபா லுடையாய்
குணமா மலையே சிவனர் கலையே
குணபா லிறையோன் மகநா றுளவோன் மகணேசா

குமரா குகனே பரனே வரனே
யுமையாண் மகனே யுயர்வா னவனே
கொடிவா ரணனே கொடுமூ ரரசே முருகோனே.

---

௩௨. தான தந்த தனதன தான தந்த தனதன
தான தந்த தனதன—தனதான.

நாத விந்து முடிவிலோ நீல கண்டன் மடியிலோ
நார ணன்றன் முடியிலோ மிகுவாய்மை
நாடு கின்ற நிலையிலோ தேடு மன்பர் வலையிலோ
நாக மொன்று மலையிலோ தவராஜர்
போத நின்ற வெளியிலோ நீதி துன்று மொளியிலோ
பூத லங்கொ டளியிலோ கதிர்மேலோ
பூர ணங்கொள் கலையிலோ வார ணங்க டலையிலோ
பூதி யங்கொள் சிலையிலோ விறைவாவுன்
பாத நின்ற துணர்கிலா தேம றந்து கணிகையார்
பாச முந்தி விளையவே மயலோடு
பால மர்ந்த மொழியிலே வேல மர்ந்த விழியிலே
பாடி நின்ற வழியிலே வளமேவு
சூத டர்ந்த முலையிலே யாவி நொந்து திரிவனோ
சோதி தந்த புதல்வனே குகநாதா
சோலை தங்கு கொடுமளூர் மேவு கின்ற குமரனே
தூய வுன்ற னருடராய் முருகோனே.

---

௩௩. தான தனன தான தனன
தான தனன—தனதான.

மேலா மடியார் சார்பா லுனையே மேவா திதுநாள் வளைபாவி
வேதா கமமே யோதா தவமே வீண யயலே யலைவாகி
மாலா குவனோ வாரா தரமோ வாழ்வே யிதுநீ யறியாயோ
வாரா யடியே னேரா யிதுவோர் வாதா வுமையாண் மகிழ்வான
பாலா தருவாழ் கோமான் மகளோர் பாலா குறமான் மகணேயா
பாலோ தியநா வாலே தொழுவார் பாகா திருமான்-மருகோனே
கோலா கலவா காவா வரதா கூர்வே லவனே யெமனுலே
கூகா வெனவே வீழா தருடா கோவே கொடுமூர்-முருகோனே.

---

௩௪. தந்ததனந் தந்ததனந் தந்ததனந் தந்தத்
தந்ததனந் தந்ததனந் தந்ததனந் தந்தத்
தந்ததனந் தந்ததனந் தந்ததனந் தந்தத்—தனதான.

பங்கயமும் பங்கமுறுஞ் சந்த்ரமுகங் கொண்டற்
பிந்தவருந் தண்டலையுங் கொண்டலுமக் கொன்றைப்
பண்புகவர்ந் தெங்குமிருண் டண்டர்மகிழ்ந் தின்புற்
—றிடுகோதை
பந்தினையுங் குன்றினையுங் கண்டுசினங் கொண்டத்
தந்திதருங் கொம்புவளஞ் சிந்திடவுங் கண்டப்
பங்களபங் குங்குமமுஞ் செண்பகமுந் தங்கப்
—புகழ்மேவு
கொங்கைநயம் பொங்கமகிழ்ந் தங்குவிழுந் தண்டிச்
சிந்தையுவந் தங்கவடங் கந்தவிடந் துன்றிக்
கும்பமிரண் டெங்கொடுமின் பைந்தொடியென் றங்கட்
—பலவாறு
கும்பிடவுந் தந்திடையுஞ் செம்பளவந் தந்தெற்
கும்பிளவுஞ் சந்தனமுந் தந்தவளும் பங்கிற்
கும்பிடநின் றின்பமடைந் தங்கசனம் பொன்றத்
—துயரோடு
தங்கமனம் புண்படவுஞ் சஞ்சலமுந் துன்பச்
சங்கடமுந் தொந்தமுறும் பண்டெனவிண் டன்பிற்
றங்கவர்தஞ் சங்கமுறும் புந்தியிழந் தொன்றித்
—திரிவேனே
சங்கரனுஞ் சங்கரியுந் தந்தருளுந் துங்கக்
கந்தபரங் குன்றின்முனஞ் செந்திலிருந் துந்திக்
கங்கணமொன் றுங்கையிளங் குஞ்சரியின் பம்பெற்
—றவவேலா
செங்கயலுஞ் சங்கினமும் பம்பிவருங் கங்கைப்
பைம்புனலெங் கெங்குமடர்ந் தின்பவளந் துன்றத்
தெங்கணமங் கங்குகுதம் பின்படையுந் துங்கக்
—கொடுமூரா
திண்புயமுந் தன்றவமும் பொன்றவெழுந் தண்டச்
சிங்கமுகன் றன்புறவுங் கொன்றவனங் கந்தச்
செஞ்சரணம் பண்டுவணங் குங்குறமின் பங்கிற் - குகவேளே.

---

## குழந்தாபுரி.

(முதுகுளத்தூர்.)

௩டு. தனந்தா தனத்தத் தனந்தா தனத்தத்
தனந்தா தனத்தத்—தனதான.

சடந்தா னெடுத்துப் பவந்தா னகற்றிச்
சலந்தீர் தவத்தைப் புரியாதே
தரந்தான் விடுத்துச் சிறந்தா ரெனக்குத்
தணிந்தார் நகைக்கத் தெருவூடே

கடந்தாழ் தனத்தைத் திறந்தே குலுக்கிக்
கடுங்கூர் விழிக்குட் படமானார்
கனிந்தே யழைக்கத் தினங்கா சளித்துக்
கலந்தே யவத்தைப் படுநாயேன்

கடந்தேற வைத்துற் பதந்தா வனத்திற்
கசிந்தார் குறத்திக் கொருபாகா
கடுந்தேர் நடத்திப் பெரும்பா ரதத்தைக்
கரந்தான் மதிக்கப் பொருவேலா

குடந்தாழ் வயிற்றுக் கடஞ்சேர் கரத்துக்
குணஞ்சேர் கரிக்குத் துணைவோனே
கொடும்போர் விளைத்திட் டருஞ்சூர் வதைத்துக்
குழந்தா புரிக்குட் புகும்வேளே.

---

௩சு. தானன தத்தத் தனந்த தத்தன
தானன தத்தத் தனந்த தத்தன
தானன தத்தத் தனந்த தத்தன—தந்ததான.

பூவினி டத்துப் பொலிந்த வுத்தம
வேதன ளித்திட் டிலங்க நித்திய
பூவுல கத்திற் பிறந்து துற்சனர் தங்களோடே
போதுக ழித்துத் திரிந்து சுற்றிய
காலும லுத்துத் துலங்கு நித்திய
போதம றுத்துக் கலங்கி யிப்படி நொந்துதானே

நாவினி டத்துப் பிறங்கு முத்தமிழ்
வாணர வைக்குட் புகுந்த வர்ப்பணி
நாளுமி யற்றித் தெரிந்து கற்றிடு பண்பினாலே

நான்மறை யொக்கச் சதங்கை யிட்டவிர்
வார்சர ணத்திற் கனிந்து மற்புத
ஞகவி சைத்துக் கசிந்து பற்பல சிந்துபாடி
சேவைகி டைக்கத் தவம்ப யிற்றில
ஞயினு மிக்கத் தணிந்த பத்தியி
நீயனெ னக்குப் பவந்தொ லைத்தரு டந்திடாயோ
சீதையை விட்டுப் பிரிந்து மெத்தவு
மேமனம் வெட்கிக் குரங்கு மொய்த்திரள்
சேனைந டத்திட் டிலங்கை யிற்கடி தன்றுநேரோ
காவினி டத்துக் கரந்து கற்புறு
மாதினை வைத்துத் தவந்த விர்த்திடு
காதக னைத்தற் சரந்தொ டுத்துயிர் சிந்துமாயோன்
காசினி மெய்க்கச் சிறந்த சற்குண
னீயென மெத்தப் புகழ்ந்த வுத்தம
கார்மிக நத்தக் குழந்தை நற்பதி யெம்பிரானே.

---

௩௭. தானந்தன தந்தன தானந்தன தந்தன
தானந்தன தந்தன—தனதான.

சேலேந்திட வஞ்சன மேலார்ந்திட வெங்கணை
சீரோங்கநி வர்ந்தெழு விழிமானர்
தேசார்ந்திடு கொங்கையி லேசார்ந்துமி குந்திடு
தீதார்ந்துபெ ருந்துய ரடையாமன்
மாலேந்திவ ணங்கிடு போதார்ந்துசி வந்தெழில்
வாழ்வார்ந்தப தந்துணை தருவாயே
வாளேந்திய செங்கர மேரேந்திய திண்புய
வாகார்ந்திட நின்றமர் புரிசூரா
வேலேந்திமு னிந்துடல் கூறும்படி யிந்தன
மீதேங்கியி றந்திட விடுவோனே
வேதாந்தநி றைந்தொளிர் பாதாம்புய நண்பருண்
மீதார்ந்துவ ளர்ந்தருள் மயில்வீரா
காலேந்திய திண்டிற றேரோங்கும தன்றநு
காய்வான்றரு சுந்தர குமரேசா

காரேந்திய பைம்பொழில் வானேங்கிரி வர்ந்தெழு
காசார்ந்தகு ழந்தையின் முருகோனே.

---

பொது.

௩அ. தான தத்ததன தத்ததன தத்ததன
தான தத்ததன தத்ததன தத்ததன
தான தத்ததன தத்ததன தத்ததன—தந்ததான.

சீல முற்றமறை முற்றுமுணர் விற்பனர்கள்
கூடி நித்யபர தத்வசொரு பத்தவுயர்
தேவ தற்பரவி சித்ரகுண வத்தவரு ளென்றுநாளுஞ்
சேவ டிக்கண்மலர் வைத்தவர ருச்சனைசெய்
தேவ ருட்டிறமை பெற்றுறுதி பெற்றனர்க
டேறு தற்குநிலை விட்டறிவ கற்றுமதி கொண்டுதானே
ஞால முற்றபல துற்சனர்க ளோக்குலவி
நீதி யற்பமுமி யற்றுநினை வற்றுநெடு
நாள்க டத்தியொரு சற்சனர்க ளோக்கருத லின்றிமான
நாண மற்றுநிலை யற்றுநெறி யற்றுவெறி
நாயெ னப்பலனை யெத்திமடி பற்றிவரு
நாரி யர்க்கண்வலை யுற்றிடுமெ னக்குனரு டந்திடாயோ
வால முற்றமிட றத்தனடி பற்றியொரு
சீட னிற்குலவி யத்தபர வத்துவித
வார ணத்தினையு ரைத்தருளெ னப்புகல வந்தநாளே
யார்வ முற்றுவகை யுற்றுரைசெய் வித்தகுரு
நாத வெற்பின்முனி வற்பணிகொள் வித்தரிய
வாறெ ழுத்தினையு ரைத்துநிலை வைத்துமயில் வந்தசாமி
கோல முற்றமத வத்தியைய ழைத்துவன
மீதி லுற்றிடுகு றத்தியைமி ரட்டிமயல்
கூறி யெய்த்தவிடை கட்டியொரு முத்தமிடு கந்தவேளே
கூவி ளத்தினைநி கர்த்திடுபெ ணைத்தமுலை
யானை பெற்றவன மொத்தநடை முத்தநகை
கூடு மற்புதவ லத்தவயி லத்தமுறு தம்பிரானே.

---

௩௯. தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத்—தனதான.

தலத்தைத் தவிர்த்துச் சலத்தைக் குறைத்துத்
தவத்தைக் கருத்துற் றுடனேகித்
தனித்துக் கடத்திற் குகைக்குட் சலிப்பைத்
தணித்துற் பவத்தைத் தொலையாமல்
குலத்தைக் கெடுத்துச் சனத்தைப் பகைத்துக்
குலுக்கிப் பிலுக்கித் திரிமானுர்
குவித்துப் பணைத்துத் தடித்துப் புடைத்துக்
குடத்தைத் தகர்த்துத் திமிறேறிச்
சலத்திற் பொகுட்டைத் துறத்திப் பொருப்பைத்
தகித்துக் கதித்துக் கவினேறு
தனத்தைப் பிடித்துச் சுகித்துக் குதித்துத்
தரத்தைக் குறைத்துத் திரிவேனே
பலத்திற் றடுத்துச் சுகத்தைக் கொடுத்துற்
பதத்திற் பொருத்திக் கதிதாராய்
பவத்தைக் கரித்தற் புதத்திற் புகுத்திப்
பணித்துப் புரக்கப் புரிவேளே.

---

௪0. தானதன தான தானதன தான
தானதன தான—தனதான.

சீதகம லோனு மாலுநதி சூடு
சேகரமு ளானு மகநூறு
தேடுதிறன் மீறு வாசவனு மாதி
தேவர்முனி வோரு மிகுவாய்மை
மாதவரு மேனை வேதியரு மோது
மாமதியு மேவு கதிரோனு
மாதிரமு மேழு வாரிதியு மேரு
மால்வரையு மான முருகேசா
கோதறுநி தான மானவடி யார்கள்
கூடுநிலை யோக முதல்வோனே
கோலமயி லேறு நீதகும ரேச
கோகனக மாது மருகோனே

பாதகவ போத சூரர்குல மோடு
பாழ்படவு மேவு     வடிவேலா
பாசமிக வாகி யேதுயரின் மூழ்கு
பாலனெனை யாள்வை     முருகோனே.

---

சக. தந்த தாந்த தன தந்த தாந்த தன
தந்த தாந்த தன—தனதானு.

மங்கு லோங்கு மெழி லெங்கு மோங்கு பொழில்
வந்து சார்ந்துமிக     மயன்மீறி
வண்டு பூண்டொ ளிரு செங்கை யார்ந்து லவு
மஞ்சு நேர்ந்த குழன்     மடமாதர்
தங்கள் வீங்கு முலை கண்டு நேர்ந்த வர்கள்
சங்க நீங்கு மதி     யிலரோடு
தங்கி யாங்க வர்செய் பண்பி னேங்கி யுறு
சங்கை நீங்கு நிலை     தருவாயே
கங்கை பாம்ப றுகு கொன்றை வேய்ந்த முடி
கங்கை தாங்கு மர     னுதன்மேவு
கந்த சாம்ப விதன் மைந்த வேங்க ணிலை
கண்டு வான் பதவி     தருவோனே
கொங்கி னேர்ந்து கள பங்க ளார்ந்த ழகு
கொண்டு லாந் தெரிய     லணிவோனே
கும்ப மார்ந்த முனி யென்று நீங்க ரிய
குன்றி னேங்க வருண்     முருகோனே.

---

சஉ. தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன—தனதான.

பூத லத்தினி லெத்தனை யெத்தனை
யான பற்பல வர்க்கமு மெய்த்திடு
பூசு ரர்க்கமு துய்த்திட வைத்திடு     மரியோடு
பூவி டத்திலு தித்திடு முத்தம
னுதி மெய்த்தவர் சித்தர்கள் சொற்றிடு
பூத முற்றுமி யற்றிய நிற்செய     லறியாது

மாதர் பொய்த்திடு நைத்திடு சிற்றிடை
மேரி னைத்தும யக்கிடு பொற்றன
மால்பி டித்தவர் சொற்படி நிற்குமி முழுமூடன்
வாரி சத்தைநி கர்த்தடி யர்க்குறு
போத முற்றிட வைத்தரு ளுய்த்திடு
மாம லர்க்கழ னித்தநி னைத்திடு மதிதாராய்
சீதை யைப்பிரி வுற்றபி னற்புறு
வான ரத்திரள் சுற்றிட மிக்கரு
சேது கட்டிந டத்திம ணிக்குல மிகமேவு
சீத முற்றிடு பொற்பரபை மெத்தவு
மேவி ளக்குமு டித்தலை பத்தனி
நீய வைத்தம ரர்க்கரு ளுத்தமன் மருகோனே
பாத கத்தைவ ளைத்துறு சற்பனை
யேவி ளைத்தற மற்றிட நிற்பவர்
பாச மற்றிட வைத்தரு ளற்புத மயில்வீரா
பார்வ னத்திலு தித்திடு மெய்க்குற
மாதி டத்தில டுத்தவ ளைத்துதி
பாணி யைச்சிரம் வைத்திடு முத்தய முருகோனே.

---

சரு. தானன தத்தந் தனந் தத்தன
தனந் தத்தன தனந் தத்தன
தானன தத்தந் தனந் தத்தன
தனந் தத்தன தனந் தத்தன
தானன தத்தந் தனந் தத்தன
தனந் தத்தன தனந் தத்தன—தனதான.

பூதல முற்றுந் திரிந் தற்புத
மிகும் பொற்றல நறுந் தட்சணை
மேயவை முற்றுந் தணந் தெற்பொரு
வலங் கற்சில வலைந் துட்புகு
போதம றுத்துங் கலங் கித்தவ
முறுந் தற்கென நினைந் திப்படி யலைவாகி
பூசனை விட்டுஞ் சுழன் றற்பமு
நலங் கிட்டிலர் குலங் கெட்டிடர்

பூதம றுத்துஞ் சினந் திட்டடல்
கசங் கிக்கொலை புரிந் திட்டிடு
பூதிவி டுத்தந் தரந் துய்த்திலர்
நிறைந் திட்டன ரகந் தப்பிடு மதிமேவி
மாதவர் நித்தம் பணிந் தற்புறு
வலந் கற்புனை யிறைஞ் சித்தொழ
வேதன டுத்தஞ் சிரங் கைப்பட
வணங் கிப்புற மகன் றற்புற
வானுல கத்திந் திரன் பற்பல
வரம் பெற்றிட வடைந் திட்டொரு புறமேவ
வாணரி சைத்தங் கனிந் துற்பவ
விலங் கப்புரி மகிழ்ந் திற்றென
நாளுமி சைத்துங் கனாந் துற்றிடர்
களைந் தற்புத மிலங் கத்திரு
மாமனா நத்துந் தரம் பெற்றிட
விரங் கிக்கதி வழங் குற்பத வருடாராய்
தீதினை நச்சுங் குணம் பெற்றம
ரருந் தற்பத மிறைஞ் சப்பணி
பாதக முற்றும் புரிந் தப்புர
மிலங் கத்திரி வரங் கத்துட
நீயந கைத்தந் தரம் பெற்றிட
முனிந் திட்டவ ரிணங் கித்தரு மயில்வீரா
சீதம திக்குந் தரம் பெற்றவ
தனங் கற்படு தனஞ் சிற்றிடை
வேயினை யொக்கும் புயம் பைப்பணி
நிதம் பக்குற வணங் கைக்குல
தீபவி ளக்கம் பெறும் பொற்பிடி
தருங் கற்புடை யணங் கைப்புணர் மணவாளா
மாதிர முற்றுந் திரிந் திற்சிர
மறுந் தற்கென மயங் கிக்கதி
வேலையி லுற்றங் கிருந் திற்சலம்
விடும் பட்டென நினைந் துற்றவ
மாவுரு வைக்கொன் றுலைந் திற்றுறு
தவம் பெற்றவ ரிலங் கச்செயும் வடிவேலா

வானர முற்றுந் தொழுங் கற்புயம்
வளர்ந் துற்பவ பலம் பெற்றிடு
வாலியை யற்றஞ் சரந் தொட்டுயிர்
துரந் திட்டவர் மகிழ்ந் தற்புற
மாமயி லுற்றெம் பவங் கெட்டுயர்
வரம் பற்பல புரிந் திட்டருண் முருகோனே.

---

சச. தந்தான தனதான தந்தான தனதான
தந்தான தனதான—தனதான.

வண்டாடு குழலோடு மிந்தாடு நுதலோடு
வண்டாவு முகமோடு பிடிபோலே
மன்றாடு நடையோடு குன்றாடு முலேயோடு
வந்தாடு மடமாதர் மயலாலே

க்ண்டாடு மொழிபேச நன்றான பலவீதி
கண்டான வுடனண மறவேதான்
கன்றாத படிகூடி யின்றாள்வை யெனநாடு
கம்பாடு மிடறூடு கரமேவா

விண்டாடு புயவாசை கொண்டாடு பலசேதி
விண்டாடு சுகமேவு சிறியேனை
வென்றாடு சிலைமார னின்றேட வருண்மேவ
வெம்பாவ மறவேயு னருடாராய்

தண்டாம ணாயின்வாழ்வு நந்தாத திருமாது
சந்தான புயமாயன் மருகோனே
தந்தான தனதான வென்றாடு கயிலாயர்
தந்தார்வ மிகுஞான முருகோனே.

---

சரு. தானத் தானன தானத் தானன
தானத் தானன—தனதான.

சீதத் தார்முக மாதர்க் கேபொரு
டேடித் தேடிய வனைநேரோ
சேவித் தேயவர் காறெட் டேயும
தேயித் தேகமு மெனவோதா

காதற் கேகிலே யாகிக் கோரம
காவற் பாதக வுருவோடே
காயத் தோடொரு மோனத் தேயிரு
காதிப் பாழ்நர கடைவேனே

நீதத் தார்மன மாமெய்க் கோயினி
னீடித் தேயவர் தினமேசெய்
நேமத் தேமகிழ் வாகிச் சூழ்வினை
நீறிட் டேவளர் வடிவேலா

பாதத் தாமரை நோவக் கானுற
பாவைக் கேமயன் மிகவேதான்
பாசத் தானய மாகப் போயவள்
பாலுற் றேயணை முருகோனே.

---

சகூ. தானத் தனந்த தத்த தானத் தனந்த தத்த
தானத் தனந்த தத்த—தனதானு.

சீதப் பளிங்க மைத்த மேடைக் குளிந்த்ரா யொத்த
சேல்வைத் திடுங்க ணுற்ற மடவார்பாற்
சேவைக் கலந்து வெட்க மானத் தையுங்கை விட்டு
சீதப் பிதென் றுரைக்க வசையோடே

வாதைப் படுங்கு ணத்தர் பாலுற் றிடுங் கருத்து
மாறித் திருந்த வைத்து னடியார்சேர்
வாசத் திருந்து சொற்ற வேலைக் கமைந்தி ருக்கும்
வாழ்வைப் பொருந்த நித்த மருள்வாயோ

நீதத் தையன்று விட்ட நாகத் வசன்ப டைக்கு
நேர்பட் டடர்ந்தெ திர்த்த படைவீராள்
நேயத் தையங்க கற்றி யேமெய்ச் சரந்தொ டுத்து
நீளத தவம் பயிற்று திறலாலே

தீதற் றபஞ்ச வர்க்கு ளேயர்ச் சுனன்ற மெய்த்த
தேரைக் கடுஞ்ச மர்த்தி னெடுவானோர்
சேரத் துணிந்து விட்ட மாயற் கிதங்கொ டுத்த
சேவற் கரம்பி டித்த முருகோனே.

---

சஎ. தனதத்த தனனதன தனதத்த தனனதன
தனதத்த தனனதன—தனதானு.

கருவுற்ற துமுதலனே வயிறுற்ற விருவினைகள்
கதுவுற்ற துயரதனே நினைவேனே
கணியுற்ற மதியகல வுருவுற்று வெளியில்வரு
கணமுற்ற துயரதனே நினைவேனே

வரவுற்ற பினையெனுட லறிவித்த வுடன்மிகவும்
வலியுற்ற துயரதனே நினைவேனே
மதியுற்ற வயதிலொரு கலைகற்க வரியகுரு
வசமுற்ற துயரதனே நினைவேனே

திருவுற்ற மடவியர்கண் மயலுற்று நெறிதவறு
செயலுற்ற துயரதனே நினைவேனே
செகமுற்று மிசைபரவு நிதிபற்ற விழைவுகொடு
திரிவுற்ற துயரதனே நினைவேனே

வொருமிக்க நிலையழிய நமனுற்று வருபொழுதி
லுயிருற்றி டுமெவதியை நினைவேனே
வுரகத்தின் மிசைநடன மிடுபச்சை நிறன்மருக
வுயர்வுற்று வளர்கவருள் முருகோனே.

---

சஅ. தத்த தத்த தத்த தத்த
தத்த தத்த தத்த தத்த
தத்த தத்த தத்த தத்த—தனதானு.

சித்தி ரத்தை யொத்த மைத்த தத்தை யைத்த ரத்தில் வைத்து
தித்தி ரித்தன் மெத்த நத்தி மயலாலே
செப்பெ னப்ப ணைத்தி ணைத்த வெற்பெ னக்க தித்த டர்த்த
சிற்றி டைக்கி டுக்க ணுய்த்த முலையோடே

முத்த மிட்டி ழுத்து மெத்தை யிற்ப டுக்க வைத்த வட்கு
முற்ப டச்சு கப்ப டுத்தி மகிழ்வானேன்
முப்ப டிக்கு ளித்த ரத்தை யுற்ற வெற்கி ரக்க முற்று
முத்து நத்து நிற்ப தத்தி னருடாராய்

சுத்த புத்த முத்த நித்தர் முத்தி பெற்றி ருக்க வைத்த
சுப்ர முற்ற வத்த கத்த குகநாதா

துர்க்கு ணற்க டற்றி ளைத்த வற்ப ராத்தி ரப்ப டுத்தி
சொற்க மத்தி யிற்பு குத்து நெறியாளா

தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த
தத்தி மித்த தித்த தத்தை யெனவாடுந்
தற்ப ரற்க ருத்தி யுற்று மெய்த்த வப்பொ ருட்டெ ரித்த
சத்தி யற்பு றத்து தித்த முருகோனே.

---

சசூ. தத்த தாத்த தன தத்த தாத்த தன
தத்த தாத்த தன—தந்ததான.

பத்தர் தாட்க மல முற்று மேத்தி யவர்
பக்க மாக்கு றுகி நின்றுமேவு
பற்று நீக்கி யுயர் முத்தி சேர்த்த ருள்விர்
பட்ட பாட்டை யெணி யென்றுகூறி
மெத்த வேக்க மொடு நிற்கு மார்க்க மதை
விட்டு வீட்டி லுள துண்டுநானே
வெட்க மாய்த்து வெளி யுற்ற வாக்க ணிறை
விற்று நாட் கழியு மங்கைமானை
நத்தி வாழ்த்தி யவர் சொற்ற வார்த்தை கொடு
நட்பு வாய்த்த தென விந்துவீணே
நட்ட மாக்கி வரு துட்டர் கூட்டு றவை
நச்சி வேட்கை யுள சிந்தையாலே
நித்த நோக்கி வரு மற்ப னேற் கரிய
நித்ய வாழ்க்கை நிலை தந்திடாயோ
நிட்டை வாய்த்த வர்க ளத்த மேற்ப ரமர்
நெற்றி வாய்த்த விழி வந்தவேளே.

---

ருo. தானதன தத்ததன தானதன தத்ததன
தானதன தத்ததன—தனதான.

போதிலைநி கர்த்தவடி வாழையுவ மித்ததொடை
பூவையையெ ருட்டுமொழி மயில்சாயல்
பூகவடி வொத்தமிட றேதுடியெ திர்த்தவிடை
பூசனம னெய்த்தவிழி குமிழ்நாசி

மாதிரமி ணைத்தமுலை வாய்பவள முத்துநகை
வானிருணி றத்தகுழல் செவியூசல்
வாசுகிப தித்தகுறி வாள்பிறைவ ளைத்தநுதல்
வாரிசம ணைத்தமுக மதிமானுர்

காதலின்மி குத்தவர்பி னேதெருவி லுற்றுவரு
காசினைய ழித்துமிக மயன்மீறு
காதகனை விட்டெனது சீதசர ணத்தினிடை
காமுறவ டுத்துமகிழ் வடைவேனே

வேதமுத லத்தபர மானசுக நித்யகுரு
வேயரனு தற்கண்வரு மெழில்வேலா
வேடுவர்வ னத்திலுறு மாதினையெ டுத்துமண
மேயுடன்மு டித்தருளு முருகோனே.

---

தனதன தனனு தனு தனு
தனதன தனனு தனு தனு
தனதன தனனு தனு தனு—தனதானு.

கடவுளர் முதல்வா நமோ நமோ
வுமையவள் புதல்வா நமோ நமோ
கடலமு தனையாய் நமோ நமோ குமரேசா

கலியுக வரதா நமோ நமோ
யரியய னறியாய் நமோ நமோ
கதியருள் பரனே நமோ நமோ பவநாசா

திடநிலை புகல்வாய் நமோ நமோ
குறவளி கணவா நமோ நமோ
திருமரு மகனே நமோ நமோ வமரேசா

சிலைநிகர் புயனே நமோ நமோ
மறைமுடி யுறைவாய் நமோ நமோ
திகழறு முகனே நமோ நமோ மயில்வாசா

அடன்மிகு மயிலாய் நமோ நமோ
மதன்மகி ழுருவாய் நமோ நமோ
வவுணர்க ணமனே நமோ நமோ ஜகதீசா

வருடரு குருவே நமோ நமோ
சரவண பவனே நமோ நமோ
வடியவர் நிதியே நமோ நமோ குருநாதா

சடமிது புவிமேல் விழா முனே
கபமது களமே லெழா முனே
சதிசெயு நமனுர் வரா முனே மகிழ்வோடே

சரணருள் புரிவே லவா குகா
சரதமு மெனையே தவா தவா
சமயமு மிதுவே சிவா சிவா முருகோனே.

பஞ்சாசத் திருப்புகழ்

முற்றுப்பெற்றது.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30277

உ
கடவுள் துணை.

ஐ ந் தா வ து.

# கொடுமளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

சீரார் திருக்கொடுமேட் டேவுடைவாழ் வேலவன்மேற்
றூரார் பதிற்றுப்பத் தந்தாதி—நேரான
பத்திக் கணேசமுடன் பாடப் பரூஉக்கைமதச்
சித்திக் கணேசவருள் செய்.

## நூ ல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருக்கொடுமேட் பதியுடையி லெழுந்தருளும்
வேற்குமரத் தேவே யன்னை
கருக்கொடுவன் பாதகமாம் புழுமலத்தோ
டுழன்றுழன்று கால நோக்கி
யுருக்கொடுவந் துருக்கமிலாக் கலிப்பகையான்
மிகவருந்தி யுணர்ச்சி தோன்ற
விருக்கொடுநான் கினுந்துருவா நின்சரணிற்
சரணடைந்தே னெனைக்காப் பாயே. (க)

எனைக்கவரும் படிவிழிச்செந் தழலுகுப்பப்
பற்கடித்தே யிடியி னார்த்து
வினைக்கயிறுஞ் சூலமுங்கொண் டிருட்பகுவாய்ப்
பகடுகைத்து வெருட்டிச் சீறிக்
கனைக்குநமன் செயுந்துயரை விலக்கியுன்றாள்
கொடுத்தரிய கதியிற் சேர்ப்பாய்
சினைக்கயல்சேர் வயற்கொடுமேட் பதியுடைவாழ்
திருக்குமரத் தேவ தேவே. (உ)

தேவுக்கே சிரத்தையுளார் சிந்தைக்கே
யின்பநலஞ் சேரு மென்று
பாவுக்கே யுரியவர்கள் பகர்ந்ததனை
நாயடியேன் பலகா லாய்ந்துங்
கோவுக்கே யுரியமணி போன்றவுனைக்
கைவசத்திற் கொள்ளா தெய்த்தே
னுவுக்கே தமிழுதவுங் கொடுமளப்பா
வெனைப்புரக்கு நாளெந் நாளே. (௩)

நாளேற நாளேற மதமேறி
மருளேறி நளின மொத்த
வாளேறுங் கண்ணியர்செய் மயலேறிப்
பித்தேறி வயது மேறிக்
கோளேறு மறலிவருங் குறிப்பேறிப்
பயந்ததல்லாற் கொடுமூ ராவுன்
றாளேறு நெறியேறுச் சிறியேனைத்
தடுத்தாளென் றுய்க்குந் தாயே. (௪)

தாயிருக்கப் பிள்ளைநின்று தட்டழிவா
ருலகிலுண்டோ சகலத் துக்கு
நீயிருக்க வயிலிருக்க மயிலிருக்கக்
கொடுமளூடை நிழலி னீங்கா
வேயிருக்குந் தோட்கனிய ரருகிருக்கப்
பலதெய்வம் விரும்பி வீணே
போயிருக்க வைத்தெனையிங் கலக்கழித்தா
னியாயமதோ புகலு வாயே. (௫)

வாயிருந்துந் துதியாது மனமிருந்து
நினையாது மௌன மாக
வேயிருந்து புலனெறியைத் தூர்க்காது
கொடுமளூடை மேவா தன்பாய்
நீயிருந்து வாழிடத்தைத் தருவாதிவ்
வுடலதனை நிலையென் றென்பை
நாயிருந்து காப்பதுபோற் காத்திடவோ
நின்னடியை நம்பி னேனே. (௬)

நம்பரனுர் கேட்பவரு மறைப்பொருளைத்
துகளறவே நவின்ரு யிம்ப
ரும்பரொலாந் தினம்பரவுந் திருக்கொடும
ளூடையுடையா யுரத்தி யாட்டும்
பம்பரம்போற் சுழன்றுசுழன் றடிக்கடிநான்
படுந்துயரைப் பார்த்தி லாயோ
வம்பரவைக் காளாக்கா துன்னடிக்கா
ளாக்கிடுவாய் மயில்வல் லோனே. (எ)

வல்லமையா யொருநூற்றெட் டுகெங்குன்ரு
தரசியற்று மதத்தால் வானே
ரெல்லவரை யும்பிடித்துச் சிறையிடுவித்
தடித்துவலித் திடையூ ருக்கும்
புல்லறிவோ ருருவெடுத்தா லனையகொடுஞ்
சூரனுரம் பொடித்துத் தொண்ட
ரல்லலறப் புரிந்தகொடு மூருடையா
யென்றுயர்தீர்த் தளிப்பாய் வாழ்வே. (அ)

வாழ்வுடையா ரிவர்தூய மதியுடையா
ரிவரிவர்மேல் வரம்ப டைத்தார்
தாழ்வுடையா ரிவரறத்தின் சால்புடையா
ரிவரெனவே சாற்றற் கெல்லா
மூழ்வலியே யாயினுமற் றுன்வலியைக்
கடந்துவெளி யுறுமோ வின்னும்
பாழவதிப் படமுடியா தருள்செய்தெனை
யாள்கொடுமட் பதியுள் ளானே. (கூ)

உள்ளமுத லைந்தாகிப் புலன்களைந்தாய்ப்
பூதமைந்தா யுயிர்க டோறு
மெள்ளிலெண்ணெய் போனிறைந்தா யருள்செய்வா
யெனவடியே னிரந்து மந்தோ
புள்ளிமயி லேறிவந்தென் வினைதீர்க்க
நாட்பொருத்தம் போதா தோவுன்
கள்ளமெலாங் காட்டுதற்கு நான்றரமோ
கொடுமளூடைக் கருணை வாழ்வே. (க0)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கருணையங் கடலே கனிந்தமுக் கனியே
கண்கொளாக் காட்சியே யடியார்
தருணம்வந் தடைந்தே யருணலம் விளக்குஞ்
சச்சிதா னந்தசின் மயமே
வருணமா மயிலாய் கொடுமளம் பதியாய்
மாமலர்த் தருவுடை யடியா
யருணனைப் பழிக்குங் கதிர்வடி வேலா
யடிமையைப் புரப்பதுன் பரமே. (கக)

பரமெலா முனக்கே யருளெலா மெனக்கே
பணியுடை மலர்களாற் றொடுத்த
சரமெலா முனக்கே நின்னையே வணங்குஞ்
சாதன நெறியெலா மெனக்கே
தரமெலா முனக்கே பணிவெலா மெனக்கே
சற்பனை யிலாமன முனக்கே
வரமெலா மெனக்கே யமைத்தருள் கொடுமெண்
மாசிலா வறுமுக மணியே. (கஉ)

மணியெலாங் கொழிக்குங் குடவளை யொலிக்கும்
வயலெலாஞ் செங்நெலாய்ப் பலிக்கு
மணியெலாங் கதிக்குங் கொடுமளம் பதிவா
ழையனே மெய்யனே யடியார்
பிணியெலாந் தவிர்க்குஞ் சரவண பவனே
பேதையேன் பெரும்பிழை பொறுத்துன்
பணியெலா மியற்றுந் திருவருள் புரிந்தாற்
பாவமோ கருணைவைப் பாயே. (கங)

பாயினைப் புனைந்தார் குலமெலா மொருங்கே
பாழ்படக் கழுவிலிட் டவர்தந்
தீயினைப் புரையுந் தொழில்கரு வறுத்த
தெய்வமே பாலருச் சேய்க்குத்
தாயினை விடுத்தோர் தாரக முளவோ
தமியனேற் குற்றசஞ் சலத்தை
நோயினைத் தவிர்க்குந் தெய்வம்வே றுளதோ
நுவலுவாய் கொடுமெள்வாழ் முதலே. (கச)

முதலைவாய்க் கரியன் றழைத்திடத் திகிரி
முதல்வனை விடுத்துயிர் புரந்தோன்
மதலையா யுதித்தாய் கொடுமளம் பதியாய்
மதியிலாச் சிறுவர்கள் வழுத்துங்
குதலைவாய் மொழிகேட் டின்றவர் மகிழுங்
கொள்கைபோ லென்சொலுங் கொள்வாய்
திதலைவாய் தனத்துக் குறத்தியோர் பங்கிற்
றெய்வமே சைவநா யகனே. (கரு)

நாயக மாகி யுயிர்தொறு நிறைந்த
நாதனே போதனே போதன்
றீயகம் படியச் சிறையிலிட் டவன்றன்
செருக்கெலா மடக்கிய தேவே
தூயக வடியார் முடியடி யுலவுஞ்
சுப்பிர மணியசற் குருவே
தாயக முடையாய் கொடுமளூ ருடையாய்
சண்முகா நின்சரண் சரணே. (கசு)

சரணமே லுடையாய் கொடுமளூ ருடையாய்
தாருகன் சூரமர்க் குடையா
யிரணவே லுடையா யென்னையா ளுடையா
யீரறு விழிகளை யுடையாய்
முரணுடைப் பூதப் படையினை யுடையாய்
முன்கைவா ரணக்கொடி யுடையாய்
பிரணவ முடையா யெனத்தினந் துதிக்கும்
பேதையேற் கருள்வதும் பெரிதோ. (கஎ)

பெரியவ குமுண வீமவில் விசைய
பேகவை போகதே வேந்திர
கரியவ கருண வெனவறி விலர்மேற்
கவியுளாத் தலைந்ததல் லாம
லரியவ குமர சரவண பவவே
லவவறு முகவென தடியேன்
புரியவ மனைத்தும் பொறுத்தருள் கொடுமெட்
புண்ணிய நண்ணிய பொருளே. (கஅ)

பொருளெலா நீயே யுயிரொலா நீயே
பொறிபுல னறிவெலா நீயே
யருளெலா நீயே காட்சியு நீயே
யப்புறத் தகல்வது நீயே
தெருளெலா நீயே மௌனமா நிறைந்த
தேசிக வடிவமு நீயே
மருளெலா மகற்றாய் கொடுமளம் பதிவாழ்
மந்திர முதல்வநின் மயமே. (௧௯)

சின்மய வடிவே வடிவிலா முடிவே
தேவர்வாழ் கற்பக நாட்டும்
பொன்மய மாகப் பொலிந்திடு கொடுமெட்
புதுமல ருடையுளா யடியேற்
குன்மய மன்றி யொருதுணை யுளவோ
யுண்மையீ தருமறை யுணர்வே
யென்மய மதனு லெவையுமுற் றுமோ
வெந்தையே சரவண பவனே. (௨0)

கலிவிருத்தம்.

பவமும் பழியும் படியப் பணியுந்
தவமுங் கதியுந் தருவாய் கொடுமெட்
சிவசிந் தனையிற் றிகழ்வோர் தமைவிட்
டவமங் கறவே யருள்வே லவனே. (௨௧)

வேலா குமரா விகிர்தா முருகா
கோலா கலமெய்க் குழகா வழகா
மேலா மருள்செய் விமலா வுமையாள்
பாலா கொடுமெட் பதிவா ழரசே. (௨௨)

அரைசே கொடுமெட் கணியே யகலா
விரைசேர் தெரியன் மிளிர்பொற் புயனே
தரைசேர் பிறவித் தளைவிட் டருள்வாய்
கரைசேர் வுறவே தருவாய் கதியே. (௨௩)

கதியெற் குதவுங் கடனிற் கலதித்
ததியிற் றரைமற் றவருக் குளவோ
குதியுற் றகயற் பணைநற் கொடுமெட்
பதியிற் கைலைப் பதிசற் குருவே. (௨௪)

குருவாய் கழனிக் கொடுமட் கரசே
யருவா யுருவா யமைவாய் நமனுர்
பொருவாய் மயில்வேல் பொலியக் கணமே
வருவாய் வருவாய் வரநா யகனே. (உரு)

கனைவிட் டகலா வொலிபொற் கழலா
யெனைவிட் டகலா வெழிலாய் கொடும
ணினைவிட் டகலா நினைவைத் தருவா
யனைவிட் டகலர் தணேசே யெனவே. (உசு)

எனையித் தருணத் திண்நற் கழலிற்
பினமற் றருளைப் பெறவைத் திலையேல்
சனனத் துழலத் தகுமோ தகுமோ
கனகக் கொடுமட் கதியுய்த் தவனே. (உஎ)

தவளத் தரளத் தனிமூ ரலினைப்
பவளத் திதழைப் பருகிப் பருகித்
துவளப் படுமோ துணைநீ கொடுமட்
கவளக் கருணைக் கரிசோ தரனே. (உஅ)

தரமொன் றியநற் கொடுமட் டருவே
வரமுங் கதியும் வளருந் திறல்சூ
ருரமுங் கிரியுந் துளைபட் டுருவக்
கரமுந் தியவே லவநீ கதியே. (உகு)

கதியைக் கருதா துகடைப் படுமென்
மதியைச் சுழலா வகைவைத் தருள்வாய்
விதியைச் சிறையிட் டவிறற் கொடுமட்
பதியைக் கடவா தபரஞ் சுடரோ. (௩0)

"அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை"

என்ற, திருத்தாண்டகப் பண்.

திருச்சிற்றம்பலம்.

சுடர்விளக்குந் திருமுகமு மருட்டுங் கண்ணுந்
துடியிடையுங் கதிர்முலையுந் துவர்ச்செவ் வாயும்
படர்விளக்கும் புன்னகையுங் கமலக் கையும்
பனிமொழியும் பிடிநடையும் பயிலுங் காட்டி

யிடர்விளக்கும் பெருங்கூற்றைக் கடத்தி யுன்ற
 னிணையடிக்கீ ழமர்ந்திருப்ப தென்னாண் மாயை
குடர்விளக்கும் பவக்குலத்தைக் கதிர்வே லோட்டுக்
 குமைத்தருளுங் கொடுமளூடைக் குமர வேளே. (௩க)

வேளையில்லா வேளைமலர்க் கணைவிட் டேவும்
 வேளையெரித் தோனருளும் வேளைப் பூகப்
பாளைவிரி திருக்கொடும ளூடைவே லோனைப்
 பச்சைமயில் வாகனனைப் பணிவோ ருக்குத்
தாளையளிக் குங்குகனைத் தடுத்தாட் கொள்ளுந்
 தற்பரனைச் சிற்பரனைச் சார்ந்து போற்ற
நாளையென்றும் பின்னையென்றுங் கருதா தென்ற
 னன்னெஞ்சே கடைப்பிடியிந் நாளிற் றானே. (௩௨)

தானமெல்லாம் புரிந்தாலும் வேந்த ராகித்
 தாரணியைப் புரந்தாலுந் தவஞ்செய் தாலும்
வானமெல்லா மலர்தூவித் தொழப்பெற் றாலு
 மாடமா ளிகைவாழ்வு வரப்பெற் றாலுங்
கானமெல்லா நாரதனிற் பயின்றிட் டாலுங்
 கடைவழிக்குக் கடைவழியாய்க் கழியுங் கண்டாய்
ஞானமெல்லாந் தருங்கொடுமட் குமரன் றாளை
 நன்னெஞ்சே நினைக்கின்முத்தி நலங்கொள் வாயே. (௩௩)

நலங்கொண்டேன் சுகங்கொண்டேன் கீர்த்தி கொண்டேன்
 னயங்கொண்டேன் செயங்கொண்டேன் நாடு கொண்டேன்
பலங்கொண்டேன் கிளைகொண்டேன் கல்வி கொண்டேன்
 பதிகொண்டேன் னிதிகொண்டேன் பண்பு கொண்டேன்
குலங்கொண்டேன் மனைகொண்டேன் மக்கள் கொண்டேன்
 குதிகொண்டேன் மதிகொண்டேன் கொடும ளூர்மெய்த்
தலங்கொண்டேன் புருகவணங் கிலையே லந்தோ
 சனனவிடாய் தீர்ந்திடுமோ சதிசெய் நெஞ்சே. (௩௪)

நெஞ்சமொரு நிலையாகித் தவஞ்செய் வோர்க்கு
 நிட்காமப் புண்ணியர்க்கு நேயத் தோடுன்
கஞ்சமலர்ச் சேவடியைத் தொழப்பெற் றோர்க்குங்
 கைதவத்தைக் கைத்தகற்றுங் கருணை யோர்க்கும்

பஞ்சவரைத் தம்மேவல் செயக்கொண் டார்கரும்
பழமறைக ளினந்துருவாப் பதந்தந் தாள்வாய்
வஞ்சகனேற் கருள்வைகொல்லோ வென்செய் வேனுன்
வண்டொலிக்கும் வயற்கொடுமேள் வளருங் கோவே. (௫௫)

கோவைக்கோர் வடுப்புகுத்துஞ் சிவந்த வாயார்
குரவையிடும் வயற்கொடுமேட் கோவே சூரன்
றேவைக்கோர் முகங்கொடுத்துங் குருவாய் நின்று
சிவனுக்கோர் முகங்கொடுத்துந் தேடு மன்பர்
சேவைக்கோர் முகங்கொடுத்து மயிலுக் கொன்றுஞ்
சிலம்புக்கோர் முகங்கொடுத்துந் தெய்வ வள்ளிப்
பாவைக்கோர் முகங்கொடுத்து நின்ற தாலென்
பாவுக்கே யாறுமுகம் பகரு வாயே. (௫௬)

பகவனுக்கும் பிரணவஞ்சொல் குருவே யுன்றன்
பதமலரைத் தினம்பரவும் படிக்கே யந்தோ
மிகவனுக்கு நெஞ்சகத்தை நிலைநிறுத்தி
மெலியவிடா தானந்த வெள்ள மேவுந்
தகவனுக்கி ரகம்புரிந்தா னின்னை யாவர்
தடுத்திடுவார் திருக்கொடுமேட் டழைக்கும் வைவேற்
குகவனுக்குங் கொங்கைதெய்வ யானை யுள்ளங்
குதுகுலிக்க மயினடத்துங் குமர வேளே. (௫௭)

குமரப்பா கந்தப்பா வடிவே லப்பா
கொடுமேளப்பா வென்னகத்திற் குடிகொண் டன்பா
யமரப்பா பன்னிருகை யப்பா வென்றே
யனுதினமு மோலமிடு மடியேன் முன்னஞ்
சமரப்பார் வையினேடு மறலி யோர்காற்
சார்ந்திடுமே லறிவழியத் தயங்கி நானஞ்
சிமரப்பா வையினிகரா யடங்கு வேனே
தெய்வமே நின்னைநம்புந் திரமி தென்னே. (௫௮)

என்னையுமோர் படைப்பாய் நீபடைத்து விட்ட
விதுவரைநா னனுபவித்த தெல்லாம் போது
முன்னையுமெத் தனைபிறப்பில் விடுத்தாய் கொல்லோ
முதல்வனே பிறவியின்ன முடிவு ருமற்

பின்னையுமோர் பிறப்பில்வரச் செய்தா லந்தோ
பெரும்பாவம் பெரும்பாவம் பிழைக டீர்ப்பாய்
மின்னையுஞ்செங் கதிர்வேற்கைக் கொடுமண் மேவி
வேதாந்தத் துட்பொருளாய் விளங்குந் தேவே. (௩௯)

விளங்கனியை யானையுண்ட வாறு மிந்த
மேதினியிற் செல்வமென வெறுத்தே யுன்னை
யுளங்கனிவாய்த் துதியாம லந்தோ வீணுக்
குடல்வளர்த்தே னிதுவனைக்கு மோகோ பின்னைக்
களங்கனியை நிகர்மறலி வந்தா லென்ன
கட்டுரைப்பேன் றினைப்புனத்திற் காவல் பூண்ட
விளங்கனியைத் திருமணஞ்செய் கொடுமட் கந்தா
வெப்படியு நின்னடிக்கி ழெனைவைப் பாயே. (௪0)

திருச்சிற்றம்பலம்.

“தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்”

என்ற, தேவாரப்பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாயனேர்வரு மறலியாவி பதைத்துவீழ வுதைத்தவர்
சேயனேகொடு மூரனேமகிழ் தெய்வயானை மணாளனே
தீயனேன்வினை தீயவேயருள் செய்குவாய்மறை செப்பிய
வாயனேமயில் வாசனேதுணை மற்றுவேறிலை யுண்மையே. (௪க)

உண்மையும்பெறு முறுதியும்மன வுவகையுந்தவ நிலைமையுந்
திண்மையும்முனை யன்றிவேறொரு செயலதாய்முடி யுங்கொலோ
கண்மையுந்திகழ் வள்ளிநாயகி கனிவுறுங்கதிர் வேலுடை
வண்மையுந்திகழ் கொடுமளம்பதி வாசனேகும ரீசனே. (௪௨)

ஈசனேயென திறைவனேயும திணையடிதொழு தேத்துவேன்
பாசநாசம தாகவேயருள் பாலியாததி தென்கொலோ
வாசைநேசர்க டங்களோடுற வையநீயருள் செய்திடின்
மோசமோவதி பாவமோவிது முறைமையோகொடு மூரனே. (௪௩)

மூரிமேருவி லாகவேயொரு முப்புரம்பொடி செய்திடு
நாரிபாகன யந்தநற்குரு நாதனேகொடு மூரனே
பாரிலேயுனை யன்றியோர்துணை பற்றிலேன்பிடி மற்றிலேன்
வேரிமாமல ருடையின்மேவிய வேலனேகதி வேண்டுமே. (௪௪)

வேண்டவாவறு நீர்மையாருள மேவுவாயுனை யின்புறக்
காண்டவாசனை மலரருச்சனை கைகொடேத்தி வணங்கிலே
னுண்டவாகொடு மூருளாய்பணி யடியனேன்முடி நின்கழ
நீண்டவாதனை நீருமேகதி சேருவேனிது திண்ணமே. (சரு)

திண்ணமேகுடி கொண்டசூருயிர் தீரவேல்விடு தீரனே
வண்ணமேதிகழ் தெய்வயானை மணாளனேசுகு ணாளனே
நண்ணமேன்மைக ணல்குநீளுடை நாதனேகடை நாயினே
னெண்ணமேகொடு மூருளாயுனை யின்றியோர்துணை யில்லையே. ()

இல்லிலேயுறு துன்பமோவள வில்லையென்ப துணர்ந்துநா
னல்லிலேநிறை கின்றகோதைய ராசைமேலிட வவர்கடஞ்
சொல்லிலேவிழி வலையிலேயிரு துடையிலேபிடி நடையிலே
பல்லிலேகொடு மூரவாடினன் பாதுகாப்பதுன் பாரமே. (சஎ)

பாரமாமுலை மாதரார்மயல் பற்றியேயயல் சுற்றியே
கோரமாகிய வாசையேநிலை கொண்டபாவியை யாளுவான்
வீரமாமயி லேறியேகதிர் வேல்கொடென்மு னடைந்திட
நேரமாவிலை கொடுமளாயிது நீதியோமன நேயனே. (சஅ)

நேயமேயச காயபூரண நித்தனேகொடு மூருளாய்
தூயமாதவர் தம்மையேதொடர் சோதியேயனு பூதியே
மாயமாயையி லாழ்வனோ கதிமற்றுவேறிலை யுண்மையே
காயமீதுள போதிலேயருள் காட்டுவாய்முரு கையனே. (சகூ)

ஐயராவணன் வெய்யமாமுடி யாழவேயன்ற டர்த்திடும்
பையராவணி வேணியாரருள் பாலனேகொடு மூரனே
மெய்யராயுனை யெண்ணிலாதுழல் வீணர்நேயமு ருமலுன்
செய்யதாணிழ றன்னையேநினை சிந்தைதந்தரு ளெந்தையே. (ரு௰)

திருச்சிற்றம்பலம்.

“ பித்தாபிறைசூடி ”

என்ற, தேவாரப்பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தாயுனை யன்றியொரு தெய்வநினைக் கில்லேன்
சிந்தாகுல மாமோவுயர் தேவாசெக தீசா
கொந்தார்மல ருடைவாழ்கொடு மூர்மேவிய குமரா
கந்தாவுமை மைந்தாபுகல் காணேனருள் வாயே. (ருக)

வாயாலுனை யாதேமனம் வைத்தாரடி யார்க
ளாயேனவர் போலேயுனை நாடாதுழன் றேனே
தூயாவரு ணேயாகொடு மூர்வாழ்பரஞ் சோதீ
யோயாதிடை வேனேவுனை வோராமலி ரேனே. (ருஉ)

ஏனோவறி கில்லேனுமக் கென்மேலதி கோப
நானோர்தர மாமோவினை நாடேனிது மெய்யே
வானோர்பணி கொடுமூருடை வாழ்வானகு கேசா
ஞானோதய பரிபூரண நாதாவரு ணீயே. (ருங)

நீயேயுட னீயேயுயிர் நீயேயுள மாதி
நீயேமதி நீயேகதி நீயேபுக ணீயே
நீயேபொருள் கொடுமூருடை நேயாதெரு ணீயே
நீயேயனை நீயேகுரு நீயேநிலை வாழ்வே. (ருச)

வாழ்வேநிலை யெனநான்மனம் வைத்தேபுவி மீதே
தாழ்வேயடை வேனோவினை தானேவலி தாகு
மூழ்வேதனை தீராய்கொடு மூர்வாழுடை யோனே
பாழ்வேறு நீர்மாதவர் பாலார்குக வேளே. (ருரு)

வேளாகமி லாதேயெரி வேதாகம நாதர்
தாளாருதை யாலேபுவி சாய்வாகிய காலன்
கோளாலழி வேனோகொடு மூராவடி யார்கண்
மாளாதருள் வோனேயிது வாமோமுறை தானே. (ருசு)

தானாய்நினை யாதேயுனை வேறாமொரு சார்பா
யானுடுறு வேனோகதி யாதோபெறு வேனே
வானுடுறு பொழில்சூழ்கொடு மூர்மேவிய வாழ்வே
தேனுடிய தாராய்நிலை சேராயொரு வீடே. (ருஎ)

வீடாதர மாகாதினி வீணுயுழல் வேனோ
பீடாரிரு தாள்சேர்கதி பேராதருள் வாயே
கோடார்கர னேத்துங்கொடு மூராவெம னாலே
வாடாதெனை யாளாயெனின் மற்றார்துணை யாமே. (ருஅ)

ஆமாலய னார்மாதவ னுகண்டல னுகு
நாமாவென வேமாமன நாடுங்கொடு மூரா
தேமாநிழன் மேவும்பெரு மானின்றவ தீமை
போமாறுசெ யாய்நீயெனி லியாதோபுகன் மெய்யே. (ருகூ)

மெய்யாயுண ராதேயுடல் வீணாகவ ளர்த்தே
யுய்யாதுழல் வேனேகொடு மூர்வாழுடை யோனே
பொய்யாநிலை தந்தேவினை போமாறுசெ யாயே
லையாகும னாயாவெனை யாள்வாருளர் யாரோ. (சுo)

திருச்சிற்றம்பலம்.

"நீளநினைந்தடியேன்"

என்ற, தேவாரப்பண்—நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

யாரொது செய்திடினு முனே யன்றிந டந்திலவென்
றோருமனந்தருவாய் கொடு மூருடை யுற்றவனே
நேரும் பிறவிவலை யற நீயருள் செய்திலையேல்
சாரும் புகலுளவோ விது சத்தியஞ் சத்தியமே. (சுக)

சத்திக் கொருபுதல்வா சுரர் தங்கட் கொருமுதல்வா
சித்திக் கணேசனுடன் வரு தென்கொடு மூருடையாய்
பத்திக்க ணின்றறியா முழுப் பாமர னெனினு
முத்திக்கண் வைத்தருள்வாய் வினை தீர்த்திடு முன்னவனே. (சுஉ)

முன்னம் பலவினைகள் செய்த மூடனென் றுலுமையா
வின்னம் பிறவிநெறி யெனக் கின்றி யருள்புரிவாய்
அன்னம் பயில்கழனி கொடு மூருடை யாளரசே
யின்னம் பிறவாத மயின் மேல்வரு வேலவனே. (சுந)

வேலமர் கண்ணியர்செய் மயல் வேரற விட்டெனது
பாலமர் கின்றவரம் பெறும் பக்குவம் பெற்றிலனே
யாலமர் கண்டரருள் கொடு மூருடை யாளரசே
மேலமர் செய்மறலி துயர் வீட்டிவை வீட்டிவையே. (சுச)

வையம் புனலனல்கால் வெளி மற்றதுந் தானாகி
யுய்யும் படியருள்செய் துயிர் தோறு நிறைந்தவனே
செய்யந் திகழ்கொடும ளூடை மேவிய சேவகனே
யையம் புகலாதே யெனக் கானந்தந் தந்தருளே. (சுரு)

தந்தையுந் தாயுமுடன் பிறந் தார்களுஞ் சார்ந்தவரு
மைந்தரு மாதர்களு நிலை வாழ்வுகொ லோபுகலாய்
பந்தம் விலகவருள் சகப் பற்றிலர் பற்றுடையாய்
சந்ததம் வாழ்வுமிகுங் கொடு மூர்வளர் சண்முகனே. (சுசு)

சண்முக மாகிவைய மெங்குந் தன்முக மாகியுயர்
விண்முக மாகிநின்ற கொடு மூருடை வேலவனே
பெண்முக மாகியந்தோ மனம் பேதலி யாதெனக்குக்
கண்முக மாகிநின்று யருள் காட்டுவை காட்டுவையே. (௬எ)

காட்டிற் றவம்புரிவார் வினை காதி நினைக்கரிய
வீட்டிற் புகவருளுங் கொடு மூருடை வித்தகவென்
பாட்டிற் கிரங்கிவரந் தரும் பார முனக்கிலையோ
வாட்டிற் கிசைந்தவர்தம் விழி யார வுதித்தவனே. (௬அ)

நேயங் கலந்துனையே தொழு நேமன மின்றியிந்தக்
காயங் கலந்துவந்தே படுங் கட்டந் தவிர்த்தருள்வாய்
சேயங் கலந்துவந்தா லனை சீறி யகற்றுவளோ
வாயங் கலந்துவளர் கொடு மூருடை யாண்டவனே. (௬௯)

ஆண்ட செயலனைத்து முனை யன்றி யறிபவரார்
பூண்ட நிலையனைத்து மருள் புண்ணிய மானவனே
நீண்ட வளங்குலவுங் கொடு மூருடை நின்மலனே
தாண்டவ மாடிநின்றார் தருஞ் சண்முக சுந்தரனே. (எ0)

திருச்சிற்றம்பலம்.

## திருநேரிசை.

"பத்தனாய்ப்பாடமாட்டேன்"

என்ற, தேவாரப்பண் - சொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரா னந்த வாழ்வே சோதியே கருணைக் குன்றே
மந்திர முதலே கோல மயிலுடைப் பொருளே நீங்காக்
கொந்தவிர் சோலை யோங்குங் கொடுமளம் பதிவாழ் தேவே
யெந்தையே யமுதே தேனே யெனைத்தடுத் தாள்வாய் தானே. ()

தானென்ற மமதை யோங்கித் தருக்குடன் றிரியு மென்னை
யேனென்றுங் கேட்பா ரில்லை யென்செய்வேன் புகல்வே றுண்டோ
தேனின்று கமழ்தா ராயுன் றெரிசனங் கொடுத்தா லுய்வேன்
வானின்ற மாட மோங்கி வளர்கொடு மூரின் வாழ்வே. (எஉ)

வேனிலான் கணையா லந்தோ மின்னனார் வலையிற் பட்டுக்
கானுறு மான்போ லேங்கிக் கடையரிற் கடைய னானேன்
மானவே லுடையா யூழி வளர்கொடு மூரா யின்னந்
தானலை யாத வாறுன் றாணிலை தந்தாள் வாயே. (எ௩)

வாயினுற் றுதிப்பார் கையால் வணங்குவார் விழியாற் காண்பார்
தூயசிந் தனையா லுன்னைத் துகளற நினைப்பார் மேலோர்
பேயனே னதற்கு மாறுப் பேதையர் தமையே கண்டே
னுயினுங் கொடுமே ளூர்வா ழையனே யருள்செய் வாயே. (எச)

அருளிலா திருக்கிற் றேக மவலமே யன்றி மாண்பாற்
றெருளினல் வலியாற் றேசாற் றிருவினுற் புகழா லாண்மை
மருளினுற் பயனுண் டாமோ வளர்கொடு மூரா சோதிக்
கிருளினுற் கெடுதி யுண்டோ வியல்பெனக் களித்தி டாயே. (எரு)

ஏற்றுவார் கொடியார் தந்த விறைவனே மற்றோர் தெய்வ
மேற்றுவார் கொடியா ரந்நா ளேற்றுவார் நமன்கை யந்தோ
தேற்றுவா ரின்றி நாயேன் றியங்கினேன் கொடுமேண் மேவும்
போற்றுவார் பொருளே நின்றுட் புணைகொடு புரந்தாள் வாயே. ()

புரந்தர னயன்மால் காணுப் புகழ்கொடு மூரா யன்பர்
நிரந்தரங் காணுஞ் சோதி நின்னடி யடைந்த வென்னைத்
தரந்தர மாக மேலாந் தரத்தில்வைத் துனையே வாழ்த்தும்
வரந்தரல் வேண்டு மல்லான் மற்றென்றுங் கருதி லேனே. (எஎ)

கருத்தவா ளவுணர்க் காய்ந்த கப்பண மிருக்கத் தோகை
திருத்தமா யிருக்க மின்னுர் சேர்ந்துட னிருக்க வென்மேற்
பொருத்தமாய்க் கடைக்க ணோக்கம் பொலிவுட னிருக்க மற்றோர்
வருத்தமே தெனும்வாய் தந்தாள் வளர்கொடு மூர்வல் லோனே. ()

வல்லையே பழித்த கொங்கை மாதரார் வழூத்தா நின்ற
சொல்லையே வீணு யந்தோ சுருதிவாக் கியம்போற் கேட்டுத்
தொல்லையே வளர்த்தே னுன்றன் றுணையடி காண்ப தென்றோ
தில்லையே மானு மெங்க டென்கொடு மூர்வாழ் தேவே. (எகூ)

தேவர்வா சவன்யாழ் வல்லோர் சித்தர்மா தவ ரியக்கர்
மூவரா தியர்கள் வந்து முறைமுறை பணியா நிற்குஞ்
சேவலங் கொடியா யின்னுஞ் சிறியேனை யாட்கொ ளாயேல்
யாவர்தாம் புரப்பார் சொல்லா யெழிற்கொடு மூரின் வாழ்வே. ()

திருச்சிற்றம்பலம்.

"பொன்னூர்மேனியனே"

என்ற, தேவாரப்பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வா ரன்புடையார் பிர மாவொடு வானவருஞ்
சூழ்வா ருன்பதத்தே யுனைச் சூழா தேயிருந்தோர்
தாழ்வா றொன்றுறுதி மறை சாற்றுத லோர்ந்தடைந்தேன்
பாழ்நோய் தீர்த்தருள்வாய் கொடு மட்பதி பற்றுமுத்தே. (அக)

முத்தே வர்க்குநிலை தரு மோன பரஞ்சுடரோ
சித்தே தென்கொடுமட் பதி தேடி யடைந்தவனே
பித்தே கொண்டலைந்தேன் மனப் பேதலிப் பாற்றியருள்
வித்தே தந்திடுவாய் மயின் மேவிய விண்ணவனே. (அஉ)

விண்ணே மாருதமே கதிர் வெவ்வன லேபுனலே
மண்ணே யாருயிரோ மதி யேகொடு மட்பதியே
கண்ணே கண்மணியே யருட் கற்பக மேயடியே
னெண்ணே யென்னுளமே யுன் னிணையடி தந்தருளே. (அஙு)

தந்தா ரந்துறந்து பிற தாரங்கொ ணர்ந்தவிரண்
டைந்தா குந்தலையான் றனை யன்றடர்த் தோன்சுதனே
மந்தா ரம்புனையுங் குழல் வள்ளிமகிழ் கொடுமள்
வந்தா யென்றுனையே தினம் வந்திக்க வைத்தருளே. (அச)

வைத்தார் வந்தொழுகார் மன வாதனை வாய்ந்துலகி
லெய்த்தா ரெய்த்தனரோ வினை யென்று தவிர்ப்பர்கொலோ
மெய்த்தார் தந்தவமே கொடு மட்பதி வேலரசே
யுய்த்தே நற்கதியின் விரைந் தூட்டுவா யுள்ளமுதே. (அரு)

உள்ளா ராவவையும் வெளி யோட்டி யருணலத்தைக்
கொள்ளார் தம்முடனே யுறுங் கூட்டுற வைத்தவிர்ப்பாய்
கள்ளார் தண்கடப்பம் புனை கந்த கொடுமளுடை
வள்ளான் மெய்ப்பொருளே பெற வைத்தருள் வானவனே. (அசு)

வானோர் வந்துதொழுங் கொடு மட்பதி வாழ்முதலே
மானே துங்கனுமை தரு மைந்த பிறவிவினை
யானே குந்துயர முனை யன்றி யறிபவரா
ரேனே நின்கருணை யெனக் கின்னு மமைந்திலவே. (அஎ)

வேதா வும்புவியி லெனே வீணிற் படையாமன்
மாதா வுஞ்சலிப்பாய்ப் பெற்று வைத்து வளர்க்காமற்
போதா ருங்கொடும ளூடை மேவிய புண்ணியனே
யாதா ரந்தருவாய் பிற வாநெறி யார்ந்திடவே. (அஅ)

ஆரா ருற்றிடினென் செய லற்ற பொழுதின்முகம்
பாரார் வெம்மறலி யுயிர் பற்றிடி லென்னுடனே
வாரா ரென்னிலங்தோ புவி வாழ்க்கையி லென்றுயரந்
தீராய் தென்கொடுமெட் பதி மேவிய சேவகனே. (அகூ)

சேவே றும்பரமன் றரு செஞ்சுட ரோயடியார்
பாவே றும்பதனே யுனைப் பாட வரமளிப்பாய்
மாவே றும்பொழில்சூழ் கொடு மட்பதி யாய்சுருதி
நாவே றும்பொருளே யரு ளூட்டியிவ் வேளையிலே. (கூ0)

திருச்சிற்றம்பலம்.

"வீடலாலவாயிலாய்"

என்ற, தேவாரப்பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வேளையன்றி வந்தவேளை வேவநோக்கும் வெண்ணிறக்
காளைவந்த சோதிதந்த கந்தசெந்தில் வந்தவா
கோளைவென்ற சீலனே கொடுமேளூரில் வேலனே
வாளைவென்ற கண்ணினர்செய் மையதீர வைப்பையே. (கூக)

வைப்பருத மாடகூடம் வாழ்கொடும ளம்பதி
யைப்பெருத சீவர்சண்ட னுள்வினையிற் கூடுபோய்க்
கைப்பருத சிந்தையாய்க் கடுநரகின் மாய்கிறு
ரெய்ப்பிராத நெஞ்சமேயுன் னெண்ணமான தென்னையே. (கூஉ)

என்னையென்ப னேய்விடாம லென்னைவந்து மேவுதே
பின்னையென்ன நேருமோவுன் பேரருளைப் பேணிலே
னன்னமன்ன வன்னமாத ராய்கொடும ளம்பதி
மன்னிநின்ற சோதியென்முன் வந்தருள்செய் வல்லையே. (கூங)

வல்லைவென்ற கொங்கைபொங்கு மாதரார் முயக்கமோ
தொல்லையென்று நின்கழற் றொடர்படைந்தார் தொண்டரோ
தில்லைவந்த நாதர்தந்த சேயனே கொடுமளூ
ரெல்லைவந்த சோதியுன் னிணையடியி லாள்வையே. (கூச)

ஏதிலாரி னுயினேனி டைந்துடைந்து வாடவோ
தீதிலாத வாழ்வுமேவு தென்கொடும ளம்பதி
யாதியே யநாதியே யரூபியே சொரூபியே
சோதியேயுன் ருளலாது தொந்தமேது பந்தமே (கூ௫)

பந்தமேது நன்மையேது பாவமேது பாரமாஞ்
சொந்தமேது தூரமேது தூய்மையேது சோலேவாய்
மந்தியேற வேநறவம் வார்கொடும ளம்பதி
வந்தவாநின் னீள்கருணே வல்லேவந்து வாய்க்கினே. (கூ௬)

வாய்க்குமோநின் சேவையென்ன மாநிலத்தின் மற்ருெரு
பேய்க்குமோ வெருவிநின்று பேதலிப்ப னேயனே
நோய்க்குமோர் மருந்தெனு நுவல்கொடும ளூருளாய்
தாய்க்குமோர்தா யானநின் சரணருள்வாய் தந்தையே. (கூ௭)

தந்திதந்த டங்குருத தன்மைபோலெ னெஞ்சையே
வந்திதம்பு ரிந்துமந்தோ மட்டடங்கு தில்லேயே
கொந்துவந்த மாலேவேய் கொடும்ளூ ருடையமர்
மைந்தமைந்த கந்தனேயுன் வார்கழற் றருவையே. (கூ௮)

தருவிலங்கு நாட்டினுஞ் சதுர்முகன் பதியினு
மருவிலங்கு பூந்துழாயன் மாநகர மீதினும்
பொருவிலங்கு நீக்குமேயுன் பொன்கொடும ளம்பதி
கருவிலங்கு வந்துருது காப்பதுன் கடமையே. (கூ௯)

மையளாவு கண்ணினர் மயக்கமுந் தியக்கமும்
பொய்யளாவு துன்பமும் பொருந்து ருதுபோகுமே
மெய்யளாவு சிந்தையின்கண் வேதவேத நாதனுஞ்
செய்யளாவு தென்கொடுமட் டேவன்வந் திருக்கினே. (க௦௦)

திருச்சிற்றம்பலம்.

கொடுமளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

ஆ று வ து.

முதுகுளத்தூர்என்று வழங்குகிற

# குழந்தாபுரிப் பதிற்றுப்பத்துப்பதிகம்.

## கடவுள்வாழ்த்து.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வள்ளிதெய்வ யானையிரு மருங்கமையுங்
கதிர்வேலன் மலர்த்தாட் கன்பாய்த்
தெள்ளுதமிழ்ப் பதிற்றுப்பத் துப்பதிகம்
புகல்வதற்குச் சிரத்தை யோடு
கள்ளவிழு மாத்தியமர் சிரத்தானை
வரத்தானைக் கருணை வாழ்வைப்
பிள்ளைமதி யொருகோட்டுச் சித்திவிநா
யகன்கழலைப் பேணு வோமே.

---

நூல்.

## வருகைப்பத்து.

கலிவிருத்தம்.

கந்தா வருக கலியகற்றுங் கடம்பா வருக கௌரிதரு
மைந்தா வருக வாறுமுக மணியே வருக வாழ்த்தவரந்
தந்தாய் வருக பன்னிருகைத் தருவே வருக தமிழ்முனிமுன்
வந்தாய் வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (க)

முருகா வருக மூவருக்கு முதல்வா வருக மூதறிவோர்க்
கருகா வருக வன்பர்மனத் தன்பே வருக வழையார்பா
லுருகா வருக மறைமுடிமே லுறைவாய் வருக தண்டுழவன்
மருகா வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (உ)

கோனே வருக வெனையடிமை கொண்டாய் வருக கோள்பலவாய்
வானே முதலாய் நிறைந்தபெரு மானே வருக தெவிட்டாத
தேனே வருக புத்தமுதத் திரளே வருக தேவர்தங்கோ
மானே வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௩)

துதியே வருக வள்ளிமகிழ் துணையே வருக தொழுமடியார்
கதியே வருக பன்னிரண்டு கண்ணா வருக காணரிய
நிதியே வருக நாயடியே னினைப்பே வருக நேயமுளார்
மதியே வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௪)

அயிலாய் வருக சூரனுர மழித்தாய் வருக வனங்கன்மகி
ழெயிலாய் வருக வென்னிருகண் ணொளியே வருக வோதியிரு
குயிலாய் வருக வரனருளுங் குமரா வருக கோலமிகு
மயிலாய் வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௫)

வீரா வருக பதங்கொடுக்கும் வேலா வருக மென்கடப்பந்
தாராய் வருக வென்றுயரைத் தவிர்ப்பாய் வருக சலியாதென்
னேராய் வருக தருகாது நித்தம் வருக நினையார்முன்
வாராய் வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௬)

வேலா வருக வெப்பொருட்கு மேலாய் வருக கொடுங்கால
காலா வருக வென்முடிசேர் காலா வருக கயற்கணிதன்
பாலா வருக தொண்டருக்கோர் பாலா வருக பசுங்குறத்தி
மாலா வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௭)

நல்லாய் வருக வெவ்வுயிர்க்கு நாதா வருக நண்பிலர்முன்
னில்லாய் வருக வென்மனத்து ணிற்பாய் வருக நினையார்பாற்
செல்லாய் வருக வல்வினையைத் தீர்த்தாய் வருக சிவோகமருள்
வல்லாய் வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௮)

ஈசா வருக வடிவேலுக் கிறைவா வருக வருணகிரி
நேசா வருக சுருதிபுக னீதா வருக புயவலங்கல்
வாசா வருக வளையறரும் வணிகா வருக தொண்டருள
வாசா வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௯)

ஐயா வருக வென்மனத்து ளன்பே வருக மூன்நான்கு
கையா வருக வள்ளிமனங் கையாய் வருக கசடனையாட்
செய்யாய் வருக மாயையெலாஞ் செய்தாய் வருக வெனைத்துயர்க்கு
வையாய் வருக குழந்தைநகர் வாழ்வே வருக வருகவே. (௧௦)

## நெஞ்சப்பத்து.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உள்ளபடி யெத்தனையோ விந்நாண் மட்டு
மோயாமற் சொல்லியென்வா யோய்ந்த தல்லா
லெள்ளளவும் பத்தியுனக் கில்லை யில்லை
யென்செய்வே னையையோ வினிமே லேனுங்
கள்ளமொடு வாணுளைக் கழித்தி டாமற்
கசிந்துருகி யானந்தக் கண்ணீர் தேம்பத்
தெள்ளமுதாய்த் தேன்பாகாய்ப் பிறங்கு மெங்க
டென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கக)

பன்மலரை யெடுத்தெடுத்துக் குவிய லாகப்
பரமனடிக் கணிந்தாலும் பரமா னந்தச்
சொன்மலராற் கவிமாலை சூட்டி னாலுஞ்
சொல்லரிய வாலயம்போய்த் தொழுதிட் டாலு
நன்மதிநீ யடையாயேற் கதியுண் டோவுன்
னடத்தையெலா மனைவருக்கு நகைப்பாங் கண்டாய்
சென்மவினைக் கருக்குமைக்குந் தொண்டர் வாழுந்
தென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கஉ)

திங்கணிக ரொழின்முகத்தார் மயலே முத்தி
சேர்க்குமெனத் தனைமறந்து திரிந்தே யன்னார்
தங்கனிவாய் நறவருந்திப் போக மாற்றித்
தளர்ந்ததல்லா லென்னகண்டாய் சவமே யந்தோ
விங்குனையார் மதித்திடுவார் நல்லோர் சேர்க்கை
யெய்திடுமோ வெவர்துணையா மினிமே லேனுஞ்
செங்கமலங் குவளைமலர்த் தடங்கள் சூழுந்
தென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கங)

கருத்துமட்டுஞ் சரியான நிலையி னின்முற்
கைகூடு ஞானமெனக் கற்றோர் காட்டுந்
திருத்தநெறி யடைந்தறிவை வளர்த்து முத்தி
சேராமற் காலமெலாஞ் சிதைய விட்டுப்
பருத்தமுலைப் பாவையரைப் பரிந்து பாடிப்
படித்திருக்கும் படிப்பையெலாம் பாழாய்ப் போக்கித்
தெருத்தெருவா யலைவதென்னே நிட்டை கூடித்
தென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கச)

எத்தனைநா ளிருந்தாலு மிறப்ப துண்மை
யென்றுனக்குத் தெரியாதா வின்ன முன்றன்
புத்தியினு லுன்னேடே யெனக்கெந் நாளும்
போராட்ட மாய்ப்பொழுது போன தல்லான்
முத்தியினிற் சேர்ந்திடுதற் கேன்ற மட்டு
முயற்சியில்லா திருந்தனையுன் மூட நீங்கிச்
சித்தியெலாங் கணப்போதிற் பலிக்குஞ் சொன்னேன்
றென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கரு)

ஆனலு முன்போலும் பாவி யிந்த
வவனிமிசை யில்லையில்லை யறிவில் லாம
லூனலு மெலும்பாலு நிறைந்த விந்த
வுடற்சுமையைச் சதமெனவே யுழன்று யந்தோ
மானுலுங் கயலாலுங் கணைக ளாலும்
வழுத்தரிய கருணைவிழி வள்ளி பங்கன்
றேனலும் பாலாலும் விளையுஞ் செந்நெற்
றென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கசா)

மெய்யிருக்குந் தவத்தோரைத் துருவிக் கண்டு
வேண்டிவர மடையாமல் வீணே யந்தோ
பொய்யிருக்கும் பாமரரைக் கொலைசெய் வோரைப்
பொறையிலரைப் பிறன்மனையிற் புக்கு வோரை
மையிருக்குங் கண்ணியரைப் பொருளென் றெண்ணு
மடையர்களைச் சேர்வதுநன் மதியோ நன்றி
செய்யிருக்கு முதலவெலாங் கைவந் தெய்தித்
தென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (களஎ)

அருவருப்புத் தருஞ்செல்வப் பெருக்கி னுலு
மாதியினிற் செய்ததவச் செருக்கி னுலு
மொருவருக்கு மடங்காமற் றிரிந்த சூர
னுரங்கிழித்தெவ் வுயிர்களையு மோம்பி யச்சூர்
கருவறுக்குங் கூரியவேற் படையைத் தாங்குங்
கரதலத்தா னம்மையினிக் கருவிற் சேர்க்கான்
றிருவிருக்கும் பொய்கைவளங் கதிக்கு மேன்மைத்
தென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கஅ)

கற்றனைத்துந் தெரிந்தாலு முன்னு லன்னே
கதியடைய வேண்டுமிதைக் கவனி யாமன்
மற்றைநெறிக் கெனையுய்த்த வியாயங் கொல்லோ
மதியில்லாப் பாழுறுவாய் மயக்க நீங்கிச்
சற்றேனு மொருநிலையி லிருந்தா யானூற்
றடையின்றி மோட்சநிலை சார்வோங் கண்டாய்
சிற்றறிவைக் கொள்ளாம லெந்த நாளுந்
தென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (கசூ)

நான்செய்த முற்றவத்தின் பலத்தி னாலு
நல்லோரைச் சேர்ந்தவொரு நலத்தி னாலு
மீன்செய்த கட்குறத்தி யருளி னாலும்
வெவ்வினைதீர்ந் தின்படையும் வேளை யாலும்
வான்செய்த பெருந்தகையோர் வாழ்த்துஞ் செய்ய
மலர்த்தாளைத் துதிக்குமென்றன் வாய்ப்புன் சொல்லைத்
தேன்செய்த வண்டமிழாய்க் கொள்ளு மெங்க
டென்குழந்தைக் கந்தனடி சேர்வாய் நெஞ்சே. (உ0)

---

## தெய்வப்பத்து.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பத்திக்கு மிஞ்சியதோர் பயனுளவோ
வென்றுனடி பணிவோர்க் கெல்லாஞ்
சித்திக்கும் படியருளுந் தெய்வமே
யென்வினையைத் தீர்த்தாட் கொள்வாய்
எத்திக்குந் தேடரிய வின்பரச
வாரிதியே யினிக்குந் தேனே
தித்திக்கு மாரமுதே தீங்கரும்பே
தென்குழந்தைத் தேவ தேவே. (உக)

எத்தலத்து மிருப்பாயென் றருமறைகண்
முறையிடுதற் கேற்க வென்று
மித்தலத்து மிருப்பாயென் றெண்ணியுனைத்
தினம்பரவு மெனக்குன் றாளைக்

கைத்தலத்தா மலகமெனக் கனவிடத்து
நனவிடத்துங் காட்டி யாளச்
சித்தமிரங் காதிருந்தா லென்செய்வேன்
றென்குழந்தைத் தேவ தேவே. (உஉ)

கற்கண்டே யனையமொழி கயல்விழிச்செம்
பவளவிதழ்க் கரிய கூந்தல்
விற்கண்டே யொடுங்கவளர் நுதற்குறத்திக்
கொருபாகா மிடியேன் பாவின்
சொற்கொண்டே செவிமடுக்குந் துரையேநின்
கழலிணையைத் தோய்வே னல்லாற்
றெற்கண்டே னென்றுமுன்றன் றிருவருளாற்
றென்குழந்தைத் தேவ தேவே. (உ௩)

கைக்குவருந் திரவியமென் றென்றுமியற்
றுதிருந்து கவலு வார்போற்
றக்கரிய மத்துடனின் றுமறைத்தாள்
பரவாமற் றவித்தே னந்தத்
துக்கமெவ ரகற்றிவைப்பா ரையனே
நின்னையன்றித் துணையு முண்டோ
திக்கனைத்தும் படைத்திரட்சித் தளிக்கவல்லாய்
தென்குழந்தைத் தேவ தேவே. (உ௪)

எந்நாளுன் கருணை யெய்துமோ
வஃதறியே னென்று யென்றுஞ்
சொந்தமா யிருந்துனடி துதிக்கவின்னுந்
தரமலனே சோதிக் காதே
கந்தனே பன்னிருகைக் கற்பகமே
யற்புதமாங் கனியே கண்ணே
சிந்தையே னிரங்கிலைநீ புகன்றிடுவாய்
தென்குழந்தைத் தேவ தேவே. (உ௫)

நினையாமை யென்னுமதம் பிடித்தவனா
யல்லாது நித்த நித்தம்
வினையாமை தீர்த்திடுதற் குன்பதமே
தம்பமென வீழ்ந்து போற்று

மனையாமைக் கணிபுதல்வா சோதனைசெய்
திடுவதுனக் கிதுவோ நீதி
சினையாமை வைகுமெழிற் றடஞ்சூழுந்
தென்குழந்தைத் தேவ தேவே. (உசு)

நம்புமடி யவர்க்கருளு நாயகனீ
யெனச்சுருதி நவில்வ தெல்லாம்
வம்பதற்குன் மலர்த்தாளை வைகலுமே
மனத்திருத்தி வணங்கி நீயே
தம்பமெனப் பரவுமென்னை யடுத்துவரா
திருப்பதுவே சாட்சி யையயா
செம்பவள வாய்குறத்திக் கொருபாகா
தென்குழந்தைத் தேவ தேவே. (உஎ)

சாற்றருமெஞ் ஞானவருட் டலைவாநின்
றுணிழலைச் சார்ந்தோர் துன்பை
மாற்றியவர்ப் புரத்தலுன்றன் கடமையன்றி
யெனக்கென்றோர் வழக்கு முண்டோ
கூற்றுவனுள் வந்துயிரைக் கொடுபோமே
யென்னமனங் குலையு மென்னைத்
தேற்றிமுற்றுங் காக்கவிது சமயமையா
தென்குழந்தைத் தேவ தேவே. (உஅ)

தொழுதுனதா லயத்தெய்தி வினைப்பயனால்
வருந்துமதைச் சொல்லி சொல்லி
யழுதழுது முகம்வீங்கி வாய்புலர்ந்தே
யவலமுற்றே னந்தோ வந்தப்
பழுதகற்றி யாட்கொண்டா னின்பெருமைக்
கிழுக்காமோ பகர்வா யையயா
செழுமலர்க்கா வெழிற்பழனச் செல்வமிகுந்
தென்குழந்தைத் தேவ தேவே. (உகூ)

பாராத பேரையெல்லாம் பார்த்துரைத்தே
னவராலும் பலிக்கு மென்ன
நேராத கோயில்கட்கு நேர்ந்தேனென்
றுயரமின்ன நீங்கக் காணே

ளோராத பேர்க்ககலு முன்னடியே
  தஞ்சமென வுறுதி கொண்டேன்
தீராத ரோகமெல்லாந் தீர்த்தருள்வாய்
  தென்குழந்தைத் தேவ தேவே. (௩0)

---

## அருட்பத்து.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருவா யுருவா யரனரியா யயனு யவளா யாதரிக்குங்
குருவா யனையாய்த் தந்தையுமாய்க் குலவுங் குமரா வினியடியேன்
கருவா யடையா துன்னடிக்கீழ்க் காப்பா னென்றன் கண்ணெதிரோ
வருவாய் சரணங் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. ()

கருந்தா தனைய மனத்தினமன் கனைத்துக் கனன்று கடாவேறி
வருந்தாட்சணியம் பார்த்திடுமோ மயங்கிப் பொறிகள் கலங்கியொன்றிற்
பொருந்தா தலறித் தவித்திடுமேப் போதா ராதா ரந்தமியேன்
வருந்தா திருக்கக் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. ()

இணக்க முடையார்க் கெளிதாய்வந் தெல்லா முதவி வாழவைக்குங்
குணக்குன் றேயென் குறையனைத்துங் கூறி யலறச் செவிமடுத்தும்
பிணக்கந் தீர்க்குங் கருணையின்னும் பெற்றி லேனென் பிழைத்தேனென்
வணக்கங் கொண்டே குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே.

நீவந் தடியேன் றுன்பத்தை நீக்கா தேதோ கொண்டிருக்குங்
கோவந் தணியா திருந்தாலென் குறையை யெவர்பாற் கூறியுள
பாவந் தொலைப்பே.னையோவென் பாடு முழுதும் பார்த்திலையோ
மாவந் தமருங் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. (௩௪)

காவி கவினுங் கட்குறத்தி கனியுங் கனியே குஞ்சரிக்கோ
ராவி யேதெள் ளமுதேயென் றல்லும் பகலு மோயாமற்
கூவி னுலுஞ் சற்றுமனங் குழையா திருப்ப தறமாமோ
வாவி சூழுங் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. (௩௫)

வாயாற் பிதற்று மென்றுயனா வழுத்தக் கேட்டே யிரக்கமிலாப்
பேயா னுலு மனமிரங்கிப் பேசு மன்றோ வுலகீன்ற
தாயாம் வள்ளி சற்றேனுஞ் சாற்ற விலையா நின்பதமு
மாயா வரமுங் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. (௩௬)

கதியே யுதவ வருங்கருணைக் கடலே யென்னைக் காக்கவிது
ததியே யேதுந் தடையுளதோ சரணென் றடைந்தார் தமக்குமொரு
விதியே தையா களைகணிலா மிடியேற் குன்றுள் விலகாத
மதியே பெருகக் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. ()

மருந்து மருந்தென் றேயாமல் வாயா லருந்திப் பத்தியமா
யிருந்துங் கன்ம வினையகல விலையே யாருக் கோவந்த [ம்
விருந்தென் றிருந்தா யிதுவுமொரு விளையாட் டேயோ வினியேனு
வருந்தா திருக்கக் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. ()

தாயுஞ் சலிக்கத் தந்தைதமர் சலிக்க மனையாள் சலிக்கவருஞ்
சேயுஞ் சலிக்க நோய்சலிக்கச் சென்ம மெடுத்தே னையோபின்
னீயுஞ் சலித்தா லென்செய்வே னித்த முனையே யழைத்தழைத்து
வாயுஞ் சலித்தேன் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. ()

முன்னே யரிதா மெத்தவத்தை முடித்தேன் கொல்லோ வதனலுன்
பொன்னே ரடிக்குத் தமிழ்மாலை புனையப் பெற்றே னென்னினுமென்
கன்னேர் நெஞ்சஞ் சற்றேனுங் கரையக் காணேன் கருணையுடன்
வன்னோய் விலகக் குழந்தைநகர் வடிவே லவனே யருள்வாயே. ()

---

## சடாக்ஷரப்பத்து..

### தரவுகொச்சகக்கலிப்பா.

செந்திருமால் வேதன் றினந்தேடுந் தாளிணைக்கென்
பைந்தமிழ்த்தார் சூட்டவரம் பாலித்தா யெந்தாயே
சொந்தமென்ப தெல்லாந் துணைவருமோ நின்கருணை
தந்தருள்செய் வாய்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சுக)

கங்கையமர் வேணிக் கடவுடரு மாங்கனிக்காச்
சங்கையின்றி யண்டமெலாஞ் சாரிவருந் தோகையமர்
செங்கதிர்வேற் கையாயென் றீவினையைத் தீர்த்தருள்வாய்
சங்கமுழங் குங்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சுஉ)

மாதாவும் பூந்துளவ மாலையணி மார்பானும்
வேதாவு முக்கணனும் விண்ணவரு மண்ணவரு
மாதாவுந் தந்தையுமென் வாழ்வுந் தவமுமன்ன
தாதாவு நீகுழந்தைச் சாமி சடாக்கரனே. (சுரு)

மங்கையொரு பாகன் வரத்தில்வந்த மாமணியே
பங்கையனைக் காவற் படுத்தியவை வேற்கரத்தாய்
கொங்கைவிம்மு வள்ளிமகிழ் கோவேயெற் காக்கவின்னஞ்
சங்கையுண்டோ சொல்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சச)

மான்வருமோ வேங்கையென வாடுவபோற் றென்றிசையோன்
வான்வருமோ வென்றே மயங்குவது கண்டினியுந்
தேன்வருந்தா ராயுன் றிருநோக் கெனக்கென்று
தான்வருமோ தென்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சரு)

நீதியாய் வேலைநம்பு நேயனென்று நில்லாமல்
வாதியா யோர்கான் மறலிவரு மேலுடலைப்
பாதியாய் வீழ்க்கும் பரனேயப் போதும்வர
சாதியாய் தென்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சசா)

துதிவருவாய் வந்தெனது துன்பகற்றாய் பரங்குன்றப்
பதிவருவா யன்பருக்கின் பந்தருவாய் கோலமயிற்
கதிவருவா யேழைதனைக் கைவிடா தாளவிது
ததிவருவாய் தென்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சஎ)

கருமவினை யாலுனடி காணாமல் வாழ்வோர்தம்
பெருமையினா லென்னபயன் பெற்றிடுவார் கன்மனத்துக்
கருமைநமன் வாராமுன் காத்தவஞ்செ யாதுயர்வாந்
தருமமனந் தாகுழந்தைச் சாமி சடாக்கரனே. (சஅ)

தாரமென்ன மக்களென்ன தந்தையென்ன தாயென்ன
வீரமென்ன வுற்றிருந்தும் வெய்யநமன் வந்திடுமந்
நேரமென்ன கூடவரு நின்னையன்றி மற்றவையாற்
சாரமென்ன சொல்குழந்தைச் சாமி சடாக்கரனே. (சகூ)

நயங்கடெரி யாச்சிறியே னுயடியேன் றன்னைமிகப்
பயங்கரமாய்த் தென்றிசையோன் பற்றவரு மேலடைந்தே
இயங்கடரக் கோலமயி லேறிவந்தே யேழைதனைத்
தயங்கவிடா தாள்குழந்தைச் சாமி சடாக்கரனே. (ரு௦)

## மணிப்பத்து.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறையெலாந் திரட்டி வாய்மடுத் தறிவை
வளர்த்துன தடியிணைக் கன்பாய்
முறைமுறை யருச்சித் தென்புநெக் குருகி
முத்தியிற் சேர்ந்தன ரடியார்
சிறியனே னுலக மயக்கினிற் சுழன்று
திகைத்தன னையகோ வினியக்
குறையெலாந் தவிர்த்தாட் கொண்டருள் புரிவாய்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருக)

சுற்றமுந் தொடர்புந் துணையுமென் னுயிருஞ்
சுகமுமற் றெவையுநீ யல்லான்
மற்றுவே றுமென் றெண்ணினே னிந்நாள்
வரையிலு மறிவிலா மையினுன்
முற்றுமாய் நிறைந்த முதல்வனே யடியேன்
மூடனா யிருந்துமுன் முயன்ற
குற்றமுங் குணமாக் கொண்டருள் புரிவாய்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருஉ)

புல்லறி வுடையார் புறம்பிலே புகுந்து
பொழுதெலாம் போக்கின தல்லா
னல்லவர் குழுவை நாடிநா னயந்து
நல்லற நவிலுமென் றெருகாற்
சொல்லவு மறியேன் றொழுந்தொழில் குறியேன்
றேற்றுவித் தென்றுயர் துடைப்பாய்
கொல்லுலை வேற்கட் குறத்தியுண் மகிழுங்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருங)

நிலவனா யோடி யொழிக்கினு மறலி
நேர்ந்தென தாவியைக் கவரக்
கலவனா செயுமே யெனமன மிகவுங்
கலங்குதே யென்செய்வேன் வதனம்

கருஉ குழந்தாபுரிப் பதிற்றுப்பத்துப்பதிகம்.

நிலவனை வாசி யுறவளர் குறத்தி
நேயனே யவன்றுயர் நீக்கிக்
குலவனை கிழித்த வேற்றுணை தருவாய்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருச)

துடியிடை மடவார் மயலையே கருதித்
தொடர்ந்தவர் சொல்வழி கேட்டுப்
படியினி லலைந்தே னிந்நாள் வரையும்
பரமனே நின்னடி யடையு
மடியவர்ப் பரவி நல்வழி புகுத
வறிவிலாப் பாவியே னறவுங்
கொடியனே னெனினு மாதரித் தருள்வாய்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருரு)

தாயிலாச் சேய்போற் சஞ்சல மடைந்து
சலித்தற வருந்தினே னந்தோ
நீயிலா திருந்தா லல்லவோ சலன
நேருமென் னையனே யினிமே
ேயிலா திருக்க வரந்தரல் வேண்டு
நுண்ணறி வுடையவர் மனமே
கோயிலாக் கொண்ட குணப்பெருங் கடலே
குழந்தைவா ழறுமுக மணியே. (ருசா)

நன்றிது தீதி தெனுநெறி யறியா
நாயினே னென்பவஞ் செயினுந்
தென்றிசை புகுத்தா துன்னடி யிணைக்கீழ்ச்
சேர்த்துயர் வரந்தரல் வேண்டு
மன்றலம் புயத்தாய் வனசமா முகத்தாய்
வள்ளிகுஞ் சரிமய னயத்தாய்
கொன்றைவே ணியற்குங் குருவென வமைந்தாய்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருஎ)

நிலையிலா வுலகே நிலையென வடியே
னினைத்துனை நெஞ்சினிற் பதியா
தலைவதிற் றுயர மதிகமே யன்றி
யாணையா யொன்றையு மறியேன்

விலையிலா நிதியே வேண்டினன் கதியே
மெய்த்தவஞ் செயவரு டதியே
கொலைபுரி நமன்பாற் கொடுத்திடா தெனையாள்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருஅ)

கொஞ்சமுந் தயவு தாட்சணி யமிலாக்
குரங்கன மடையர்மேற் பாடிக்
கெஞ்சிவாய் திறந்து வந்தவா றுரைத்துங்
கேட்டவர் பொருளிலை யெனலு
நெஞ்செலா மெரியப் பொருமுவேற் கினுமந்
நினைவிலா தருள்வதுன் கடனே
குஞ்சரி மகிழ்வாய்க் கொஞ்சவுண் ணெகிழ்வாய்
குழந்தைவா ழறுமுக மணியே. (ருகூ)

விடந்தரும் விழியார் மேன்மயல் பெருகி
வீணிலே பொழுதெலாங் கழிக்கு
மடந்தரு மனத்தார் மறுமத வினத்தார்
வஞ்சனை கொலைபுரி சினத்தார்
படுந்துயர் தனையும் பாழ்நர கினையும்
பார்க்கினும் பதின்மடங் கதிகக்
கொடுந்துயர் பிணியைக் கொள்வனே தணிப்பாய்
குழந்தைவா ழறுமுகமணியே. (சூ0)

---

## செல்வப்பத்து.

கட்டளைக்கலிப்பா.

திங்க ளொத்த முகத்திய ராசையைத்
தீர்த்து யர்ந்தவர்ச் சேர்ந்தறி வோங்கியே
சங்கை யற்ற தவம்புரிந் தாற்கதி
சார லாமெனுந் தன்மையு ளார்க்கெழிற்
பங்க யத்திருத் தாள்கொடுத் தேபரி
பாலித் தாள்வதுன் பாரமன் றோவையா
செங்க திர்க்கு மொளிதரு மெய்யனே
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சூக)

அண்டி ருக்கு மணிமகிழ் கேள்வனு
ரார்வ மீக்கொள வானந்த மாகியே
பண்டி ருக்கு மொழியிற் றுதித்திடும்
பரம னேயெனைப் பாசத்தி னுனமன்
கொண்டி றுக்குமக் காலத்தி லார்துணை
கோல மாமயின் மீதுவந் தாளுவாய்
செண்டி ருக்கு முலைவள்ளி பங்கனே
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சூஉ)

பாலு லாவு மமுதமு லாவுதேன்
பண்ணு லாவு கனிந்த பனிமொழி
நூலு லாவு மிடையு நிணந்தரு
நுதியு லாவியென் னேய்தவிர்த் தாட்கொளும்
வேலு லாவு விழியுந் திகழ்வள்ளி
மின்னு லாவுமோர் பாக வரமருள்
சேலு லாவுங் கமலத் தடங்கள்சூழ்
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சூங)

முத்த மிழ்க்கு முதல்வனீ யாமென
மொழியும் வேத முறைமையி னுலெனி
லித்த மிழ்க்கு மிறைவனீ யன்றிமற்
றேவர் சொல்லுதி யென்னித யத்தடி
வைத்த ருங்கதி சேர்க்கவுஞ் சென்மத்தின்
மாறி மாறி வராம லருளவுஞ்
சித்த மென்று திருப்புவை யையனே
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சூச)

காசு காசென வேயிது நாள்வரை
கருத்தி லெண்ணிய தீட்டற் களவிலா
வாசை மீக்கொள வெங்கணு மோடியே
யலைந்த தன்றியுன் னன்ப ரடியிணை
பூசி யாதிருந் தேனினி யேனுநற்
புத்தி தந்தருள் செய்தெனை வாழ்விப்பாய்
தேச மெங்குந் துதிக்கக் கவின்பெறுந்
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சூரு)

பூணு லாவு முலைச்சிய ராசையும்
பொன்னி னாசையும் பூமியி னாசையும்
வீணி லேன்கொள வேணுமெ னாவினை
மேவு மன்பர் பெறுங்கதி முற்றிலுந்
தோணி யவ்வழி செல்லவொட் டாதகந்
தொந்தஞ் செய்வதைச் சூறைசெய் தாளுவாய்
சேணு லாவு பொதும்பர் நிறைந்திடுந்
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சுசு)

மாவ லம்பு மனைதுறந் தாலுமோர்
வனம்பு குந்து தவம்புரிந் தாலுமே
கேவ லம்புக லாவட்ட மாசித்தி
கிடைக்கினும் பரந் தானெனுங் கேள்பெறத்
தீவ லம்புகுந் தாலு முனதருட்
சித்தி யார்கதி சேர்வர்கொ லோசொலாய்
சேவ லங்கொடி கட்டிய வீரனே
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சுஎ)

சொந்த மென்னுந் தொடக்கைத் துடைக்கவுஞ்
சூது வாதெனுந் துன்பைக் கடத்தவும்
பந்த முற்று மகற்றவுந் தொண்டர்தாள்
பரவ வுந்துயர் பாறவுங் கானிடைக்
கந்த மூல பலாதி யருந்தவுங்
கண்ணை மூடி மௌனத் திருக்கவுஞ்
சிந்தை வைத்தென் மனலயத் துற்றரு
டென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சுஅ)

பற்ற றுத்துனைப் பற்றிய வன்பர்போற்
பாச நீக்கிப் பழவினை போக்கியே
முற்று நீயென வெண்ணிப் பிழைக்கவென்
மூட நெஞ்சமொட் டாமற் றடுக்குமக்
குற்ற நான்செய்த தாகுங்கொ லோவந்தக்
குறையுண் டாயினுந் தீர்த்தருள் சூரனைச்
செற்ற வேற்படைக் கையுடை வள்ளலே
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (சுகூ)

மூவ டிக்கன் றிரந்த துழாயனு
முண்ட கத்தின் முளைத்தெழு மூர்த்தியுங்
காவ டிக்கு ளமர்ந்த குலிசனுங்
காணொ ணாத கழலிணை நாயினேன்
பாவ டிக்கு ளமையுங் கொலோவினைப்
பற்ற றுத்தருள் பாலித் தெழின்மலர்ச்
சேவடித் துணை தந்தெனை வாழ்விப்பாய்
தென் குழந்தைத் திருநகர்ச் செல்வமே. (எ0)

---

## முருகப்பத்து.

நேரிசைவெண்பா.

தெள்ளுபுகழ் ஞானச் செழுஞ்சுடரோ மெய்யடியா
ருள்ளக் கவலை யொழித்தவனே—வள்ளியுடன்
வந்தா தரிப்பாய் வடிவேல வாகடம்பா
கந்தா குழந்தைமுரு கா. (எக)

உள்ளங் கசிய வுடல்புளகிப் பக்கணினீர்
வெள்ளஞ் சொரியவன்பு மீக்கொள்ள—விள்ளரிய
தண்டமிழ்த்தார் நின்பதத்திற் சாத்தியுய்ய மெய்க்கனவு
கண்டேன் குழந்தைமுரு கா. (எஉ)

மன்றுணடித் தோன்றன் மதலாய்நின் னுலயத்தி
னின்றுதுதித் தேயென்பு நெக்குநெக்கா—மென்றுயனை
வீப்பா யடியவர்தாண் மேவமனந் தந்தடியேற்
காப்பாய் குழந்தைமுருகா. (எங)

நின்னைநினை யாம னினைக்கத் தவம்புரியா
வென்னைப் பலர்பழிக்க வேன்படைத்தாய்—முன்னை
விதியைச் சிறைப்படுத்த வீரா கொடுத்தாள்
கதியைக் குழந்தைமுரு கா. (எச)

வானே கனலே வளியேநீ ரேபுவியே
தேனே செழுங்கனியே சீனியே—ஞானியர்த
மெண்ணே தலையி னெழுத்தேயெற் காவெனிரு
கண்ணே குழந்தைமுரு கா. (எரு)

கற்ருலு முத்திவழி கண்டாலு நற்றவத்தைப்
பெற்ருலு முன்னடியைப் பேணுதார்—சற்றேனு
நில்லா ரொருநிலையி னிண்ணயமா யன்னவர்போற்
கல்லேன் குழந்தைமுரு கா. (எசு)

சிந்தித்தேற் கஞ்சலெனச் செப்பினு லிப்புவியி
னிந்திப்பா ரும்முளரோ நித்தனே—தொந்திக்க
வையா யினிச்சகிக்க மாட்டேனுன் பன்னிரண்டு
கையாய் குழந்தைமுரு கா. (எஎ)

வேண்டினே னுன்பதத்தை வெவ்வினையப் பால்விலகத்
தாண்டினேன் றுன்பந் தணிவித்தே—யாண்டருளத்
தேவாதி தேவா திருமா றுதிக்குமரு
காவா குழந்தைமுரு கா. (எஅ)

இவ்வடிவா யென்ற னிதயகம லத்திருக்கச்
செவ்வடிவேற் கந்தா திருவருள்செய்—கொவ்வைக்
கனிவாய்க் குறத்தியன்பு காதலிக்க நித்தங்
கனிவாய் குழந்தைமுரு கா. (எசு)

வண்டுளவத் தேவாலு மாமலர்ப்புத் தேளாலு
மண்டரினத் தாலு மமுதாலு—முண்டமருந்
தெத்தாலுந் தீராநோ யெல்லா மகற்றியருள்
கத்தா குழந்தைமுரு கா. (அ0)

---

## அடைக்கலப்பத்து.

கட்டளைக்கலித்துறை.

வண்டுங் கடலுங் குடமுஞ் சிமிளு மலையுமெழிற்
செண்டும் பொரும்விழிக் கொங்கைமின் ஞர்மய றீர்த்தடியார்
தொண்டுங் கதியும் பெறவருள் வாய்பண்ணை தோறுமன்ன
மண்டுங் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அக)

கையாற்பன் மாலை தொடுத்துனக் கிட்டுக் கசிந்துருகி
மெய்யாய்ப் பணிந்திடு வேனேசொல் வாயிது வேசமயம்
பொய்யா முலகத்தை நீத்தோர் தமக்கரும் போதமரு
ளையா குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அஉ)

## கரு௲அ குழந்தாபுரிப் பதிற்றுப்பத்துப்பதிகம்.

உறவோருந் தாயரு மக்களும் பெண்டிரு முற்றவரு
நிறைவாகுஞ் செல்வமுங் கூற்றடுங் கால்விட்டு நீங்குமல்லாற்
பிறகேது முண்டுகொ லீதையெண் ணுமனப் பேய்க்கினியென்
னறைவேன் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அந)

முறஞ்சேர் நகியின் முலைமூக் கரிந்தவன் முன்னயனுன்
புறஞ்சேர்ந் தடியிணை போற்றப்பெற் றானெனப் போல்பவரு
மறஞ்சே ரயிலை வணங்கப்பெற் றாரொன்றும் வாழ்த்திலன்யா
னறஞ்சேர் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அச)

பத்தாற் படுந்துயர் பார்த்திலை யோவது பண்டுவினை
யெத்தா லடைந்ததென் றாலுந் தவிர்த்தென் னிதயத்தடி
வைத்தானின் றன்மை குறைந்திடு மோவினை வையுங்கொலோ
வத்தா குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அரு)

என்றுந் துயர மெனைநோவச் செய்வ தெடுத்துரைத்து
மொன்றுஞ் செவியிற் கொளாதிருந் தாயதென் னூழெனினு
மின்றுங் கடக்க வினிவரும் போது மியமன்வந்தா
லன்றுங் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அசு)

நோக்குங் கருணை விழிக்கெதி ராகின்மெய் நுண்ணறிவைத்
தேக்குந் தரத்தைப் பெறவரி தோநின் றிருவருளைக்
காக்கும் படிக்கு வரங்கொடுத் தேநற் கதியடியேற்
காக்குங் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அஎ)

மொழிக்கு முதனின் றிடுமுதலே முழு மூடர்களும்
பழிக்கும் படிக்கிவ் வுடலெடுத் தேனப் பழவினையைக்
கழிக்கும் பெருந்தவஞ் செய்தில னாயினுங் காலனுயி
ரழிக்குங் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அஅ)

இருளும் பகலும் பலதெய்வக் கூட்டமு மெண்டிசையும்
பொருளும் பரவுமைம் பூதமு மொன்றிற் பொருந்தலின்றி
மருளும் படிக்கு வருமந்த காலத்தும் வன்றொண்டருக்
கருளுங் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (அகூ)

எடுக்குமென் னேயைநின் றண்ணருள் சத்திய மேய்மருங்கு
லுடுக்கும் படிய வொசியுமென் றுய்வள்ளி யுன்னைவந்து
தடுக்குங் கொலோவினுந் தாமத மேனெனைத் தாபரிக்க
வடுக்குங் குழந்தை நகர்முரு காவுன் னடைக்கலமே. (கூ0)

---

## போற்றிப்பத்து.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருமயின் முருகா போற்றி சிறியனேற் கருகா போற்றி
யரியயன் முதல்வா போற்றி யரனருள் புதல்வா போற்றி
கரிமுகற் கிளையாய் போற்றி கருதலர்க் கிளையாய் போற்றி
குருபர னுனைப் போற்றி குழந்தைவே லவனே போற்றி. (கூக)

அறத்தொடு நின்றாய் போற்றி யவுணனை வென்றாய் போற்றி
புறத்தக முறைவாய் போற்றி பூதமாய் நிறைவாய் போற்றி
மறத்தொழில் குறியாப் போற்றி மாவின்மேற் குறியாய் போற்றி
குறத்தியோர் பாகா போற்றி குழந்தைவே லவனே போற்றி. (கூஉ)

வஞ்சகர் காலா போற்றி மறைமுடிக் காலா போற்றி
பஞ்சடி பாலாபோற்றி பணிபவர் பாலா போற்றி
தஞ்சமார் நீதா போற்றி தண்ணரு ணீதா போற்றி
குஞ்சரி மணாளா போற்றி குழந்தைவே லவனே போற்றி. (கூங)

சோதனைப் படுத்தாய் போற்றி சூரனைப் படுத்தாய் போற்றி
சாதனை யில்லாய் போற்றி சாதனை யில்லாய் போற்றி
காதுவேற் படையாய் போற்றி கருதுவேற் படையாய் போற்றி
கோதிலா தவனே போற்றி குழந்தைவே லவனே போற்றி. (கூச)

சங்கரி மருகா போற்றி சற்சனற் கருகா போற்றி
யெங்கணு முள்ளாய் போற்றி யெங்கணு முள்ளாய் போற்றி
பங்கயக் கரந்தாள் போற்றி பழவினை கரந்தாள் போற்றி
கொங்கலர் மார்பா போற்றி குழந்தைவே லவனே போற்றி. (கூரு)

சாத்திரங் கடந்தாய் போற்றி தத்துவங் கடந்தாய் போற்றி
தோத்திரங் கடந்தாய் போற்றி சூரமர் கடந்தாய் போற்றி
நேத்திரங் கடந்தாய் போற்றி நெஞ்சகங் கடந்தாய் போற்றி
கோத்திரங் கடந்தாய் போற்றி குழந்தைவே லவனே போற்றி. ()

தொண்டரைக் காப்பாய் போற்றி துட்டரை வீப்பாய் போற்றி
யண்டருக் கமுதே போற்றி யாரண *நமுதே போற்றி
பண்டுசெய் தவமே போற்றி பதந்தருஞ் சிவமே போற்றி
குண்டலக் குழையாய் போற்றி குழந்தைவே லவனே போற்றி. ()

---

* நமுது - உண்மை.

எம்பெரு மானே போற்றி யீறிலா தானே போற்றி
நம்பினேற் புரந்தாய் போற்றி நவையிலா வரந்தா போற்றி
தம்பரா னென்ருய் போற்றி தஞ்சநீ யென்ருய் போற்றி
கும்பன்மெய்த் தவனே போற்றி குழந்தைவே லவனே போற்றி. ()

மலைமக ளானய் போற்றி வளைவிலி யானய் போற்றி
மலர்மக ளானய் போற்றி மாதவ னனய் போற்றி
கலைமக ளானய் போற்றி கமலனு மானய் போற்றி
குலமெலா மானய் போற்றி குழந்தைவே லவனே போற்றி. (௬௬)

கத்தனே போற்றி போற்றி காரண போற்றி போற்றி
யத்தனே போற்றி போற்றி யாரண போற்றி போற்றி
முத்தனே போற்றி போற்றி முதல்வனே போற்றி போற்றி
குத்திரந் தவிர்ப்பாய் போற்றி குழந்தைவே லவனே போற்றி. ()

குழந்தாபுரிப் பதிற்றுப்பத்துப்பதிகம்

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

ஏ ழா வ து

முதுகுளத்தூரென்றுவழங்குகிற

# குழந்தாபுரிக்குமரேசர்மாலை.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

செங்கதிர்வேற் கந்தனெழிற் றிண்புயத்துக் கென்றவத்தாற்
றுங்கமிகும் பாமாலை சூட்டுதற்குப்—பொங்குமதத்
தந்திமுகத் தெந்தைமலர்த் தாளுதவி யென்மனத்து
வந்துமுடிப் பித்தருளு வான்.

## நூல்.

கட்டளைக்கலித்துறை.

பூவேயும் பொன்னைப் புயத்தே யணைக்கும் புரவலனு
நாவேயு மின்னை யுடையானுங் காமனு நாடரிய
தேவேயுன் றாணிழல் சேர்ந்தருள் வாய்ந்திடச் சிந்தையுற்றேன்
கோவே யடிமைகொண் டாள்வாய் குழந்தைக் குமரையனே. (க)

திருவே பரவுமென் றுய்வள்ளி குஞ்சரி சேரமயில்
வருவே லவவினை யெண்ணு துரைத்திடும் வண்டுழவன்
றருவே தனைச்சிறை யிட்டரன் கேட்பவத் தந்திரஞ்சொல்
குருவே யெனக்கருள் செய்வாய் குழந்தைக் குமரையனே. (உ)

வஞ்சனை கோபங் கொலை யழுக்கா று மறதியிச்சை
யெஞ்சலில் லாதுகைக் கொண்டுனை தாலய மெய்துவதற்
கஞ்சிநின் றேனென்னை யார்தடுத் தாட்கொள்வ ராதரிப்பாய்
குஞ்சரித் தாய்க்கொரு பாகா குழந்தைக் குமரையனே. (ங)

அயிலேறுங் கண்ணியர்க் காட்பட்ட வென்னை யடுத்தகலி
வெயிலேற நீங்கும் பனிப்போல கல்கைக்கு வேகமிகு
மயிலேறி வந்துன் பதப்போ திணைதரு வாயெனக்குக்
குயிலேறுஞ் சொல்வள்ளி கேள்வா குழந்தைக் குமரையனே. (ச)

தேட்டத்தி லேமனம் பற்றிப்பன் னுடு திரிந்தலைந்தே
வாட்டத்தி லேயுழன் றெய்த்தே னினியுன் மலரடியி
ஞட்டத்தி லேயென் னிதயஞ் செலச்செய்துன் னல்லடியார்
கூட்டத்தி லேவைத்துக் கொண்டாள் குழந்தைக் குமரையனே. ()

மட்டுண்ட கோதைய சோதைகை யாலடி வாங்கியுரற்
கட்டுண்ட மான்மரு காவென்னை யாட்கொள் கடலைவடை
பிட்டுண்டை யெள்ளவன் மோதகந் தேனிற் பிசைந்தருந்திக்
குட்டுண் டிருப்பவன் பின்னு குழந்தைக் குமரையனே. (சு)

தென்றிக் குடையவ னுள்வந் தழைத்திடத் தேம்பிநெஞ்சங்
கன்றிக் கதறிக் கலங்குமக் காலெவர் காப்பருனை
யன்றிக் கயல்விழிக் குஞ்சரி யோடுவந் தஞ்சலென்றுள்
குன்றிற் குடிகொள்ளுங் கோவே குழந்தைக் குமரையனே. (எ)

கணமேனு முன்னை மறவா திருக்கக் கருதுமென்ற
னெணமேன் முடித்திலை யார்துணை யென்ப னிலங்கயிலும்
வணமர மயிலும் பொருந்தவந் தேழையை வாட்டுதுன்பைக்
குணமாக்கித் தந்தரு ளையா குழந்தைக் குமரையனே. (அ)

சீரிய நீட்டந் துருவேனின் முண்மலர் சிந்திக்கிலே
னூரியர் மைய றலைக்கேறி யின்ப நயந்தவர்முன்
வீரியம் பேசித் திரிந்தலைந் தேனவ் வினையகற்றக்
கூரிய வேலுடன் வந்தாள் குழந்தைக் குமரையனே. (கூ)

முற்றுந் தருந்தெய்வ நீயென வேத மொழிவதையான்
கற்றுந் தெளிவின்றி வெவ்வேறுண் டென்னக் கருதியந்தோ
சுற்றுந் திரைகட லோடியெய்த் தேனென்றுந் தோன்றிலையக்
குற்றம் பொறுத்தினி யாள்வாய் குழந்தைக் குமரையனே. (கo)

வம்பிட்ட கொங்கை மடவார் மயலின் மயங்கியவ
ரம்பிட்ட கண்வலைப் பட்டுழல் வீர்மன தார்வமுடன்
கும்பிட் டரகர சண்முக காவெனக் கோவில்புக்குக்
கும்பிட் டடையுமின் காப்பான் குழந்தைக் குமரையனே. (கக)

காற்றைப் பிடித்தொரு தேராக்கி னேனிடுங் காற்றளையை
மாற்றிப் புரத்தனின் பாரமன் றேமுன மார்க்கண்டர்க்காக்
கீற்றுப் பிறைதந்த மேயிருட் டேகங் கிளர்பகுவாய்க்
கூற்றைத் தொலைத்தவன் பாலா குழந்தைக் குமரையனே. (கஉ)

முருகா குகாசண் முகாகடம் பாவம் முகுந்தனுக்கோர்
மருகாநின் பாத மலரோ கதியென வாழ்த்துமவர்க்
கருகா வெனக்கு மவர்போன் மனந்தந் தருடருவாய்
குருகார் பழன வளஞ்சேர் குழந்தைக் குமரையனே. (கங)

நாலா கலைகளைக் கற்றறி யேன்யி னுட்டமுள்ளார்
மேலாவ லாய்த்திரிந் தேயுனைப் போற்றிலன் மின்னுமையாள்
பாலா வலியவந் தன்பர்க்குக் காட்டும் பதந்தருவாய்
கோலா கலவடி வேலா குழந்தைக் குமரையனே. (கச)

அழைக்குஞ் சமனுக் கெதிரொன் புகல்வ னவன்கைதப்பிப்
பிழைக்கும் படிக்கு மருள்செய்வை யோவிற் பிறங்குநுதல்
கழைக்குங் கனிக்குஞ் சுவைதருஞ் சொல்வள்ளி காதலனே
குழைக்கும் பொருங்கண்ணி பாலா குழந்தைக் குமரையனே. (கரு)

ஆழித் துரும்பென் றலையவி டாதெனை யாள்வையுன்றாள்
வாழிக் கடம்பணி வைவேல வாமுன் வனத்திலொரு
தோழித் துணையுமில் லாதமர் வள்ளியைத் தோய்ந்தவென்றிக்
கோழிக் கொடியுடைக் கோவே குழந்தைக் குமரையனே. (கசு)

புலனுஞ் சரீரமும் புத்தியுஞ் சித்தியும் பூசனையு
நலனுங் கருணையுங் கல்வியுஞ் செல்வமு நாடும்பெருந்
தலனும் பெருமையுந் தந்தையுந் தாயுந் தவமுமென்றன்
குலனுஞ் சகலமு நீயே குழந்தைக் குமரையனே. (கள)

செம்பொனுக் காசைவைத் துன்மீதிற் பாடிலர் தேயமெச்சுங்
கம்பனுக் கொத்தவ ராயினு நாயிற் கடையவரோ
நம்பனுக் குந்தென் பொதியா சலத்தினி னற்றவஞ்செய்
கும்பனுக் குங்குரு வானாய் குழந்தைக் குமரையனே. (கஅ)

சக்கரத் தோனயன் விண்ணோ ரொனினுந் தரணிமிசை
தக்கவ ராயினும் பஞ்சிற் றழலெனச் சாடியெங்குப்
புக்கினுந் தேடிப் பிடித்தடித் தோங்கும் புயவலிசேர்
கொக்குரு வைச்செற்ற வாகா குழந்தைக் குமரையனே. (ககூ)

காதுற்ற கண்ணுடைக் கன்னியர் காதற் கவலையினாற்
பேதுற்றுன் பொன்னடி பேணுதஞ் ஞானம் பிறட்டுருட்டுச்
சூதுற் றலைந்தன னந்தோவப் பாவந் தொலைத்தரிய
கோதற்ற ஞானந்தந் தாள்வாய் குழந்தைக் குமரையனே. (உ0)

பால வளைக்குத் திருவாயங் காந்த பரமனுக்கு
நூல வளைக்குந் துருவறி யாயென்னை நோக்கியருண்
மேல வளைக்குற மின்னைப்புணர்ந்திட வேற்றுருவாய்க்
கோல வளைக்குலந் தந்தாய் குழந்தைக் குமரையனே. (உக)

யண்டேன மானவன் றன்னூருந் தேவர் பதிபதியுந்
தண்டேன் மலரவ னுடுஞ்செல் லாதித் தலத்தடைந்தா
லுண்டே கதியெனச் சேர்ந்துய்கு வாரொனி லுற்பவித்துக்
கொண்டேற்கு மோர்குறை வுண்டோ குழந்தைக் குமரையனே. ()

வானே முதற்பெரும் பூதங்க ளாகியு மற்றெவையுந்
தானே யெனநிறைந் தோனேநின் ருட்டுணை தந்தருள்வாய்
தேனே யமுதத் திரளேதித் திக்குஞ் செழுங்கரும்பே
கோனே யரிமரு கோனே குழந்தைக் குமரையனே. (உ௩)

கடியாருந் தெய்வப் பிடிக்கொரு பாகன் கலியுகத்து
மடியார் குறைதவிர்த் தாள்வா னிதுவுண்மை யாகுமுந்தம்
மடியாவுந் திருங் கதிசேரு வீரிங்கு வாருமெனக்
கொடியாடுங் கோயிலிற் கொண்டாய் குழந்தைக் குமரையனே. ()

படியுஞ் சுவர்க்கமும் பாதல நாடும் பரவரிய
வடியுந் திருக்கர முந்நான்கும் வேலு மருள்விழியு
முடியுந் திகழ்புன் முறுவலும் ஆறு முகமும்வள்ளிக்
கொடியுந் துலங்கவந் தாள்வாய் குழந்தைக் குமரையனே. (உ௫)

வாடும் பயிர்க்கு மழைபெய்த தென்ன வருந்தியுன்று
டேடும் பதகனை யாட்கொண்டு தித்திக்குஞ் செந்தமிழைப்
பாடும் படிக்கரு டந்தா யினிமெய்ப் பரமநிட்டை
கூடும் படிக்கும் வரந்தா குழந்தைக் குமரையனே. (உ௬)

விள்ளே னசத்தியம் வேண்டே னபேட்சைநன் மெய்த்தவத்தைத்
தள்ளேன் பிறமதஞ் சாரே னறத்திற் றழைப்பவனா
யெள்ளேன் பிறவியை யேற்கேன்மற் றோர்தெய்வ மெண்ணமனங்
கொள்ளேனுன் றுடலைக் கொண்டேன் குழந்தைக் குமரையனே.()

படியேற் றடிவைத்த பூந்துழ வத்தன் பரவவருந்
துடியேற்றுஞ் சிற்றிடை வள்ளிபங் காநின் றுணைமலர்த்தாண்
முடியேற்றுந் தொண்டரிற் சேர்த்தாளு வாயெனை முத்தியில்லிற்
குடியேற்றி வாழ்விக்கும் வாழ்வே குழந்தைக் குமரையனே. (உஅ)

நில்லாத யாக்கை யழியாமுன் கொஞ்சமு நீதிநெறி
செல்லா துலகினிற் பல்லுயிர் நோவச் சிதைத்தமுழுப்
பொல்லாத பாவியென் செய்வேனக் குற்றம் பொறுத்தினிமேற்
கொல்லா திருக்குங் குணந்தா குழந்தைக் குமரையனே. (உகூ)

அடுத்தாயென் பக்கத் தழுந்தும் பிறப்பெனு மாழியினின் [த்
றெடுத்தாயுன் ருள்கொடுத் தின்பத் தமிழ்ச்சொ லிணைத்திணைத்து
தொடுத்தார்ந்த மாலையை நின்புயத் தன்புடன் சூட்டவரங்
கொடுத்தா யினிக்குறை வுண்டோ குழந்தைக் குமரையனே. (ஙo)

குழந்தாபுரிக் குமரேசர்மாலை

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

எட்டாவது.

# மருதூர் இரட்டைமணிமாலை.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

பூமேவு நாதன் புகழ்மருதூர் நாகலிங்கர்
மாமே விரட்டைமணி மாலைசொலத்—தூமேவு
கற்பகலாச் சித்திபுத்தி கட்கிருபா லுங்கொடுத்த
கற்பகவி நாயகனே காப்பு.

## நூல்.

நேரிசைவெண்பா.

சீரானை மாமருதூர் சேர்ந்தானை நாகலிங்கப்
பேரானை முக்கட் பெருமானை—பாரானைக்
கண்டார்க்கே யார்வங் கதிக்குமவன் ஞண்முடியிற்
கொண்டார்க்கே முத்திகிடைக் கும். (க)

கட்டளைக்கலித்துறை.

கும்பாக வந்தடி வீழ்ந்தெழுந் தேத்திக் குறையுளைப்பார்
தம்பாகப் பாக்கொள்ளு வார்மரு தூரர் தலையிருப்பா
ணம்பாகத் தாரென்ப ளென்றே வழகிய நாயகிதான்
பம்பாகத் தேவில காதிடப் பாகத்தைப் பற்றினதே. (உ)

நேரிசைவெண்பா.

பற்றறுத்தார் பற்றும் பதிமருதூ ரான்புலனை
யுற்றறுத்தா லன்றேநம் மூழ்வினைபோஞ்—செற்றமுறு
நெஞ்சமே யோர்நிலையி னின்றவனைக் காணுதியேற்
பஞ்சமே துண்டாம் பரம். (ங)

கட்டளைக்கலித்துறை.

பரந்தரு வாய்பிற விக்கட னின்றெடுப் பான்பதுமக்
கரந்தரு வாய்மெய் கடவாத தொண்டர் களையடுக்கும்
வரந்தரு வாய்நன் மனந்தரு வாயுன் மலரடிசேர்
தரந்தரு வாய்தரு வாய்மரு தூர்வளர் சங்கரனே. (ச)

நேரிசைவெண்பா.

சங்கக் குழையானைத் தன்னையறி யாரிடத்தே
தங்கக் குழையானைத் தற்பரனைத்—துங்கமறை
விண்டானை யெப்பொருட்கு மேலானை மாமருதூர்
கொண்டானை நெஞ்சே குறி. (ரு)

கட்டளைக்கலித்துறை.

குறியேய் பிரணவங் கூறும னுல்வருக் கும்புகன்ற
மறியேய் திருக்கை மருதூர நீமுன் வகுத்தவொரு
நெறியேநில் லாதிச் சகமாயை வாட்ட நெகிழ்ந்துருகுஞ்
சிறியேனுக் காதர வாரோயெல் லாமுன் றிருவுளமே. (சா)

நேரிசைவெண்பா.

உள்ளப் பிறவிவினை யோட்டுமரு தூரொனவே
விள்ளப் பவக்கடலை விட்டெடுக்கும்—கள்ளத்தை
யண்டா தகற்றி யருள்கொடுக்கு நாகலிங்கர்
தண்டா மரைமலர்ப்பூந் தாள். (எ)

கட்டளைக்கலித்துறை.

தாளத் தடையுந் தனத்தார் மயலிற் றயங்கியயன்
மீளத் தடைப்பட்டு நின்றே னெனினுமுன் வேலைவருங்
காளத் தடைகளத் தாய்மரு தூரநிற் கண்ணுமென்னை
யாளத் தடையுனைத் தாலென்செய் வேனுன் னடைக்கலமே. (அ)

நேரிசைவெண்பா.

அடைவா ரிடுக்க ணகற்றியருள் சூலப்
படையாய் மருதூர்ப் பதிவா—முடையாயென்
றுன்பமெலாந் தீர்த்துன் றுணையடிக்கீழ் வைத்துரிய
வின்ப மெலாந் தந்தருள்வை யே. (கூ)

கட்டளைக்கலித்துறை.

ஏறுடை யாயன்ப ரெண்ணுடை யாயெம் மிமையவல்லி
கூறுடை யாயெண் குணமுடை யாய்வெள்ளிக் குன்றுடையாய்
நீறுடை யாய்மரு தூருடை யாய்செந் நிறமுடையா
யாறுடை யாயுடை யாயருள் வாயெனக் கானந்தமே. (கo)

நேரிசைவெண்பா.

ஆனந்தத் தாண்டவங்கொ ளம்பலத்தா யெம்பலத்தாய்
தேனந்து கொன்றைத் தெரியலாய்—வானம்
பணிவாய் மருதூர்ப் பதியாயெற் காக்கத்
துணிவா யொருவார்த்தை சொல். (கக)

கட்டளைக்கலித்துறை.

சொல்லாற் சொலினு மிகச்சினந் தேயுனைத் தூறியெங்கு
மல்லா வொருவன் கடவுளென் பார்மதத் தார்ந்திருந்த
முல்லா மகட்கடை வாய்பேச வைத்த முதன்மருதூர்
வல்லாயுன் னுடலை யெவ்வாறு தேர்ந்து வழுத்துவனே. (கஉ)

நேரிசைவெண்பா.

வழுத்தா மதகுணத்தில் வந்தாலு மன்பு
பழுத்தாயெற் காதரவு பண்பாய்—வழுத்தாயேற்
சத்துவத்திற் சேர்ந்து தரமடைவே னேமருதூர்
நித்தியனே யாண்டருள்வாய் நீ. (கங)

கட்டளைக்கலித்துறை.

நீர்மேற் குமிழி சகமாயை யென்ன நிகழ்த்தலல்லாற்
பார்மே லவாவுற் றலைந்தோடி யெய்த்திடு பாதகரி
லார்மே லெனக்கென்ன லாமரு தூரநின் னன்பிருந்தாற்
சீர்மேற் பொலிந்துறு மெய்ஞ்ஞான முத்தியிற் சேருவனே. (கச)

நேரிசைவெண்பா.

சேர்க்கையிலே நல்லவரைச் சேர்ந்தேனே கண்ணாலே
பார்க்கையிலே நல்லவரைப் பார்த்தேனே—மூர்க்க
வுருவானேன் றென்மருதூ ருள்ளாயுள் ளாயான்
கருவாகி யுற்றபழக் கம். (கரு)

கட்டளைக்கலித்துறை.

கம்பத் தனையடர்த் தாண்மரு தூர கலிப்பகையால்
வெம்பத் தனையறி யாதுநின் றேனை விரைந்தடக்கி
வம்பத் தனையும் பொடித்தெனைப் போற்ற வரந்தருவாய்
கும்பத் தனைத்தென் பொதிகைவைத் தாளென் குலதெய்வமே. ()

நேரிசைவெண்பா.

தெய்வம் பலவென்று செப்புவரைக் கண்டித்து
வைவமரு தூரனையே வாழ்த்துவோ—மெய்வடிவாய்
நிற்போ முறுதிகொள்வோ நெஞ்சே யவன்புகழைக்
கற்போ மிதுவே கனம். (கஎ)

கட்டளைக்கலித்துறை.

கனந்தாவு கூந்த லழகிய நாயகி காதலநன்
மனந்தாநிற் பாட வரந்தா வடியவர் வாசனையைத்
தினந்தா மனத்தின் றிரந்தா கதியினைச் சேரநற்சா
தனந்தா தனந்தவென் றேநட மாடிய தற்பரனே. (கஅ)

நேரிசைவெண்பா.

தற்பரனே மோனத் தலைவனே தென்மருதூர்ச்
சிற்பரனே முக்கட் டிகம்பரனே—கற்பனையாய்
மானிடரைப் பாடாதுன் வண்கழலைப் பாடவைத்துத்
தானிடரா காதவரந் தா. (கசு)

கட்டளைக்கலித்துறை.

தாதனைத் தும்பொருந் தும்மரு தூரநின் ருளிணைக்குப்
போதனைத் துங்கொணர்ந் தர்ச்சனை செய்கின்ற புண்ணியர்தங்
கோதனைத் துந்தவிர்த் தாண்டாயென் பாமலர் கொண்டடருந்
தீதனைத் துந்தொலைத் தென்ஞான்றுந் தந்தருள் சீரியதே. (உ0)

மருதூர் இரட்டைமணிமாலை.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஒ ன் ப தா வ து.

# சித்திவிநாயகர் மும்மணிமாலை.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

சித்தி விநாயகன்மேற் சீர்மும் மணிமாலை
பத்தியுடன் பாடவருள் பாலிக்குஞ்—சத்தியமெய்
பூண்டவஞ்செய் யாரிதய பொற்கமலப் போதுபுக்குத்
தாண்டவஞ்செய் தோங்குமவன் ருள்.

## நூ ல்.

நேரிசைவெண்பா.

பூங்கமலத் தான்மால் புராரி யறியவொண்ணு
தோங்கமலத் தேவே யுவாமுகத்தாய்—தீங்கில்
வியாசருபா சிக்கவவர் வேண்டுவர மீய்ந்த
தயாபரனே தந்தாள் சரண். (க)

கட்டளைக்கலித்துறை.

சரணஞ் சரணமென் றேசோம காந்தமன் சாரவவ
னிரணம் பொருங்குட்ட நோக்கிப் பிருகன் றிசைத்தவண்ணங்
கிரணந் தருமுன் பதாம்புயம் போற்றவக் கேட்டையெல்லாந்
திரணந் தவிர்த்ததும் பாசாங் குசநின் றிருவருளே. (உ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவளரம் புயத்தானுந் திகழிதழம் புயத்தானுஞ் சிவபி ரானு, மருவுதுதிக் கையிற்புகுத வாங்கியப்பால் விடுத்தரிய வரங்க ளீய்ந் து, கருதரும்வக் கிரதுண்ட விநாயகப்பேர் வாய்ந்தவநின் கழலை யன்பாய்த், துருவுதற்கு மனமுவந்தே னருள்புரிவா யானைமுகந் துலங்குந் தேவே. (ந)

நேரிசைவெண்பா.

தேவர்புகழ் போதனருள் சித்திபுத்தி யென்னுமிரு
பாவையர்த மன்றல்கொளும் பண்புடையாய்—மூவர்புக
ழுன்பாவை வேற்குகன்முன் னூர்ந்தகணே சப்பொருளே
யென்பா வையுமணப்பை யே. (ச)

கட்டளைக்கலித்துறை.

ஏதந் தரவிரு காதார் மதுக யிடவருக்காற்
றூதந் தரத்திற் சடக்கர மோது மரிக்கருள்செய்
தேதந் தரத்தி லிருக்கவைத் தாயுன் னிணையடிசேர்
போதந் தருவதெந் நாளோ கணேச புகலுவையே. (ரு)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புகலரிய பானுநகர் வல்லவன்சேய் கால்விழிவாய் பொருகா தின்றி, நகைசெயவந் திடவதுமுக் கலமுனிமே னியின்மருத்தா னலமாய்த் தோன்றத், தகுதியினே காக்கரமந் திரமோத நின்னுல கந் தந்தா யென்னை, யிகல்செய்வினை யகற்றவினுந் தாமதமா மோ வொருகோ டியல்வல் லானே. (சு)

நேரிசைவெண்பா.

வல்லாளன் கட்டவிழ்த்து மாயைப் பிணியகற்றி
வல்லா ளகணபதி மன்பெயர்கொ—ணல்லாய்நின்
பாதார விந்தநிழற் பற்றினே னுன்னையல்லா
லாதார மற்று றறை. (எ)

கட்டளைக்கலித்துறை.

அறையுங் கவிமனை சாபத்தி னூற்குட்ட மார்ந்தவதி
நிறைகின் றவுருக்கு மாங்கத னேய்வலி நீக்கியவங்
குறையும் படிக்கருள் செய்தாயென் றுன்பங் கொடிதுகொலோ
மறையுந் தொழவரு மைங்கர னேயருள் வல்லையிலே. (அ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வல்லகவி மகன்கிருச்ச மதன்றவஞ்செய் திடவேண வரங்க ணல்கிச், சொல்லரிய வரதகண பதியாகி முப்புரத்தைத் தொலைப்பா னீசற், கொல்லையினல் வரமுதவிக் கணேசனு கித்துலங்கு மொரு வா வென்ற, லல்லலற வுன்னடிக்கீழ் வைத்தருள்வாய் துரியநிலை யமர்ந்த வாழ்வே. (கூ)

நேரிசைவெண்பா.

வாழ்வார் மலையரசன் மாதுமைச துர்த்திநன்னாள்
சூழ்விரத நோற்பவெதிர் தோன்றியே—தாழ்வில்வரந்
தந்தா குவேறுந் தயாநிதியே நாயடியேன்
சிந்தா குலமனைத்துந் தீர். (கo)

கட்டளைக்கலித்துறை.

தீரம் பெருஞ்சந்தி ராங்கதன் கத்தமன் சீர்கொணளன்
மாரன் புவிதனைத் தாங்கிய சேடன் வளர்சதுர்த்தி
யாரும் விரத மியற்ற வரந்தரு மானைமுகஞ்
சேருங் கணேசநின் பாதார விந்தத்திற் சேர்த்தருளே. (கக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருள்கொடுக்குந் தனிக்கடவு ளீயெனத்தேர்ந் துணைவணங் கி யன்பாய்ப் போற்று, முருகனுக்கூர்ந் திடுமெயிலை யளித்திலக்க மறுகதனுன் முற்று பூசைக், குருகிநற்பே ரிலக்கவிநா யகரொனவுற் றுயிவற்று லுனைப்பூ சிப்போர், பெருமைதனை யுரைப்பவரார் தந் திமுகப் பெருமானே பேசு வாயே. (கஉ)

நேரிசைவெண்பா.

வாயாலோ ரக்கரத்தை வாய்த்தபுரு சுண்டியென்பா
னோயாம லாயிரமாண் டோதியே—தூயவருஞ்
சங்கடச துர்த்திவிர தம்புரியத் தாளையளிக்
குங்கைமுகா நீயே குறி. (கங)

கட்டளைக்கலித்துறை.

குறையா ததவ வனலா சுரனையுட் கொண்ட கட்டின்
மறைவாய்ப் புதைப்பவத் தீபல் லுயிரையும் வாட்டிடுங்கா
னிறைவா யறுகைப் புனைந்திடர் போக்கி நிலையருளு
மிறைவா கயமுகத் தெந்தாய் கதியரு ளென்றைக்குமே. (கச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றும் பிரமந் தானேயென் றிருந்த சனக னிடந்தொழுநோ ய், துன்று பவனு யுணவிரந்து துய்த்துங் காணு தவன்செருக்கை, யன்று குறைத்துத் தீக்கைசெய்தே யரும்ப திபசு பாசமதை, நன் றுவிளக்குங் கணேசாநின் னற்றுட் டுணையை நம்பினனே. (கரு)

நேரிசைவெண்பா.

நம்பியமால் வன்னியின்கீழ் நண்ணி யுருச்செபித்தாங்
கும்பர்புகழ் வைகுந்த முற்றிடச்செய்—தும்பிமுகத்
தேவே யடியேற்குன் சேவைகொடுத் தான்மேன்மை
யாவே னிதுவுண்மை யாய். (கசு)

கட்டளைக்கலித்துறை.

ஆயுஞ் சடக்கர மாலோதி வாமன னாகியன்பா
லேயும் புகழ்வலி மாவலி யைச்செற் றிடவருள்செய்
நீயுந் திகழ்சித்தி புத்தியுந் தெய்வமு நேர்தந்தையுந்
தாயுங் குருவுமன் றோவெனக் காமிவை சத்தியமே. (கஎ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சத்தியக் கபில முனியிடத் திருந்து
தழைத்தசிந் தாமணி யதனை
மித்திரக் குறைவாய்க் கவர்ந்திடு கணனை
வீய்த்தஃ தணிகொளப் புனைந்து
மெய்த்திடு சிந்தா மணிவிநா யகப்பேர்
வேய்ந்தபா சாங்குச நிலைகொ
டத்துவ முனைத்தென் பிறவிவே ரறுத்துன்
சரணருள் புரியிது ததியே. (கஅ)

நேரிசைவெண்பா.

ததியுண்டான் சேய்வாய்கொட் டாவியிற்சிந் தூரன்
கதிகொண்டு வந்தவனைக் காதி—விதிகொண்ட
வானனத்தைத் தன்றலையா யாக்கிக் கசானனப்பே
ரானவத்தா வுன்று ளருள். (கசு)

கட்டளைக்கலித்துறை.

அருள்சேர் வரேணியன் சேயாய்ப் பிறந்தங் ககன்றுமுனிப்
பெருமான் பராசுவ னில்வளர்ந் தாகுவிற் பெட்பொ டேற்றுப்
பொருதான விக்கினற் காய்ந்து விநாயகப் பேர்புனைந்த
மருமா முகத்தைங் கரப்பொரு ளேயென் மனத்துளதே. (உ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உள்ளமறைச் சுவடியெலா நான்முகன்பா லிருந்ததனை யுடன் கவர்ந்த, கள்ளமனத் துடையகம லாசுரனைத் தடிந்துலகங் காத்த

வைங்கைப், பிள்ளைமதிச் சடையுடையெம் பெருமானைக் கணபதியைப் பிரம வாழ்வைத், தள்ளரிய பிறவிவினை யறுத்தருளோங் குருபரனைச் சார்வாய் நெஞ்சே. (உக)

நேரிசைவெண்பா.

நெஞ்சிரக்க மில்லாத நிட்டூரத் தூமனென்போன்
றஞ்சிடச்செய் தேதூம கேதுவெனச்—செஞ்சொலியற்
பேர்புனைந்த வானைமுகப் பெம்மானின் றிண்புயத்திற்
றார்புனைந்தே யுய்யவரு டா. (உஉ)

கட்டளைக்கலித்துறை.

தாட்டா மரைகொ ளயனரி விண்ணவர் தம்மையெலாங்
கோட்டாற் படுத்துங் கயமுகச் சூரனைக் கொல்லவவன்
வாட்டானை வீரரை வாட்டுந் துருவென வந்திடவந்
நாட்டா மதமின்றி யேறுங் கணேசனை நாடிக்கொள்ளே. (உங)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கொள்ளைவண் டிமிருங் குழற்றிதி வயின்ம
கோற்கட னுகிவந் துதித்துத்
தள்ளருந் தவத்தா லுயர்ந்திடுந் தேவாந்
தகனராந் தகனையுந் தகர்த்தே
யுள்ளலா லுறுதி வாய்ந்தவர்க் குதவு
மும்பன்மா முகத்தநின் புகழை
விள்ளுமா றறியே னிதுவெனத் தெரித்தாள்
விதிக்குமோர் விதியருள் விதியே. (உச)

நேரிசைவெண்பா.

விதியாற் றராசதனை வீட்டியபடி யார்க
டுதியாற் றராசையெனுந் துன்பங்—கதியாமற்
றண்டி விநாயகனுய்த் தோன்றினர் சேவடியை
யண்டி விநாயகந்தீர் வாம். (உரு)

கட்டளைக்கலித்துறை.

ஆந்தவ மேய மரீசிதன் பால்வந் தவதரித்த
சாந்தணி கொங்கையென் றுய்வல் லபையைத் தனிமணந்து
நாந்துதிப் பான்வந்த வைங்கரத் தான்கழ லடியென்று
நீந்தற் கரும்பிற் விக்கட லேழையு நீந்துவமே. (உசு)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மேதினியை யருந்தியவன் றருமோதை சுமகை
விளங்குபிர மோதைமனே ரமைசாரு காசை
மாதர்சுமத் திமைகாந்தை கேசினிமங் கலைகா
மதைசுந்தரி மந்தினியா மங்கையர்பன் னிருவர்
காதன்மண முடித்துமட வார்மயலால் வருந்துங்
கருத்தினருக் கவையகலக் கருணைதந்து மேலாம்
போதமருள் சித்திபுத்தி வல்லபைநா யகனைப்
போற்றுதார் பிறவிவினை மாற்றுதார் தாமே. (உஎ)

நேரிசைவெண்பா.

தாங்தோங் கடந்தறிவாந் தன்மையுற்றார் தத்துவத்தோர்
நீங்தோங் கடந்துருவோ நின்மலனே—ஏங்தோங்
தரும்பாதா வேழமுகத் தானேநின் சித்தங்
திரும்பாதா மைந்தரிடத் தே. (உஅ)

கட்டளைக்கலித்துறை.

இடத்தே யிமயந் தருங்கொடி வாய்ந்த விறையவனும்
வடத்தே துயிலமர் மாதவன் றானு மலரவனுந்
திடத்தே தொழிலொரு மூன்று நடாத்தத் திருவருள்செய்
கடத்தேய் கராசலத் தானே யெனக்குங் கதியருளே. (உகூ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கதிவிளக்கு மூவருக்குங் கதியளித்த வல்லமையைக் கழறு வேனே, துதிவிளக்கு முருகனுக்கு மயிலளித்த தகைமையினைச் சொல்லு கேனே, மதிவிளக்குந் தொண்டர்களை வாழ்வித்த கருணையெலாம் வாழ்த்து வேனே, வதிகுணத்தைங் கரப்பொருளே யாதரித்தா ளெவ்வுயிர்க்கு மருள்பூத் தோனே. (௩0)

சித்திவிநாயகர் மும்மணிமாலை

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

பத்தாவது.

# சித்திவிநாயகர்பதிகம்.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

சீராரும் யானைமுகச் சித்தி விநாயகனே
பேராரு முத்திப் பெருமானே—நேராக
நின்னையே பாடுதற்கு நின்றுட் டுணையுதவி
யென்னையே யாதரிப்பை யே.

## நூல்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எழுத்தாகிப் பதமாகிப் பொருளு மாகி
யிசையாகி யஃதுணரு மிறைவ னாகி
வழுத்தாது வழுத்துகின்ற மௌன மாகி
மறைகளுக்கு மெட்டாத வாழ்வா யன்பு
பழுத்தான சித்திவிநா யகனே யான்செய்
பழவினையாற் பிணிவருத்தப் பார்த்தா யின்ன
மழுத்தாதந் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (க)

தீண்டாத பாதகனே னெனினு முன்றன்
திருவடியைத் தினந்தினமுந் தியானிக் கின்றேன்
வேண்டாத வெறுப்பாய்நீ யிருந்தா லிந்த
மேதினியிற் காப்பவரார் விநாய கப்பேர்

பூண்டாயிப் படிரோகம் வருத்தி வந்தாற்
பொறுத்திடவே முடியாது புகலி லானை
யாண்டாயங் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (உ)

கையாலே மலரெடுத்துன் பூசை செய்யாக்
கயவர்கடங் கூட்டுறவைக் கருது கில்லேன்
பொய்யாலே வயிறுவளர்த் துடலை யோம்பும்
புலையர்தமை யாதரவாய்ப் பொருந்து கில்லேன்
மெய்யாலே மானதத்தா லுனைத்து தித்தும்
வெம்பிணியால் வருந்துகின்றேன் விக்கி னேச
வையாவங் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (௩)

கொத்தான கொன்றைமலர் புயமி லங்குங்
குஞ்சரமே சித்திபுத்தி கோவே வேத
வித்தான வடியவர்த முள்ளக் கோயில்
விளங்குகின்ற விழுப்பொருளே மேக நீராற்
*பத்தான தகிகரித்து வலியுண் டாகிப்
பாவியேன் வருந்துகின்றேன் பரனே யென்ற
னத்தாவங் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (௪)

ஒப்பாரு மில்லாமற் றூனே யெங்கு
மொன்றாகிப் பலவாகி யுறுதி யொன்றைத்
தப்பாதார் பால்வெளியாய் நினையார்க் கெட்டாத்
தற்பரமா யானைமுகந் தழைத்தா யென்னை
யிப்பாரி லுள்ளவர்க ணகைக்கும் வண்ண
மெய்தியரோ கத்தாலே யிடர்கொள் வேனோ
வப்பாவங் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (௫)

---

* ஓர்வகைத் தடிப்பு.

தரைசேரும் வாழ்க்கையிலே யாசை மீறிச்
சஞ்சலத்துக் காளாகிச் சனன மெல்லாந்
திரைசேருந் தன்மையெனக் கருதா தந்தோ
திரிந்தலைவ தன்றியுன்றாள் சேர்ந்து முத்திக்
கரைசேர நினையாதே னெனினுஞ் செய்த
கன்மத்தால் வருந்துகின்றேன் கயமு கத்தெம்
மரைசேயந் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (சு)

துடுக்கான வார்த்தைசொல்லி யடியார் தம்மைத்
தூரத்தினனே வயிறுபசித் தோர்கட் கேதுங்
கொடுக்காம லடித்துவிரட் டினனே பெற்றோர்க்
கும்புறத்தார்க் கும்பழிப்புக் கூறி னேனே
வெடுக்காத சென்மமெடுத் தந்தோ ரோகத்
திடைகின்றே னத்திமுகத் திறையே துன்ப
மடுக்காதந் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (எ)

கலையாத மனத்தினராய்த் தவஞ்செய் தாலுங்
காசினியை யொருகுடைக்கீழ்க் காத்திட் டாலுந்
தொலையாத வாழ்க்கையிலே பொருந்தி னாலுஞ்
சுந்தரமங் கையர்மயலிற் றோய்ந்திட் டாலு
மலையாம லிருந்தாலும் பிணிவந் துற்றான்
மகிழ்பவரா ரத்திமுக வள்ள லேயா
னலையாதந் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (அ)

வேண்டியபோ துனைப்பணிந்துஞ் சுகம்வந் துற்ற
மேன்மறந்து நாட்கழிக்கும் வெறியர் போலே
யீண்டுனையா னினையாம லிருந்த துண்டோ
வென்றாய்நீ யறியாயோ வெனக்கிவ் வாறு
மூண்டவினை யின்னதென வறியேன் யானை
முகத்தவவென் னகத்தவவோ முதல்வ வென்னை
யாண்டவவந் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (கூ)

கற்பியலார் கொழுநனைநீத் தயலார் தம்மைக்
கருதாத வாறெனநின் கமலப் பொற்று
ளற்பகலாய் நம்பியிருக் கின்றே னல்லா
லாணையதாய் வேறொன்று மடியே னெஞ்சிற்
சொற்பனத்துங் காணறியேன் கடுரோ கத்தாற்
றுன்புறுத லழகாமோ தும்பிக் கையா
ரற்புதவங் நோய்தீர்ந்து சுகமாய் வாழ
வருள்புரிவா யுனக்கபய மபயந் தானே. (௧0)

சித்திவிநாயகர் பதிகம்

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

பதினொராவது.

# தில்லை நடராஜர் பதிகம்.

## கடவுள்வாழ்த்து.

நேரிசை வெண்பா.

மாவளருந் தில்லைநகர் வாழ்நடரா சப்பெருமான்
பாவளரும் வண்பதிகம் பாடுதற்குப்—பூவளருஞ்
சேண்டவர்சூ ழத்துலங்கிச் சித்திபுத்தி தந்தருளுந்
தாண்டவவி நாயகனற் றுள்.

## நூல்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்மேவு மழுமானங் கரங்க ளாடத்
திகழ்குழைக ளசைந்தாடத் தெய்வத் துங்க
நீர்மேவு சடைக்காடு விரிந்தாங் காட
நிமலையொரு புறமாட நிருத்த மாடி
யேர்மேவு மடியவர்கட் குவகை யூட்டு
மெம்பெருமா னுனையடைந்தே னெடுத்தாட் கொள்வாய்
தேர்மேவு கனகநிறை வீதித் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (க)

தாயிருக்கப் பாலருக்கோர் குறையுண் டோவுன்
சரணிருக்க மான்மழுக்கை சார்ந்தி ருக்க
நீயிருக்க வடியார்க ணிறைந்தி ருக்க
நிலைப்பின்றி வருந்துவனோ நிலைதந் தாள்வாய்
வேயிருக்குந் தோளியொரு பங்கின் மேவு
மெய்ஞ்ஞான மணிவிளக்கே மிகுமஞ் ஞானத்
தீயிருக்கும் புரத்தினைக் காய்ந்தாய் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (உ)

எத்தனையோ பெருந்தவத்தைப் புரிந்திட் டாலு
மெம்பெருமா னின்கருணைக் கிலக்கா காரோ

லத்தனையு மபலமதாய்ப் போமே யல்லா
லணுவேனும் பலிக்காதென் றுய்ந்தோர் கூறப்
பித்தனைத்தொட் டிருந்தபவ வினைக ளெல்லாம்
பெயர்ந்தோட வடைந்துனருள் பெற்றேன் பெற்றேன்
சித்தனையா தினியெடுத்தாட் கொள்வாய் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (ங)

நன்மையில்லேன் மெய்ம்மையில்லேன் பொறையு மில்லே
னல்லோருன் னுடல்களை நவிலக் கேட்குந்
தன்மையில்லேன் றவமில்லே னுய்வ துன்றன்
றண்ணருளா லல்லாதோர் சார்புங் காணேன்
புன்மையுள்ளா ரறிவினுக்கெட் டாம லோங்கும்
பூரணனே யாரணனே புலையுங் கொள்ளாச்
சென்மவினை தீர்த்தெனையாட் கொள்வாய் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (ச)

மானேபெண் மயிலேயென் றணங்க னுளை
வாழ்த்தியே யலைந்ததல்லான் மன்று ளாடுங்
கோனேயென் னுயிரோயென் றெருகா லேனுங்
கூறுதே னெனினுமருள் கொடுத்தாட் கொள்வாய்
வானேமற் றுதியவே யமுத மேவிண்
மணியேகண் மணியேசின் மயமே ஞானத்
தேனேமுக் கனியேகற் கண்டே தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (ரு)

கல்லாத மூடர்தம்மேற் கவியு ளைத்துக்
கன்னுதென் னுகும்பா கம்பா வென்றே
சொல்லாத தோத்திரங்கள் சொல்லிச் சொல்லித்
துதித்ததிலொன் றையுங்காணேன் றுன்ப மல்லாற்
பொல்லாத பழவினையாற் செய்யு மிந்தப்
புன்செயலை மாற்றியென்றன் புலன்கள் வேறு
செல்லாத நன்மதியுந் தந்தா டில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (சு)

மருக்கிளரும் பச்சைமயின் மேவு செம்ப
வளமலையே யுளமலைவாய் மலையா தைவர்

செருக்கிளரும் பெருந்துயரைத் தீர்த்தே யுன்றன்
திருவடிக்கா ளாகாமற் றீராச் சென்மக்
கருக்கிளரும் பவக்கொடியே னின்னு மின்னுங்
கலங்காமற் கதியடையக் கருணை செய்வாய்
திருக்கிளரும் பல்வளங்க ணிறையுந் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (எ)

அம்பவள வாயிலங்கும் விழியார் செய்யு
மபிநயத்தாற் செயலிழந்தாங் கவர்பாற் கூடி
வம்பவள வையுமுறைத்துத் திரிந்தே னந்த
மாசகற்றி யுன்னடிக்கீழ் வாழ வைப்பாய்
கம்பவள மாவுரித்துப் போர்த்த முக்கட்
கரும்பேதித் தித்தொழுகுங் கனியே பாலே
செம்பவள வாயுமைக்கோர் பங்கா தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (அ)

பொய்யெலாம் புறத்தகல மெய்ஞ்ஞா னத்திற்
பொருந்துமடி யார்க்கருளும் புனிதா நேர்மை
மெய்யெலா மினிதருத்தி யெனையாட் கொள்வாய்
வேதவே தியர்வணங்கும் விமலா வாச
நெய்யெலா நிறைந்திருக்குங் கரிய கூந்த
னிமலையிடத் தமரவரு ணிமலா வண்டார்
செய்யெலாங் கரும்பிருக்கும் வளஞ்சேர் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (சு)

எத்திக்கும் படைத்தளித்துத் துடைக்க வல்ல
விறைவாநின் பெருங்கருணை யெய்தார் வேண்டுந்
தித்திக்கும் பாமாலை புனைந்து மெங்ஙன்
றிருவருளைச் சேர்ந்திடுவார் சிறிய னேன்றன்
புத்திக்குப் பொருந்தியவா றுரைக்கு மிந்தப்
புன்கவியு நன்கவியாய்ப் புனைந்து முத்தி
சித்திக்கும் படிவரந்தந் தாள்வாய் தில்லைத்
திருச்சபைவாழ் நடராஜ தேவ தேவே. (கo)

தில்லைநடராஜர்பதிகம்
முற்றிற்று.

உ

கடவுள்துணை.

பன்னிரண்டாவது.

காரைக்குடிக்

# கொப்புடையம்மன்பதிகம்.

## கடவுள்வாழ்த்து,

நேரிசைவெண்பா.

கொப்புடையாள் காரைக் குடியுடையாள் கோப்புடையாள்
துப்புடையாண் மேற்பதிகஞ் சொல்லுதற்குத்—தப்படையா
வைகுவித்து நன்குதவு வாரணமு கத்தானைக்
கைகுவித்துச் செய்மெய்வணக் கம்.

## நூல்.

பதினுன்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட வாரிசன்வ லாரிநெடு மாலுமுன்
சேவடிவ ணங்கி நிற்பச்
சித்தர்கின் னரர்கெருடர் கிம்புருடர் தேவரொண்
டிசையுளார் கைகு விப்பப்
பார்கொண்ட துத்திப் பணுடவி யனந்தனுப்
பன்முறையின் வாழ்த்தெ டுப்பப்
பரிதிமதி யிருபுறன மைந்திடக் கல்லெனப்
பல்லியங் கடலி னார்ப்ப
வார்கொண்ட விருகனத னத்திரும டந்தைநா
மகளிடை யடைப்பை தாங்க
வந்தரம் பையர்கவரி புடைகா லிரட்டமெய்
மறைகள்பல் லாண்டு கூறத்
தார்கொண்ட கணநாதர் குடைநிழற் றத்தொழுந்
தமியேனை யாள வருவாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (க)

## க்கூச் காரைக்குடிக்கொப்புடையம்மன்பதிகம்.

பூரணவி லாசமதி யமுதகிர ணத்துளி
பொழிந்தகரு ணுக டாட்சி
போதமா தவர்பரவு சீதமா னதவாவி
பூத்தகம லாச னத்தி
யாரணநி றைந்தமணி நூபுரமு ழங்குசர
ணும்புயமி யற்று நடனி
யபிராமி வாலைசுந் தரிவாமி திரிகோணி
யறுகோணி சத்தி புவனி
காரணிக லாநிதிய ணிந்தகோ டீரசிங்
காரியௌ வனிப வானி
கௌரிதிரி சூலிமுக் கண்ணியே யண்ணியே
காத்திரட் சிப்பை யெனவே
தாரணிந் துன்னடிவ ணங்குநக ரத்தார்
தமக்குநீ யருள்பு ரிகுவாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (உ)

வானேமு தற்பெரும் பூதங்க ளாகியவ்
வடிவிலாச் சுத்த மோன
மயமாகி யெள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குமொரு
வடிவாகி யேநி றைந்த
தேனேக னிந்தமுக் கனியேக ரும்பே
தெவிட்டாத புத்த முதமே
தித்திக்கு மின்பப் பெருக்கமே மெய்ஞ்ஞான
தீபமே திவ்ய ரசமே
மானேயெ னிருகண்ணின் மணியேய ரன்றழுவு
மயிலேப சந்த குயிலே
மாணிக்க மேவிலையி லாணிப்பொ னேயடியர்
மனவெளிவி ளங்கு மொளியே
தானேத னக்குநிக ராகிவள ரன்னையே
சமயமிது சமயம் வருவாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (ந)

கொந்தளக பந்திச்சொ ருக்குநில வுமிழ்வதன
கோகனக மீது லாவு
கூர்வைத்த பொற்காவி திகழ்கின்ற நயனமுங்
குழையோலை மகர குழையும்
மந்தநகை யுங்கடக மணிவளைய ணிந்தபய
வரதகர மலரு மிலகு
மருப்பைப் பொருப்பைச் சினத்தகன தனமுமிடை
வல்லியு முதர வடமுஞ்
சிந்துரல லாடமும் பணிகொண்மே கலையுஞ்
செழுங்கமல வாட்டு சரணச்
சேவையும் பார்வையுந் தமியேனு ளத்திற்
றினந்தொறுங் காண வருவாய்
சந்ததமு மன்பருள மர்ந்தபவ ளக்குன்று
தழுவிப் படர்ந்த கொடியே
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (ச)

கொண்டைச்சொ ருக்குமதி னிலவாட ராக்கொடிக்
குப்பியொடு சுட்டி யாடக்
குனிவானு தற்பட்ட மணிதிலக மாடவிரு
குழையாட வதன மாட
வண்டைப்ப ழித்தமர கதகங்க ணக்கடையம்
வாகுவல யங்க ளாட
மங்கலத் தொனியாட வன்பருக் கருளொழுகு
வாள்விழிக் குவளை யாடத்
தொண்டைவாய் மணிமுறுவ லாடமூக் குத்தியணி
சோதிமுத் தாட ரத்னத்
தொய்யின்முலை வடமாட வெயர்வாட மேகலைத்
துடியாட வடிவா டவே
தண்டைகிண் கிணிசிலம் பார்ந்தகண் டாமணிச்
சரணநிழ லாள வருவாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (ரு)

க்சுசு காரைக்குடிக்கொப்புடையம்மன்பதிகம்.

வண்டாடு மதமா முகத்தனென் றுயர்சொல்லி
வாதாட வில்லை யாபின்
வந்தமுரு கேசன்யா னெந்தவித மெல்லாம்
வழுத்தவிலை யாம லர்ப்பூஞ்
செண்டாடு முன்கையிற் சீராடு கிள்ளையென்
றீவினையு ளைக்க விலையா
சித்தர்முனி வரரமர ரொத்தனையு ளாரொருவர்
செப்பவிலை யாபொ துவினிற்
பண்டாடு மரனிடப் பாகம்ப கிர்ந்திடு
பசுங்கனக மேய றத்தைப்
பண்பாய்வ ளர்த்துவரு நகரத்து ளார்கொளும்
பரிவுமென் மேல்வி ளங்கத்
தண்டாம ரைக்குடிமி னுருனடி சூழவரு
சாம்பவியி வேளை யாள்வாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (சு)

இன்னமென் சொல்லெலா மன்னமென் கொப்படைத்
திருசெவிக் கேற விலையா
வென்னெஞ்சு போற்கருங் கல்லாவு ருக்கா
விரும்பாகின் மனமி ரங்கிச்
சொன்னாலும் வாய்முத்து திர்ந்துவிடு மாவுனது
தொண்டரைக் கன்ம வினைகள்
சூழ்ந்துவரு மாகலியி லாழ்ந்துதமி யேன்மிகச்
சுழல்வனோ வுலக மீன்ற
வன்னைநீ யலையோ வறக்கொடிய லாதின்
றறக்கொடியை யென்ப தேழை
யளவிலோ கண்டவர்க ணகையாதெ னைக்காப்ப
தருமையோ வுரிமை யாகத்
தன்னந்த னித்தவர்கண் முன்னந்த னித்துவளர்
சயிலத்து தித்த குயிலே
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (எ)

வஞ்சக்கி ராணியதி சாரங்கி ரந்திதலை
வலியண்ட வலிவ யிற்று
வலிகாது வலிகண்ணின் வலிநெஞ்சு வலிதொண்டை
வலிகண்ட வலிகால் வலி
மிஞ்சுமனா யாப்புவெடி சூலைகா மாலைநீர்
வெட்டைகு டீளை காசம்
மேகம்ப ருக்கண்ட மாலைமூ லஞ்சோகை
விஷபாண்டு விக்கல் கக்கல்
நஞ்செனும ருந்திடு சென்மசென் மங்கடொறு
நாடுவினை தானு மூன்ற
ஞமரு பந்தியா னித்துநீ றணிபவனா
நாடாம லோடு நீயே
தஞ்சமென் றனுதினமு வந்துநின் மேற்பாடு
தமியனேற் கருள்செய் கண்டாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (அ)

பத்திநெறி கைவந்து வைராக்கி யத்தினிற்
பழகியோ கத்தி ருந்துன்
பாதாம்பு யச்சேவை பெற்றருள டைந்தரும்
பழவினைக ரந்து மேலா
முத்தியிற் சேர்ந்தனர்க ளடியாரி யான்பாவி
முன்பினறி யாம லந்தோ
முத்துநகை காட்டியிரு முலைகாட்டு மாதர்கண்
முயக்கினிலு ழன்ற யர்ந்தே
யெத்திசையு நாய்போ லலைந்தலைந் தொருதவ
மியற்றுது பவமி ழைத்தே
னென்னினுங் கருணைக டாட்சிநீ யாகையா
லெப்படியு மாட்கொள் ளுவாய்
சத்தியே நகரத்தி னுள்ளார்கு பேரனிகர்
தாமெனவ ளர்க்கு முதலே
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (கூ)

அன்னையே நினையன்றி மற்றுமொரு தெய்வமுண்
டவனியிலெ னப்பி தற்று
மறிவிலாப் பித்தரிற் பித்தனுய்ப் பன்னு
ளகம்படிவி லாது முன்று
பின்னையொரு மதிவந்து நல்லோரை யண்டியவர்
பேருதவி யால்வ ரவரப்
பேதமைய கன்றிச்ச ராசரம னைத்தையும்
பெற்றதாய் நீயே யென
முன்னையான் செய்திடுத வப்பேற்றி னுற்கருணை
மூதறிஞர் பரவு முன்றன்
முண்டகத் தாட்குவண் டமிழ்மாலை சூட்டினேன்
முதல்வியே யினியே னுநான்
றன்னையே யறியும்ப டிக்கருள்பு ரிந்துரிய
சாயுச்ய பதவி யருள்வாய்
தரணிபுகழ் வளமிலகு காரையம் பதியிற்
றழைத்தகொப் புடையம் மையே. (க0)

காரைக்குடிக் கொப்புடையம்மன்பதிகம்

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

# பதின்மூன்றாவது.

இராமநாதபுரமென்று வழங்குகிற

முகவைத்

# திரிபுரசுந்தரியம்மை பதிகம்.

## கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

தென்முகவை வாழுந் திரிபுர சுந்தரிமேற்
பன்முகமின் றிப்பதிகம் பாடுதற்கு—நன்முகமாய்
நத்திவரு மன்பர்முடி நாட்டுங் கணேசனடி
பத்தியுட னோர்ந்துதுதிப் பாம்.

---

## நூல்.

"கண்களிரண்டு மவன்கழல்கண்டு"
என்ற திருவாசகப்பண்.

சீருல வும்படி மீதுபி றந்தருள் சேரவ டைந்துனையே
தினமுநி னைந்தற நெறியிலு யர்ந்துள திரமைவ ளர்ந்தறிவே
நேருல வும்படி யோகமி ருந்தொரு நேர்மைபொ ருந்தியவா
நிலமைத விர்ந்ததி வலமையு யர்ந்தவர் நிலையையு ணர்ந்துளவே
காருல வுங்குழ லாடவி ருந்தவர் காணவ ரும்பொதுவிற்
கரியுரி கொண்டவ ருடனெதிர் நின்றவர் கருதாந டங்குலவித்
தேருல வும்புது வீதிவ ருங்குல தேவிவ ரந்தருவாய்
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே. (க)

வண்டுகி டந்துபு லம்பிம ருண்டுடன் மண்டிய குழனேரும்
மறியொடு பங்கய மலேகட லங்கயல் வளர்விழி யும்பவளங்
கண்டுபு றந்தரு தொண்டைவ ளம்பெறு கண்டொ தருவாயுங்
கலேமதி யந்திகழ் முகமுமு றந்தரு கரமுந லம்பொருவு
தண்டைசி லம்புக லந்தொலி கொண்டரு டந்திடு மிருதாளுந்
தரிசனை தந்தடி யவருள மைந்துறு சரதம கிழ்ந்தருள்வாய்
செண்டைவி ளாந்தொரு குன்றிலெ றிந்தவர் செங்கர மயிலேயுந்
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே. ()

பஞ்சினை நேரடி வஞ்சியர் கூடிய பண்புள தெருவூடே
பகலிர வுந்தின மலேயவ லேந்தவர் பங்கினி லுறவாடி

யஞ்சுக மேயதி ரஞ்சித மேயளி யஞ்சுக மெனவோதி
யமுதந லந்தரு குமுதமி டம்பெறு மன்புநா தருவாயிற்
கொஞ்சிய வாமயன் மிஞ்சியி வாறுகு ழம்பிய மிடிதீராய்
குவலய மெங்கணு நிலைகுலை யும்படி கொண்டெழு நமனுவி
செஞ்சர ணுரவு தைந்தடி யார்துயர் சிந்திய பரன் வாழ்வே
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே. (௩)

புத்தமு தத்தைநி கர்த்தமொ ழிச்சியர் போகமு மாறுதோ
புலன்வழி கொண்டெழு பொறிகள டங்கிய போதமு மீறுதோ
கத்துக டற்புவி யிற்பவ மற்றுமெய் காவலு மேறுதோ
கலியனெ னும்பகை நலியம கிழ்ந்திடு காரணம் வீறுதோ
பத்தியை விட்டவ ரிட்டம தைத்தொடர் பாதக நீறுதோ
பகைமைக ளைந்துனெ யுறவுக லந்தவர் பாசமு மூறுதோ
சித்துப ழுத்தருண் மொய்த்திடு முத்தம சேதன மாகேனே
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே.(௪)

சந்தித் தன்பனா வந்தித் தின்பொடு சதிரவை சாரேனே
தவவிர தம்புரி பெரியரு றைந்திடு தனிமுறை சேரேனே
நிந்தித் தண்டுதல் கண்டச் சங்கொளு நெறிநவை தீரேனே
நிலைமையி ருந்திழி வடைதலு மின்றிமெய் நிறைவழி யோரேனே
தொந்தித் தண்டும லங்கெட் டொன்றிய சுகமதில் வாரேனே
துரியநி றைந்தொரு நினைவிலி ருந்தமர் சுருதிகள் பாரேனே
சிந்தித் தென்றுமு வந்துற் றுன்கழ திருமுடி யாரேனே
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே. ()

பாயினை யேயுடை யாகவ னைந்திடு பாவிய மண்குழவைப்
பருவர றந்திடு கழுவில றைந்தவர் பாலைய ருந்திடவே
தாயென வோர்வள மீதுக றந்தருள் தாரக மென்றுனையே
தாணிபு கழ்ந்துனா செயவுண்ம கிழ்ந்துள சாரம ருந்துவனே
வேயினை யேயிட மாகவி ருந்தவர் மேவிய பைங்கொடியே
விறன்மயி டன்றலை விழவமர் தந்திடு வேதப ரம்பரையே
சேயனை நீயல தாள்பவ ருண்டுசொல் சேவமர் சங்கரியே
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே.(௬)

பாக மாயொரு பாவி னுலியல் பாட வோவறியேன்
பதகம லங்களை யனுதின மும்பணி பாக மோவறியே

னேக மாமுனை யேகொள் வாரிட மேக வோவறியே
னெழுகர ணங்களை யமிழவ டர்ந்தறி வேற வோவறியேன்
மோக மாதர்க ளாசை யானதை மோத வோவறியேன்
முடிவிலெ ழுந்தெமன் வருபொழு துந்திரை மூட வோவறியேன்
றேக மாமிது போமு னேகதி தேடி னேனருள்வாய்
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே.(எ)

அரியயன் மகனிமை யவர்முனி வரருன தடியிணை கண்டுடனே
யணிமுடி கொண்டருள் பெருகவு வந்தறி வடர்மனை தங்கினரோ
வரமணு வளவினு மிலனென வுரைவசை வருமெனை நன்றியிலே
வளரம கிழ்ந்ததி வரமுமு வந்தெதிர் வலையிற ருங்கனியே
பரமர்சொ லருமறை முழுவது முணர்வுறு பனிமொழி யம்பிகையே
பயிரவி சங்கரி மலையர சன்கனி பயனுத வும்பொருளே [ளே
திரநிலை வருபொழு தொருமொழி சொலியவை திகழ்பெற நின்றவ
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே. ()

பந்த மாகிய தொந்த வாதனை பந்தி யாதவரம் [வா
பலமொடு கொண்டவர் குழுவைய டைந்திசை பரவவி ருந்துயர்
யெந்த வேளையு முன்ற னுமமி றைஞ்சி டாதவமே
யிருவினை யுந்துநன் மனமுந லிந்தன னினிநிலை தந்திடுவாய்
மந்த வாணகை தந்தெ னேரினில் வந்து மாமதுர [யே
மழைகள்பொ ழிந்தென வினிதுரை தந்துநன் மகிழ்வுத ருங்கனி
சிந்து பாடிய ரங்கொள் வார்வினை சிந்தி வாழ்வுதருந்
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுர சுந்தரியே. ()

கோது பதிதலி லாத மனமொடு கூடு தவநிலையே
குவிகர மும்பர வசமுநி றைந்தவர் கூறு மறைமுடிவே
தீது பரவிய பேர்கள் வினைவலி தீர வருமுதலே
சிவசிவ வென்றொரு தரமுரை தந்தவர் சேர நிறையுறவே
காது வரைசெலு மீன விழியினர் காதல் தவிரனையே
கடல்வளை யும்புவி யரசர்வ ணங்கிய காலை மிகமகிழ்வார்
சேது பதிகுலம் வாழ்க வரமுயர் சேவை தருமயிலே
திருநித முந்தொழ முகவைவ ளர்ந்தருள் திரிபுரசுந்தரியே. (௧௦)

முகவைத்திரிபுரசுந்தரியம்மைபதிகம்

முற்றிற்று.

கடவுள்துணை.

பதினான்காவது.

# திருத்தொண்டர் வந்தனைக்கோவை.

## கடவுள்வாழ்த்து.

பதினான்குசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட நாயன்மா ரறுபத்து மூவருஞ்
சேர்திருக் கூட்ட மாகத்
திகழொன்ப தின்மருங் குருலிங்க சங்கமத்
திற்சிறந் துறுதி யோடு
நீர்கொண்ட செஞ்சடைக் கடவுளுரு வாகிமெய்
நியமமே யிட்டு நம்போ
னிலையிலா வுலகத்தை நிலையெனக் கருதாது
நிற்குநன் னெறிவ ழாது
பேர்கொண்ட மோக்கமனை வாய்ந்தெவரு முணர்வுறுப்
பேறுற்று வாழ்வ டைந்த
பேசரிய திவ்வியச ரித்திரங் கோவையாய்ப்
பிறவிவினை யறவு ரைக்கக்
கார்கொண்ட புகர்முக முகக்கருணை வெள்ளக்
கடம்பொழிந் துலக மோம்புங்
கணபதித னிருசரண மொருமுடியி லேற்றியெக்
காலமும் பணிதல் செயவாம்.

## சுந்தரமூர்த்திநாயனார்.

திருமுனைப் பாடிசேர் திருநாவ லூரிலா
திசைவவந் தணர்கு லத்திற்
றிகழ்சடைய ராஞ்சிவா சாரியார்க் கும்பேர்
சிறந்தவிசை ஞானி யார்க்குஞ்

சேய்நம்பி யாரூர னென்றவத ரித்துநர
சிங்கமுனை யார்வீட் டினிற்
சென்றுதிரு வெண்ணெய்நல் லூர்ப்பித்த னுக்கடிமை
சேர்ந்துதிரு வாரூ ரிலே

பரவையார் மணமுற்றி ஞாயிறூர் வேளாளர்
பண்புபெறு மரபு தித்துப்
பத்தியுறு ஞாயிறுகி ழவர்தவத் துற்றுவரு
பாவைசங் கிலியா ளையும்
பாணிக்கி ரகணமுற் றிக்கண்க டெரியாது
பருவரலொ டுதிரு வேகம்
பத்தினிலி டக்கண் ணடைந்துந் திருத்துருத்
தியிலாக நோய்ப டிந்து

முரியவா ரூரினில் வலக்கண் ணடைந்துநம
துமைபாக னைப்ப ரவையா
ரூடறணி யத்தூது போக்கியுஞ் சூலைநோ
யுறுதிருப் பெருமங் கலத்
துளவேயர் கோன்கலிக் காமனுயிர் விட்டபோ
துடைவா ளெடுக்க வவர்நல்
லுயிர்பெறக் கண்டுமொரு சேரமான் பெருமானை
யுறவுகொண் டோடும் வெள்ளம்

பிரிவாகி வழிகாட்ட வைத்துநிதி யங்களைப்
பின்போன திருடர் பற்றப்
பெற்றுந் திருப்புக் கொளிப்பதியின் முதலையுண்
பிள்ளைதனை வரவ ழைத்தும்
பிரபஞ்ச வாழ்க்கையை விடுத்திடப் பாடியும்
பெறுகைலை யிற்சே ரமான்
பெருமா ளொடுங்கதி யடைந்தசுந் தரமூர்த்தி
பெரியதிரு வடியில் வாழ்வாம். (க)

---

முதலாவது

## தில்லைவாழந்தணர்.

சிதம்பரமெ னும்பதியி டம்பெறந டங்குலவு
தேவையர்ச் சனைபு ரிந்துஞ்

செப்பரிய வேதங்க ளுரியவே * தாங்கங்க
டிரியாது நன்கு ணர்ந்தும்
இதம்பரவு || முத்தீ யினைக்கொடுவே ளர்த்துமன
மேய்ந்தவில் வாழ்க்கை யுற்று
மேற்றமிகு மூவகைத் † தீக்கையபி டேகமுற்
றியலாறு ‡ தொழின்மு டித்தும்
பதந்தருவி பூதியுமு ருத்ராக்க மாலையும்
பத்தியுட னேத ரித்தும்
பண்புபெறு நால்வகைச் § சாதனங் களையும்
பயின்றுநிலை யாகி யிந்த
விதங்கதி யடைந்திடுந் தில்லைவா ழந்தணர்கள்
விரைமலர்க் கழலை நாளும்
விதிமுறையி னுற்பணிந் தழியாது வளர்முத்தி
வீடடைந் தினிது வாழ்வாம். (உ)

---

திருநீலகண்டநாயனர்.

தில்லையிற் குயவர்மர பிற்பிறந் தடியார்கள்
சிவபத்தி வாய்மை யுற்றுந்
தேடிவரு மடிகளுக் கோடுதவி யிறையாணை
தீண்டாதி ரெம்மை யென்ற
சொல்லரிய மனைவியைத் தீண்டாதி ருந்துநாட்
டொலையமூப் பெய்தி நின்றுஞ்
சோதனைசெ யப்பரம னேடொன் றளித்துத்
தொடர்ந்ததைக் கேட்ப வோடி
யொல்லையிற் றேடியுங் காணுது வேறுதர
வொப்பாமன் மனைவி கைக்கொண்
டுறுதிசெய் யென்றுசபை யேற்றியுங் கைதொடா
தொருகோல் பிடித்து மூழ்கித்

---

* சிக்ஷை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம், கற்பம்.

|| காருகபத்தியம், தக்கணுக்கினியம், ஆகவனீயம்.

† சமயம், விசேஷம், நிர்வாணம்.

‡ ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

§ நித்தியாநித்திய வஸ்துவிவேகம், இகமுக்திரார்த்த பலபோக விராகம், சமாதி சட்கசம்பத்தி, முமூட்சத்துவம்.

தொல்லைவடி வாய்வாவி தனினின் றெழுந்தரிய
சுகமான முத்தி பெற்றுத்
தூயபர மாயிலகு திருநீல கண்டரடி
தொழுதுவரு வினைக டீர்வாம். (௩)

இயற்பகைநாயனார்.

காவிரிப் பூம்பட் டினத்தில்வை சியர்குலங்
கவினடைய வவத ரித்துக்
கருவுற்ற மலமகல வரியகுரு லிங்கசங்
கமபத்தி யிற்சி றந்து
மேவினவ ராயில்ல றத்திருந் தடைகின்ற
மெய்யடியர் கழல் பணிந்து
வேண்டுவ தளித்துவரு நாளையிற் பரமனொரு
விடபுருட னாகி வந்துன்
றேவியை நமக்களிப் பாயெனலு முவகையாய்த்
தேன்மொழியை யுடன் விடுத்துச்
செல்லுமென விருவரையு மேத்திவழி விடவது
தெரிந்தஞா திகள்வ ளைந்து
தாவவாங் குற்றவரை வாளினாற் கொன்றுறுதி
சாதித்து மோக்க வீட்டிற்
சார்ந்துகதி பெறுமியற் பகைநாய னுருபய
தாண்மலர்கண் மேவி வாழ்வாம். (௪)

இளையான்குடிமாறநாயனார்.

கோதணுவி லாதவிளை யான்குடியில் வேளாளர்
குலமுதித் தன்பர் கட்குக்
குறைவுறா தன்னம் படைத்துமொரு நாளிராக்
குமுறிவான் மாரி பொழிய
வீதியின டந்துமழை தனினனேந் தரனடியர்
வேடமாய் மனையில் வரலும்
விரைவினிலெ ழுந்தவரை யாசனத் திட்டபின்
விருந்துசெய வழியி லாமற்
பாதியா மிரவினிற் காலினாற் றடவியொரு
பாதைசென் றன்று பகலிற்

பண்ணையில் விதைத்தமுளை நெல்லைக்கொ ணர்ந்துதன்
பத்தினிகை யிற்கொ டுத்துத்
தீதிலா தன்னமுங் கறிகளும மைத்துணவு
செயவழைத் தரிய மோக்கஞ்
சேர்ந்தவிளை யான்குடியின் மாறனார் பூங்கழல்
சிந்தித்து வாழ்வு பெறுவாம். (ரு)

---

மெய்ப்பொருணயனார்.

உத்தமர்க ளுக்குரிய சேதிநாட் டிற்செல்வ
மோங்கிய திருக்கோ வலூ
ருற்றுவள மலையமா நாட்டையர சாண்டுசிவ
வுண்மையை யுணர்ந்து நிலையாய்ப்
பத்தியுடன் வருமடியர் தம்மையெதிர் கொண்டவர்
பசிக்குண வளித்து வருநாட்
பகையாகி வந்தமர் புரிந்துபொர முடியாது
பழவடியர் போல டைந்த
முத்திநா தன்கழல் வணங்கவே யவன்வாளின்
முனையினாற் குத்த வதனன்
மூர்ச்சையாய் வீழ்ந்திடக் கண்டவர் வளைந்தவனை
முனியாது வெளிவி டுத்துச்
சித்தமணு வேனுமலை யாதுமக னுக்குரிய
செங்கோலை யினிதெ ளித்துச்
சிவகதி யடைந்தமெய்ப் பொருணய னாரடிகள்
சிந்தித்து வாழ்வு பெறுவாம். (சு)

---

விறன்மிண்டநாயனார்.

மலையமா நாட்டினிற் பங்கயத் திருமான்
வளர்ந்தசெங் குன்றூ ரிலே
வாய்ந்தவே ளாளர்திரு மரபிலே தோன்றியருண்
மல்கிடுஞ் சைவ சமயத்
திலகுமடி யார்களைக் கண்டடிவ ணங்கியபி
னீசனடி யேத்து கின்ற
வியல்பே தனக்குறுதி யென்றுதிரு வாரூரை
யெய்தியஃ தியற்றி வருநாட்

குலவுமடி யார்களைப் பரவாது வன்றொண்டர்
 கோயிலிற் புகுத வன்பர்க்
கும்புறகு நாதனுக் கும்புற கெனச்சொலக்
 கொண்டடியர் பதிக மோதச்
சலனமதை விட்டுவகை யுற்றுநம் பெருமான்
 சரண்புகு கணங்க ளுக்குத்
தலைவரா யாகிமெய்க் கதிபெற்ற விறன்மிண்டர்
 தாளிணைகண் மேவி வாழ்வாம். (எ)

---

அமர்நீதிநாயனார்.

பாரொலாம் புகழ்சோழ நாட்டினிற் றிருவுலவு
 பழையாறை யென்னு மூரிற்
பண்புபெறு வைசியர் குலத்திற் பிறந்தடியர்
 பக்குவங் கண்டு போற்றிச்
சீரெலாந் தருகந்தை கீள்கோவ ணங்கள்பல
 சேர்த்துக் கொடுத்து வருநாட்
டிருநலூர் தனிலரு மடங்கட்டி வைத்துமொரு
 சிவனடியர் தாங்கொ டுத்த
நேரிலாக் கோவணம தைக்கேட்ப வுட்சென்று
 நேடவது காணு மலே
நின்றுளம யங்கிமற் றொன்றுதர வொப்பாது
 நிறையொத்த கோவ ணமிதாம்
பாரதனி னிடைகொடென மனைவிமக னுள்ளபொருள்
 பலவுந் தராசி லிட்டும்
பற்றுது தானுமே றிக்கதிகொ ளமர்நீதி
 பாதமலர் பணிதல் செய்வாம். (அ)

---

எறிபத்தநாயனார்.

சீருற்ற கருவூரி லடியார்க ளுக்குத்
 திருத்தொண்டு செய்த வர்க்கோர்
தீங்குபுரி பவனைமழு வால்வெட்டு நியதிகொடு
 சிவகாமி யாண்டா ரெனும்

பேருற்ற மெய்யடியர் மலர்பறித் தானிலைப்
பெம்மான் முடிக்க ணியவே
பெட்பொடுவ ரப்பட்ட யானைவக் தம்மலர்
பிடுங்கியே சிதற வோர்ந்து

காருற்ற வேழத் துதிக்கையை மழுவினாற்
கண்டித்து நின்ற பாகர்
களையுஞ் சிதைத்துப் புகழ்ச்சோழ ரெதிர்வந்து
கண்டடி வணங்கி யேத்த

நேருற்ற மனநைந்து மசரீரி கேட்டங்கு
நின்றவடி யாற்பு கழ்ந்து
நிகரிலா வரனடி யடைந்தவெறி பத்தர்தமை
நினையாது நினைதல் செய்வாம். (கூ)

---

ஏனாதிநாதநாயனார்.

ஏருலா வுஞ்சோழ மண்டலங் தன்னிலே
யெயினனூர் சான்றார் குலத்
தெய்தியவி பூதியினி லேபத்தி யுடையரா
யேற்றவாள் வித்தை யதனைப்

பாருலா மரசர்க்கு மிக்கப் பயிற்றிவரு
பைம்பொனையெ லாம டியர்தம்
பாலுய்த்தும் வாள்வித்தை தன்னொடு பயின்றுநிதி
பற்றவகை யற்ற மர்க்கு

நேருலா மதிசூர னுக்கெதிர் முனைந்தவனை
நெடுவெழி துரத்தி யப்பா
னேர்ந்தவவ னெற்றிமிசை நீறுபுனை யக்கண்டு
நின்றுபோர் புரியா மலே

சீருலா நீதிவழி யோர்ந்தவன் வாளினாற்
சிரமறுந் தரன டிக்கீழ்த்
திருவரு ளமைந்துற்ற வேனாதி நாதனார்
சேவடிக் கன்பு செய்வாம். (கO)

---

## கண்ணப்பநாயனூர்.

மேலான பொத்தப்பி நாட்டினி லுடுப்பூரில்
வேடர்கட் கரச னுகன்
மிளிர்மனைவி தத்தையிவர் கட்கறு முகக்கடவுண்
மிகுமனுக் கிரகத் தினுன்
மேதினியி லவதரித் துத்திண்ண னென்றுபெயர்
மேவிவன வேட்டை யுற்று
வெந்திறற் கோலமொன் றைத்துரத் திக்கொன்று
மென்றுபசி நீக்கு தற்காய்ப்
பாலான பொன்முகலி யாற்றைக் கடந்துநண்
பாற்றிருக் காளத் தியாம்
பனிவரையி லேறியொரு சிவலிங்க மதுகண்டு
பரவச மடைந்து முடியிற்
பச்சிலையு மலருமிட் டவரார்கொ லென்றுதுதி
பண்ணிமீண் டாவி மாய்த்த
பன்றியை வதக்கிவாய் வைத்துருசி பார்த்துரிய
பக்குவத் தோடெ டுத்துச்
சீலமுட னீரள்ளி வாயினி லடக்கியிணர்
சேர்த்துமுடி யிற்ற ரித்துச்
சென்றரன் முடிக்குய்த்த பூக்களைத் தன்காற்
செருப்பினுற் றள்ளி வாய்நீர்
சிந்திமஞ் சனமாட்டி வைத்திதழ்ப் பூவைமுடி
சேர்த்திறைச் சியையு மூட்டிச்
செய்கைநன் றன்றெனச் சொன்னமா தாபிதாச்
சேர்க்கைநெறி நின்றி டாமற்
காலநிய திப்படி புரிந்துவரு காலையிற்
கடவுள்சோ தனையா லவர்
கண்களிற் குருதியெழ வதுகண்டு தன்னுடைய
கண்களைத் தோண்டி வைத்துக்
கண்ணப்ப னென்றழைத் திடவாறு நாளையிற்
காணரிய முத்தி பெற்ற
கண்ணப்ப நாயனுர் சேவடிக் கமலங்கள்
கண்டுகதி சேரு வோமே. (கக)

### குங்குலியக்கலயநாயனார்.

பேசரிய சோணாட்டி னிற்றிருக் கடவூர்ப்
பிராமணர் குலத்து தித்துப்
பெருமா னிடத்திலே பத்திமிக வுடையராய்ப்
பெயர்கலய ரென்ன வாய்ந்து
மாசில்வீ ரட்டான வீச்சுரற் கனுதினமு
மல்குகுங் குலிய தூபம்
வைத்துமதி நல்குரவு நேர்ந்துரிய தாலிதனை
மனையவள் கொடுப்ப வேரென்
னேசமுடன் வாங்கவரு காலையிற் குங்குலிய
நேர்கண்டு பெற்று வந்து
நித்தனுறு கோவிலிற் சேர்த்தளவில் சம்பத்து
நிலைகொடு திருப்ப னந்தா
ளீசர்சா யத்தன் கழுத்திற் கயிற்றையிட்
டேநிமிர்த் தித்து தித்தாங்
கிணையிலாக் கதிகொள்குங் குலியக்க லயர்கமல
விணையடிகள் போற்றி வாழ்வாம். (கஉ)

---

### மானக்கஞ்சாறநாயனார்.

மிக்கவள முற்றுலக முற்றுந் துதித்திட
விளங்கு கஞ்சா றூரிலே
வேளாளர் தங்குலத் திற்பிறந் தரசர்கள்
விரும்புசே னாதி பதியாய்த்
தக்கநிலை கொண்டொரு மகப்பே றிலாதரன்
றுள்பணிந் தவனருள்கொ டோர்
றையலைப் பெற்றுக் கலிக்காம நாயனார்
தான்கேட்ப மணமி சைந்து
புக்கவரு போழ்தொரும காவிரதி வந்துனது
புதல்வியின் சிகைகொ டென்னப்
புந்திமகிழ் வாயவண் மலர்க்கூந்தன் முழுதும்
பொருந்து வாளா லரிந்தே
யக்கணம விரதிகை யிற்கொடுத் தழியாத
வானந்த முத்தி வடிவா

யற்புதம் பெருமான கஞ்சாற நாயனு
ரடியவர்க் கடிமை செய்வாம். (கங)

---

### அரிவாட்டாயநாயனர்.

நன்னயம் பெறுசோழ மண்டலத் திற்றேவ
நாடுபுகழ் கணமங் கல
நகரில்வே ளாளர்குல திலகராய்ச் சிவபத்தி
நாடியில் லறந டத்திச்
செந்நெல்லி னரிசிசெங் கீரைமா வடுவைத்
தினந்தோறு மமுத மாக்கிச்
சிவபிரா னுக்களித் துக்கார்நெ லமுதைத்
திருத்தியா யுண்டி லாமன்
மன்னியவி லைக்கறியி னமுதுண்டு நீருண்டு
வைகுநா ளாலயம் போம்
வழியினிற் காலிடறி யமுதங் கமர்ச்சிந்த
வாளினுற் றலை யறுக்க
வுன்னியே நீட்டிய கரத்தைப் பிடித்துவிடை
யூர்ந்தரன் சேவை தரவே
யுயர்வான கதிகொளரி வாட்டாய நாயனு
ருபயபத கமலம் வாழ்வாம். (கச)

---

### ஆனாயநாயனர்.

மல்லல்செறி மழநாட்டின் மங்கலப் பதியிலே
வளராயர் குலம்வி ளங்க
வந்தவ தரித்திடைய ரோடுபசு நிரைமேய்த்து
வாய்வைத்து வேய்ங் குழலினாற்
சொல்லரிய பஞ்சாக் கரத்தைச் சுரத்தினிற்
சுதியுறப் பாடி வருநாட்
சுருதியின மறியாத வரனுருவ மாகத்
துலங்குமோர் கொன்றை யருகி
லொல்லெனச் சென்றுவே யிசையிற் சராசர
முவந்தசைவி லாது நின்றுங்
குருகியே பாடவிட பாரூட ராய்ப்பரம
னுமையொடுந் தோன்றி நம்பா

லல்லலற நீயிருந் திடவா வெனக்கூ
யழைத்திடச் சென்றி யார்க்கு
மரிதான கதிபெற்ற வானாய நாயனா
ரடியவர்க் கடிமை செய்வாம். (கரு)

---

மூர்த்திநாயனர்.

பாண்டிநாட் டினின்மதுரை வைசியர் குலத்துற்
பவித்தரிய சிவபத் தியோர்
படிவமா யங்ஙகர்க் கடவுளுக் கனுதினம்
பரிவினுற் சந்த னத்தை
வேண்டுவ கொடுத்துவரு நாளிலே கருனடன்
மேவரசி லமண் மிகுந்து
மேதினியி லாருகத மதமே லிடத்தன்னை
மேவல ரழைத்து மொவ்வா
தாண்டுறச் சந்தனக் கட்டைகள்கொ டாதரச
னுக்கினை விதிப்ப வேகை
யாற்சந்த னந்தேய்க்க வசரீரி கேட்டரச
னுவியை யிழப்ப வின்ப
மூண்டப் பதிக்கரச னாகியே பரசமய
முற்றுந் துடைத்து நெடுநாண்
மூவா திருந்தரசு செய்துநற் கதிபெற்ற
மூர்த்தியைப் போற்றி வாழ்வாம். (கசு)

---

முருகநாயனர்.

அறம்பெருகு சோழநாட் டிற்றிருப் புகலூரி
லந்தணர் குலத்து தித்தாங்
கரனடிக் கன்புடைய ராகிவெய் யவனுதய
மாகுமு னெழுந்து மூழ்கி
நறவமிகு நால்வகைப் பூக்களைக் கொய்தந்த
நல்லறத் தால யத்தி
னுதற்கு வேய்ந்துபஞ் சாக்கரப் பொருளதனை
நழுவாம லேசெ பித்தும்

பிறவிவினை யற்றதிரு ஞானசம் பந்தராம்
பெருமானி னேச ராகும்
பெருமையும் பெற்றந்த நாயனுர் திருமணப்
பேற்றிலே சிவபூ சையை
முறைமையொடு செய்துற்ற மகிமையாற் றுரியநிலை
முத்தியை யடைந்த மேலா
முருகரிரு சரணமல ரெமதொருமு டியினின்மன
முருகவுற வைத்து வாழ்வாம். (கஎ)

---

உருத்திரபசுபதிநாயனுர்.

பூமகட் கணிதிலக மானசோ ணாட்டிற்
பொருந்திய திருத் தலையெனும்
புண்ணியப் பதியிற் பிராமணர் குலத்திலே
புகழ்பெருக வவத ரித்து
நேமகம தாய்ப்பரம னடியிலன் பேதமது
நிதியெனத் தேர்ந்து நளின
நிறைகின்ற வாவியி லகோராத் திரங்கண்ட
நீரளவி னின்று கொண்டு
வாமமுட னிருகரங் களையுஞ்சி ரசின்மீது
வைத்துக் குவித்து மீசன்
மலரடியை மறவாது வேதத்தி லேசார
மாகியவு ருத்தி ரத்தைத்
தூமனத் துடனே செபித்தெவரு நாடொணுச்
சுகமுத்தி வாழ் வடைந்த
சொல்லருமு ருத்திரப சுபதியெனு நாயனுர்
துணையடிக் கமலம் வாழ்வாம். (கஅ)

---

திருநாளைப்போவார்நாயனுர்.

காசினியி லேசோழ மண்டலந் தன்னின்மேற்
காநாட்டி லாத னூரிற்
கடையான புலையர்மர பிற்பிறந் தரனையெக்
காலுமற வாது மான்யக்

கழனிவிளை வாற்சிவ னஞ்செய்து மாலயங்
களின்மத்த ளம்பே ரிகை
கட்குரிய தோலும்வா ரும்வீணை யாழிவை
களுக்காக வேந ரம்பும்
பேசரிய வர்ச்சனைக் கென்றுகோ ரோசனைகள்
பெட்பொடு கொடுத்து நமது
பெம்மானை யுட்சென்று சேவிக்க முடியாத
பிறவியான் மிகவு நொந்து
பெரியதிரு வாயிற் புறத்தினின் றன்பிற்
பிரிந்திடா தாடி நின்றும்
பெருமையணு வளவுமின் றித்திருப் புன்கூர்ப்
பிறங்குஞ் சிவா லயம்போய்த்
தேசுபெறு மூர்த்தியின் றிருவுருவ நந்தியாற்
றெரியாது மிகவ ருந்திச்
சிவபிரா னருளினு லிடபம்வில கக்கண்டு
தெரிசித்து மீண்டு வெகுநாட்
டில்லையைநி னைந்துநா ளைக்குநா ளைக்குநான்
செல்லுவே னெனவு ரைத்துஞ்
சேணுட் கடந்தவா மீக்கொள்ள வத்தலஞ்
சேர்ந்துளே புகுத வஞ்சி
மாசிலா வந்நகர் வலஞ்செய்து வெளிநின்று
மன்றுண்மணி யேயுன்னை நான்
வந்துகா ணுப்பெரும் பாவியா னேனென்று
வாய்குழற விழிநீர் தர
வருந்திடத் தில்லைவா ழந்தணர் வளர்த்துநேர்
வாய்ந்திடு நெருப்பில் வீழ்ந்து
மறைமுனிவ ராயெழுந் தைக்கியமா நந்தனுர்
மலரடி வணங்கி வாழ்வாம். (கசூ)

---

திருக்குறிப்புத்தொண்டநாயனுர்.

கருதரிய தொண்டைவள நாட்டினிற் றிருவுலவு
காஞ்சீ புரத்தி லேயே
காலியர் குலத்துவந் தடியவர் குறிப்பினைக்
கண்டுவத் திரமொ லித்துத்

தருநியதி பூண்டுமொரு நாளுற்ற சிவபத்தர்
தமதழுக் கார்ந்த கந்தை
தனைவாங்கி யொலியல்செய் துலர்த்துமுன் வான்மாரி
சலியாது பொழிய வெய்யோ
னுருமேற் கடற்புகுத வத்தமன மெய்துதலு
முள்ளங் குழைந் தடியவர்க்
குடல்குளிரு மினியென்செய் குதுமென்ன வாய்மையினை
யோர்ந்துகற் பாறை மீதி
லொருமைமன தாற்றலையை யெற்றவெம் பெருமா
னுணர்ந்தொரு கரத்தாற் பிடித்
துயர்பதவி தரவுறு திருக்குறிப் புத்தொண்ட
ருபயசர ணேத்து வோமே. (உ0)

---

சண்டேசுரநாயனார்.

விண்ணாடு புகழ்சோழ மண்டலத் திற்றரும
விளைதிருச் சேய்ஞ்ஞ லூரில்
வேதியர் குலத்தில்கா சிபர்கோத் திரத்திலே
மேலெச்ச தத்த னன்பு
மிகுமனை பவித்திரை வயிற்றிற் பிறந்தெழில்
விசாரசரு மர்ப்பெ யர்கொடு
வேதவே தாங்கங்கள் சைவா கமங்களை
வியப்படைய வைந்து வயதி
லுண்ணடி மெய்யன்பு வளரவொரு நாட்டமோ
டுற்றத்தி யயன மோது
மூரவர் சிறார்களொடு பசுநிரை யுடன்போத
வோரிடைய னீற்று வினை
யோங்கிநீள் கோலாற் புடைக்கத் தடுத்ததனை
யுரிமையாய்க் காக்க வெண்ணி
யோடிமறை யவர்சம் மதம்பெற்று மேய்த்தெவரு
மொப்ப நன்றாய் வளர்த்து
மண்ணியாற் றங்கரை மணற்றிட்டி லேயாத்தி
மாமரத் தின்கீழ தாய்
மணலிலொரு சிவலிங்க முங்கோயி லுங்கோபு
ரமுமதிலு மேவ குத்து

மலர்பறித் தர்ச்சனை புரிந்தாக்க ளின்பாலே
வாங்கியபி டேக முற்றி
வருகாற் பிதாவறிந் தவ்வணமி யற்றலென
வைதடித் துங்க வனியா
தெண்ணமோர் நிலையா யிருக்கப் பொருதுபா
லேய்குடத் தைக்கா லினு
லெற்றவது கண்டுமெழு வாற்றந்தை தாளெறிந்
திறையவன் பூசை செய்தாங்
கிடபத்தி னிற்காட்சி தந்தவர னைப்போற்றி
யிணையிலாச் சண்டே சுர
ரென்னும்ப தம்பெற்ற சண்டேசு ரர்க்கடிமை
யெங்நாளு மாகு வோமே. (உக)

---

திருநாவுக்கரசுநாயனர்.

மாமேவு திருமுனைப் பாடியெனு நாட்டிரு
வாமூரில் வேளாளர் தம்
மரபிற் குறுக்கையர் குடியிலே புகழனர்
மனைவிமா தினியார் தவ
வலியினற் றிலகவதி யாருதித் தவர்பின்னர்
மருணீக்கி யாரெனப் பேர்
வாய்ந்தவ தரித்துநற் கலைகளை யுணர்ந்துதன்
மாதா பிதாவி ருவரும்
வாழ்நாட் பிரிந்திடவு முயர்கலிப் பகையார்
மறித்தல்கேட் டுயிர் விடுப்ப
மனவொருமை கொண்டதன் முன்னையண் மலர்க்கழல்
வணங்கியச் செய்கை நீக்கி
மாசுற்ற வாக்கைநிலை யாமையை யுணர்ந்தறம்
வழுவினீர்ப் பந்த ரிட்டு
மாமலர்ச் சோலைகள் குளங்களன சத்திரமு
மல்குறவி யற்றி நிதியம்
பாமேவு வாணர்க் களித்துமில் வாழ்க்கையிற்
பற்றும லேது றந்தும்
பாழான சமணருறு மாருகத சமயம்
படிந்துரிய தரும சேனப்

பட்டமும் பெற்றுப் பௌத்தர்களை வென்றிசை
பரப்பியோர் தலைவ ராகி
பயிலுநாட் சூலையெனு நோய்கொண்டு சமணராற்
பலமந் திரம் புரிந்தும்
பலியாது மிகவாய் வருத்தவச் சமண்மதப்
படுகுழியி னின்றெ ழுந்து
பரமேசன் மேவுதிரு வதிகைவீ ரட்டான
மென்னுநற் பதி யடைந்து
பணிகொள்சோ தரிதிலக வதியார்முன் வீழ்ந்துதவு
பஞ்சாக் கரம் புனைந்தப்
பதிவளரு நாதனை வணங்கியே பாடியும்
படுசூலை நோய் நீக்கியு
நாமேவ வந்ததிரு நாவுக்க ரசுநாய
னென்ன வச ரீரியாய்
நவிலவப் பேர்கொண்டு சமணர சழைக்கவே
நணுகியவர் நீற்ற றையிலே
நகரா தடைக்கவதி லுய்ந்துமப் பாற்றந்த
நஞ்சினை யருந்தி நின்று
நாகத்தை விடவதற் குத்தப்ப வேமனது
நாணியே யோர் கயிற்றி
னூற்றனைக் கல்லோடு கட்டிவா ரிதியில்விடு
நாட்கல் புணையாய் மிதந்து
நவில்வருண னூற்றிருப் பாதிரிப் புலியூரை
நண்ணியோர் பெண் ணாடக
நற்றிருத் தூங்கானை மாடத்தி னிற்றோளி
னூட்டுகுறி கொண்டு காழி
ஞானசம் பந்தரைக் கண்டுதுதி செய்துதிரு
நல்லூரின் முடியி லரனூர்
பூமேவு கழல்சூட்ட வப்பூதி நாயனூர்
புத்திரனை யரவு தீண்டிப்
பொன்றிடப் பதிகமோ திக்கடு வகற்றியப்
பூதியா ருக்கு தவியும்
புகலரிய திருவீழி மிழலைப் படிக்காசு
போற்று மடியார்க் களித்தும்

போதவே தாரணிய வாலயக் கதவதன்
பூட்டுத் திறக்க வோதிப்
புரத்தோடு கைலாய மேகிடக் கால்கைமார்
புந்தேய்ந் துருண் டுருண்டு
போகவச ரீரிகேட் டுத்திருவை யாற்றிற்
புகுந்துகை லாய மாகப்
பொருந்தப் பணிந்தொரு மடங்கட்டி யேதிருப்
புகலூரின் மேட சதயப்
புண்ணியப் போதினிற் கதிபெற்ற வப்பர்தம்
பொற்கழல் வணங்கி வாழ்வாம். (உஉ)

---

குலச்சிறைநாயனார்.

பாண்டிவள நாட்டின்மண மேற்குடி யுதித்தரிய
பஞ்சாக் கரத்தை யோதிப்
பத்தியொடு நீறணியு மடியாரை யெதிர்கொண்டு
பரிவாற் புகழ்ந்து மறைக
டண்டிலா துயர்பரம னடிகளைத் தவறாது
சிந்தித்து நெடு மாறன்மந்
திரியாகி மங்கையர்க் கரசியார் செய்யுந்
திருத்தொண் டினுக்கு தவியாய்
வேண்டாத சமணர்பொய்ச் சமயங் கெடுத்துயர்
விபூதியை வளர்க்க வந்த
மேலான திருஞான சம்பந்த மூர்த்தியை
விருப்புடன் றொழுது வாதின்
மூண்டவமண் மாண்டறக் கழுவிலே யேற்றிநம்
முதல்வனைப் போற்றி யென்று
முத்திநிலை பெற்றிடு குலச்சிறை யடிக்கமல
முற்றுநினை வுற்று வாழ்வாம். (உங)

---

பெருமிழலைக்குறும்பநாயனார்.

திருமிழலை நாட்டிலே பெருமிழலை யூரிலே
சிவபத்தி யிற்சி றந்துஞ்
செய்யசுந் தரமூர்த்தி நாயனார் பெருமையைத்
தேர்ந்தவ ரடிக்க மலமே

கருதிபது வேசிவனை யேத்துத லெனக்கண்டு
காணரிய வட்ட சித்தி
களையும் பொருந்தியுறு பஞ்சாக் கரத்தினைக்
கைவிடா மற்செ பித்து
மரியதிரு வஞ்சைக் களத்தில்வன் றொண்டர்கை
லாயமடை யும்பேற் றினை
யறிவா லறிந்தவரை விட்டுப் பிரிந்துநா
ளுருயிர் தரிக்கில னென
வொருமைமன தாகியே யோகத்தி னிலையிருந்
துயர்முத்தி வீட டைந்த
வோதுபெரு மிழலைக் குறும்பனார் திருவடியை
யுள்ளத்தி னுள்ளு வோமே. (உச)

---

காரைக்காலம்மையார்.

கன்னலமு தாறென நிறைந்துபல் வளங்கொளச்
காட்டுமெழி லான காரைக்
காலிலே வைசியன் றனதத்த னுக்கருங்
காட்சிபோற் புனித வதியாங்
கண்மணி யெனப்பிறந் துயர்நாகை நிதிபதிம
கன்பரம தத்த னுக்குக்
காதலிய ளாகியில் லறநடந் துறுபொழுது
கணவனிரு மாங்க னிதர
வன்னதைப் பெற்றொன்றை யடியார்க் களித்தொன்றை
யன்பனுக் கிட்டும் வேண்ட
வப்பாலு மோர்கனி யழைத்துக் கொடுப்பவது
வதிமதுர மாக நேர்ந்த
தவ்வளவு முரைசெயவ தொப்பாம லினுமொன்
றழைத்துக்கொ டென்ன வதுபோ
லரனடியை வந்தனை புரிந்தொன் றழைத்துதவ
வாச்சரிய மெய்தி யஞ்சிப்
பின்னொரு நகர்க்கேகி நாயகன் புனர்மணம்
பெட்பொடு புரிந் திருக்கும்
பிரபலத் தைக்கேட்டு ஞாதிக ளுடன்சென்ற
பெருமை யோர்ந் துடனடைந்து

பேசரிய காதலன் றன்கழல் வணங்கிடப்
பிழையெனக் கண்டு விலகிப்
பெம்மானை வாழ்த்தியே யெற்புடம் போடுமோர்
பேயாகி யந்தா தியுஞ்
சொன்னய விரட்டைமணி மாலையும் பாடிமெய்த்
தொண்டர்வா ழுங்கை லாசந்
துன்னவே தலையா னடந்துமெய்க் கடவுளைத்
தொழவம்மை யென்ன நாதன்
சொல்லவா லங்காடு முடிகொடு நடந்துபோய்ச்
சோதியைத் துதிசெய் தென்றுஞ்
சுகமேவி யுற்றகா ரைக்கால மைக்குரிய
தொண்டருக் கடிமை செய்வாம். (உரு)

---

### அப்பூதியடிகணாயனர்.

பெருமையுறு சோழநாட் டிற்றிங்க ளூரிற்
பிராமணர் குலத் துதித்துப்
பெருகுபுண் ணியவுருவ மாகியில் வாழ்க்கையிற்
பிறழாம லப்பர் தம்மைக்
குருவாக வைத்தவர் திருப்பெயரா மைந்தர்கட்
கும்பசு தணீர்ப் பந்தர்கட்
குங்குளங் கட்குநந் தனவன மடங்களுக்
கும்புனைந் துவகை கொண்டு
மருமையொடு தன்மனைக் குற்றவந் நாயனர்க்
கடிபணிந் தமுதூட் டிமு
னரவினுற் றன்முதற் சேயிறப் பக்கரந்
தப்பா னடந்த தோத
வுருகியச் சேயினை யெழுப்பிக் கொடுத்தமுத
முள்ளருந் தத்து தித்தே
யுயர்வான கதிபெற்ற வப்பூதி யடிகடம்
முபயசர ணேத்தி வாழ்வாம். (உசு)

---

### திருநீலநக்கநாயனர்.

மன்னுபுகழ் சோழநாட் டிற்சாத்த மங்கைநகர்
மறையவர் குலத் துதித்து

மங்கைபங் கனையடியர் தம்மையுட் கொண்டுதிரு
வாதிரையி லயவந் தியாம்
பொன்னவிரு மாலயத் திற்செபஞ் செய்கின்ற
போதொரு சிலம்பி யரனூர்
பூரணவி லிங்கத்தின் மேல்விழத் தன்மனை
பொருமலூ தித்து மியவே
யன்னவளை நீக்கிமனை வந்துநித் திரைசெய்
தடைந்தசொப் பனநன் மையா
லவளொடு சிவாலயஞ் சென்றுகட வுட்பணிந்
தருண்ஞான சம்பந்த னூர்
தென்னமர்ப தந்தொழுது திருநீல கண்டயாழ்ப்
பாணர்தஞ் சேவை கொண்டு
செப்பரிய கதிபெற்ற திருநீல நக்கனூர்
சேவடிகள் போற்றி வாழ்வாம். (உஎ)

---

நமிநந்தியடிகணுயனூர்.

பெரியபுவ னத்தினிடை மெய்த்தொண்டர் வாழ்கப்
பிறங்குசோ ணாட்டி லேமப்
பேரூரி லந்தணர் குலத்திற் பிறந்துநம்
பெருமானை யார்வ மோடு
கருதகோ ராத்திரங் கண்டுதிரு வாரூர்
கலந்துவன் மீக நாதர்
கழல்போற்றி யரனெறித் தளிகையிற் குளநீர்
கவர்ந்தருந் தீப மேற்றி
யுரியவீ திவிடங்க நாதற்கு மீனமதி
யுற்சவ நடாத்தி வைத்து
மோங்குதிரு வாரூரி லுள்ளார் கணங்களா
யுற்றிடவ ணங்கி யவ்வூ
ரருமைபெறு தொண்டருக் காணிப்பொ னென்றுநம
தப்பராற் பாடல் பெற்றே
யரனடிக் காளாகி வீடுற்ற நமிநந்தி
யடிகளுக் கடிமை செய்வாம். (உஅ)

---

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

சீர்மேவு சோழநாட் டிற்புகலி பூந்தராய்
சிரபுரங் காழி புறவந்
திகழ்சண்பை பிரமபுரம் வேணுபுரம் வெங்குரு
திருத்தோணி புரமேன் மையாய்ச்
சேர்கழும லங்கொச்சை வயமெனும் பன்னிரு
திருப்பெயரை யுடைய பதியிற்
செய்யவந் தணர்குலத் திற்கௌணி யார்கோத்
திரத்திலதி பத்தி யுள்ள
சிவபாத விருதயர் தவத்திலவர் மனைபகவ
தியார்வயிற் றிற்பா னுவா
திக்கிரக முச்சம் பெறத்திவ்ய லக்கினத்
தினிலாதி ரைப்போ தினிற்
செனனமாய் மூன்றாண் டினிற்கௌரி பாலுண்டு
திருஞான சம்பந்த ராந்
தேசுபெறு மாளுடைய பிள்ளையா மென்னுஞ்
சிறப்புலாம் பெயர்கள் வாய்ந்து

பார்மேவு "தோடுடைய செவிய" னெனு மோர்திருப்
பதிகமும் பாடி யென்றும்
பண்புபெற் றிடுதிருக் கோலகா வென்னுநற்
பதியினிற் பஞ்சாக் கரப்
பயனுறும் பொற்றாள முங்கொண்டு தாம்பாடு
பதிகங்கள் யாழி லிட்டுப்
பாடவே திருநீல கண்டப் பெரும்பாண
ருக்குப் பகர்ந்து மாறன்
பாடித் தலத்திலே திருவறத் துறையுறும்
பரமனரு ளாற் கிடைத்த
பணிதியுறு முத்துச்சி விகைகுடைச் சின்னங்கள்
பரிவொடுற் றுபாந யனமாம்
பருவம்வர வெக்ஞோப வீததா ரணமுமிப்
பாரவர்க் காமு டித்தும்
பங்கமி திருப்பாச்சி லாச்சிரா மத்தினிற்
பத்தியுறு கொல்லி மழவன்

பேர்மேவு புத்திரியின் முயலக னெனுங்கொடும்
பிணியையடை யாது போக்கிப்
பின்றிருக் கொடிமாட மேவுசெங் குன்றூர்
பெயர்ந்திடாப் பனியை நீக்கிப்
பெரியசிவ பூதமுத் துப்பந்த ரிடவதைப்
பெற்றுமா வடுது றையினிற்
பெம்மானை வேண்டியே சிவபாத விருதயப்
பேர்தந்தை யாக முற்றப்
பெருகுமோர் கிழிதந்து திருநீல கண்டப்
பெரும்பாணர் யாழி லிட்டுப்
பேசமுடி யாப்பதிக மோதியும் பணியினுற்
பேருயி ரிழந்த வணிகப்
பிள்ளையை யெழுப்பியவ னுக்கவ னுடன்வந்த
பெண்ணைமண மிட்டு வைத்தும்
பீடுபெறு திருவீழி மிழலையிற் காசுகொடு
பிரபலப் பஞ்ச மாற்றிக்

கார்மேவு சோலைவே தாரணிய வாலயக்
கதவினை யடைக்க வோதிக்
கனமதுரை வந்தொரு மடத்தினிற் புகவாரு
கதமதச் சமணர் வைத்த
கனலைத் தவிர்த்துமா றற்குய்த்து நீத்துமிகு
கருணையாற் கூனி மிர்த்துங்
கலகம்விளை வித்தவம ணக்குழுவை வாதினுற்
கழுவி லிட்டும் பௌத்தர்
களையுஞ் செயித்தப்பர் சிவிகைதாங் கப்பெற்று
காயிலாண் பனைபெ ணாக்கிக்
கடத்துற்ற வத்தியைப் பூம்பாவை யென்னுமொரு
கன்னியுரு வாக்காட் டியுங்
கருதரிய நம்பாண்டார் நம்பிதம் புதல்விமங்
கலமுடித் துந் திருநலூர்க்
கட்சோதி யைக்கியமாந் திருஞான சம்பந்தர்
கழலிணை வணங்கி வாழ்வாம். (உகூ)

### ஏயர்கோன் கலிக்காமநாயனூர்.

கனமுற்ற சோழநாட் டிற்றிருப் பெருமங்
    கலத்தில்வே ளாளர் மரபிற்
  காவலனி டத்திலே சேனுதி பதியான
    கவினேய குடியில் வந்து
தினமுற்ற குருலிங்க சங்கமத் தொழுகியே
    திகழ்திருப் புன்கூரில் வாழ்
  சிவாலயப் பணிசெய்து சூலேநோ யெய்தியது
    தீர்க்கவன் ஹெண்டன் வருவான்
மனமுற்று நீக்கெனப் பரமனுரை செயவவன்
    மதமுடன் பரவை யார்தம்
  மனையினுக் குத்தூது நம்பரனை யேவிட்ட
    மாபாவி யென்று பேசிச்
சினமுற்று வாளினுன் மாய்ந்துசுந் தரர்வந்து
    சேரவுயிர் பெற்றெ ழுந்து
  திருவரு ளடைந்திடு கலிக்காம நாயனூர்
    சேவடிக் கன்பு செய்வாம். (௩௦)

---

### திருமூலநாயனூர்.

சிவபிரான் கைலேயின் முதற்றலைமை யாநந்தி
    தேவரருள் பெற்ற பேரிற்
  சிவயோகி யொருவர்தமிழ் முனிவனைக் காணுவான்
    செல்லுநெறி யிற்ப சுக்கள்
சவமாய்க் கிடக்கின்ற மூலனைக் கண்டழத்
    தாமவனு டற்பு குந்து
  தம்முடலே யோர்புறங் காவல்செய்தெ ழுந்தாக்கள்
    சந்தோட முறம கிழ்ந்து
தவவேடம் விட்டிடைய னுருவொடு பசுக்கள்பின்
    சார்ந்தவ னிலிற்பு காது
  தனிமடத் தினில்வந்தி யோகத்தி ருந்துமேற்
    றங்கியா வடுது றையிலே
நவமேவு மரசடியின் மூவா யிரத்தாண்டு
    நண்ணுசிவ யோக முற்று

நாடுதிரு மந்திரஞ் செய்ததிரு மூலரடி
நாண்மலர் துதித்து வாழ்வாம். (ருக)

---

தண்டியடிகணயனர்.

மண்பெற்ற பேருன சோழநாட் டிற்றலைமை
வாய்ந்ததிரு வாரூ ரிலே
மறைவுற்ற கண்ணராய்ப் பஞ்சாக் கரச்செபம்
மறவாது கோயில் வலமாய்
நண்புற்று வாவியைக் கல்லவம ணக்குழா
நாடியத னைத்த டுத்து
நவையுரைப் பப்பொரு தரனிடத் தோதிமறு
நாளிற் றடத்துண் மூழ்கிக்
கண்பெற்று மச்சமணர் கண்ணிழப் பக்கண்டு
காவலவ னவரை யெல்லாங்
காட்டிற் றுரத்தியவர் பாழிகளை யும்பள்ளி
களையும் பறித்து வாவி
திண்பெற்றி டக்கட்டி வைப்பநம் பரனைத்
தியானித்து முத்தி பெற்ற
தேவர்புக ழுந்தண்டி யடிகளடி யார்க்கடிமை
செய்துசந் ததமும் வாழ்வாம். (ருஉ)

---

மூர்க்கநாயனர்.

தொண்டைவள நாட்டிறிரு வேற்காட்டி லேமிகத்
துய்யவே ளாளர் மரபிற்
றோன்றியனு தினமுமடி யார்களைச் சிவமெனத்
தொழுதமு தருத்தி யதன்மே
லுண்டுவேண் டியநிதிவ ழங்கிவரு மியல்பினு
லுள்ளபொருள் விரைய மாக
வுளவடிமை நிலமெலாம் விற்றுமது காணும
லுள்ளமிக வாடி யோடிப்
பண்டையிற் றுங்கற்ற சூதாட வெண்ணியே
பண்புறுங் கும்ப கோணப்
பதியடைந் தவ்வழியி லீட்டிமா கேசுரப்
பத்தியுறு பூசை முற்றி

யண்டருஞ் செயவொணுச் சிவபுண் ணியத்தினு
லழியாத முத்தி பெற்ற
வருண்மூர்க்க நாயனுர் திருமலர்க் கழல்போற்று
மடியவர்க் கடிமை செய்வாம். (ருரு)

---

### சோமாசிமாறநாயனுர்.

சீர்சோழ மண்டலந் திருவம்பர் நகரில்வே
தியர்குலத் திற்பி றந்து
சிவபிரான் பஞ்சாக் கரத்தைச் செபித்தடியர்
செய்யநற் கழல்வ ணங்கி
நேர்சென் றழைத்தமு தருத்தியா கங்களதி
நேமனத் தோடி யற்றி
நிகரிலாச் சுருதியிற் புகழ்பயன் கருதாது
நிட்காம மாய்மு டித்துப்
பேர்தலாய் நமதுதிரு வாரூர்பு குந்தன்பு
பெருகுசுந் தரமூர்த் தியாம்
பேசரிய சைவசம யாசாரி யார்கருணை
பெற்றவனை நாளு மேத்திச்
சூரனைத் துந்தவிர்த் தியாவருங் காணுணச்
சுகமுத்தி வாழ்வ டைந்த
சோமாசி மாறனுர் திருவடிக் கமலங்க
டொழுதுநிலை பெற்று வாழ்வாம். (ருச)

---

### சாக்கியநாயனுர்.

மருவளர் திருச்சங்க மங்கையில் வேளாளர்
மரபில்வந் தெய்து சனன
மரணத்தை யெண்ணியெண் ணிக்கவலை கொண்டதனை
மாற்றுநெறி யாதெ னத்தேர்ந்
தருடருங் காஞ்சி புரத்திற் பௌத்தர்களை
யணுகியச் சமய நூலை
யாராய்ந்து சற்சமய மன்றெனத் தள்ளிமற்
றயன்மதங் களையு நீக்கித்

திருவரு டருஞ்சைவ சமயநெறி யேமுத்தி
சேர்த்திடுமெ னத்து ணிந்து
திகழ் *பஞ்ச சாதாக்கி யங்களையு மறிவினற்
றெள்ளிதென விடைவி டாமற்
கருமசா தாக்கியமாஞ் சிவலிங்க மகிமையைக்
கண்டுநா ளுந்து தித்துக்
கல்லாலெ றிந்துகதி பெற்றசாக் கியர்பதங்
கருதாது கருதி வாழ்வாம். (ருடு)

---

சிறப்புலிநாயனூர்.

மல்லன்மிகு சோழநாட் டிற்றிலக மென்னவே
வாய்ந்ததிரு வாக்கூ ரிலே
மறையவர்கு லத்தில்வந் தவதரித் தடியவர்
வரும்பொழு தெதிர்ந்து போற்றிச்
சொல்லினிய பேசிமனை யிற்புகுந் தரியவறு
சுவையமுத மூட்டி வேண்டுஞ்
சொன்னங் கொடுத்துரிய பஞ்சாக் கரத்தையுந்
துகளிலா மற்செ பித்தும்
புல்லரறி வுக்கமைவு றுதுவளர் சிவபரம்
பொருளைக் குறித்து நாளும்
புங்கவர்ம தித்திடும் பலவியா கங்களும்
புண்ணியங் களுமி யற்றி
நல்லவர்க ணல்லவரெ னச்சொலக் கைலைமலை
நண்ணிநம் பரனி டத்தே
ஞானமருண் முத்திநிலை பெறுசிறப் புலிநாய
னூரடிவ ணங்கி வாழ்வாம். (ருசு)

---

* சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கர்மசாதாக்கியம்.

சாதாக்கியம், சிவதத்துவமைந்தினொன்று. அஃது ஞானமுங் கிரியையு மொத்தது.

சிவதத்துவம் ஐந்தாவன:—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம். ஞானமேறிக்கிரியைகுறைதல் - சுத்தவித்தை. ஞானங்குன்றிக்கிரியை யுயர்தல் - ஈச்சுரம். ஞானங்கிரியையொத்தது - சாதாக்கியம். கிரியைநாடல் - சத்தி. ஞானமொன்றல் - சிவம்.

சிறுத்தொண்டநாயனார்.

கருதருஞ் சோழநாட் டிற்பல் வளங்குலவு
கனமுற்று வாழ்தி ருச்செங்
காட்டங்கு டியின்மகா மாத்திரர்கு லத்திற்
கவின்பெறவு தித்த ருளையே
காட்டும்ப ரஞ்சோதி யாரெனப் பெயர்கொண்டு
காணரிய வாயுள் வேதங்
களையும் படைக்கலத் தொழில்குதிரை யேற்றமுங்
களிறேற்ற முஞ்சு ருதியும்

விரிவாய்ப் பயின்றகோ ராத்திரம் பரமனே
மெய்ப்பொருளெ னத்தெ ளிந்தும்
வேந்தற்க ணுக்கரா கிச்சத்து ருக்களையும்
வென்றுபல பொருள்க வர்ந்து
வெற்றிதர வரசனல் வரிசைபெற் றுரியதிரு
வெண்காட்டு நங்கை யோடு
மேவருங் கணபதீச் சரநாத னைப்போற்றி
மிக்கவில் லறந டத்தி

வருமடிய வர்க்கமுத ருத்தியபி னுண்டிரு
வளர்சிறுத் தொண்ட ரெனுநா
மங்கொண்டு சீராள தேவனெனு மொருமகவு
வாய்ப்பவைந் தாண்டு நிறையும்
வயதினிற் கலையெலா மோதவைத் துந்தமூர்
வந்தவா ளுடைய பிள்ளை
மலரடிவ ணங்கியவ ரருள்பெற்று *முட்சமய
வைரவத் துக்கு ரியவோர்

திருவேட மாவெய்தி யாத்தியின் கீழுற்ற
சிவபிரா னைப்ப ணிந்து
செய்யவமு துணவழைத் திடவைந்து வயதான
சேய்க்கறிகொ டென்ன வினியென்
செய்குவனெ னத்தன்கு மாரனைக் கறிசெய்து
சிந்தைமகிழ் வாய ளித்துத்

---

* உட்சமயம் ஆறுவன, வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்.

திடஞான நிலையுறசி றுத்தொண்ட நாயனர்
சேவடிகண் முடியில் வைப்பாம். (நஎ)

---

* சேரமான்பெருமாணுயனர்.

தெய்வமலை நாட்டினின்ம கோதையென் றரியபேர்
திகழ்கொடுங் கோளூ ரிலே
சேரர்குடி வந்துபெரு மாக்கோதை யாென்று
திவ்வியப் பேர்பு னைந்துந்
துய்யதிரு வஞ்சைக் களத்துற்று நம்பிரான்
றொண்டுசெய் தவன ருளினாற்
றொல்லுலகை யாண்டுமொரு வண்ணனை நோக்கிமெய்த்
தொண்டனென வாழ்த்தி நின்றுஞ்
சைவசம யத்தினைவ ளர்த்துநஞ் சோமசுந்
தரர்விடுந் திருமு கத்தைத்
தலையிலே கொண்டுபொ ணப்பத்தி ரற்களவி
றனமுதவி யாரூரர் தஞ்
செய்யதாள் பரவியவ ரொடுகயிலை மேவியே
சிவகணத் தலைவ ரான
சேரமான் பெருமா ளெனுங்கதிகொ ணுயனர்
திருவடி வணங்கி வாழ்வாம். (நஅ)

---

கணநாதநாயனர்.

நற்சோழ மண்டலந் தன்னிலே சீர்காழி
நகரின்மறை யவர்கு லத்தி
னண்பொடுற் பவமாத் திருத்தோணி யப்பர்கழ
ணுடியவர் பணிவி டைக்கே
தற்போத மேலிட்டு மெய்த்தொண்டர் தொண்டராய்ச்
சார்ந்தவர்க் கேவல் செய்துஞ்
சற்சமய குரவராந் திருஞான சம்பந்தர்
சரணமனு தினமும் வாழ்த்தி
யற்போரு ருவமாக முப்பொழுதி னுங்கொள்பே
ராசையா னெறிவ ழாம

---

* கழறிற்றறிவார், என்றும் பெயருளது.

லர்ச்சனைபு ரிந்தரிய பூசைநிறை வேற்றியும்
மரிவையுட னில்லி லுற்றுங்
கற்போலு நெஞ்சினரை யடியவர்க ளாக்கியுங்
கைலையிற் கணநா தராங்
கதிபெற்ற கணநாத நாயனர் சேவடிகள்
கண்டுகதி கொண்டு வாழ்வாம். (௩௯)

---

கூற்றுவநாயனர்.

திருவளர்க ளந்தையெனு மூரிலே குறுநிலத்
திறன்மன்னர் மரபில் வந்து
சிவனடிய வர்க்குத் திருத்தொண் டியற்றியுஞ்
செப்பரிய பஞ்சாக் கரத்
துருவளர்த் தும்பெருஞ் செல்வமா நால்வகை
யுறும்படைகொ டரசர் மீதி
லுயுத்தம்பு ரிந்தந்த நாடுகளை யுங்கவர்ந்
தொண்முடி தரிப்ப தற்கா
யொருமையொடு தில்லைவா ழந்தணரை வேண்டவவ
ரொப்பாது சேர நாட்டுக்
குடனேக நெஞ்சந்த ளர்ந்தரனை யுள்ளத்தி
லோர்ந்துகண் டுயில நாதன்
மருமலர்ச் சேவடியை முடியினிற் சூட்டவது
மணிமகுட மென்ன வுலகை
மனுமுறையி லாண்டுகதி பெற்றகூற் றுவர்செய்ய
வண்கழல்வ ணங்கி வாழ்வாம். (௪0)

---

பொய்யடிமையில்லாதபுலவர்.

பாண்டிவள நாட்டிற் றுவாதசாந் தப்பெயர்
படைத்தமது ராபு ரியிலே
பரமனரு ளாற்கொள்சங் கப்பலகை மீதிலதி
பக்குவத் தோடி ருந்து
மேண்டரும்வி பூதிருத் திராக்கம்பு னைந்தெவரு
மெய்தரிய பஞ்சாக் கரத்
திற்பயின் ருேதிடுமி லக்கணவ ரம்புணர்ந்
தினியசெந் தமிழ்வ ளர்த்து

நீண்டவரு ளாசுமது ரஞ்சித்திர வித்தார
நிலையான கவிகள் செய்யு
நிபுணராய்ச் சோமசுந் தரனையே பாடியதி
நேமமிகு பத்தி நெறியே
பூண்டுநாற் பத்தொன்ப தின்மராய்ச் சைவம்
புனைந்துகதி பெற்று மேவும்
பொய்யடிமை யில்லாத புலவர்க ணலந்தரும்
பொன்னடிகள் போற்றி வாழ்வாம். (சுக)

---

புகழ்ச்சோழநாயனர்.

செல்வமுறு சோழநாட் டுறையூரி லுற்றுநற்
செங்கோ னடாத்தி மேன்மை
திகழ்சைவ சமயந் தழைக்கச் சிவாலயஞ்
சேவித்து மடியார் களை
யொல்காம லெதிர்சென் றழைத்துப் பணிந்துகரு
வூர்சென்று திறைக வர்ந்து
முரியசிவ காமியாண் டார்களிற் றைத்தடிய
வுடைவாளி னுற்றன் னையுங்
கொல்கெனச் சொல்லியதி கன்படையை மாய்த்தவர்கள்
கொண்டுவரு தலைக ளுள்ளே
கோலப் பெருஞ்சடைத் தலையொன்று கண்டகங்
குலைகுலைந் ததனை யென்பா
னல்கெனப் பெற்றெரி வளர்த்தத னுடன்புக்கி
நம்பனடி நிழல டைந்து
நாடரிய கதிபெறு புகழ்ச்சோழ நாயனர்
நற்கழல் வணங்கி வாழ்வாம். (சுஉ)

---

நரசிங்கமுனையரையநாயனர்.

திருமுனைப் பாடியிற் குறுநிலத் தவர்குலத்
திற்பிறந் தரிய செல்வந்
திருநீ றெனக்கொண்டு சிவனடியர் வருகையே
தேடரும் பேறென் னவே
கருதியான் மாக்களைச் சைவசம யத்திற்
கவின்பெற வமைப்ப தற்கே

காவலவ னாகியுந் திருவாதி ரையிலன்பர்
கட்கமுது நிதியு மீய்ந்து
மொருபொழுதி னிற்றூர்த்த வடிவமாய் வெண்ணீற்றை
யுத்தளம தாய்ப் பூசியே
யுற்றமுழ வஞ்சகற் கிருநூறு பொன்கொடுத்
துபசார மிட்ட னுப்பிச்
சுருதிவழி தவறாது தொண்டுக ளியற்றியே
துரியநிலை வாழ்வ டைந்த
சொல்லரிய நரசிங்க முனையரைய நாயனார்
தொண்டருக் கடிமை செய்வாம். (சரு)

---

## அதிபத்தநாயனார்.

பார்மேவு சோணாட்டி னாகைச் சமுத்திரப்
பாங்கரினு ளைப்பா டியிற்
பரதவர்கு லத்தினிற் றலைவராய் வலையினிற்
படுமீன டைந்து றதியாய்ச்
சீர்மேவு சிவபத்தி யிற்சிறந் தனுதினஞ்
சிவபிரா னுக்கென் னவே
சேர்ந்ததனி லொருமீனை விட்டுவரு நாளையிற்
றிகழ்பொன்னி னுருவ மான
வோர்மீ னகப்பட்ட காலையெனை யாட்கொண்ட
வொருவனுக் கெனவ தனையு
முவரியிற் புகவிடும் போதிலே திருவுள
முவக்கவிட பாரூ டராய்
நேருற்று நம்மடிய ரொடுகைலை வாழ்கென
நிகழ்த்தவருண் முத்தி பெற்ற
நிகரிலா வதிபத்த நாயனார் சேவடிக
ணினையாது நினைதல் செய்வாம். (சச)

---

## கலிக்கம்பநாயனார்.

நடுநாட்டி னிற்றிருப் பெண்ணா கடத்திலே
நாடுவை சியர்கு லத்தி
னற்சென்ன மாய்த்திருத் தூங்கானை மாடமுறை
நாதனுக் கடிமை செய்து

வடுநீக்கி வருதிருத் தொண்டரையவரவொடு
மனைக்கழைத் தமுத ருத்தி
வரையறையி லாநிதிவ ழங்கிவரு காலொருவர்
வரவவர்ம லர்க்க ழலையுந்
திடமுடன்வி ளக்கநீர் வார்க்கமனை யவர்முனஞ்
சிற்றடிமை யென்ன வோர்ந்து
சிறிதுதாழ்க் கப்பொரு தக்கரகம் வாங்கியத்
தேவிநற் கையை வாளா
லுடன்வெட்டி யவர்தாள் விளக்கியமு தூட்டியவ்
வுறுதியொடு சிவன டிக்கீ
ழுற்றருள டைந்திடுக லிக்கம்ப நாயன
ருபயசர ணைத்தி வாழ்வாம். (௪௫)

---

கலியநாயனர்.

தொண்டைவள நாட்டிலே திருவொற்றி யூரிற்
சுகச்சக்க ரப்பா டியிற்
ரோன்றுசெக் கார்குலத் திற்பெருஞ் செல்வராய்த்
தூலநிதி நிலையா மையைக்
கண்டுபுண் ணியமியற் றக்கருதி யத்தலக்
கடவுளா லயமு ழுவதுங்
கைவிளக் கிட்டுவறு மைப்பட்டு மெய்சலிக்
கக்கூலி வேலை செய்து
கொண்டுகிய மப்படிபு ரிந்துமது கிட்டாது
கோதின்மனை யவளை விற்கக்
கூறியதி லுங்கொளுவ ரின்மையா லாலயங்
குறுகியே தன்க ழுத்தைக்
கண்டகத் தாலரிந் திடவரன டைந்தவர்
கரத்தைப் பிடித்த ருள்செயக்
கதிபெற்று வாழ்கலிய நாயனர் சேவடிகள்
கண்டுவினை தீர்ந்து வாழ்வாம். (௪௬)

---

சத்திநாயனர்.

மன்னுபுகழ் சோழவள நாட்டினில் வரிஞ்சியூர்
மாநகரில் வேளா ளர்தம்

மரபிற்பி றந்தரவ மதிநதிக டுக்கையணி
வார்சடையி லங்கு மரனார்
பொன்னடித் தாமரையை யணுவுமற வாமலே
போற்றிமெய்த் தொண்டு செய்து
புகழுமடி யார்களையி கழ்ந்தவர்த நாக்கைப்
புரிந்ததண் டாயு தத்தாற்
றுன்னப்பி டித்திடுக் கித்தமது கையிற்
றுலங்கிடுங் கத்தி யாலே
துண்டப் படுத்தியென் றென்றுமிது நிலையான
துவசமென நாட்டி வேதம்
பன்னுமுக் கண்ணனுறு கைலையைய டைந்தரும்
பரகதியில் வாழ்வு பெற்ற
பத்திமிகு மருள்சத்தி நாயனார் சேவடிப்
பதுமமலர் போற்றி வாழ்வாம். (சஎ)

---

ஐயடிகள் காடவர்கோனுயனர்.

புண்ணியத் தொண்டைவள நாட்டினிற் காஞ்சீ
புரத்திலே பல்ல வர்குலம்
போற்றப் பிறந்துசை வத்திருநெ றிக்கட்
பொலிந்தறி வுதிப்ப விந்த
மண்ணில்வா ழுயிரிம்மை மறுமையிற் சுகமுத்தி
வாய்ந்திடவி ரும்பி யெல்லா
மன்னரும் பணிசெய்ய வரசியற் றிச்சைவம்
வழுவாம லோங்க நிறுவி
நண்ணரிய துன்பமர சாட்சியென வோர்ந்துமொரு
நாண்மக னிடத்தில் விட்டு
நம்பரனு றுஞ்சிவத லங்கடோ றுஞ்சென்று
நற்றிருப் பணிகள் செய்து
மண்ணனுக் கினியதிரு வெண்பாக்க ளொவ்வொன்று
மருளியே முத்தி பெற்ற
வையடிகள் காடவர் கோனுய னார்கமல
வடியிணையி றைஞ்சு வோமே. (சஅ)

கணம்புல்லநாயனர்.

செப்புதற் கரியவட வெள்ளாற்றி னுக்கயற்
றென்கரை யிருக்கும் வேளூர்த்
திருநகரி லவதரித் துச்சிவ நெறிக்கட்
சிறந்தா லயத்தி னுள்ளே
யொப்பரிய திருவிளக் கேற்றிவறு மைப்பட்
டுழன்றுநற் றில்லை யூரி
லுற்றுத் திருப்புலீச் சரமென்னு மாலயத்
துள்விளக் கேற்றி வைத்துங்
கைப்பொருள் வறப்பக் கணம்புல் லறுத்துவிலை
கண்டுநெய் வாங்கி விட்டுங்
கருதுமப் புல்லையே மாட்டியுமெ ரிக்கவது
காணுது தமது முடியைப்
பைப்பையவெ ரிப்பவக் காலடிமை கொண்டுநம்
பரமன்வந் தருள்கொ டுப்பப்
பரகதிய டைந்திடுக ணம்புல்ல நாயனர்
பாதமலர் பரவி வாழ்வாம். (சகூ)

---

காரிநாயனர்.

துய்யநற் பேர்திருக் கடவூரி லேயுதித்
துத்தமிழின் மிகவல் லராய்ச்
சொல்விளங் கிப்பொருண்ம றைந்திடத் தம்பெயர்
துலங்கநற் கோவை நூலைச்
செய்துமூ வேந்தர்க ளிடஞ்சென் றுரைத்தவர்கள்
சிந்தைமகி ழப்பு கன்று
திரவியம் பெற்றுச் சிவாலயங் கட்டியுஞ்
சிவனடிய வர்க்க ளித்தும்
பையரவ முங்கொன்றை யுந்துலங் குஞ்சடைப்
பரமனுறு கைலா யமாம்
பனிவரையை மறவாக் கருத்தினரு மாகியிப்
பாரொலாஞ் சிவகீர்த் தியை
யையமற நிறுவியும னம்போல வாக்கையுட
னக்கைலை புக்கு வாழ்வுற்

றருள்வாய்ந் திடுங்காரி நாயனுர் சேவடிக
ளன்புடன் போற்றி வாழ்வாம். (ரு0)

---

நெடுமாறநாயனுர்.

வளந்திகழ் வுறும்பாண்டி நாட்டின்மது ராபுரியில்
வந்துகூன் பாண்டி யப்பேர்
வாய்ந்தமணர் போதனையி யற்றவே யாருகத
மதமே விடப்பி றழ்ந்து
மிளம்பிறைநு தற்பொருவு மங்கையர்க் கரசிமண
மெய்தியு மமைச்ச ராக
வேய்ந்திடு குலச்சிறையை யுற்றுமவ் விருவரா
லெம்பிரான் வடிவ சைவத்
தளம்பெருக வந்ததிரு ஞானசம் பந்தராற்
றருநீ றணிந்து வெப்புஞ்
சார்ந்தகூ னுந்தீர நெடுமாற னென்னுமொரு
தண்பெயரும் வாய்ந் துயுத்தக்
களம்பரவு வடபுலத் தரசரொடு பொருதிவெங்
கண்டுமீண் டரன டிக்கீழ்
கதிபெற்ற நெடுமாற நாயனுர் திருவடிக்
கமலங்கள் போற்றி வாழ்வாம். (ருக)

---

வாயிலார்நாயனுர்.

நல்லவர்க ளேபிறந் தறமெனுங் கொடியெங்கு
நாட்டிவளர் கின்ற தொண்டை
நாட்டிலரி யதிருமயி லாப்பூரில் வேளாளர்
நற்கோத் திரத்து தித்து
வல்லமைகொள் சிவனடியை யொருபொழுது மறவாத
மனவா லயத்தி ருத்தி
மாசற்ற ஞானமா கியதிருவி ளக்கேற்றி
மருளுரு தானந் தமாந்
தொல்லையருண் மஞ்சனக் குடநீரை யாட்டிவாய்
துதிபலவி யற்றி வாழ்த்தத்
தூயவன் பானதிரு வமுதினெனி வேதித்
தறும்பரஞ் சோதி யேயென்

னல்லலற வந்தருளு மாதியே நீதியே
யமலமே யென்று போற்றி
யறிவாகி முத்திபெறும் வாயிலார் நாயனு
ரடியவர்க் கடிமை செய்வாம். (ருஉ)

---

முனையடுவார்நாயனர்.

பொன்னுலவு சோணாட்டி லுரியதிரு நீடூர்
பொலிந்தவே ளாளர் மரபிற்
புண்ணியத் திருவுருவ மாகப்பிறந் தரற்
போற்றுமடி யார்தம் மையே
முன்னவ னெனத்தொண் டியற்றியும் பற்றலர்
முனைந்துசெய் போர்க்க ளத்தின்
முறிபட்ட பேர்வந்து கூலிதர வதுகொண்டு
மூண்டமர் புரிந்து வென்று
மின்னவழி வ்ருபொருள் பெருக்கியடி யாருக்
கியம்பியப டிக்க ளித்து
மின்னமு தருத்தியு நெடுங்கால மித்தொழி
லியற்றியற நெறிவ ழாது
மன்னுநிலை யுற்றுநம் பெருமா னடிப்போதை
மறவாத பத்தி பூண்டு
வளர்கைலை மேவியருள் பெற்றமுனை யடுவார்
மலர்க்கழல் வணங்கு வோமே. (ருங)

---

கழற்சிங்கநாயனர்.

காடவர் குலத்தில்வந் தரவணிந் தவனடிக்
கமலங்கள் போற்று வலியாற்
கருதரிய வடபுலத் தாசர்களை வென்றெங்
கணுஞ்சைவ மோங்க வுலகம்
பீடுபெற வாண்டுமோ தேவியொடு தலமெலாம்
பெம்மானை யடிவ ணங்கிப்
பெருகுதிரு வாரூரா நண்ணியா லயமுட்
பிறங்கவல முற்ற காலை
மாடுறு புதுப்பூ வெடுத்துமனை யவண்மோப்ப
வருசெருத் துணைநா யனுர்

வாளினுன் மூக்கையரி யக்கண்டு பரமற்கு
வாய்ந்தபூ வைத்தீண் டிய
வேடவிழ்ம லர்க்கையும் வைக்கலா காதென்
றெழுந்துவா ளாற்று ணித்தே
யெவருமடை யாக்கதிய டைந்திடுக ழற்சிங்க
ரிணையடிகண் முடியில் வைப்பாம். (ருச)

---

இடங்கழிநாயனுர்.

கோனுட்டி னிற்கொடும் பாளூரில் வளர்கின்ற
குறுநிலத் தரசர் மரபிற்
கூறருங் கனகசபை யின்முகப் பைப்பொனுற்
குயிற்றுமா தித்தன் குடி
தானுட்ட வந்தநற் சைவநெறி வைதிகந்
தழையச்சி வால யத்திற்
றக்கபடி நித்தியநை மித்தியங் குறையாது
சரியாய் நடக்க வரசு
மேனுட்டி வருநாளி லொருவரடி யார்க்குள
விருந்துசெய வழியி லாமன்
மேவுநெற் பண்டார முற்றுங்க வர்ந்தகால்
வெளியாகி முன்னர் விடலு
மேனுட்ட மென்னென் றுசாவியவர் வேண்டியவை
யீய்ந்துநீ றணிய ராகி
யென்றுமுல வாக்கதி யடைந்திடுமி டங்கழிந
மிணையடிகள் போற்றி வாழ்வாம். (ருரு)

---

செருத்துணைநாயனுர்.

வாய்ந்திடுபு கழ்ச்சோழ மண்டலந் தன்னிலே
வளர்மருக னுட்டி லென்றும்
வளமிகுந் தஞ்சைநகர் வேளாளர் மரபிலே
வைதிகச் சைவ மணியா
யேய்ந்துதிரு வாரூ ரடைந்துகா லந்தொறூஉ
மேற்றுவன் மீக நாத
ரிணையடிவ ணங்கித் திருத்தொண்டு செய்யுநா
ளீசனைப் பூச னைபுரிந்

தாய்ந்திடு கழற்சிங்க நாயனார் மாதேவி
யாலயத் துற்ற பூவை
யன்பினெ டெடுத்துமோப் பக்கண்டு வாளினா
லவண்மூக் கரிந்து மன்பிற்
றோய்ந்துநெறி யகலாது மெய்த்திருப் பத்தியாற்
சொல்லரிய சிவபா தமே
துணையுற் றிடுஞ்செருத் துணைநாய னார்மலர்த்
துணையடிக டுதிசெய் குவாம். (ருசு)

---

புகழ்த்துணைநாயனார்.

தானதரு மஞ்செய்செ ருவிலிபுத் தூராதி
சைவமர பிற்பி றந்து
சாத்திரவி திப்படிய ருச்சனைபு ரிந்தரன்
சரணமற வாது போற்றிப்
பானமில் லாக்கொடும் பஞ்சமொன் றெய்திடப்
பசியான்மி கக்க ளைத்தும்
பத்திநெறி தவறும லர்ச்சனைவி டாதலும்
பகலுமாச் செய்து மொருநாள்
வான்நா யகன்முடிக் காட்டுவான் கொண்டதிரு
மஞ்சனக் கலசம் வீழ
மலரடியி னிற்றமும் வீழ்ந்தயர்வு றக்கனவில்
வந்துசொல விழிதி றந்து
ஞானபீ டத்துற்ற காசெடுத் தடியார்க்கு
நாளுங் கொடுத்து மேலா
நற்கதி பெறும்புகழ்த் துணைநாய னாரையே
நாடிமெய்த் தொண்டு புரிவாம். (ருஎ)

---

கோட்புலிநாயனார்.

நாமகளு றுஞ்சோழ நாட்டினிற் சீர்பெருகு
நாட்டியத் தான்கு டியிலே
நன்றியுறி வேளாளர் மரபிற்பி றந்துசிவ
நாதனுக் கடிமை யாகிக்
கோமகனி டத்திலே சேனாதி பதிவேலை
கொண்டுவரும் வேத னத்தைக்

கோவிலமு துக்குரிய நெல்வாங்கி வைத்துக்
கொடும்போ ரடைந்து வென்று
தாமீளு முன்வந்த பஞ்சத்தி லந்நெலைத்
தாய்தந்தை யுடனு தித்தார்
தாரமுத லானவ ரெடுத்துப் புசித்திடத்
தணியாத கோப மாகி
வேமன லெனக்கொதித் துடைவாளி னலவரை
வெட்டிடும் பொழுதி லுற்ற
விடையவ னுடன்சென்று கதிபெற்ற கோட்புலிதன்
விரைமலர்க் கழலில் வாழ்வாம். (ரு௮)

---

பத்தராய்ப்பணிவார்.

அடியார்க ளைக்கண்டு சாதியைவி சாரியா
தரனெனப் போற்றி மிக்க
வாசையுட னுப்பின்னர் கன்றணை தல் போலணைந்
தன்பினுற் பேசி யவர்தாண்
முடிமிசை புனைந்தவர்கள் வேண்டுவ வளித்துவிதி
முறையினர்ச் சனைபு ரிந்து
முன்னியே செய்புண்ணி யங்களெல் லாந்தேவர்
முதல்வனுக் கேகொ டுத்துப்
படியெலாம் புகழ்சிவ சரித்திரம் வினவியன்
பாகமன நெக்கு நெக்காய்ப்
பரவசம தாகிநாத் தழுதழுத் தானந்த
பாஷ்பம்விழி பொழிய வன்பர்
குடியெலாங் காக்குநம் பெருமானை மறவாத
குணமுடைய ராயி வேடங்
கொண்டுவளர் பத்தராய்ப் பணிவார்ப தங்கண்டு
கொடுவினை கடந்து வாழ்வாம். (ருசு)

---

பரமனையேபாடுவார்.

வடமொழிதி ராவிடமெ னுந்திருப் பாடைகளில்
வல்லவர்க ளாய்ச்ச னனமு
மரணமுங் கொண்டுழல்ப சுக்களாம் பிரமனையு
மாலையுந் தேவர் களையும்

மடமிகுந் தழிகின்ற மானிடனா யும்பாடி
வாணுளை விணு ளிலே
மாய்க்காது பதியான சிவபிரான் மகிமைதனை
மறையாக மங்கள் வழியாற்
றிடமுட னறிந்தவ ரடிச்சார்ந்து நெஞ்சங்க
சிந்துருக வேயு ரோமஞ்
சிலிர்ப்பவா னந்தமா கியவருவி சொரியச்
சிறப்புடன் பாடி யாடி
யடியுதவு மடிகளுக் கடிமையா யினமென்ன
வளவிலிறு மாப்ப டைந்தே
யருண்மிகுந் துபரமனை யேபாடு வார்சரணை
யஞ்சலித் தறிவை யடைவாம். (அ0)

---

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்.

உச்சுவா சம்நிச்சு வாசம தடக்கியே
யுறுசுழுமு னுமார்க்க மா
யும்பிராண வாயுவை நிறுத்திவிட யங்கள்வழி
யுண்மனம்வி டாத டக்கி
யுற்றவா ருதார நோக்கியதி தேவதைக
ளுச்சரித் தாதா ரமார்ந்
துயருமச பாசத்தி மாசிவான் மிகையாக
வுறுமுறைமை பார்த்து மேலாய்
வைச்சவா தாரந்தொ டங்கிக்க ணேசர்முதன்
மறுவிறே வதைகள் வைத்து
மன்னுமபி முகமுற்று பிரமரந் திரமளவு
வருமசபை யுடன ணைந்து
வருமதோ முகமாய்ச் சகஸ்ரதள தாமரைசி
வார்க்கணு லலர வைத்து
மலருமப் பூவினின் கேசராக் கிரகத்தில்
வாய்ந்தமதி மண்ட லத்தை
நிச்சலத் தாருஞ் சனஞ்செய்து மூலாக்கி
னியையனற் பீசாக் கர
நேருமுச் சாரணத் தாலெழுப் பிக்கொண்டு
நிலையோர்ந்து சக்க ரத்தை

நிறையுருப் பேதித்த வக்கினியி னுல்விதுவை
நின்றிளக வைத்து மந்த
நிகரிலா வமிர்தத்தி னைச்சர்வ நாடிவழி
நிரல்பட நிரப்பி யாங்கே
சொச்சமி லரும்புஞ் சுதோதயத் தம்மயச்
சுடர்கொள்ளு னுவத் தையைத்
துன்னிமதி பானுதீப் பிரகாச முதயமுறு
சூரியன் முன்னு டுக்கள்
சோதியென வேதன் னிடத்தடங் கச்சர்வ
தோமுகப் பிரகா சமாய்த்
தோன்றுசித் தத்தைச் சிவன்பாலில் வைத்தார்
துணைத்தா ளிறைஞ்சி வாழ்வாம். (சுக)

---

திருவாரூர்ப்பிறந்தார்.

பூருவத் திற்செய்த புண்ணியப் பயனே
பொருந்துமோ ருருவ மாகிப்
பூதலம் புகழ்கின்ற பெரியதிரு வாரூர்ப்
புகுந்துகரு வாகி மேலாம்
பேருற்ற சைவமர பினராய்ப் பிறந்தவர்
பிராமணக் குலமா யினும்
பிரபலச் சத்திரிய ராயினும் வைசியர்மெய்
பெருகுசூத் திரரா யினும்
பாருளார் விலகுசங் கரசாதி யாயினும்
பரமசிவ னருளடைதலாற்
பரவுசிவ கணநாத ராவார்க ளென்னமுன்
பரமனமி நந்தி யடிக
ணேர்நின் றுரைத்தபடி தோன்றுவது கண்டுமன
நெக்குநெக் காய்க்க ரைந்து
நிலையுற்ற வரியதிரு வாரூர்ப் பிறந்தாரை
நினையாது நினைதல் செய்வாம். (சுஉ)

---

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்.

சிருட்டிதனி லேயநா திசைவரா கியசதா
சிவமூர்த்தி யுடைய நற்சத்

தியோசதா முதலாக வருபஞ்ச வத்திரத்
திற்கௌசி கர்கா சிபர்
தெருளுறும் பாரத்து வாசர்கௌ தமரகத்
தியரெனும் பஞ்ச ருஷிகோத்
திரத்திற் பிறந்துசம யவிசேட நிருவாண
தீக்கையபி டேக முற்றுச்
சருவாதி காரிகண்மெ யுத்தமோத் தமசிவா
சாரியர்க ளெனவா கமஞ்
சாற்றப் பரார்த்தப்ர திட்டைபா ரார்த்தபூ
சைசெயற் குரிய வர்களாய்
வருசிவா கமவிற்ப னருமாய்க்கி ருதகிரித்
தியருமாய் வாய்ந்து மேலா
வளருமுப் பொழுதினுந் திருமேனி தீண்டுவார்
மலரடிகள் போற்றி வாழ்வாம். (சுரு)

---

முழுநீறுபூசியமுனிவர்.

கத்தனரு ளாலுதித் துப்பெருமை யுற்றிலகு
காசினியி லுற்பத் தியாற்
கற்பமநு கற்பமுப கற்பமென வேமூவ
கைப்படு விபூதி யேனு
நித்தியாக் கினியினி லடுத்த நீறேயினு
நின்மலா னந்த முன்னும்
நெருப்புக்கு முன்னுமொரு குருமுன்னு மவசுத்த
நிலமீது நெறியு மணியா
துத்தூ ளனத்திலுந் திருபுண் டரத்தேனு
மொளிர் பிறையின் வடிவமேனு
மோதுமுக் கோணமா யும்வட்ட மாகவு
மோங்கிடுசி வாக மத்திற்
பத்தியா யன்போடு பூசைவழு வாதுநம்
பரமனடி யுற்று வாழும்
பகரரிய முழுநீறு பூசியமு னிவரடிப்
பதுமமலர் போற்றி வாழ்வாம். (சுச)

### அப்பாலுமடிச்சார்ந்தார்.

மன்னுபுகழ் பெறுசேர மண்டலத் துஞ்சோழ
மண்டலத் துஞ்சொல் பாண்டி
மண்டலத் தும்பரவு மடியார்க ளைத்தவிற
மற்றுமப் புறநாட் டினிற்
பன்னுகலை மதியச் சடாடவிச் சிவபிரான்
பதுமவடி நீழ றன்னைப்
பத்தியுட னுற்றுமெய்க் கதிகொண்டு வாழ்கின்ற
பத்தர்களு மாரு ரிலே
நன்னிலமை வாய்ந்தசுந் தரமூர்த்தி நாயனூர்
நவிறிருத் தொண்டர் தொகையி
னுட்டியதி ருத்தொண்டர் காலத்து முன்பினுய்
நங்கடவு ளைச்ச தாவாய்
முன்னியவ லப்படும் பிறவாத நெறியராய்
மோக்கநிலை பெற்ற வருமாய்
மூதறிவு ளேய்ந்தவப் பாலுமடி சார்ந்தாரை
முடிமீது கொண்டு வாழ்வாம். (சுரு)

---

### பூசலார்நாயனூர்.

தொண்டைவள நாட்டினிற் றிருநின்ற வூரிலே
துய்யவந் தணர்கு லத்திற்
றோன்றியடி யார்கட்கு வேண்டுவ வளித்துநந்
தொண்டர்தந் தொண்ட ராமைக்
கண்டருக் கோரால யங்கட்ட நிதியிலாக்
கவலையால் வாட்ட முற்றுக்
களிமனே பாவனையி னுற்கட்டி வருபுண்ய
காலமெதிர் பார்த்து நிற்பக்
கண்டுகா டவராஜ னுலயம மைத்திடக்
கடவுளவர் கனவில் வந்து
கருதுபுகழ் பூசல்செய் பிரதிட்டை நோக்கியது
காண்டபினி யற்று தியென
விண்டுசிவ பெருமா னுரைப்பவந் நகரணுகி
வெளிகண்டு மீண்டு வந்து

மேற்கதி யடைந்துவளர் பூசலார் நாயனர்
விரைமலர்க் கழலில் வாழ்வாம். (சுசு)

---

மங்கையர்க்கரசியார்.

பூதலமெ லாம்புகழ வருபாண்டி நாட்டினிற்
புதுமையுறு மதுரை மூதூர்
புகழ்பெற்ற நெடுமாற நாயனர் மனைவியாய்ப்
பொன்னியா றுடைய சோழன்
மாதவத் தானல்கு புதல்வியாய் வந்துசிவ
மலிசமய குரவ ராக
வளர்கின்ற திருஞான சம்பந்த மூர்த்தியருள்
வாய்ந்துமவ ராற்சி றப்பா
யோதுபதி கத்திலே பாடவும் பெற்றவ
ருபாசனைபு ரிந்து சைவ
முலையாத படிவேண பரிபால னஞ்செய்து
முண்மைநெறி நின்று முரிய
காதலனெ டுங்கைலை மேவியர னருளினற்
கருதரிய முத்தி பெற்ற
கற்பிற்சி றந்ததிரு மங்கையர்க் கரசியாங்
கண்மணியை வாழ்த்து வோமே. (சுஎ)

---

நேசநாயனர்.

ஏர்பெற்ற காம்பீலி நகரத்தின் மேவுசா.
லியர்குலத் தலைவ ராகி
யிருதயச் செய்கையைப் பரமசிவ னடிகளுக்
கென்னவும் வாக்கி னலே
பேர்பெற்ற செய்கையைப் பஞ்சாக்க ரத்தினும்
பிறழாது கையி னலே
பெட்புற்ற செய்கையைத் தொண்டர்த மிடத்தினும்
பிரியாதி ருத்தி யுயர்வாய்
நேர்பெற்ற வத்திரங் கீள்கோவ ணங்களதி
நேர்த்தியாய் நெய்து சிவமா
நிலைகொண்டு வருமடிய வர்க்கிடைய ரூதுள்ள
நேமகத் தோட ளித்துப்

பார்பெற்ற தவமென்ன வருமவனை நாடொறும்
பத்தியுட னேது தித்தும்
பரமனரு ளாற்கைலை யுறுநேச நாயனர்
பாதமலர் பரசி வாழ்வாம். (சூஅ)

---

கோச்செங்கட்சோழநாயனர்.

சோழநாட் டிற்சந்த்ர தீர்த்தவன வெண்ணுவ
ரூன்றுசிவ லிங்க மீதிற்
றுகள்சருகு ருவணம் வாய்நூலின் மேற்கட்டி
சூட்டியசி லந்தி யாகி
வேழமொன் றதனைச் சிதைக்கப்பு ழைக்கையினுண்
மேவியவை யோடி றந்து
வேந்துசுப தேவன்மனை கமலவதி பாலுற்று
வெருவுகோச் செங்கண் ணராய்
வாழியவ டைந்துமுனு ணர்ச்சியொடு சைவநெறி
வளரவர சாண்டும் வெண்ணு
வற்பரம னுக்குநற் றிருவானைக் காவிலில்
வானுலாந் தளிமு டித்துத்
தாழாது தில்லைவா ழந்தணர்க் குரியமனை
தாபனஞ் செய்து வைத்துச்
சாற்றருங் கதிபெற்ற கோச்செங்க ணர்திருத்
தாளிணைகள் சார்ந்து வாழ்வாம். (சூகூ)

---

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர்.

பூமேவு நடுநாட் டினிற்றிருவெ ருக்கதம்
புலியூரி லேபி றந்து
பொங்கரவ மதிசூடு வோன்றிருப் புகழ்யாழ்
பொருந்தவே பாடி மதுரை
மாமேவு மாலயத் துற்றநாள் பொற்பலகை
வாய்ப்பவதின் மேவி நல்யாழ்
வாசித் திருந்துதிரு வாரூர டைந்துநம்
வன்மீக நாதர் தம்மை
நாமேவு சொற்கொண்டு வாழ்த்தியே சீர்காழி
நண்ணிமேற் சமய குரவ

நாதராந் திருஞான சம்பந்த மூர்த்தியரு
ளுட்டமுற் றவரி சைக்கும்
பாமேவு பதிகங்கள் யாழிலிட் டோதியும்
பத்தியுட னவரோ டுநற்
பரகதிய டைந்திடுந் திருநீல கண்டயாழ்ப்
பாணரடி போற்றி வாழ்வாம். (எ0)

---

சடையநாயனார்.

சிந்துபூந் தேறனிறை மலருலாந் தண்டலைக
டிகழுவள னோங்கு மேலாந்
திருநாவ லூரிலே யெக்குலமு மேற்றுமா
திசைவகுல மவத ரித்துப்
பந்தவிரு டனின்மூழ்கி மாயையாற் கட்டுண்டு
பரகதிபெ றுது வாடும்
பல்லுயிர்க ளும்பிழைத் தரியமோக் கத்தினிற்
படியவே பதிக மோதித்
தந்துதிரு வெண்ணெய்நல் லூர்ப்பித்த னுக்கடிமை
சார்ந்துசங் கிலியா ளையுஞ்
சாற்றரும் பரவையையு மணமுடித் துரியகதி
தழுவுசுந் தரமூர்த் தியின்
றந்தையா யுற்றிடவ ருந்தவமி யற்றியெத்
தவமுடைய ரும்பு காத
சாயுச்சி யப்பதவி பெற்றிடுஞ் சடையனார்
தாட்கமல முடியில் வைப்பாம். (எக)

---

இசைஞானியார்.

திருநாவ லூரிலே யந்தணர் குலத்தினிற்
றிகழ்சடைய நாய னாரஞ்
சிவாசாரி யர்க்குரிய மனைவியா ராகியுஞ்
சிவபிரான் மீது கல்லு
முருகத் தமிழ்ப்பதிக மோதியே முதலைவா
யுற்றசிறு பிள்ளை தன்னை

யுருவாக வரவழைத் துச்சைவ மோங்கவரு
ளூற்றுவெள் ளானை மீதில்
வருகவென நம்பிரா னுக்கிணைவி திப்பவதில்
வைகிமேற் கைலை சார்ந்து
வாழ்வான வாழ்வுகொடு மேவுசுந் தரசைவ
மணியினைத் தன்வ யிற்றிற்
கருவா யிருக்கவும் பெறவுமொரு தாயாய்க்
களிக்கவும் முத்தி பெறவுங்
காசினியில் வந்தவிசை ஞானியார் பாதமே
கதியெனக் கொண்டு வாழ்வாம். (எஉ)

திருத்தொண்டர்வந்தனைக்கோவை

முற்றிற்று.

கடவுள் துணை.

## பதினைந்தாவது.

# தாயுமானசுவாமிகள் புராணம்.

## பாயிரம்.

### கடவுள்வாழ்த்து.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட தத்துவங்க டெளிந்து ஞான
　　தேசிகனாற் பிறப்பிறப்புத் தீர்ந்து முத்திப்
பேர்கொண்ட தாயுமா னவர்தங் காதைப்
　　பிரபலத்தைப் புராணமதாய்ப் பேச விந்தப்
பார்கொண்ட துன்பமெலாந் தவிர்த்து மேலாம்
　　பதமளித்துத் தொண்டர்வினைப் பற்று நீக்குங்
கார்கொண்ட மதத்தானை முகத்தா னைந்து
　　கரத்தானை வரத்தானைக் கருத்துள் வைப்பாம். (க)

### பரமசிவம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மறையினந் துருவாப் பிரணவப் பொருளை
　　மாயையான் மயக்குறு தடியார்
குறைதவிர்த் தாண்ட சோதியைக் கனகக்
　　குலவரை குழைத்தருண் முதலைப்
பிறையணி மௌலிச் செக்கர்வான் மேனிப்
　　பிஞ்ஞகன் றன்னைவா னவர்க்காக்
கறையமர் மிடற்று மூன்றுகண் ணுடைய
　　கருத்தனைத் துதித்தனங் கருத்தே. (உ)

## உமாதேவி.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குலமறைதேர் சீகாழித் துறைக்குழலைப்
 பால்கொடுத்த கொடியை ஞானக்
கலையனைத்தும் புகட்டியன்பர் களைமோக்க
 நிலைநிறுத்துங் கனியை வான்றோய்
மலையரசன் றவத்துதித்த மாமருந்தை
 யரனிடத்தாம் வாழ்வைத் தோன்று
முலகமெலாந் தானுகும் பெண்மணியைக்
 கண்மணியை யுளத்துள் வைப்பாம். (ங)

## சபாபதி.

கலிவிருத்தம்.

நன்று ளாடு நவிலடி யார்மன
நின்று ளாடு நிகரற்ற சோதியைக்
குன்று ளாடுங் குவிமுலை யாளொடு
மன்று ளாடு மணியை வணங்குவாம். (ச)

## விநாயகர்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வேதத்தை நான்காக்கிப் புராண மாக
 விரித்திடுவான் றனைநினையா வியாச னுள்ளம்
பேதத்தை யடைந்திடவைத் தலரோன் சொல்லப்
 பேருணர்வுற் றரியதவம் பிறழா மற்செய்
தேதத்தை விலக்குநெறி நிற்ப தோர்ந்தே
 திருக்கருணை யாலவற்குச் சேவை தந்து
போதத்தைப் புகட்டியந்நூன் முடிக்க நோக்கம்
 புரிந்தவிநா யகன்கழலைப் போற்றி வாழ்வாம். (ரு)

## சுப்பிரமணியர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சேலிருக்கு மஞ்சனத்தாற் நீட்டும்விழி
 வனக்குறத்தி தெய்வ யானை
பாலிருக்கும் பாலசுப்ர மணியனைப்பண்
 ணவர்போற்றும் பரனைப் பண்டு

நூலிருக்கு முதலுணர்ந்தோர் நுண்ணறிவிற்
றிகழ்பவனை நுதற்கண் வந்த
வேலிருக்குங் கரதலத்தெங் குருபரனைப்
பணிந்துவரு வினைக டீர்ப்பாம். (சு)

நாமகள்.

மேற்படி விருத்தம்.

சிறையளிக ணறவருந்து மடலவிழ்செம்
மணாமலரோன் றேரு நாலு
மறைமுழங்கு தாலுமிசை வளர்ந்துலகெ
லாம்பரவி வாழ்த்து மன்பர்
குறைதவிர்த்தாங் கவர்நாவிற் குடியிருந்தே
நறுந்தமிழைக் கொழிக்குங் கீற்றுப்
பிறைநுதற்சிற் றிடைக்கயற்கட் டரளநகைக்
கனிமலர்த்தாட் பேணி வாழ்வாம். (எ)

திருநந்திதேவர்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பைந்துழ வணியும் பரமனே முதலாம்
பண்ணவ ரியாவருந் திரண்டு
வந்துளங் கசிந்துட் புகுந்தரன் றன்னை
வழிபடற் கருள்செயென் றியற்றும்
வந்தனைக் கிரங்கிக் கதியரு ளமல
வாழ்விடை யாணையின் விடுக்கு
நந்தியெம் பெருமான் றிருவடிக் கமல
நாண்மல ரனுதின நவில்வாம். (அ)

அகஸ்தியர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அலைகடலை யுழுந்தளவா யாக்கியொரு
கரத்தினில்வைத் தருந்தி விந்த
மலையதனைப் பாதலத்திற் றாழ்த்தியதன்
கெருவமற மறைத்து வஞ்சக்
கொலைபுரியும் வில்வலன்பின் பாவியுயிர்
கவர்ந்தடியார் குறைதீர்த் தென்றுங்

தலைமைபெறு தென்பொதிகைத் தமிழ்முனிவன்
திருவடியைச் சார்ந்து வாழ்வாம். (கூ)

பட்டினத்துப்பிள்ளையார்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

காவிரிப்பூம் பட்டினத்தில் வைசியர்தங்
குலத்துதித்துக் கணக்கில் லாது
மேவுநிதி யனைத்தினையுங் கான்றசோ
றெனக்கணத்தில் வெறுத்து நீங்கி
மூவரும்பின் றொடர்ந்துவரு மெய்ஞ்ஞான
நிலையினராய் முத்தி சேர்ந்து
தேவரொலாம் போற்றவளர் பட்டினத்துப்
பிள்ளைகடாள் சிந்தை வைப்பாம். (கo)

திருஞானசம்பந்தர்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சேண்டடவு மணிதிகழு மாடக் காழித்
திருநகரி லவதரித்துச் செல்லா நின்ற
வாண்டொருமூன் றினிற்கௌரி முலைப்பா லுண்டு
மரியதமிழ்ப் பதிகங்க ளருளிச் செய்து
நீண்டபவச் சமண்குழுவைக் கழுவிற் போட்டு
நிகரில்லாச் சைவமத நிறுத்தி யென்பைப்
பூண்டவளைக் கரமிலங்கும் பெண்ணுக் காணும்
புகழ்படைத்தோன் திருவடியைப் போற்றி வாழ்வாம்.()

திருநாவுக்கரயர்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பாயுடை யமணர் சிலையுடன் வீக்கிப்
பரவையுட் புகுத்தலும் படியா
தாயிடை யென்பு நெக்குநெக் குருகி
யார்வமோ டஞ்செழுத் தோதி
வேயிடை முளைத்தார் கருணையாற் புணைமேன்
மிதந்தென மிதந்துவெம் பிறவி
நோயிடை யழுந்தா தரும்பத மடைந்தார்
நுவலரு மலர்ப்பதம் பணிவாம். (கஉ)

திருநாவலூரர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தென்பரவை மலர்க்கூந்தற் பவளவிதட்
டரளநகைச் செல்வி பாகத்
தென்பரவைப் புனைந்தருளு மிறையவனைத்
தூதாக விரவிற் பானுண்
முன்பரவை யிடத்தனுப்பி யூடறணித்
தருட்பதிக முறையாற் பாடி
யன்பரவைக் குளமகிழ்வித் தருளடைந்தா
ரடிக்கமல மகத்துள் வைப்பாம். (கங)

திருவாதவூரர்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தென்னவ னளித்த நிதியெலா மெடுத்துத்
திருப்பெருந் துறைநக ரடைந்து
முன்னவன் கோயிற் பணியெலா முடித்து
முழுநரிப் பரிக்குல மீட்டி
மன்னவ னுறுப்பச் சகித்திடா திபவி
மானமேற் றனித்துறை துனையைத்
துன்னிவீ டடைந்த வாதவூ ரடிக
டுணைமல ரடியிணை தொழுவாம். (கச)

மற்றைத்திருத்தொண்டர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உள்ளபடி யரனிடத்தே யார்வமிக
வுடையவரா யுறுதி யோடு
பிள்ளைதனைக் கறிசமைத்தும் பெண்டீரைக்
கொடுத்துமரும் பிதாவின் றாளைக்
கள்ளமிலா தரிந்துமிவை முதலான
பத்தியெலாங் கைவந் தார்க்கும்
விள்ளரிய முத்திநிலை யடைந்ததிருத்
தொண்டரடி மேவி வாழ்வாம். (கரு)

குருவணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சுத்தபுத்த முத்தநித்ய நிர்ச்சங்க
நிர்வாண சுயம்பிர காச

சித்தநிரஞ் சனநிபத்த நிட்காம
நிர்வயவ திகழ்மெய்ஞ் ஞான
தத்துவநிர் வேத்தியநி ரூபநிரந்
தரவேக சர்வ சாந்த
முத்திவடி வாகவருள் குருபரன்மு
ளடிக்கமல முடிமேல் வைப்பாம். (கசு)

அவையடக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மண்ணிலா சையைவெறுத்துத் துறந்த தாயு
மானசுவா மிகள்சரித மகத்து வத்தை
யெண்ணிலார் புகல்வமென நினைத்து மாசை
யென்மொழியைக் கேளாம லியற்கை யாகப்
பண்ணிலா னுயர்வேத கீத சாரம்
பாடுவபோற் புகன்றவிந்நூற் பழுது நீக்கி
வெண்ணிலா வமுதமுண்ணும் பறவை போல
மிகமகிழ்வாய்க் கொண்டருள்வார் மேலோர் தாமே. ()

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

---

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பூநாட்டிற் றிலகமெனத் திகழு நாடு
பொன்னாட்டு முன்னாட்டும் பொன்னி நாடு
தேநாட்டு மலர்ப்பொதும்பர் சூழு நாடு
திருநாட்டும் பெருநாட்டஞ் செழிக்கு நாடு
சேநாட்டும் பணைச்சாலி கதிக்கு நாடு
சிவாலயங்கண் மிகவோங்கித் துதிக்கு நாடு
தூநாட்டுஞ் சிவனடியார் வாழு நாடு
சுகநாடு மகநாடு சோழ நாடே. (க)

மாமறையோர் வேதநெறி யொழுகு நாடு
மன்னவர்கண் மனுமுறைமை வழுவா நாடு
சேமநிதி வணிகர்குழாம் பெருகு நாடு
சீரோங்கும் வேளாளர் சிறந்த நாடு

நாமகளைக் கலைகளுந்தந் துவக்கு நாடு
நல்லறமுப் பானிரண்டு நழுவா நாடு
தூமதிவாழ் முகத்தினர்கற் புயரு நாடு
சொல்லரிய வளநாடு சோழ நாடே. (உ)

காவேரிச் சிவதீர்த்த மிகுமந் நாட்டிற்
கவினேறிக் களியேறுங் கறும்பு ளெல்லாம்
பூவேறிப் பிரசமெலாந் தேக்கிச் சூழும்
புனலேறிக் கரையேறிப் பொதும்ப ரேறு
மாவேறிக் கனியருந்துங் கவிக ளெல்லா
மயக்கேறி மடலேறி வானி லேறும்
பாவேறுங் குணமேறுங் கனக மேறும்
பலனேறுங் குலனேறும் பத்தி யேறும். (௩)

நிதிபதியுந் திருவளைகைப் பதியுங் காசி
நெடும்பதியுங் கலைபதிய நிலைத்த நாவார்
விதிபதியு மேற்பதியு மயோத்தி யென்னும்
வியன்பதியும் விளங்குசதுர் வேதம் வெண்ணெய்
ததிபதியு மலர்வாயான் பதியுங் கற்ப
தாருநிழ லமர்ந்தரசு தழைக்குந் தேவர்
பதிபதியு மல்லான்மற் றுள்ள வெல்லாப்
பதிகளுமொவ் வாதவளம் பதியா தென்னில். (௪)

வடமொழியிற் றிருவேதா ரணிய மென்ன
வழங்குதிரு மறைக்காட்டில் வாச முற்றோன்
றிடமொழியாப் புகழ்கங்கை குலத்து தித்தோன்
செந்தமிழி னெல்லைகண்டோன் சிந்தை யாரக்
கொடுவினைக ளனைத்தினையுந் தீர்த்தோன் மேலாங்
குருலிங்க சங்கமபத் தியிற்சி றந்தோன்
றடமொழியாச் செயலுடையா னடியார்க் கன்பன்
றன்பெயர்கே டிலியப்பன் றருமம் போல்வான். (௫)

அந்நகரிற் பிறங்குமெழிற் சிவால யத்துக்
கதிபதியாய்க் கதிசேர வறமே மூல
மென்னமனத் தெண்ணியத னெறியே நிற்பா
னிறையவன்கோ விற்புதுக்கி யியங்க ளார்ப்ப

நன்னிலையாய் விழவுமுதற் பலவுஞ் சொன்ன
நான்மறையா கமவழியே நடத்தி வைத்து
மன்னமிலார்க் கன்னமிட்டும் வாய்மை வேட்டு
மடுத்தவரை யாதரித்து மபய மீய்ந்தும். (௬)

தன்னாலே யேன்றமற்றைத் தரும மெல்லாந்
தானியற்றி வருநாளிற் றரணி யேத்தப்
பொன்னாலே வேய்ந்தமணிச் சிகரக் கோவில்
பொருந்துதிரி சிரபுரத்தைப் புரப்போ னீங்கா
மின்னாடுங் குடைநிழற்றத் திகிரி யோச்சி
மேவலரைச் சிரம்வணக்கும் விறலோ னன்பாஞ்
சொன்னாடும் விஜயரகு நாத னான
சொக்கலிங்க தீரனெனுஞ் சுகுண வேந்தன். (௭)

கேடிலியப் பப்புகழோன் குணமுங் கல்வி
கேண்மையுமூக் கத்திறலுங் கேள்வி யுற்றுப்
பீடுறுமற் றவரைவர வழைத்துப் பார்த்துப்
பேருவகைக் கடற்படிந்து பெருமை வாய்ந்த
மாடுமனை யாதிமிக வழங்கி மேலா
மதியமைச்ச ராய்நிறுவ மனமொன் றாகி
யேடவிழ்தார் மன்னவனுக் கிருகண் போல
விருந்தரசுக் குரியவெலா மியற்று நாளில். (௮)

மற்றவர்த முன்னவர்க்கு மகப்பே றில்லா
வறுமையினாற் றனக்கேக மைந்த னாக
வுற்றசிவ சிதம்பரத்தைக் கொடுத்துப் பின்ன
ரொருபுதல்வ னடியேனுக் குதவா யென்ன
வற்றைமுதற் றாயுமா னவரை வேண்டி
யவரருளாற் றிருமகவொன் றார்வ மோங்கப்
பெற்றுலகந் தனைமதிக்கக் கடவு ளுக்குப்
பேசியகா ணிக்கைமுதற் பிறவுஞ் செய்தே. (௯)

தாயுமா னவனெனவு நாமஞ் சாத்திச்
சாந்திபல செய்தவற்குச் சதங்கை யிட்டுத்
தூயபல வணிகளிட்டு மஞ்சத் தேற்றிச்
சோபனப்பல் லாண்டிசைத்துத் துன்பந் தீர்ந்து

மேயவளர் மதிபோலத் தந்தை தாயர்
மிகக்களிப்பாய் வளர்த்துவரும் வேலே யந்தச்
சேயினுக்கைந் தாண்டடைத லோடும் பெற்ருேர்
சிறந்தகல்வி பயிற்றிவைக்குந் திறனே யோர்ந்தே. (கo)

ஆசிரியர் தமையழைத்தெக் கலேயு மெஞ்சேய்க்
கருத்துமெனப் பலவணிபொன் னுடை யீய்ந்து
பேசியவர் பால்விடுத்தார் மைந்தர் சென்று
பெற்ருேர்கண் முயற்சியினும் பேறு கொள்வா
னீசனரு ளாற்கலேக ளிரண்டு மோர்ந்தே
யிலக்கணத்தோ டெப்பொருளு மிணையி லாது
மாசறவே தெளிந்தனரங் கவரோ டன்பும்
வாய்மையுந்தூய் மையும்பொறையும் வளர்ந்த தம்மா. ()

தூளேறச் சிலேயேறுந் தன்மை போலத்
துகளேறப் பவமேறுந் தோற்ற நோக்கி
நாளேற வயதேறும் பருவ நோக்கி
நலநோக்கி யிடர்நோக்கி நாடு நோக்கி
வாளேறுங் கண்ணியர்செய் மயலே நோக்கி
மக்கண்மனே யாதியரால் வருத்த நோக்கிக்
கோளேறு மறலிவருங் குறியை நோக்கிக்
குறையாத தவத்தினுக்கோர் கொழுகொம் பானுர்.(கஉ)

கற்றுமறி வில்லாதார் மனமெவ் வாறு
கழிந்தசெல்வப் பொருடனேயே கருது மவ்வா
றுற்றிடுந்தத் துவப்பொருளா மதையே நாடி
யுணர்ந்திடுநாண் மும்மலத்தி னுறவு போக்கிச்
செற்றமெலா மொருங்ககற்றித் தானுய் நிற்குந்
திருமூல நாயனுர் மரபிற் றேசு
பெற்றநிலே மௌனதே சிகரா னந்தப்
பெருமானங் கெழுந்தருளிப் பிறவி மாற. (கங)

தன்றவத்தின் குறைமுடிப்பான் ருேன்று மெங்க
டாயுமா னவர்க்குமுனஞ் சார நோக்கி
மன்றன்மலர்க் கழற்பரவி மெய்சி லிர்ப்ப
வாய்குழறப் பரவசமாய் வணங்கிப் போதக்.

குன்றுருவா யீங்கெழுந்த மௌன ஞான
குருவேயென் குலகுருவே குணமே நேரா
யின்றுமது திருவடிகள் காணப் பெற்றே
னினிப்பிறவா நெறிபெற்றே னிடரற் றேனே. (கச)

என்றிருகண் புனலுகுப்ப வாய்த மங்க
மீதலுடன் சற்பாவ மியற்றிப் போற்றி
நின்றவர்தந் தீவிரபக் குவத்தை நோக்கி
நேரிருத்தித் திருவடியை முடியிற் சூட்டி
யொன்றுமுடல் பொருளாவி மூன்றுங் கைக்கொண்
டுயர்ஞானக் கண்கொடுத்தாங் குவகை பொங்கத்
துன்றுமல ரகிதசிவ மான நிற்குத்
தொல்பிறவி யில்லையெனச் சொல்லிச் சீடன். (கரு)

தன்சிரமேற் கரத்தைவைத்தன் றுண்மை கூறத்
தாயுமா னவர்குருவின் றுண்மேல் வீழ்ந்து
மன்னிலையி னின்றுமலர் வாய்பு தைத்து
மலமென்ன ரகிதமென்ன சிவந்தா னென்ன
கன்மனத்தோ டுற்றிடுநான் யாவ னித்தைக்
கழறுமென வஞ்ஞான மாயை கன்ம
மென்னவுனைப் பதுமலமா மியாவுந் தானு
மியங்கலிலஞ் ஞானமல ரகித மாயும். (கசு)

எவ்வாதா ரத்திற்குந் தானே யாக
வியங்கியத்து விதமாக விளங்க லாலே
செவ்வைகொண்மா யாமலர கிதமா யும்பின்
றேசகா லவத்துபரிச் சேத மின்றி
யொவ்வுதலாற் கன்மமல ரகித மாயு
மொளிருவதே பிரமமறி வாய்வி ளங்குந்
தெளவலிலாச் சொரூபமே நீயா மென்னச்
சாற்றுதலு நானதுவாந் தன்மை தன்னை. (கஎ)

இன்னதெனத் திருவருள்செய் திடுவீ ரென்றுங்
கிரந்திடலு மெத்தனைப தார்த்த மாகப்
பன்னுமிந்தப் பிரபஞ்சம் விளங்கு தென்று
பார்த்துனைப்பா யென்றிசைப்பப் பகர்வா னாய

துன்னுசத்த பரிசரூ பரச கந்தந்
துலங்குதென்று ரவையெதனு லறிந்தா யென்ன
வென்னிலையா லெனப்புகன்றார் நீயா ரென்ன
விச்சடமே யானெனலு மிரங்கி யாசான். (கஅ)

நீயுரைத்த வைம்புலனு மெவற்று லோர்ந்தாய்
நிகழ்த்தெனமெய் வாய்விழிநா சிகைகன் னத்தா
லாயதென்று ரன்னதுவேற் செவிட்டாற் கம்ப
லையுந்திமிரால் யாக்கையும்ப டலத்தா னேக்கு
மேயுறுநா வறட்சியினுற் சுவையுந் துண்ட
மிகுமடைப்பால் வாசனையு மின்றிப் போனல்
வாயுடனே மெய்கண்கள் மூக்குக் காது
வடிவிருந்து மிதனுலே வருவ தென்னே. (கசு)

என்றுரைப்பத் தேவரீ ரருளுக் கத்தா
லிச்சடமன் றிப்புலன்க ளிருக்கு மாபோ
னன்றுவிளங் கினவதனை நவிலு மென்றார்
நாட்டிடிற்சு ரோத்திரந்து வக்குச் சட்சு
வென்றிபெறு சிங்குவையாக் கிராண மென்று
விரிஞான பஞ்சேந்தி ரியங்க ளென்ன
வன்றதுவே லித்தேகம் யாதோ வென்று
ரவைதாங்தே காதிபிர பஞ்ச மென்றார். (உ௦)

இந்திரியத் தன்மையினை யுரைப்பீ ரென்று
ரியன்மெய்வாய் கண்மூக்குச் செவியுண் மேவி
யுந்துசத்தா தியினையறி வதுவா நெஞ்ச
முறவாகாக் காலவற்றை யறியா தாகி
நந்தலின்றிப் பொதுவாக வறிவ தாகி
நாடிடுமெவ் வறிவுளவோ வவையே யென்னச்
சிந்தைமிக மகிழ்ந்தனரா யடியேற் காண்மை
செறிந்தமன நிலைமையையுஞ் செப்பு மென்றார். (உக)

சடமுடனிந் தியங்களையே விரும்பா தாகிச்
சராசரத்தை நினைவதுவாய்ச் சூக்கு மத்தைத்
திடமுடனே யறிவதுவாய்ச் சீவன் றன்னைச்
சேராத போதவற்றை யறியா தாகி

யுடன்பொதுவா யறிவதுவே மனமா மென்ன
வுண்ணேக்கா லிந்தியங்க ளொழிந்த தைய
மடமகற்றுஞ் சீவனுள தென்றீ ரஃதும்
வாய்மலர்ந்தெற் கருளுமென வணங்கி னூரால். (உஉ

இந்திரிய மெய்மனத்தை நோக்கா தாகி
யில்லாத பூதாவத் தையுந்தான் வேருய்
வந்தெழுமூர்ச் சாவத்தை யினையுங் காணு
மாண்புடைத்தாய்க் கூடஸ்தர் மருவர்க் காலே
முந்துதன்னே யறியாமற் சூனி யத்தை
முற்றுவறி வனவாகு மறிவங் கெற்ருே
வந்தவறி வேசீவ னென்ன வற்ரு
லாராயின் மனமிலேயென் றடியிற் ருழ்ந்தார். (உகூ)

இல்லாத பூதாவத் தையினிற் சீவ
னிருக்கவிந்தி ரியம்பொதுவா யிருக்க வொன்றிற்
செல்லாமன் மனமிருக்க விடயாஞ் ஞானஞ்
செறியாச்சூக் குமவசைவோ டிருக்கு மத்தைப்
புல்லலுறக் கூர்மையதாய் நோக்குங் காலே
பொருந்துகின்ற படியாலம் மனமின் றென்று
சொல்லியதிங் கறியாமை யென்னச் சற்றே
சுளித்தனர்போற் புகன்றிடலுந் துடிது டித்தே. (உச)

பூவடிவாள் வெறுக்கின்மன்னு முயிர்கட் கெங்காம்
புகலிடந்தங் தாய்வெறுக்கிற் புதல்வர்க் கென்னு
மாவடிகா ணீர்முனியிற் றமியேற் குய்யும்
வகையுளவோ வெனப்புலம்பி மலர்க்கை கூப்பி
யாவடியே னென்புரிவே னந்தோ வென்றே.
யழலின்மெழு கெனவுருகி யாசான் செம்பொற்
சேவடியில் வீழ்ந்திரப்ப முனிவு மாறித்
திருவுளஞ்செய் தஞ்சலெனச் செப்பி னூரால். (உரு)

மீட்டுமெருட் குருமலர்த்தாள் வணங்கி நீவிர்
விரித்தருள்சீ வனேத்தெரிந்தே னெனினு மையல்
பூட்டிடுமா வரணமக லாமல் வாடும்
புந்தியிலாச் சிறுவனுக்கச் சீவ னன்றி

நாட்டுமொரு ஞானுத்மா வுண்டே லத்தை
நவிலுமெனக் கேட்டிடலும் பிரபஞ் சாதிக்
கூட்டறியுஞ் சீவனுக்குஞ் சாட்சி தானு
கும்மறிவே சிவமெனவுங் கூறக் கேட்டு. (உசு)

எந்தையே யதைநோக்க வொன்றுந் தோற்று
திருட்படல மாய்க்காணு தென்று ரத்தைப்
புந்தியினு லறிந்தனையோ வெனவா மென்று
புகலவுமற் றுயிலவ்வா றறிந்த நீயே
யந்தவருண் ஞானுத்மா வென்னக் கேட்டங்
கனுமான மாயிருக்கி னல்லாற் காட்சி
தந்துவிளங் காததென்னே யென்றூர் கேட்ட
சற்குருவு மகமகிழ்வாய்ச் சாற்று வாரால். (உஎ)

அன்னதையூர்த் தமுகமதாய்ப் பார்த்தாய் கொல்லோ
வதோமுகமா யறிந்தனையோ வென்னப் பின்னுற்
பன்னியதா லென்றிடவூர்த் தமுக மாகப்
பார்த்திடுவா யெனவுளத்திற் பரிவுங் கூரச்
சொன்னதுபோற் பார்த்துவகை யோங்க நானுஞ்
சுயம்பிரகா சப்பொருளாய்த் துலங்கு கின்றே
னென்னவுமைத் தாரதுமெய் யென்னி லாங்கே
யியங்குமுன தனுபவத்தை யிசைப்பா யென்ன. (உஅ)

வருபிறவிக் கடன்மூழ்கிக் கரைகா ணுமல்
வருந்துமெனை யருட்புணையா லெடுத்தாட் கொண்ட
குருமணியே சிற்பரா னந்த வாழ்வே
கோதிலா ஞானதின கரனே யென்னைத்
தெரிதரநான் கண்டவிடத் தடைந்த வின்பத்
திளைப்பினைத்தா னனுபவித்துத் தேர்வ தல்லா
லொருவருக்குஞ் சொலவரிதென் றுரைதள் ளாட
வுண்ணெகிழப் பரவசமா முணர்ச்சி யுற்றே. (உகூ)

தேகாதி யனைத்தினுக்குஞ் சாட்சி யாகித்
தெரிவரிய விலட்சணமாய்த் திகழு நானே
யேகமா யவைகளாய்ப் போன மார்க்க
மியம்புமெனச் சதோதயமாய் விளங்கு கின்பாற்

ருகமுட னநாதியாய் மூலாஞ் ஞான
சத்தியிலா ரோபிதமாய்த் தழைக்கா நின்ற
வாகசைவாஞ் சங்கற்ப சத்தி தன்னின்
வசத்தினுற் சீவனென வருநீ தானே. (௲0)

இந்தியங்கள் வசத்தினுன் மனமாய்த் தேக
வியல்பினுற் பஞ்சேந்தி ரியங்களாகிச்
சிந்தையுறு தேகாபி மானந் தன்னுற்
றேகமா யகங்காரச் செறிவும் போக்ய
பந்தசா தனங்களாம் புவன போக
பதார்த்தமென தென்னுமம கார மும்பெற்
றிந்தவிதம் பவத்துன்ப மடைந்தா யந்தோ
வினிமேனீ யிருக்கும்வித மியம்பக் கேண்மோ. (௲க)

சாற்றியவிந் திரியவிவ கார மான
சாக்கிரா வத்தைக்கு மனத்தா லாக
வேற்றசொப்ப னுவத்தை தனக்குஞ் சீவ
னியல்சுழுத்தி யவத்தைக்கு விலட்ச ணத்தாம்
வேற்றுமையில் சாட்சிமாத் திரமா யென்றும்
விளங்குவையேற் பிரபஞ்ச மனைத்துந் தங்க
மேற்றுபணி யதனையன்றி வேறு காப்போ
லிலங்கியா னந்தமதா யிருப்பா யென்றுர். (௲உ)

இன்னவைகேட் டஞ்ஞான மாயை கன்ம
மெத்தனையென் றிடவிடயா சொரூபாஞ் ஞான
மென்னவஞ்ஞா னப்பகுதி யிரண்டாஞ் சத்வ
மிராசதந்தா மதகுணமாய் மாயை மூன்றுங்
கன்மமா க்ாமியஞ்சஞ் சிதம்பிரா ரத்வ
கன்மமென மூன்றுகுங் கருத்தி லோர்வா
யென்னவுரைத் தாரவற்றின் றெழிலை யெல்லா
மெனக்கறிய விளம்புமென விசைப்பா ளையர். (௲௲)

தொத்துசத்தா தியைமறைக்கும் விடயாஞ் ஞானஞ்
சொரூபத்தை மறைப்பதுசொ ரூபா ஞானஞ்
சத்துச்சித் தானந்த பிரமந் தன்னைச்
சமட்டியபி மானவறி வுருவ மாயுஞ்

சுத்தமுறு மீச்சுரனன் னுமை மாயுந்
தோற்றிவைக்குஞ் சத்துவத்தின் றெழில்வி யட்டி
நத்துமபி மானவுரு வாயுஞ் சீவ
நாமமா யுஞ்செயும்ர சோகு ணந்தான். (ருச)

சத்தாதி விடயவடி வாய்ச்ச கத்தாய்ச்
சார்தறமோ குணமாகுந் தார ணிக்கு
ளுத்தமபுண் ணியபாவ சங்கற் பத்தா
லுற்றுமவை சுகியாமல் வாச னைக்காங்
கொத்திடலே யாகாம்ய கன்ம மாகு
முறுகின்ற வாசனையாய்ப் பீடிப் புற்றுப்
பொய்த்திடும்பல் பிறவிக்கு வித்தாய்த் தேகம்
பொருந்துதல்சஞ் சிதகன்மம் புகலி லம்மா. (ருரு)

சாதியுட னுயுள்சுக துக்க போகந்
தானடைதல் பிராரத்வ கன்ம மென்ன
நீதியற்றே லெண்வகையா மலமு மஃதி
னேர்வினையுஞ் சிவமாமென் னிடத்து மொன்று
தோதுசுவா னுபவமாய் விளங்கச் செய்வீ
ரோங்குருவே யெனவணங்கி யுரைப்பச் சொல்வார்
போதமெனுஞ் சிவந்தானே பூமி யாதி
புகன்மூல பிரகிருதி யளவுந் தானே. (ருசு)

திரிசியம்போல் விடயமில்லாத் தன்மை யாலுஞ்
சீவனுக்காந் தூலசூக் குமசூன் யத்தைத்
தெரிதரச்செய் வடிவாக விளங்க லானுஞ்
சேர்விடயா ஞானமுமத் தொழிலு மின்றித்
தருமசத்திற் சடதுக்கா தியினை நோக்கிச்
சச்சிதா னந்தசொரு பத்தி னுக்குங்
கருதரும தீதமதாய் விளங்க லானுங்
கதியிடத்தே சொரூபமதாய்க் கவின லானும். (ருஎ)

விளங்குசொரு பாஞ்ஞான வினையில் லாமன்
மிகுகுண தீதவறி வுருவாந் தன்பாற்
களங்கமிலீச் சுரனுக்குச் சீவ னுக்குக்
கருதரிய சகத்துக்கா நாம ரூபம்

வளம்படுமோ ரோபிதமுந் தன்ன தாக
மலிந்தவதிட் டானசச்சி தானந் தத்தின்
றுளங்கலன்றி யில்லாதாய்த் தோன்ற லாலே
சொற்றிடுமுக் குணமுடனத் தொழிலின் றாலும். (௩அ)

சூக்குமங்கொள் சீவனிலு மிச்சை மீதுந்
தொந்திக்கும் பொருள்களிலும் புறம்பு முள்ளு
மீக்கவின விளங்குகின்ற விந்தை யாலும்
விட்சேபம் பொய்த்திருக்குந் தன்மை யாலுந்
தாக்கலுற வாசனையாய் மாயைக் கான
தானமுமா காமியமு மின்மை யானு
நோக்குறுங்கா ரணதேக ஞானத் தாலே
நுண்மையிலாச் சூனியமாய்ப் போனதாலும். (௩௯)

தேகமதற் குரியவனு யிருந்த சீவன்
சிவமாய்ப்போ னதனுலுஞ் சஞ்சி தத்தின்
வாசனைத்து மதன்றொழிலு மின்மை யானும்
வளர்தூலம் பூரணத்திற் கரைந்த தாலும்
பாகமுறு மெய்ப்பொருளுந் தன்சிற் சத்தி
பான்மைகொண்டே முடிவுபெற்ற பண்பி னுலு
மோகமுறும் பிராரத்வந் தொழிலோ டில்லா
முறையானு முள்ளபடி மொழியக் கேண்மோ. (௪0)

அருள்பொழியுஞ் சுயம்பிரகா சமதாய் மேலா
மத்துவித மாய்ப்பரிபூ ரணமா யோங்கு
மொருவனின்பா லனுபவமா யிருத்த னீயே
யுரியசுவா னுபவத்தி லுணர்ந்தோ தென்ன
மரைமலர்த்தா ளிணைவணங்கி யுரைத்த வாறே
மலரகித மாயொளிருஞ் சிவமு நானு
முருவிரண்டா யில்லாம லறிவு மேலிட்
டொருவடிவா யினமெனவு முரைத்திட் டாரால். (௪௧)

இன்னதுவே மறைமுடிவாய் முடிந்தாங் கொன்று
யிலங்குறுசாந் தோக்யவுப நிடதத் துற்ற
பின்னமுறுத் தத்வமசி யென்னும் வாக்யப்
பெரும்பொருளு மீசரனு பவமு நம்பான்

மன்னியதோ ரனுபவமு மாகு மின்ன
வகையனைத்து மறிந்தவொரு ஞான விர்த்தி
துன்னுவதா லஃதையுந்தன் மயமாக் கொண்டு
துலங்குதனம் பரமார்த்தத் துணிபா மாதோ. (௪௨)

ஆகையினு லிவ்வாறே செய்வா யென்றுங்
கருள்புரிந்து மௌனனுனந் தமதா யுற்று
ரோகநிலை தனையுணர்ந்த தாயு மான
வெங்தையார் சின்மயத்தை யெய்தா வின்ப
வோகையுடன் பலவாறு தோத்த ரித்தாங்
குறைந்திடலுந் தேசிகர்தம் முளக்க ளிப்பாற்
சோகமுறு நீறளித்தெம் முபதே சத்தைச்
சொல்லளவாக் காதுமனத் துணர்ந்த தாலே. (௪௩)

சற்குருவாக் கியபரிபா லனஞ்செய் வோனுஞ்
சற்சீட னென்றுனைக்குந் தன்மை யோனுஞ்
சொற்குறுதி பெறவுனைக்கு நீயே யென்றுந்
துலங்கி நம்போல் வாழ்வையென்றுஞ் சொல்லாச் சொல்லி
நற்குருவாங் ககன்றிடலுந் தாயு மான
நங்குருவென் குருமணியே நம்ப ராவோ
வெற்குருக்காட் டாதுகரந் தேகி லந்தோ
வெவ்வுழிநின் றிருவடிக்கீ ழெய்து வேனே. (௪௪)

என்றிருகண் ணீரிறைப்பத் தாயை நீத்த
விளங்கன்று போலலைவுற் றிடைய ருது
கன்றுமனத் தினராகி யாசான் வைத்த
கருணையினு லவருருவங் கண்டு போற்றி
நன்றுநன்று மெனப்புறநோக் கிலரா யுள்ள
நவையகற்றிப் பூரணத்தி னுட்ட மாகி
யொன்றுபர நிலையினரா யமைந்தார் பின்ன
ரொருவைக லாலயம்போ முணர்வொன் றெய்தா. (௪௫)

உன்னிதமா யண்டமுக டளவ ளாவி
யும்பருக்கு மிம்பருக்கு முறுதி நல்குஞ்
சந்நிதிபோய்த் தட்சணு மூர்த்தி முன்னஞ்
சார்ந்தொருபா லெவருமின்றித் தனித்தி ருந்து

தன்னிதயம் பொறிவழியிற் போந்தி டாமற்
றடுத்தெவருஞ் செயவரிய சமாதி கூடிப்
பின்னிதமு மவ்வாறே புரிந்து மேலாம்
பெருந்தவத்தை நோற்றிருந்தார் பேறு கொள்வார். (௪௬)

இவ்வேலை தாயுமா னவர்தந் தாதை
யெம்பெருமான் றிருவடிக்கீ ழெய்தப் பின்பங்
கவ்வேலை தனையடைந்து பார்க்கச் சற்று
மாசையுறு திவரிருந்து மான்ற செங்கோற்
செவ்வேலைத் தாங்கியமன் னவன்வேண் டற்காய்ச்
சிறிதுமன முடையவராய்த் திருவு ளத்தால்
வெவ்வேலைப் பிறவியினைக் கடப்பா ரந்த
வேலையையும் பார்த்திருந்தார் விதியி னாலே. (௪௭)

முந்தவே யிவருள்ளத் துறவோ ரொன்று
முற்றுமறிந் திலனெனினு முதன்மை யான
தந்தையினு மெத்திரத்து மிக்கோ ரென்னுந்
தன்மையுணர்ந் தவர்க்கனந்தந் தகைமை செய்து
சிந்தைமகிழ் வுடனிருந்தா னரச னிப்பாற்
றெய்வநிலைத் தாயுமா னவர்தம் வேலைப்
பந்தகத்தோ டைந்தடக்கிச் செயுநிட் டைக்கும்
பழுதுவரா தியற்றிமிகப் பரிவு கூர்ந்தார். (௪௮)

ஊரனைத்துங் கழையேறித் திரிவே ழம்ப
ருடற்காப்பிற் றங்கருத்து முடன்ற செய்கைச்
சீரனைத்துங் கூத்தினிலும் வைக்கு மாபோற்
சிவத்திலே தங்கருத்தைச் செலுத்திச் செய்கை
பாரனைத்தும் புரந்திடுவான் கொடுத்த வேலை
பார்த்தலினுங் கழித்திவணம் பயிலு நாளிற்
சூரனைத்துந் தவிர்ந்திருக்கு மிவர்பாற் சித்துத்
தோன்றலையெல் லாம்வெளியாய்த் தோன்றல் கண்டான். ()

தனக்குரிய வினையனைத்து மிவராற் செய்யத்
தக்கதுவோ யானதற்குந் தரமோ வென்று
மனக்கவலை புழுங்கிடவச் செங்கோல் வேந்தன்
மற்றவர்த மிருக்கையெய்தி வரவை யோத

நினைக்கவருந் தவமுடையா ரிறைவ னென்பா
னேர்ந்ததென்னே யெனவெழுந்து நேரோ சென்றிங்
கெனக்குரைத்து வரவழையா தரசே யுற்ற
தென்னிமித்த மெனத்தவத்தோ ரியம்ப மன்னன். (ரு0)

நற்றவத்தி ரருள்வடிவா முமது தன்மை
நாயடியே னுணராது நரகுக் காளா
யிற்றைவரை யென்பணியில் வைத்தே னந்தோ
வென்பாவ மென்கொடுமை யென்னே யிந்தக்
குற்றமெலாம் பொறுத்தருளித் தமியே னுற்செய்
குற்றேவ லனைத்தையுநீர் கொள்ளு மென்னச்
சிற்றடியில் வீழ்ந்தவரைச் சிவிகை யேற்றித்
திருக்கோலத் துடன்மனையிற் சேர்த்துப் பின்னர். (ருக)

அடங்காத பேருவகை யளவின் றாக
வந்தரதுந் துபிமுழங்க வகிலத் தார்க்கும்
மடங்காத மடங்கலா தனத்தி லேற்றி
மலரடியை முடிசூட்டி வாய்பு தைத்துத்
திடங்காதா தஞ்ஞானம் போக்கி ஞான
தினகரோ தயம்விளக்குந் தேவே யிந்தச்
சடங்காது முன்னெனது பணியை யேற்றுச்
சமாதியிருந் தருளுமெனத் தாழ்ந்தான் வேந்தன். (ருஉ)

மன்னவனிவ் வாறிரந்து கேட்பத் தாயு
மானசுவா மிகண்மிகவு மகிழ்ச்சி யெய்தா
வன்னவனை யருகழைத்துத் திருக்கண் சாத்தி
யருள்புரிந்தாங் கரசேயிங் கமைதி யென்னத்
தன்னிருகை யாலமைத்துக் கோயின் மேவிச்
சஞ்சலமெல் லாந்தவிர்ந்து சதாநிட டைக்குப்
பின்னொருவிக் கினமின்றித் தனித்தி ருந்து
பெரியதவ நோற்றிருந்தார் பிறழா தம்மா. (ருந)

தேங்கடவாக் கடுக்கையிள மதியஞ் சூடுஞ்
சிவபெருமான் றிருவடியுந் திறத்தை விட்டு
நாங்கடவா தருள்புரிந்து பிறவிக் குள்ளாய்
நலியாம லப்பிறவி நலியச் செய்தே

திங்கடவா தனையகற்றுங் குருவா மௌன
தேசிகன்பொ னடியிணையுஞ் சிந்தித் தெந்தம்
பாங்கடவா வெனவழைக்கு நாளெந் நாளோ
பாவியெண்ண முடிந்திடுமோ பாழோ வென்னு. (௫௪)

கற்பனையுஞ் சொன்னயமும் பொருளும் வாய்ப்பக்
கரும்போமுக் கனியோகற் கண்டோ வென்ன
விற்பனருந் தத்துவத்தை யுணரா நின்ற
மேலவரு மேலெவரும் விரும்பித் தேக்க
வற்புதசின் மயமதுர மான பாட
லருந்தமிழா லார்வமுட னருளிச் செய்துந்
தற்பரனைக் கருதாமற் கருதி நீங்காச்
சாசுவத நிட்டைசெயுந் தனிய ரானூர். (௫௫)

அகத்தான தாயுமா வரத்தைக் கொண்டு
மரியநிலை நிட்டையிருந் தறிவா யுற்று
மகத்தான தாயுமா னவரிவ் வாறு
வைகிடுநா ளிப்பிறவி வாழ்க்கை நீத்துச்
சகத்தான தாயுமா நீங்கிற் றெங்க
டார்வேந்தே யெனப்புலம்பத் தண்ம திக்கேய்
முகத்தான தாயுமா பதிநற் பாத
முன்னியடைந் தானரசன் முடிவா லம்மா. (௫௬)

வேந்திறப்பப் பொன்னனைய மனையா ளந்தோ
விதிவசமே யெனவரசன் மேல்வீழ்ந் துள்ளம்
வேந்தழற்போற் கொதிகொதித்துத் தலையை மோதி
வெய்துயிர்த்துக் கண்ணருவி வெள்ள மூற்றிச்
சாந்தருணத் தாயினளென் றவளைச் சூழ்ந்த
தையலா ரெடுத்தணைப்பத் தலைவி ரித்து
வாய்ந்தவுடல் குருதியெழப் பிய்த்துக் கையால்
வாயறைந்தாள் வயிறலைத்தாண் மாழ்கி மாழ்கி. (௫௭)

பாங்கியரு மாகுலித்துத் தேம்பித் தேம்பிப்
பதைபதைப்ப நகரமெலாம் பரவை யென்ன
வோங்கியழு தரற்றிடவே பெற்ற ருற்ற
ரோலமிட்டுக் கதறியழ வும்ப ரெல்லாந்

தாங்கலருந் துயருழப்ப வரசை வேண்டுஞ்
சாத்திரத்தோ டெடுத்தடக்கித் தகுங்கன் மாதி
யாங்கியற்றி முடிந்ததற்பின் னடந்த வற்றுள்
யாமுணர்ந்த மட்டுமினி தறைகு வோமால். (௫அ)

இறையவன்கா லங்கடப்பத் தாயு மான
வெந்தையா ரரசுரிமைக் கிடையூ றின்றி
முறைமையுடன் மனுநெறியே யோங்கச் செங்கோன்
மூவாது புரிந்துலக முற்று மோம்பிக்
குறையடைந்த வரசன்மனை யவளைத் தாயாய்க்
கொண்டிமையிற் காத்தெவர்தங் கோளா லேனு
நிறைதவறு தியற்றியுமா தரித்துத் தாஞ்செய்
நிட்டைசா தனத்தையுங்கொ ணிலைய ரானார். (௫௯)

மன்னவனு ருயிர்க்குயிரா யிருந்து வாழ்ந்த
மாதொருநாட் டாயுமா னவரை யுள்ளே
தன்னிடத்தில் வரவழைத்துப் பலநா ளாகத்
தான்கேள்வி யுற்றதினுந் தகுதி யான
பொன்னனைய திருமேனிப் பொலிவுங் கல்விப்
போதமுநல் யௌவனமும் பொருந்தக் கண்டே
மின்னிடையா ளுண்டுறெந்தாங் கவர்மேற் காதல்
விழைவுற்றே பலபலவும் வினவி யப்பால். (௬0)

இவ்வரசுக் கதிபதியா யிருந்து நீவீ
ரென்னையுங்கைக் கொண்டருளு மென்ன லோடு
மவ்வுரைகேட் டிருசெவியுட் கூர்வேல் பாய்ந்தாங்
ககம்வெதுப்பக் குலைகுலைந்தங் கவள்க ருத்துக்
கொவ்வினர்போற் பேசியவ ணகன்று நாமிவ்
வூரிலிருக் கினுந்தீதா மொல்லை மற்றை
யெவ்விடத்தும் புகுதுமெனக் கருதி யன்றே
இராமநா தபுரநக ரெய்தி னாரே. (௬க)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காயெரி குணத்தோ ருறவினே ரெவரோ
யாயினு நீதியைக் கருதித்
தாயெனத் தொழுவோர் தங்களைக் கொழுநர்
தாமென நினைக்கிலங் கசவே

ளேயபூங் கணேக்கிங் கிலக்கமொன் றுளதென்
றெண்ணுவ திழிபலா விதனே
வாயெடுத் துரைக்க நினேக்கநாந் தரமோ
மாநிலத் தையகோ பாவம். (௬உ)

தாயுமா னவரம் முகவையின் மேவித்
தருகிடச் சிவசிதம் பரப்பேர்
மேயமுன் னவர்தன் சிற்றனே புதல்வ
ரருளேய ருடன்வர விதியாற்
போயநற் றுணேவர் புகுந்தவூ ரறியார்
புவியெலாந் துருவிவாய் புலர்ந்து
தூயவந் நகரத் தடைந்தனர் கண்டார்
துணேயிலாத் துணேவரை யம்மா. (௬௩)

கண்டன ருவகைக் கடற்படிந் தனர்கள்
கரைந்தன ரடுத்தனர் தழுவிக்
கொண்டனர் விழிநீ ருகுத்தன ரிருந்த
கோலமு நோக்கினர் குழந்தாய்
பண்டுறு வினேயோ வரசனே யிழந்த
பரிவதோ மனத்தெழு படிறோ
வொண்டியா யெம்மை வெறுத்திவ ணடைதற்
குற்றவா றென்கொலோ வுரையாய். (௬௪)

வாரண வாசி முதற்கன்னி யாகு
மரிவரை யுனேத்துரு வியதி
லாரண முழுதுந் தேர்ந்தமெய்த் தவத்தோ
ரருளேயு மடைந்தன மெனினும்
பூரண வறிவைக் காண்கில முனக்கிப்
போதனே புகன்றதார் விளேந்த
காரண மறியே னுருமொழி யேனுங்
கழறுவா யென்றுணேக் கடலே. (௬௫)

எம்பியே யெம்மைப் பிரிந்தநாண் முதலா
யெழுகடற் புவியெலாந் துருவிக்
கும்பியே மனது கொதித்திட வலேந்தோங்
குலந்தழைத் திடவரு முனேயே

நம்பியே யிருந்தோம் பானுவைக் காணு
நளினமொத் தடுத்தவ ரெவரும்
வெம்பியே யிடையத் தனிமையா யிவணீ
மேவிய தென்கொலோ விளம்பாய். (சுசு)

என்றலு மதற்கோர் மறுமொழி யுரையா
திருந்தனர் மீளவு மெனது
நன்றிகொ டுணைவா துறவினிற் புகுது
நாளிதோ வில்லறத் திருந்தோர்
மன்றல்வேட் டுனது சந்ததி விளங்க
வைத்தலே முறையென வகுக்க
வொன்றிய மனத்தார் கனலுறு புழுப்போ
லுடறுடி துடித்திவை யுரைப்பார். (சுஎ)

தேவரா னவருந் தேவர்தங் கோவுஞ்
சித்தர்கிம் புருடர்கின் னரரு
மூவரா னவருந் திசையுளா னவரு
முனிவருங் காமத்தின் முயன்று
லேவரு மிகழப் பிறவிநோய்க் கிலக்கா
யிடைந்துடைந் துழலுவ ரெனினும்
பாவமே விளைக்கு மடநலார் மயலைப்
பற்றுத லறங்கொலோ பகரீர். (சுஅ)

குலத்தையுங் கெடுக்கு முறவையுந் தொலைக்குங்
குடியெலா மொருங்கறத் திப்கு
நலத்தையுங் கடத்து மறத்தைவேர் பறிக்கு
நாடொறுந் தீவினை விளைக்கும்
பலத்தையுங் குறைக்கு மாவியைப் போக்கும்
பரநிலை யுணர்ந்திடா தகற்றுஞ்
சலத்தையும் வளர்க்கு மிழிந்தபுன் காமத்
தழலிதைச் சார்வரோ சான்றோர். (சுகூ)

கருங்குழ னரைக்கு முத்தவா ணகையுங்
கலகலத் துதிர்ந்திடும் பணைத்த
குரும்பைபோன் முலையுஞ் சரிந்திடு மதிவாய்
குளிர்ந்திடு வதனமுஞ் சுரிக்கும்

கரும்புபோன் மொழியுங் குழறிடுங் கமலக்
கண்களும் பஞ்சடைந் தொடுங்கு
மரம்பைபோ லழகுங் குறைந்திடு மென்னி
லரிவையர்க் கழிவரோ வறிவோர். (எ0)

நன்றியை விடுத்தேன் றீமையை மறந்தே
னெனு மாணவ நசித்தே
னென்றையே யுணர்ந்தே னுறவின ரயலா
ருற்றவ ரெனுமுணர் வொழிந்தேன்
மன்றுளே நடித்த மணியலா மணியை
மதிக்கிலேன் மாசிலா ஞானக்
குன்றுரு வான மௌனதே சிகனெங்
குருபர னருள்புரிந் தன்றே. (எக)

சீலமே திகழுஞ் சீரொலாம் வெறுத்தேன்
சிற்றறி வினைத்தையுந் தீய்த்தேன்
ஞாலமே திகழு மாயையை யொழித்தேன்
ஞாதுரு ஞானஞே யங்கள்
சாலமே திகழு மிருட்கடல் கடந்தேன்
சாற்றருஞ் சச்சிதா னந்தக்
கோலமே திகழு மௌனதே சிகனெங்
குருபர னருள்புரிந் தன்றே. (எஉ)

நாடெலா மெனதே வனமெலா மெனதே
நகரெலா மென்னதே நிறைந்த
வீடெலா மெனதே பொருளெலா மெனதே
வேண்டியே மாந்தர்க ளியற்றும்
பாடெலா மெனதே யவரவர் புரியும்
பாவபுண் ணியமெலா மெனதே
பீடெலாம் விளைந்த மௌனதே சிகனைப்
பெற்றுநா னருளடைந் தன்றே. (எந)

இல்லறத் தினிலே யிருத்தலும் பொருளை
யீட்டலும் வினையியற் றுதலு
நல்லற மன்றுங் கதனிலுங் கொடிதே
நமனிலுங் கொடியராய் வருத்தும்

வில்லுறழ் நுதலார் தமைக்கன வினிலும்
விரும்புத லெவற்றையும் வேண்டேன்
றெல்லைவெம் பிறவிக் கடல்கடந் திடவே
துணிந்தன னென்னலுந் துணைவர். (எச)

என்னையோர் மகவின் றிருந்தமுன் னவருக்
கியைந்தகான் முளையெனக் கொடுத்துப்
பின்னையோர் மகவு வேண்டிநந் தாதை
பெருந்தவ மியற்றிய தாலே
நின்னையோர்ந் தடைந்தா ரொம்பியே யதுபோ
னீயுமோர் மன்றல்வேட் டொருசேய்
தன்னையோர்ந் தளித்துன் மரபெலாம் விளங்குந்
தன்மையைப் புரிந்தரு ளென்ன. (எரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னவர் பலவா றுக வேண்டமுன் வினையுந் தூண்டப்
பின்னவ ரிணங்க லோடும் பெருமித மகிழ்ச்சி யெய்திப்
பொன்னக ரத்தின் மேலாய் நகரொலாம் புனைதல் செய்து
தந்நிலை யறியா தின்பந் தலைக்கொடு சார்ந்தோர் சூழ. (எசா)

திங்கள்வாண் முகத்தோ ரொல்லாஞ் சேர்ந்துபல் லாண்டு கூறத்
துங்கநான் மறையோர் வாழ்த்தத் தொகுத்தபல் வேள்வி யோங்கத்
தங்குநா வலர்கள் பாடத் தாயுமா னவர்க்குத் தூய
மங்கல முழவ மார்ப்ப மணமுடித் திட்டா ரம்மா. (எஎ)

வேட்டொரு சேயை யீன்று மேலதாஞ் சிவலோ கத்திற்
பாட்டளி முரலுங் கூந்தற் பனிமொழிப் பவளச் செவ்வாய்
வாட்டடங் கண்ணுள் சார மகவைமுன் னவர்பாற் சேர்த்துக்
கோட்டமின் மனத்தார் சுத்தக் கோவண வுடைய ராகி. (எஅ)

பற்பல தலங்க டோறும் பணிந்தியா வருங்கொண் டாடக்
கற்பனை கடந்த வொன்றைக் கருதிச்செந் தமிழான் மிக்க
வற்புத மாகப் பாடி யருளைய ரோவ லாற்றத்
தற்பத மடைவா னெங்குஞ் சஞ்சரித் துலவா நின்றார். (எகூ)

இத்தகை வாய்ந்தோர் நிட்டை யிருந்தறி வடைவான் மீண்டு
முத்தலை கொழிக்கும் வாவி முகவைநன் னகரஞ் சேர்ந்து
சித்தமுற் றருண்மெய்ஞ் ஞான தேசிகன் றனக்கு ளாத்த
தத்துவப் பொருளி லுற்ற சந்தேகந் தெளிந்தா ராகி. (அ0)

ஓமெனும் பொருடா னுகி யுளத்துள வைய மெல்லாம்
வேமனற் சருகு போலத் தீர்தலும் வெகுளி யாதித்
தோமிலா மனத்தார் மாயை சூழ்வினை தொலைத்து நிட்டை
நேமன நிலைத்தார் மௌன நிலைமையு நிலைத்தா ராகி. (அக)

பேர்ந்தெழு மனக்கு ரங்கைப் பின்விடா தடக்கித் தன்பாற்
சார்ந்த மெய் யருளை யர்க்குத் தத்துவ முபதே சித்துத்
தேர்ந்துயர் சீவன் முத்தி தசையினிற் சின்னுள் வைகி
யோர்ந்திடு விதேக முத்தி யடைந்தன ரொப்பி லாதார். (அஉ)

வே று.

ஒருபொருடா னெனவடைந்த தாயுமா
னவரருள்செய் யுபதே சத்தாற்
றிருவருள்கொண் டவர்புகழைத் திக்குஞ்
செந்தமிழாற் செய்து பின்ன
ரருளையர்தன் குருமகவாங் கனகசபைக்
குபதேசித் தகண்டா காரப்
பெருவெளியி லுருவெளியாய்ப் பொருந்தியொரு
நிலையாகிப் பேர்பெற் ருரோ. (அங)

ஆகப்பாயிரமுள்படத்திருவிருத்தம். (க00)

---

## தாயுமானசுவாமிகள்புராணம்

முற்றுப்பெற்றது.

---

தாயுமானசுவாமிகள் திருவடிவாழ்க.

தாயுமானசுவாமிகள் சிஷர்

### அருளையசுவாமிகளருளிச்செய்தது.

---

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துகளறுசாலிவருடமாயிரத்தைந்நூற்றியெண்பத்தொருமூன்று
மிகுசுபகிருதாம்வருடந்தைமாதம்வெண்மதிவாரநாள்விசாக
மகிமைசேர்பௌரணமிதிதியத்தமண்டலசமயத்திற்கங்கை
திகழ்கரையதனிற்ருயுமானவனூர்சிவத்தினிற்கலந்தநற்றினமே.

---

ഉ

கடவுள் துணை.

பதினாறுவது

# அரிச்சந்திரவண்ணம்.

---

கடவுள்வாழ்த்து.

நேரிசைவெண்பா.

மாமே வயோத்திவளர் வாய்மையரிச் சந்திரன்சீர்
பாமேவும் வண்ணமதாய்ப் பாடுதற்குத்—தேமேவு
முக்குறுணி யெட்கடலே முக்கனிம டுத்தருள்செய்
கைக்கயமு கக்கடவுள் காப்பு.

---

துள்ளற்சந்தம்.

தன தானன தானன தானன தானன
தந்தந் தந்தந் தந்த
தன தானன தானன தானன தானன
தந்தந் தந்தந் தந்த
தனத்த தந்தந் தனதான
தனத்த தந்தந் தனதான
தனத்த தந்தந் தனதான
தன தானன தந்தன தான
தன தானன தந்தன தான
தன தானன தந்தன தான
தானனு தத்த தன
தானனு தத்த தன
தானனு தத்த தன
தனத் தானன தனத் தானன
தனத் தானன தனத் தானன
தனத் தானன தனத் தானன
தானன தந்தன தானதானன
தானன தந்தன தானதானன
தானன தந்தன தானதானன.

தோங்கற் சந்தம்.

தன தன தனந்த தன
தன தன தனந்த தன
தன தன தனந்த தன தானனு.

துள்ளல்கள்.

திரு மாதமர் தாமரை வாவிகள் சூழவ
டர்ந்தென் றென்றும் பொங்க
மிகு சாலிகள் வானில வாவவ வானவ
ருங்கண் டின்பந் தங்க
வளத்தி லெங்குந் துதியேற
வறத்தி லெங்கும் புகழ்மீற
விரைச்செ ழும்பைந் தருநாண
வளர் கோசல மங்கல நாடன்
முடி வீரர்வ ணங்கிடு பாத
னருள் சேர்திரி சங்கருள் பால
னுழிசூ ழட்ட திசை
யேகமா வெற்றி யர
சாளுநா ளச்ச பையி
னடுத் தேவரு மினத் தாபத
ரடிக் கீழவன் விழச் சீரொடு
மணைத் தேடவர் வரத் தானொளி
மாமணி தங்கெழி லான வாசன
மீதம ரும்படி யேசெய் தோகையொ
டார்வமி குந்துரை யாடு வானிறை,
தவ மேயுரு வாகிய நீரொவெ நாடுபு
குந்தெங் கெங்குந் தங்கி
வரு வீர்வரு மாறினி லேதுவி நோதமு
ணர்ந்திங் கென்றுஞ் செஞ்சொ
லிசைத்த லுந்திண் புயவீர
சகத்தி லெங்குந் துதிசேர
நினைக்க வங்கம் புளகார
வள மேவிவி ளங்குக ணேசி
நிலம் வாழ்வுற வென்றிகொள் சோம
தய ராசனு வந்தருண் மாது

மானையே யொத்த விழி
தேனையே நத்து மொழி
வீணையே யொத்தி டுகை

துடிக் காமிடை பிடிக் காநடை
தளிர்க் காமடி யெழிற் கோகில
மனைத் தாமவ டனக் கேபதி
யாகவ மைந்தவர் தேக மேகதி
கூடுமி தன்றியெ னுமெ னுவவர்
கூறிட நின்றிறை மீது மோதிய,

செய வேள்சர மாரியி னேவிட வேயுர
சங்கங் கம்பந் துன்ற
வரு காயமர் மாதவர் சேவடி சூடிமு
னின்றுன் றென்றுங் கெஞ்சி

யிரத்த றன்பென் றுணராம
லுரைத்தி டுந்தந் திடைமாதை
யெனக்கி சைந்தன் பொடுதேவ

மண நேரமொ ழிந்தருள் கூர
வென வோதலு நன்றென மாத
வரு மாறுக டந்தி வேக

மாகவே யத்த குக
னேசிநா டுற்ற ரசன்
வீடுமே விப்பு கல

மனத் தேமகிழ் வுறக் கோனவர்
பதத் தேமலர் தரித் தேவர
வழைப் பீர்மரு மலர்த் தாரனை
நீரிவ ணென்றுரை யாடி யாயிழை
மாமண மிங்கொரு வார மேயுள
தால்வர வென்றெழு தோலை யேவிட.

தோங்கல்.

வர வெதி ரடைந்த ரசர்
மதி தய னிருந்த ருளு
மணி நகர் புகுந்தி னிது—மேவினர். (௫)

துள்ளல்கள்.

திறல் சேர்புய னுனத யாநிதி சோமத
யன்பங் கின்பங் கொண்டு
வரு மாதவர் கோசல மாநக ரூடுபு
குந்தங் கன்புந் துன்ற
மயற்பி றங்கும் புவிராச
னிடத்தி யம்புங் கணமோது
படைக்கு லந்தன் புடைசூழ
விறை மாமத னுங்கணை தூவ
மதி மாகுல மங்கையை நாடி
யரு கானம டைந்திடு போது
காளிகோ யிற்பு கவு
மேகலா யுற்ற ரதம்
யாவுமே பொற்பி ரபை
யெனச் சேரவு மதைக் காளியி
னிடத் தேகொடு கதிர்க் கோன்மதி
தயக் கோன்மனை யுறத் தாதியர்
கோசல மன்புது ரூப வேளென
மாவன சந்திர மாது காதினி
லோதநெ கிழ்ந்ததி மோக மீறிட,
மலர் சேரணை மீதினி லேமயில் போலவ
டைந்தங் கொன்றுஞ் சிந்தை
மய லான்மிக வாடவி ராவெளி யாகவெ
ழுந்தென் றென்றுஞ் சங்க
முழக்கு மன்றந் தனில்ராச
ரிருக்க வும்பைங் கொடியார்க
ளடுக்க வன்றங் கொருதாதி
புவி ராசர்கு லம்பெய ரோதி
வரு காறிரி சங்கருள் பால
னெதிரோவர மங்கல மார்தல்
காணவே யத்த ருண
மீதெனே வற்பு தமி
தார்செய்கு துற்ற வித

முனைப் பீறென மதிக் கோவகை
சொலத் தான்மண முடித் தேயவ
னகர்க் கேவர மனைக் கேகரு
வாகிந லந்திகழ் சோதி போலொரு
பாலக னும்பெற வேயி ராசனு
மோகைவ ளர்ந்தர சாளு நாளுயர்,
செழு மர்வம ராவதி மேவிய வானவ
ரொன்றுந் துன்றுஞ் சங்க
மிசை வாசவ னுழ்கடல் சூழ்புவி மீதின்மெய்
கொண்டன் புங்கொண் டின்சொ
னிலைத்தி டுஞ்சுங் தரராச
ரிருக்கி லொன்றுந் தவருது
வழுத்து மென்றங் குரையாட
மலர் வேதன்ம கன்றிரு மாது
வளர் கோசல மொன்றிய வாய்மை
யனை யோதிட வுந்தரு காது
காதிசே யச்சொல்பிச
காமெனு மெய்த்தமுனி
கோசிகா பொய்த்தவுரை
வழுத் தேலென விளித் தேகடு
கடுத் தாரது பொறுப் பீறென
மகப் பூபதி சொலத் தாபதர்
சூழுமி ருஞ்சபை மீதி லேயவர்
நேர்சப தஞ்சொலி யேக வேமுனி
கோசிக னன்றொரு சோலை போயவன்.

தோங்கல்.

மன மிக மலைந்த ரசை
வெலும் வகை நினைந்து விதி
வச மென விருந்த யரு—நாளிலே. (வ)

துள்ளல்கள்.

அரு மாமறை யோர்சிலர் கோசிக னுர்புடை
வந்தன் றின்பம் பொங்கு
தரு வாழம ராவதி யேகினை யேயவ
ஞென்றுந் துங்கன் சங்க

தியைப்பு கன்றெந் தமையாள்வை
யெனக்க ளங்கம் பொருகோசி
கனுக்க னந்தந் துயர்மேவ
வுள சேதித ணந்தரு மாத
வர்க ளோதிய நன்றிகொள் வேள்வி
யதை யேசெய வந்தன னீவி
ரோகியா னுற்ற வகை
யோதியே யத்த மிக
வேதரா யற்பி னென
வளக் கோசல மளிப் பானிட
முனைப் பீரென வழுத் தாமுன
மடுத் தேமன னிடத் தேசொல
வேநிதி யந்தரு வேனெ னுவிறை
கூறநி கழ்ந்தது காதி சேயிடை
யோதிய கன்றவர் போத மாமுனி,
மறை யோதிய வாய்மையு ளானகர் மேவிய
வன்றங் கந்தந் துன்று
மனே யூடணே யாமுன மேயெதி ராயர
சின்பம் பந்தங் கொண்டு
துதிக்க வுங்கண் டிறைவேள்வி
முடிக்க வம்பொன் றரவேணு
மெனப்பி றங்கும் புவிராச
னடை வீரென வுஞ்சில நாளில்
வரு வேனென வுந்தவ னேகி
யொரு சோலைய மர்ந்துள கான
மாவெலா மொக்க வர
வேயுனு முற்பு டையின்
மேவவே மிக்க வளர்
தருக் கோசல மிடத் தேயுள
பயிர்ப் பீடற வழித் தேவர
வெனக் கோசிக னுரைத் தானது
போன்மிரு கம்பல வேகி யேபயிர்
யாவும ழிந்திட வேசெய் காலையி
ராசன திந்தவை மாய நூறினன்,

அதின் மீதுள மாவின மாமுனி பாதம
டைந்தங் கொன்றுந் துன்பு
சொல வேமுனி வாயொரு கோலமி னேவர
வென்றங் கங்கம் பொங்கி
நினைத்தல் கண்டங் குயரோன
மடுத்த வன்றன் பதம்வீழ
வினைக்கு ளின்பம் பெறுகாதி
மக னீதிரி சங்குருள் பாலன்
வலி யானத ளங்கெட நூறி
வரு வாயென நன்றென வேன
மேவிரா சற்க ணையி
னுவிபோ மத்த ருண
மாகியோ டக்கு ரிசி
லெழிற் காதலி யொடப் பூவணை
விரித் தேதுயில் கொளக் கோசிகன்
வினைச் சூழினில் விபத் தார்கன
வாகியெ ழுந்துட னேத வூழென
மாதொடு மந்திரி யோது வாசக
நீதிய தென்றவண் மேவு காலையில்.

தொங்கல்.

அர சன்வி டுவெங்க ணையில்
வலி கெட வடைந்த வரி
யரு முனி யிடம்பு கல—வாயகால். (வனு)

துள்ளல்கள்.

அனல் போலதி கோபமெ ழாவது நாசிமு
னின்றம் பந்தங் தங்கு
விழி யோடிரு மாதர்க ளாய்வர வேதிரி
சங்கென் றும்பண் பிந்த்ர
னளித்த மைந்தன் புடையேகி
நடித்த னந்தங் கவிபாடி
விரித்தி லங்குங் குடைகேளு
மொரு காலது தந்தில னுயின்
மய லோதிய ணைந்திவண் வாரு
மென வேமுனி யன்பொடு நீவிர்

போமெனு வப்பு லைய
மாதர்போய் மெய்க்க நட
மாடினூர் பொற்ப ணிகள்
கொடுத் தானது தடுத் தேகுடை
யினைத் தாவென விசைத் தாரதை
மறுத் தானெமை யணைத் தேயணை
நீயென நின்றவர் கூடி யேயடி
போடம டந்தையர் கோசி காமுறை
யோவென வந்தழ லோடு மாமுனி,
அறி வேனவ னுண்மையி னேயென வேயவ
னெஞ்சம் புண்கொண் டன்று
முனி வாயிறை பாலனு காமுடி வீழவு
தைந்தும் பின்பும் பொங்கு
முனிக்க னந்தந் துதியோத
மறுத்து நஞ்சுந் தரமாதர்
தமைக்கொ ளென்றங் குனையாட
விறை யீதவ மென்றுசொல் வேளை
புலை யாகென வென்றனி நாடு
தர நேர்கினு மொன்றுவ னீர்சொ
னீசமா தர்ப்பு ணர்கி
லேனெனு மெய்க்கு ரிசி
லோதவே யெப்பொ ருளு
மளித் தானென முனிக் கோசிக
னுனைத் தேதலை விரித் தாடிட
விதிச் சூழிது வெனப் பூபதி
நாடணி பொன்குவை சேனை யாவையு
நீர்கொளு மென்றுனை யாடி நீர்கொடு
தானம்வ ழங்கிய போது கோசிகன்,
அர சேயுனை நேர்பவர் யாரென வேசொல
வங்கண் டங்குந் துங்க
மிகு சேனைக ளோடுள யாவையு நீர்கொளு
மின்றென் றின்பங் கொண்டு
வனத்தி நின்றங் கிறையேக
மறித்தெ னம்பொன் றருவாயெ
னவத்தை யுங்கொண் டிடவாளு

தவு வீரென வென்றிறை யோத
முனி நாயகன் முந்தியி ராச
னுரை யாடிய செம்பொனே வேக
மாகநீ பெற்று வரு
வாயெனு மற்பு கரை
யேவவே மெய்க்கு ரிசி
லடுத் தேவன முறக் கோசிகன்
மறித் தேயுடை யினேத் தாவென
வவிழ்த் தேயவர் தரக் காவியி
னுடையு ரிந்திதை நீர்கொள் வீரென
வேயது கொண்டவர் போத மீளவும்
வாவென வந்தென சேதி கூறென.

தோங்கல்.

அணி நக ரடைந்த வனி
முழு வதும் வழங்கி யபி
னடி யெடெ னவென்று ணாசெ—யாமுனே. (உ)

துள்ளல்கள்.

பொரு மாமத யானையி னுனது போனகர்
சென்றங் கென்றுந் தங்கு
பொருள் யாவையு நீரடை வீரென நீதியி
னின்றுங் கண்டுந் தந்து
செலப்பு றங்கண் டவர்கூடி
யழத்தன் மைந்தன் றிருமாது
மமைச்ச னும்பொன் றரகான
வனு நீளவ னம்பல வேகி
வரு காலைய ருந்தவன் மேவி
யவன் மாதர்ம ணம்பெற வோத
வாசெனு மெய்ப்பி ரபு
காசிமே வத்த ரக
னீதரா யத்த மென
மனத் தேதுய ரெழக் காதலி
யுனைப் பாடயி ரிபத் தோடும
தெழிற் சேயுட னெனேத் தான்விலே

கூறிய ருந்தவ னுசை தீரென
வாதைய டைந்தறி வோமெ னுவிழி
நீருக வன்றிறை யேகி வீதியில்,
முனி கோசிக னூர்கட னுலென தாருயி
ரும்பண் புந்தங் கந்த
மனே யாளொடு பாலனே யான்விலே கூறின
னிங்கென் றுன்பஞ் சிந்த
விலேக்கெ டும்பொன் றருவீரி
வருக்க ளந்தென் றுயர்தீர்வ
னெனப்பு கன்றந் தெருமேவு
முன மோருய ரந்தண னுசை
யள வோதென வுந்தொகை யோதி
விலே யார்முறி யுந்தர லோடு
மாசையால் விற்ற வளை
யேவிநீ விட்ட கல்வை
மாழையா வர்க்க டைவ
துளைப் பாயென முனிக் காமிவர்
வசத் தேகொடு மெனக் கோமக
னிசைத் தான்முனி விடுத் தானிதி
யாவும டைந்தன னுனெ னுமறை
யோனுடன் மைந்தனே மாதை யேகென
வோதிய கன்றவர் போக வேயிறை,
பொறி சோர்வுறு காலேயி லோர்கண னிதர
குந்தந் தென்றுந் துங்க
மடை வாயென வேயெனே நீவிலே கூறியி
வன்றுன் புஞ்சிந் தென்ற
மொழிக்க மைந்தங் குடனேகி
யமைச்ச னின்றன் றுளையாட
மகிழ்ச்சி கொண்டங் கெதிர்மேவி
விலே யாதென வும்புலே கூறி
வினை வாய்நிதி யந்தர மேவு
தர கீர்பெறு மென்றிறை யோதி
வீரவா குற்ற மனே
சேரவீ மத்தி னின்மெய்
காவலாய் நிற்றி யென

வுதைத் தானிழி புலைப் பாதகன்
மறுக் காதிறை யடுத் தேசுடு
வனத் தேயுற மதிக் கோமகள்
பாலனொ டந்தணன் வீடு போயதி
பாதக நஞ்சனை யாள்சொல் வேலைத
மாகமெ லிந்திட வேசெய் காலையில்.

தோங்கல்.

ஒரு பொழு திலந்த ணனும்
விற குகு சைகொண்டு விரை
வுடன் வரு வையென்க மக னேகியே. (௫௬)

துள்ளல்கள்.

பொறை சேர்மறை யோர்சிறு பாலக ரோடுவ
னஞ்சென் றங்கங் குன்றி
விற கேகொடு வோர்கிழ லாலடி சேரவ
ளர்ந்தென் றென்றுந் தங்கு
தருப்பை கண்டங் குடனுடி
விருப்பொ டங்கம் புளகோடு
பறிக்க வஞ்சம் புரிகாதி
மக னேவலில் வந்திடு தீய
பட வாளர வின்கடி யாலி
வனதாவிபி ரிந்திட வாலின்
மேயவே தச்சி றுவர்
தேவதா சத்து ணைவ
னுவிபோய் விட்ட தென
வடுத் தேதுய ரொழப் போய்விற
கெடுத் தேநகர் வரத் தாயெதி
ருறப் பாலன ரவத் தாலுயிர்
போயின னென்றுரை யாமு னேயிடி
மேல்விழு நஞ்சர வாக வேயவர்
கான்முளை துஞ்சிட மோதி யேகினர்,
மதி மானதி வேகம தாய்மறை யோன்மனை
வந்தங் கென்றுஞ் சென்று
குட வேலையில் வீழவி ராவர வேலைய
னந்தங் துன்பங் கொண்டு

முடித்தென் மைந்தன் பணியால
வனத்தி னின்றின் றுயிர்போன
வனைக்கொ டங்கந் தழன் மீது
பொர வேதக னம்பணி மீள்வ
னென வீழ்தலு மந்தண வேடி
தடை யேசொல நின்றடி தாழ
வேகெனு வச்சொல் கொடு
மாதுகா னத்த னுகி
நாய்கள்பூ தப்ப டைக
ளடுத் தேபய முறுத் தாமிகு
துயர்க் கேயுட லெடுத் தாடலை
விரித் தேமுன மறைப் பாலகர்
· கூறுமி டந்தெரி யாம லேயலை
மாறுடல் புண்பட மோத வேயுள
கோலம ழிந்தழு தோடி வாடினள்,
புலி யேகலை யேகளி றேமரை யேவலி
தங்குஞ் சிங்கஞ் சம்பு
மர மேகொடி யேசெடி யேவன மேமன
நொந்திங் கண்டும் புண்செய்
வருத்த முங்கண் டெனதாவி
யொழித்த மைந்தன் றனைநீவி
ருரைப்பி றொன்றங் கவள்கூவி
வரு கான்முனி வஞ்சனை யால
வட மோர்புற நஞ்சர வான்மெ
யுயிர் போனம கன்றனை மாது
காணவே பெற்ற குட
நீயவே யெய்த்த வுடல்
சோரவா யிற்பு ழுதி
யடித் தேமக னிடத் தேயவ
ளடுத் தேயெனை விடுத் தேபொனு
லகத் தேயணை விதத் தேபுகல்
வாயென வுந்திரு மாது நாமக
டேவவ ரம்பைய ரோடு பார்வதி
வானவ ரெண்டிசை யோரு மாழ்கிட.

தோங்கல்.

உலை மெழு கினங்க மிக
வுரு கிய ழுதங்க வட
னுயிர் விட நினைந்த வச—மாகியே. (ஞ)

துள்ளல்கள்.

மருமா மலர் மானனை யாளொரு சேய்தக
னங்கண் டண்டுந் துன்ப
மற வேவிடு வேனுயிர் யானென வேமன
முங்கொண் டங்கண் டுஞ்சு
வனைப்பி ணந்துன் றிடுகாடு
தனிற்கொ டங்கந் தழன்மூள
வெரித்தல் கண்டங் குடனேடி
யுள கூலியை யென்கைகொ டாது
சுடு வாயெனில் வம்பது வாகு
மென வேசொலி மைந்தனை ராசன்
மீறியே யெற்ற மனம்
வாடியே யத்த மிலை
நீயலா லித்த ருண
மெனக் கார்துணை யெனக் காதலி
யுனைத் தாளிறை திருத் தாலியுன்
மிடற் றேயுள வதைத் தாவென
வோதம யங்கியெ னுவி நாயக
னேயல தென்றிரு நாணி நாள்புலை
காணவி ளைந்தது மேது காரண,
மிது வேளையி லேயென மாதுரை யாடிவ
ருந்துந் துன்பங் கண்டு
மிவ ளேமனை யாளவ னேமக னுமென
நெஞ்சம் புண்கொண் டுந்தம்
வினைக்கி ரங்குங் குறைவான
மனைத்தெ ரிந்தங் கவள்சோக
முறத்தன் மைந்தன் சுடுகூலி
தர வேகென வந்தணர் பாலில்
வரு கான்முனி வஞ்சக சோர
ருறு காசிமன் மஞ்சனை யாவி

நூறியே பொற்ப ணிகள்
யாவுமே கைக்கொ டவ
ரேகவே யச்சி றுவ
னெழிற் றேர்தெரு வினிற் ரேய்வுறு
மிடத் தேயவ ளடுத் தேமக
னெனப் பாலனை யெடுத் தேமடி

யார்தர மங்கையு மேய வீதியி
லாகுல மிஞ்சியெ னுசெய் வேனென
வாயில றைந்தழு தோயும் வேளையில்;

வரு காவலர் காசியர் கோமக னூர்பணி
யுங்கொண் டங்கங் கொன்ற
திவ ளாமென வேசொலி வீதியின் மேவிய
னந்தந் தண்டங் கொண்டு

புடைத்து மைந்தன் றனைமாதை
யெடுத்தி டென்றன் றிறைபாலில்
விடுக்க வுங்கண் டெழில்ராசன்

மயில் போலவ ணின்றிடு வாளை
மக னுருயிர் கொன்றவ ராவென்
வினை காரண மென்றுசொல் போது

மாதுநா னிக்கு மர
னுவிபோ கக்கொ லைசெய்
தேனெனு வச்சொல் பிழை

யெனக் காசிம னுைத் தேயடி
யினைப் பாருமெ னவக் காவலர்
தெருப் போய்வெகு குறிப் பாய்விழி

யாரவ றிந்திவள் பாத மேயென
யாவரு மிங்கிவ ளேசெய் தாளிது
பேதக மன்றென வோத வேசுர.

தோங்கல்.

தரு வென விலங்கி டும
ரச னக முலைந்து புலை
தனை வினா விலிங்கெ னுழி—சாரவே. (ஷஞ)

துள்ளல்கள்.

வர வோதுமெ னுவவர் கூறிட வேபுலை
கம்புந் தும்புங் கொண்டு
விரை வாய்வர வேயிவள் சேயுயிர் காதின
ளென்றிங் கொன்றுங் கும்பு
வழுத்த வுண்டென் றனடீப
கொலைக்க ளங்கொண் டுயிர்சேதி
யெனக்க ணந்தன் குடின்மேவி
முன மேவிலை கொண்டவ னேரில்
விட வேமன நொந்திறை யாதி
மனை யோடொளிர் வெங்கொலை வாளு
மாரமாழ் கித்து யர
மாகவே கத்த வன
வீதிவா யுற்றெரு ருபொ
யுரைத் தேயுனு லகத் தாளென
நகைத் தேயவை மறுத் தேசுடு
வனத் தேவிரை வினிற் போய்விழி
நீருக மன்கன லாகி யேமனம்
வாடவு ணர்ந்தமி னுள்சொல் வாளுயர்
வாய்மைத விர்ந்திடல் பாவ நீரெனே,
மன தாரவி னேதடி வீரென வோதிட
வுஞ்சொந் தந்துன் சந்த்ர
னணி வாள்கொடு வீசலு மாலைய தாய்விழ
வுங்கண் டங்கண் சிந்தை
மகிழ்ச்சி கொண்டெந் தவமேயி
தெனப்பு கன்றங் கவர்மேவு
மிடத்தி டந்தங் கியவாலை
யர னுதியர் வந்திட ராசன்
முடி தாழவ ணங்கிய காலை
மிகு வாய்மைய னென்றுரை யாடி
வாலையோ டொக்க மகிழ்
வாகவே லத்த னுயிர்
போனபா லர்க்க ருதி

யழைத் தானவர் விழித் தாரரன்
முனிக் காதிம கனைக் கூய்விற
லெவர்க் கோதென விதிச் சேயின
தாமென வும்புக றாம கேதுவு
மேமனும் வந்துள சேதி யோதிடு
காலைய ருஞ்சுடு காடு மாவமர்,
மனை யார்தட மாகவி ராசனை நீயர
சுங்கொண் டென்றுந் தங்க
முடி சூடியி வாய்மையி னேடுபல் காலமி
ருந்தும் பின்பென் றுங்க
வடிக்கு வந்தின் பொடுவாழ்க
வெனப்பு கன்றைந் தருவாமூ
மகற்கி வன்றன் பதிகூடி
யெழின் மாமகு டந்தலை சூடி
யகல் வாயென வன்றுணை யாடி
யுமை யோடும றைந்தர னேக
வானுளா ரொக்க வர
வேதனு டொத்த நகர்
போயிரா சற்கு முடி
தரித் தேபொனு லகத் தேமக
னுறத் தேசிக முனிக் கோசிக
னடுத் தேபல விதத் தேதுய
ராகுமி டஞ்சலை யேசெய் தேனடை
நீதிய ருந்தவ மீதெ னுவொரு
பாதிவ ழங்கியு மேக வேயிறை.

தோங்கல்.

தரு மனெ றியென்று முள
மன மகிழ் வுகொண்ட வனி
தழை யவ ரசுஞ்செய் தனன்—வாழியே. (க)

அரிச்சந்திரவண்ணம்

முற்றிற்று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐங்கரன் பரமன் வாழ்க
வறுமுகன் விமலே வாழ்க
துங்கநல் லடியார் வாழ்க
சுருதியா கமங்கள் வாழ்க
செங்கண்மான் மலரோன் வாழ்க
திரிபுவ னங்கள் வாழ்க
மங்குன்மெய் வாழ்க விந்நூல்
வாழ்கமன் செங்கோல் வாழ்க.

## சோடசப்பிரபந்தம்

முற்றுப்பெற்றது.

இந்நூலாசிரியர்

மாதுலர் முதுகுளத்தூர்

போ - சிவராமலிங்கம்பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சீர்கலியை யாயிரத்திற் சேர்ந்த விளம்பியிலே
யார்கலிசூழ் வையகத்தோ ராதரிக்கச் - சூர்கலுமெய்
யான்சேர் முதுகுளத்தூ ராறுமுக நாவலன்செய்
தான்சோ டசப்பிரபந் தம்.

திருச்சிற்றம்பலம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. M. 30277